வழி மேல் விழி வைத்து



கலைஞர் மு. கருணாநிதி

திருமகள் நிலையம்

வழி மேல் விழி வைத்து...

கலைஞர் மு. கருணாநிதி

திருமகள் நிலையம்

55, வெங்கட் நாராயணா சாலை,

தி.நகர், சென்னை - 17.

தொலைபேசி : 434 28 99 / 434 15 59

தொலைநகல் : 434 15 59

உரிமை : தமிழ்க் கனிப் பதிப்பகம்
சென்னை.

முதற் பதிப்பு : அக்டோபர், 1997.

பேப்பர் : 60 G.S.M. மேப் லித்தோ.

மொத்த பக்கங்கள் : 201

விலை ரூ. 40.00

ஒளி அச்சுக்கோவை : ஏகம் கம்ப்யூட்டர்ஸ்,
78, எல்லீஸ் ரோடு,
சென்னை -2.
தொலைபேசி : 854 85 99

அச்சிட்டோர் : முகில் பிரிண்டர்ஸ்,
சென்னை - 86

''வழிமேல் விழி வைத்து''

'சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'

- என்றார் வள்ளுவர்.

இந்த அற்புதத் திருக்குறள், நூற்றுக்கு நூறு சதவிகிதம் ஒரு வருக்குப் பொருந்துகிறது என்றால், அவர்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆவார்.

கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும்
வகைகிடைத்த குளிர்தருவாக...
தரு நிழலாக...
நிழல் கனிந்த கனியாக...
ஓடையிலே ஊறுகின்ற
தீஞ்சுவைத் தண்ணீராக...
உகந்த தண்ணீரிடை மலர்ந்த
சுகந்த மணமலராக...
மேடையிலே வீசுகின்ற
மெல்லிய பூங்காற்றாக...
மென்காற்றில் விளை சுகமாக...
அந்தச் சுகத்திலுறும் பயனாக...

- தமிழகத்தார்க்கெல்லாம், தமிழினத்தார்க்கெல்லாம் வாய்த்தவர்தான் கலைஞர் அவர்கள்.

அவருடைய மேடைப் பேச்சு மெல்லிய பூங்காற்று மட்டு மல்ல; மேருவையும் புழுதிமயமாக்கிவிடும். புயல்காற்றாகவும் வீசுவது உண்டு; கூனனை நிமிரச் செய்யவும், பார்வையற்ற வனுக்கும் பயணத்துணையாகவும், விசையொடிந்த தேகத்தில் எழுச்சியுண்டாக்குவதாகும், நகைச்சுவை உணர்வு கொப்பளிப்ப தாகவும், கசப்பு மருந்தினை வெல்லத்தில் வைத்துப் புகட்டுவதாக வும் மேடைக்கு ஏற்றபடி அமைவதும் உண்டு.

அதிலும் குறிப்பாகக் கலைஞர் அவர்களின் அண்மைக் காலச் சொற்பொழிவுகள் கனிவுடனும், கற்கண்டுச் சுவையுடனும், தன்னிகரற்ற தலைமைக்கே உரிய தெளிவுடனும் இருப்பதனை நாமறிவோம் - இந்த நாடறியும்.

கலைஞர் அவர்கள் பேச வருகிறார் என்றால் - 'வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கும் வெள்ளம்போல் தமிழர் கூட்டம். அத்தகைய கவர்ச்சி - ஈர்ப்புச் சக்தி உடைய சொற்பொழிவு அவருடையது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டு மானால் -

- தமிழுக்கு நிறம் உண்டு
- ஹைக்கூ கவிதைகள்
- திருமதி ருக்மணி லட்சுமிபதி நூற்றாண்டு விழா
- சுதந்திர தின பொன்விழா - தியாகிகள் வழியனுப்பு விழா
- சுதந்திர தின கொடியேற்று விழா
- மாநகராட்சியில் சுதந்திர தின பொன்விழா
- சங்ககால தமிழ் நாணயங்கள் நூல் வெளியீட்டு விழா
- மதுரை தீண்டாமை ஒழிப்பு மாநாடு

- டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது வழங்குவிழா
- அன்னை வேளாங்கண்ணி ஆலய வெள்ளி விழா
- ஆழ்வார்கள் ஆய்வு மைய விழா
- அன்னை தெரசாவின் படத்திறப்பு விழா
- பாரதியார் விழா
- கன்னிமாரா பொதுநூலக நூற்றாண்டு விழா
- பெரியார் பல்கலைக்கழகத் தொடக்க விழா
- டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத் தொடக்க விழா
- ஆதித்தனார் பிறந்தநாள் விழா - மூதறிஞர் விருது பெற்ற விழா

ஆகிய விழாக்களிலே கலைஞர் ஆற்றிய சொற்பொழிவுகள் சிறிதும் மறக்க இயலாதவைகளாக அமைந்திருந்தன. அந்தச் சொற்பொழிவுகளின் தொகுப்பே இந்த நூல்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சொற்பொழிவுகள் முழுவதிலும் நாம் தந்தை பெரியார் உரையின் கம்பீரத்தைக் காண்கின்றோம். அறிஞர் அண்ணாவின் சொல்லாற்றலைக் காண்கின்றோம்.

''நமது கலைஞர் அவர்கள் தலைசிறந்த பகுத்தறிவு வாதியாவார்; இத்தகைய பகுத்தறிவாளராகவும், ஆட்சிக் கலையில் அரிய ராஜதந்திரியாகவும், முன்னோசனையுடனும் அவர் நடந்து வருவதன்மூலம் தமிழர்கட்குப் புதுவாழ்வு தருபவரா கிறார் நம் கலைஞர்'' - என்று தந்தை பெரியார் அவர்கள் பாராட்டினார்.

''என்னை முழுவதும் அறிந்தவர்களிலே முற்றிலுமாக அறிந்தவர், தம்பி கருணாநிதி; அவர் மூலமாக நானும் நாடும் இன்னும் நிரம்ப எதிர்பார்க்கிறோம். இப்பொழுது செய்திருக்கிற

காரியங்களைப் போலப் பலமடங்கு அதிகமான காரியங்கள் அவருடைய திறமையின் மூலம் நாட்டுக்குக் கிடைக்க வேண்டியிருக்கிறது'' - என்று மனம் திறந்து கருத்தறிவித்தார், அறிஞர் அண்ணா அவர்கள்.

கலைஞர் அவர்கள் ஆற்றிய இந்தச் சொற்பொழிவுகளின் ஒட்டுமொத்தத் தொகுப்பைக் காணும்போது - அனைத்தும் அவர், தான் இத்தனை ஆண்டுகள் கடைப்பிடித்து வரும் கொள்கை வழியிலிருந்து இம்மியும் பாதை மாறாமல், தன்னுடைய அறுபதாண்டு காலப் பொது வாழ்க்கையிலே தான் உன்னதமாகப் போற்றி வரும் **பகுத்தறிவு வழி மீது விழி வைத்து பயணம் நடத்துகிறார்** என்பதை அனைவரும் புரிந்து கொள்ளலாம்.

தந்தை பெரியாரும், அறிஞர் அண்ணாவும் வகுத்த 'வழிமேல் விழிவைத்து...'' தம்முடைய அரசை மிகக் கவனமாக நடத்தி வருகிறார், அது போலவே கழகத்தையும் இயக்கி வருகிறார். எனவே, அவர் வழி நடப்பது தந்தை பெரியார் வழி நடப்பதாகும்; அறிஞர் அண்ணா வழி நடப்பதாகும். ஆகையால், நாமும் அவர் வழி நடப்போம்; கலைஞர் கரத்தை வலுப் படுத்துவோம்.

- திருமகள் நிலையத்தார்.

‘தமிழுக்கு நிறம் உண்டு’

கவிதை நூல் வெளியீட்டு விழா

‘‘தமிழுக்கு நிறம் உண்டு’’ என்ற தலைப்பில் என்னுடைய அன்புத் தம்பி கவியரசு வைரமுத்து அவர்கள் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பினை வெளியிடுகின்ற இந்த விழா ஒரு வித்தியாசமான விழாவாக ஏற்பாடு செய்யப்பட்டு - உங்களுடைய அன்பான வாழ்த்துக்களை கவியரசு வைரமுத்து அவர்கள் பெறுகின்ற வகையில் - அந்த வாழ்த்துக்களோடு என்னுடைய வாழ்த்துக்களை யும் இணைக்கின்ற வாய்ப்பினைப் பெற்று உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கின்றேன்.

‘‘தமிழுக்கு நிறம் உண்டு’’ என்ற இந்த கவிதைத் தொகுப்பை நான் பல முறை படித்து, அதிலுள்ள கொள்கையை - கோட் பாடுகளை, குறிக்கோளை உங்கள் முன்னால் விளக்குகின்ற வித்தி யாசமான மேடை என்று இங்கே தங்கை பொன்மணி வைரமுத்து குறிப்பிட்டார். ஆமாம், என்னை அறிந்தவர்களுக்கு - நான் எப்போதும் நான்கைந்து பேரோடு இருந்து தான் பழக்கப்பட்டவன் (கைதட்டல்) மேடையிலே கூட! (இந்த விழா மேடையில் ஒரேயொரு நாற்காலி மட்டும் போடப்பட்டு முதல்வர் கலைஞர் மட்டும் அமர வைக்கப்பட்டிருந்தார்) என்னை உணர்ந்து கொண்ட பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் என்னைத் தனிமைப்படுத்தி, 65-ஆம் ஆண்டு பாளையங்கோட்டை சிறைச்சாலையிலே வைத்தார். அதற்குப் பிறகு அந்தப் பணியை தம்பி வைரமுத்து (கைதட்டல்) தங்கை பொன்மணி வைரமுத்து ஆகியோர் இங்கே

செய்திருக்கிறார்கள். பாளையங்கோட்டையை நினைவூட்டியதற்காக அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

இன்னொரு வகையிலும் இருவரும் என்னை தனிமைப் படுத்தியிருக்கிறார்கள். நான் எந்தெந்த கவிதைகளை இங்கே பாராட்டி கூறவேண்டுமென்று கருதியிருந்தேனோ அந்தக் கவிதை களை எல்லாம் இங்கே வைரமுத்து பாடிக்காட்டி உங்களுடைய கையொலிகளை வெகுமானமாகப் பெற்றிருக்கிறார். அதே கவிதைகளை நான் திருப்பிச் சொல்கின்ற வகையிலே என்னை தனிமைப்படுத்தியிருக்கிறார். இருந்தாலும் எத்தனை முறை சொன்னாலும் இனிக்கக்கூடிய கவிதைகள் என்பதால் நான் இதிலே தனிமைப்படுத்திவிட்டேன் என்று உணராமல், இந்த கவிதை யேட்டிற்கு வைரமுத்து எழுதியுள்ள முன்னுரையைப் பற்றி சில வார்த்தைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் எத்தனையோ புயல்களையும் சூறாவளிகளையும் எரிமலைக் குமுறல்களையும் பூகம்பக் குலுக்கல்களையும் வரலாற்றிலே கண்டாலும் அவற்றையெல்லாம் கடந்து இன்றைக்கு உயிர் மொழியாய் விளங்குகிறது என்பதை இந்தக் கவிதை நூலுக்கு தம்பி வைரமுத்து எழுதியுள்ள முன்னுரையிலே குறிப்பிட்டிருக் கிறார்.

''காலம் தமிழ்நாட்டைக் கற்கண்டுக் கட்டிகளாய் உடைத்து, தன் கடைவாயிலே இட்டுக் கொண்ட போதும் தமிழ் மட்டும் கரைந்து போகவே இல்லை'' என்று குறிப்பிடுகிறார். என்ன தான் கற்கண்டை கடைவாயிலே போட்டு நொறுக்கித் தின்றாலுங்கூட, கற்கண்டு துகள்கள்தான் கரையுமே தவிர சுவை குறையாது. அதேபோலத்தான் தமிழ். எனவேதான் அது கரையவில்லை என்பதை தம்பி வைரமுத்துவோடு சேர்ந்து நானும் ஒப்புக் கொள்கிறேன். உண்மையை ஒப்புக்கொள்வதில் தயக்கம் தேவை இல்லை என்ற காரணத்தால்!

களப்பிரர்கள் ஆண்டிருக்கிறார்கள்; தமிழகத்தை! சேர, சோழ, பாண்டியன் ஆண்டிருக்கிறார்கள், தமிழகத்தை! இருண்ட காலம் தமிழகத்தை மொய்த்திருந்தது! அதுவும் நமக்குத் தெரியும் - வரலாறு கூறுகிறது. பல்லவர்கள் ஆண்டிருக்கிறார்கள். அந்தக் காலத்திலே வடமொழிக்குத்தான் ஆதிக்கம் இருந்தது. ஏன் பிற்காலச் சோழர்களிலே ராஜராஜ சோழன் ஆண்டிருக்கிறான். அவன் காலத்திலே கூட - தமிழுக்கு தனித்த உயர்வில்லை, வட மொழிக்குத்தான் அன்றைக்கும் ஆதிக்கம் இருந்தது. இத்தனையும் கடந்து ஒவ்வொரு காலக்கட்டத்திலும், ஒவ்வொரு நிலையிலும் தமிழ் தன்னைத் தாழ்த்திக் கொள்ளாமல், புலவர்கள் வாயிலாக - புரட்சிக் கவிஞன் பாரதிதாசன் கூறியதைப் போல் - ''தமிழ் எங்கள் இளமைக்குப் பால் புலவர்க்கு வேல்'' என்பதைப் போல் புலவர்கள் கையிலிருந்த காரணத்தால், தமிழ் அழியவில்லை என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

''எத்தனை வண்ணங்கள் பூசிப் பார்த்தாலும் தமிழின் மூல வண்ணம் அழிவதே இல்லை'' என்று வைரமுத்து குறிப்பிட்டிருக் கிறார். அழியாது. பல வண்ணங்கள் பூசப்பட்டன - தமிழகத்தின் மீது! வானத்தை நாம் அண்ணாந்து பார்க்கும்போது எத்தனையோ வண்ணங்களை காண்கிறோம். காலையிலே கிழக்குத் திக்கிலே செவ்வானத்தை காண்கிறோம். பிறகு சில நேரங்களில் மஞ்சள் நிறத்தை மேகங்களிலே காண்கிறோம். சில நேரங்களில் வானவில்லில் பல வண்ணங்களைக் காண்கிறோம். மேற்கு திசையில் அந்திவானத்தில் செவ்வானத்தைக் காண்கிறோம். ஆனா லும் எத்தனை வண்ணங்கள் இருந்தாலும் வானம் ஒரே வண்ணம் தான். நீல வண்ணம்தான் - அதைப் போல எத்தனை வண்ணங்கள் வந்து மறைந்தாலும் ''தமிழுக்கு நிறம் உண்டு'' - அதுதான் வானத்தைப் போன்ற நிறம் - எப்படி நீல வண்ணம் வானத்திற்கு நிரந்தரமானதோ, அதைப் போலவே தமிழுக்கும் நிறம் உண்டு என்பதை இங்கே தம்பி வைரமுத்து எடுத்துக் காட்டியிருக்கின்ற இந்த மாண்பு - இந்தப் பெருமிதம் என்றென்றும் பாராட்டத் தகுந்தது.

ஒன்றை தம்பிக்குக் கூறிக் கொள்வேன். அவர் கட்டளை என்ற பெயரால் ஒரு கவிதையை இயற்றியிருக்கிறார். அவருக்கு கட்டளையிடுகின்ற வயது எனக்குண்டு. உரிமையும் எனக்குண்டு. எனவே நான் தம்பியைக் கேட்டுக் கொள்கிறேன். இந்த முன்னுரையே ஏறத்தாழ பத்து அல்லது பதினோரு பக்கங்கள் கொண்ட முன்னுரை - ஒரு பெரிய புத்தகமாக வைரமுத்துவால் வரையப்பட்டு, அதனுடைய வெளியீட்டு விழாவில் நான் கலந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறேன். (கைதட்டல்) ஏனென்றால் திருக்குறள் போல இதிலே தமிழகத்தின் வரலாறும், அந்த வரலாற்றிலே தமிழ் மொழி எப்படியெல்லாம் தப்பித்து பிழைத்தது என்பதும் எந்தெந்த புலவர்கள் எந்தெந்த காலக் கட்டத்தில் தமிழை வாழ வைத்தார்கள் என்பதும், வாழ வைக்க முற்பட்டார்கள் என்பதும் இந்த முன்னுரையிலே வைரமுத்துவால் கூறப்பட்டுள்ளது. இதை நானூறு அல்லது ஐநூறு பக்கப் புத்தகமாக வெளியிட்டால் என்றென்றைக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கு, தமிழ் மக்களுக்கு, எதிர்கால இளைஞர்களுக்கு, வரலாற்றுப் பேராசிரியர் களுக்கு உறுதுணையாக இது அமையும் என்ற காரணத்தால், இந்த முன்னுரை பெரிய அளவிலே விரிவுரையாக பெரிய நூலாக வெளிவரவேண்டுமென்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விழா குறித்த விளம்பரத்தில் ''இலக்கிய பேச்சு - கலைஞர் ஆற்றுவார்'' என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இலக்கியம் என்பது என்னைப் பொறுத்தவரையில், அரசியல் வெப்பத்திற் கிடையே இளைப்பாறுகின்ற ஒரு நிழல், குளிர் தரும் நிழல் என்றாலுங்கூட - இலக்கியம் என்ற சொல்லைப் பற்றியே நாம் கொஞ்சம் ஆராயலாம். அதற்கு ஒரு சம்பவம் கூட உண்டு.

ஏறத்தாழ ஐம்பதாண்டுகளுக்கு முன்பு கோவை மாநகரத் தில் ஒரு மாநாடு நடைபெற்றது. முத்தமிழ் மாநாடு என்று அதற்குப் பெயர். அப்போது நான் சேலத்தில் திரைப்படத் துறையிலே பணி யாற்றிக் கொண்டிருந்தேன். மந்திரிகுமாரி படம் வெளிவருகின்ற

காலகட்டம். அந்த மாநாட்டிற்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். முதல்நாள் செல்லவில்லை. மறுநாள் சென்றேன். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் அந்த மாநாடு நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா, நாவலர் சோமசுந்தர பாரதியார், அவ்வை துரைசாமி பிள்ளை, வெள்ளைவாரணார் போன்றவர்களும் பங்கேற்ற மாநாடு அது. மறுநாள் பகல் 12 மணி அளவில் நான் மாநாட்டிற்குச் சென்றதும், அங்கேயிருந்த நண்பர்களிடம் ''நான் நேற்று வரவில்லையே, நேற்றும் இன்று காலையிலும் என்ன நடை பெற்றது?'' என்று கேட்டேன். அவர்கள் சிரித்துக்கொண்டே, ''இலக்கியம் தமிழா, வடமொழியா?'' என்ற ஆராய்ச்சி நேற்று காலையிலே தொடங்கி இதுவரையிலே நடைபெற்றுக்கொண்டிருக் கின்றது'' என்றார்கள். ஏன் என்று கேட்டேன். தமிழ் இலக்கிய மன்றம் என்று தமிழகம் தழுவிய அளவிலே ஒரு அமைப்பை உருவாக்க வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முடிவை எதிர்த்து நாவலர் சோமசுந்தர முதலியார் ''இலக்கியம்'' என்பது ''இலட்சியம்'' என்ற வடமொழிச் சொல்லிலிருந்து வந்தது, எனவே இலக்கிய மன்றம் என்று பெயர் வைக்கக் கூடாது'' என்று சொன்னார். ''அதை மறுத்து வேறு சில புலவர்கள் பேசினார்கள். இப்போதும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்'' என்று சொன்னார்கள்.

நான் சென்று அண்ணாவிற்கு பக்கத்திலே மேடையிலே அமர்ந்தபோது - பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், இலக்கியம் தமிழ்தான் சோமசுந்தர பாரதியார் சொன்னதைப் போல அது வடமொழிச் சொல்லிலிருந்து வந்ததல்ல; ''இலங்குதல்'' என்ற தமிழ்ச் சொல்லின் அடிப்படையில் வந்ததுதான் இலக்கியம்; எனவே இது தமிழ்தான்'' என்று பேசிக்கொண்டிருந்தார். அடுத்து, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், வெள்ளைவாரணார் என்ற பெரும் புரவரைர் பேச அழைத்தார். அழைக்கும்போதே, ''அடுத்து புலவர் வெள்ளைவாரணார் அவர்கள் இலக்கியம் தமிழ் என்பதைப் பற்றிய கேள்விக்கு விடையளிப்பார். அல்லது தொடர்ந்து வாதிடுவார்'' என்று கூறி அவரை அழைத்தார். அவர் பேசி முடித்த பிறகு என்னைப் பேச அழைத்தார்கள்.

நான் பேசும்போது சொன்னேன். ''நேற்று இந்த மாநாட்டிற்கு வரவியலாமல் வேறு சில பணிகள் இருந்தன; இன்று வந்தவுடன் ''என்ன நடந்தது? இதுவரை'' என்று கேட்டேன். ''நேற்று முதல் இதுவரை இலக்கியம் தமிழா, வடமொழியா என்று ஆராய்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது'' என்று குறிப்பிட்டார்கள். நான் இங்கே கூடியிருக்கும் பெரும் புலவர்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறேன். அது என்ன மொழி என்பதை நீங்கள் பத்து புலவர்கள் ஒரு இடத்திலே அமர்ந்து ஒரு முடிவு செய்துகொண்டு வந்து இந்த இடத்திலே பேசியிருக்கலாம். நீங்கள் இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்காக ஐம்பதாயிரம் பேருடைய நேரத்தை வீணடித்திருக்க வேண்டிய தேவையில்லை. நீங்கள் முடிவு செய்து இலக்கியம் தமிழா அல்லவா என்று ஒரு தீர்ப்பைச் சொன்னால் அதை நாங்கள் ஒத்துக்கொண்டு தொலைக்கிறோம். அதை விட்டு விட்டு எதற்காக இரண்டுநாள் மாநாடு'' என்று கேட்டேன். நான் பேசி முடிந்தபிறகு புரட்சிக் கவிஞருக்கு என் மீது கொஞ்சம் கோபம். என்னைப் பேச அழைக்கும்போதே அவர் ''இப்போது நாடகப் புலவர் கருணாநிதி பேசுவார்'' என்றழைத்தார். நான் உண்மையைச் சொல்கிறேன். நான் பேசி முடித்ததும், ''உன்னைப் போய் நாடகப் புலவர் என்று சொன்னேனே'' என்று சீறி விழுந்தார். ஏனென்றால் அங்கேயுள்ள புலவர்களையெல்லாம் நான் இழிவுபடுத்திவிட்டதாக அவருக்கு என் மீது கோபம். அண்ணாவிடம் கூட குறைபட்டுக்கொண்டார். மாலையிலே அண்ணா பேசினார். பேசும்போது ''தம்பி கருணாநிதி காலையிலே பேசிக் கொண்டிருந்த போது என் பக்கத்திலே இருந்த அவ்வை துரைசாமி பிள்ளை என்னை தொடையிலே தட்டி, உங்கள் கட்சியிலே ஹைட்ரஜன் குண்டுகளையெல்லாம் வளர்க்கிறீர்களே (பலத்த கைதட்டல்) என்று சொன்னார்'' என்று அண்ணா குறிப்பிட்டார். இதை நான் அவர்கள் எல்லாம் இல்லாத நிலையில் இப்போது மட்டும் கூறவில்லை. அவர்கள் எல்லாம் இருந்தபோதே பலமுறை கூறியிருக்கிறேன். அவர்கள் எல்லாம் இருந்த மேடையிலேயே கூறியிருக்கிறேன்.

ஏனென்றால் மக்களுக்குப் புரிய வேண்டிய ஒரு பிரச்சினையை அதிலும் மொழி சம்பந்தப்பட்ட ஒன்றை புலவர்கள் ஒன்று கூடி அவர்களே தீர்மானித்து மக்கள் முன்னால் அதை வைத்தால் பிரச்சனை தொடராது. அதை விடுத்து மக்கள் மன்றத்திலே விவாதமாக அதை ஆக்குவது கூடாது என்பதைத்தான் நான் அன்றைக்கு எடுத்துச் சொன்னேன். எனவே இங்கே இலக்கியம் பற்றி நான் பேச வேண்டுமென்று தம்பி வைரமுத்து அன்புக் கட்டளை பிறப்பித்திருந்தாலும், நான் இன்று பேசவிருக்கின்ற இலக்கியம் தம்பி வைரமுத்து எழுதியுள்ள ''தமிழுக்கு நிறம் உண்டு'' என்ற இந்தக் கவிதைத் தொகுப்பிலே நான் காணுகின்ற சுவைகள்தான் - நான் காணுகின்ற இன்பம்தான்; நான் காண்கின்ற உணர்வுதான் - அதைத் தான் இலக்கியமாக இன்றைக்கு நான் பேச விழைகிறேன்.

எடுத்த எடுப்பில் - முன்னுரையைத் தொடர்ந்து தமிழ்த் தாய் வாழ்த்து! அதில் எழுதுகிறார்...

''விழித்துப் பார்க்கும்
விடியலொவ்வொன்றிலும்
தலையணை மீது
தலையிருந்ததில்லை''

இது எல்லோருக்கும் அனுபவம்தான். படுத்துத் தூங்குவோம். காலையிலே எழுந்து பார்க்கும்போது தலை, தலையணை மீது இருக்காது. அவரவர்களுடைய அனுபவம் அவர்களுக்கே தெரியும். (கைதட்டல்) வைரமுத்துவுக்கு தலை எங்கேயிருந்தது என்று எனக்குத் தெரியாது (கைதட்டல்) அடுத்து.

''ஒரே பாய்ச்சலில்
உள்ளாடைக்குள்
கால் நுழைத்த சாதனை
நிகழ்ந்ததே இல்லை''

காலையில் ஜட்டியோ அல்லது ட்ரவ்சரோ போடும்போது ஒரே நேரத்தில் போட முடியாது. போடும் போதே அந்தக் காலா, இந்தக் காலா என்று சந்தேகம் வந்துவிடும். அதாவது தனிப்பட்ட, சொந்த, எல்லோருக்கும் தெரிந்த - ஆனால் நாம் சொல்லாத விஷயங்களை - தம்பி வைரமுத்து சொல்லியிருப்பதைப் பார்த்துத்தான் ஆச்சரியப்படுகிறேன். தொடர்ந்து எழுதுகிறார்.

''சீப்போடு என்னதான்
சிநேகம் பிடித்தாலும்
ஒரே வகிர்வில்
வகிடு கொண்டதில்லை''

இது எனக்குத் தேவையில்லை. (பலத்த சிரிப்பு, கைதட்டல்) வைரமுத்துவின் அனுபவத்தைக் கூறுகிறார். அந்த அனுபவம் எனக்கும் ஒரு காலத்திலே இருந்தது. ''சீப்போடு என்ன தான் சிநேகம் பிடித்தாலும் ஒரே வகிர்வில் வகிடு கொண்டதில்லை'' என்கிறார். எதற்குச் சொல்ல வருகிறார் என்று பாருங்கள்.

''எது உள்
எது வெளி
பட்டிமன்றம் முடியாமல்
காலுறை அணிந்ததில்லை''

கால் உறை (சாக்ஸ்) அணியும்போது எது உள்பக்கம். எது வெளிப் பக்கம் என்பதற்கு ''பட்டிமன்றம்'' முடியாமல் அது தெரிவ தில்லையாம். அதற்கு ஒரு பட்டிமன்றமே தமிழ்க்குடிமகனை தலைவராக வைத்து அதை அணிய வேண்டும் என்கிறார். ஒவ்வொருவருடைய அனுபவம் இது.

''ஓடும் ரயிலில்
பிடிமான மில்லாமல்
சிறுநீர் கழிக்கும் திறனுமில்லை''

ரயில் வேகமாக ஓடிக் கொண்டிருக்கும்போது - சிறுநீர் கழிக்கச் சென்றால் ஏதாவது ஒரு பிடியை பிடித்துக் கொண்டுதான் (கைதட்டல்) - அது எந்தப் பிடி என்பது அவருக்குத் தான் தெரியும் (சிரிப்பு) நிற்கமுடியும். ஏனென்றால் அவர் ஏராளமாக காதல் கவிதைகளை எழுதியிருப்பதால், என் பேச்சும் இன்று அப்படித் தான் இருக்கும்.

''திரும்பத் திரும்பத்
திருத்தியும் திருத்தியும்
முற்றும் பிழை நீக்க
முடியவில்லை''

என்கிறார்.

''இத்தனை ஓட்டைகள்
இருப்பினும் என்னில்
வழியாதெப்படி
வந்து நிறைந்துள்ளாய்
என் தமிழே?''

என்று முடிக்கிறார்.

அதாவது இவ்வளவு ஓட்டைகள் என்னிடம் இருக்கிறது. இருந்தும் வழியாமல் என்னிடம் தமிழே எப்படி வந்து நிறைந்திருக் கிறாய் என்று தமிழை வாழ்த்துகிறார். ஆனால் நான் பாராட்ட மாத்திரம் இங்கே வரவில்லை. குறையும் சொல்ல வேண்டு மல்லவா? அப்போது தானே நிறையாகும். அவர் சொல்லுகிறார் ''திரும்பத் திரும்பத் திருத்தியும், திருத்தியும் முற்றும் பிழை நீக்க முடியவில்லை'' என்று சொல்லியிருக்கிறார். அது உண்மைதான்! இந்தப் புத்தகத்தில் 39ஆவது பக்கத்தில் (பலத்த சிரிப்பு கைதட்டல்) வேறு ஒரு கவிதையிலே சொல்லுகிறார்.

''விலங்கின் விலை தெரியுமா
உனக்கு?
உயிர் கழிந்து
உடல் கிடப்பினும் -
ஆபரணமாகும்
புலியின் நகம்
எழுகோல் ஆகும்
புறாவின் இறகு''

என்று எழுதியிருக்கிறார்.

புலியைக் கொன்று போட்டால் கூட அதன் நகம் நமக்கு ஆபரணமாகும். புறாவைச் சுட்டுப் போட்டால் கூட அதன் இறகு எழுதுகோலாகும் என்று சொல்ல வந்தவர் - சொல்லியிருக்கிறார் - ஆனால் அச்சுக் கோத்தவர்கள் எழுதுகோல் என்பதற்குப் பதிலாக ''எழுகோல்'' என்று அச்சடித்திருக்கிறார்கள். அதை பிழை திருத்தும் போது கவனிக்காமல் வெளி வந்திருக்கிறது. நான் படித்து விட்டு உங்களிடம் சொல்கிறேன். புத்தகத்தில் எழுதுகோல் என்பதில் ''து'' என்ற எழுத்தைக் காணோம். அதை ''தூ'' வென்று விட்டார்கள் போலும்! ''திரும்பத் திரும்பத் திருத்தியும் திருத்தியும் முற்றும் பிழை நீக்க முடியவில்லை'' என்று கவிதையிலே முதலிலே எழுதியிருக்கிறார் அல்லவா; அதற்கு உதாரணமாக இது திகழ்கிறது (கைதட்டல்)

''கேள் மனமே கேள்'' என்ற கவிதைக்கு பொன்மணி இங்கே முன்னுரை தந்து - அலாவுதீனுக்கு எதிரே வந்த பூதம் போல ஒரு பூதம் வந்தால் - விளக்கைத் தேயக்கும் போது பூதம் வந்தால் என்ன கேட்பேன் என்று கூறுகின்ற அந்தப் பாடலில் வைரமுத்து சொல்கிறார்.

''உலகெங்கும் சம பங்கு மழையைக் கேட்பேன்''

என்கிறார். அப்புறம் என்ன கேட்கிறார் தெரியுமா? கவிஞர்கள் எப்போதும் முரண்படுவார்கள் என்பதற்கேற்ப

''விண்மீனை மறைக்காத வானம் கேட்பேன்''

என்கிறார்.

வீண்மீன் மறைக்காத வானம் கேட்கிறார். வானத்திலே மேகம் இல்லாவிட்டால் மழை எப்படி வரும்? (கைதட்டல்) உலகெங்கும் சமபங்கு மழை வேண்டுமென்கிறார். வானம் அப்படியே வெளிச்சமாக விண்மீனைக் காட்டிக் கொண்டிருந்தால், அதை மறைக்க மேகங்களே இல்லாமல் இருந்தால், மழை வராது. ஆனால் நான் இதை பெரும் முரண்பாடு என்று சொல்லமாட்டேன். கரு மேகங்களும் வர வேண்டும்; எப்படி நாடகத்திலே திரை விழுவதைப் போல - திரை இருக்க வேண்டும். உள்ளே நடக்கின்ற காட்சிகளை உடனடியாகக் காண்பதற்கு ஏற்ப திரை சுருளவும் வேண்டும். அதைப் போல இந்தக் கருமேகங்கள் வந்தாலுங்கூட, மழை உடனடியாகப் பொழிந்து அந்தக் கருமேகங்கள் எல்லாம் மழை பொழிந்த காரணத்தால், அகன்று நீங்கி, விண்மீன்களைக் காண வேண்டும் என்பதைத் தான் கவிஞர் இப்படிப் பாடுகிறார் என்று தம்பிக்கு அண்ணன் வக்காலத்து வாங்குகிறேன். (பலத்த கைதட்டல்)

பின்பு அதே பாடலில் -

''இப்போது போலிருக்கும் இளமை கேட்பேன்
இருந்தாலும் அறிவுக்கு நரைகள் கேட்பேன்''

மிக உயர்ந்த வரிகள். நான் நினைத்து நினைத்து மகிழ்ந்த வரிகள். இப்போது போலிருக்கும் இளமை கேட்பேன் என்பது பேராசை. யார்தான் கேட்கமாட்டார்கள்? நான் கூடக் கேட்பேன் இங்கே அமர்ந்திருக்கும் சாவி கூடக் கேட்பார். (பலத்த சிரிப்பு) அவரும் அவருடைய துணைவியாரும் அமர்ந்திருப்பதைப் பார்த்தால் அந்த இளமையோடு உட்கார்ந்திருப்பது போலத்தான்

தெரிகிறது. (கைதட்டல்) இப்போது போலிருக்கும் இளமை கேட்பேன் என்று கூறிவிட்டு அடுத்து, ''இருந்தாலும் அறிவுக்கு நரைகள் கேட்பேன்'' என்கிறார். மிக உயர்ந்த சொல்லாட்சி! அறிவுக்கு நரைகள் கேட்பேன் என்கிறார் - அது கிழத்தன்மைக்கு அல்ல; முதிர்ந்த அறிவு கேட்பேன் என்பதை தம்பி வைரமுத்து தனக்கே உரிய அந்த அழகோடு குறிப்பிட்டிருக்கிறார். (கைதட்டல்) அவர் இந்த இளமையிலேயே அவருடைய அறிவுக்கு நரை வந்து விட்டக் காரணத்தினால்தான் அவரால் இதை எழுத முடிந்தது என்று கருதுகிறேன்.

''இருபது கட்டளைகள்'' என்ற தலைப்பிலே உள்ள கலிதை பற்றி இங்கே பொன்மணி வடித்து, அந்தக் கட்டளைகள் எவையெவை என்பதையும் கவிஞர் மூலமாக இங்கே வெளியிடச் சொன்னார்.

''எங்கே ஊர்களில்
ஜாதி இல்லையோ
அங்கே கூவுக சேவல்களே''

என்கிறார்.

அப்படி என்றால் தமிழ்நாட்டில் சேவல்களே கூவ முடியாது. (கைதட்டல்) ஆனால் ஜாதிகள் மறைவதற்கான அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன.

நேற்றைக்கு ஈரோடு மாவட்டத்தில் ஒரு முட்டைப் பதப் படுத்தும் தொழிற்சாலை தொடக்க விழாவிற்குச் சென்றிருந்தேன். தொடக்க விழா அழைப்பிதழில் அதனுடைய இரண்டு நிறுவனங் களின் ஒரு உரிமையாளர் தமிழக அரசுத் தொழில் வளர்ச்சிக் கழகம். மற்றொரு உரிமையாளர் திரு. மயில்சாமி கவுண்டர் அவர்களின் நிறுவனம். அழைப்பிதழில் மயில்சாமி கவுண்டர் என்றுதான் அச்சடிக்கப்பட்டிருந்தது. அவர் வரவேற்புரையிலே நேற்று இதே நேரம் பேசும்போது - என்னுடைய பெயர் மயில்சாமி .

கவுண்டர் என்று அழைப்பிதழிலே அச்சிட்டிருக்கிறேன் - முதலமைச்சர் என்னை மன்னித்துக் கொள்ள வேண்டும். முதலமைச்சர் இப்போது தான் சாதி பேதங்கள் ஒழிய வேண்டு மென்ற அடிப்படையில் தனக்குப் பிடித்தமான பெயர்களை எல்லாம் கூட மாவட்டங்களுக்கும், போக்குவரத்துக் கழகங் களுக்கும் மாற்றிவிட்டு வந்திருக்கிறார். அவருக்கு ஒத்துழைப்பு தருவதற்கு அடையாளமாக நான் என்னுடைய சாதிப் பெயரை விட்டுவிடுகிறேன். மயில்சாமி என்பதையும் மயிலானந்தம் என்று மாற்றிக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டார். நான் பேசும்போது, கவுண்டரை விட்டுவிட்டார்; மயில்சாமி என்பதையும் மாற்றி ஏன் மயிலானந்தம் என்று வைத்துக் கொண்டார் என்பதைச் சிந்தித்தால், அப்படி பெயர் மாற்றியதில் ஏற்பட்ட ஆனந்தத்தைத் தெரிவிக்கக் கூடிய வகையிலே மயிலானந்தம் என்று மாற்றிக் கொண்டிருக் கிறார் போலும் என்று குறிப்பிட்டேன்.

அதே கவிதையில்,

''எங்கே உனக்கு முன்
மனிதர் விழிப்பரோ
அங்கே தோன்றுக கதிரவனே!''

என்கிறார்.

அப்படிப் பார்த்தால் நான் அதில் ஒருவன் என்று கூறிக்கொள்ள முடியும். பாக்கி இந்த அவையிலே அப்படி எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியாது. ''எங்கே உனக்கு முன் மனிதர் விழிப்பரோ அங்கே தோன்றுக கதிரவனே'' என்கிறார். இரவெல்லாம் தூங்காமல் விழித்திருந்து பணியாற்றுப வர்களும் இருக்கிறார்கள். அறிஞர் அண்ணா விடியற்காலை 3 மணி வரையிலே எழுதி எழுதிக் குவிப்பார். அவர் எழுதியவைகள் எல்லாம் மின்விசிறியில் அறை முழுவதும் பறந்து கொண்டே யிருக்கும். அப்படி பறந்து கொண்டிருக்கும் அந்த தாள்களின் மீதே

அயர்ந்து படுத்துத் தூங்கிவிடுவார். அண்ணியாரோ, மற்றவர் களோ வந்து விடியற் காலை அந்தத் தாள்களை யெல்லாம் எடுத்து மேஜையிலே அடுக்கி வைப்பார்கள். அப்படி விழித்துப் பணி யாற்றுபவர்கள் உண்டு.

தலைவர்கள் விழித்திருக்கிறார்கள் என்றால் அதற்கொரு சம்பவம் உண்மைச் செய்தியோ என்னவோ தெரியாது - கூறுவார் கள். ஒருமுறை நிருபர்கள் மகாத்மா காந்தி அடிகளிடத்திலே பேட்டி காண இரவு பத்து மணிக்கோ பத்தரை மணிக்கோ நேரம் கேட்டிருந்தார்கள். அவரும் ஒத்துக் கொண்டிருந்தார். அன்றைக்கே ஜனாப் ஜின்னாவிடமும் நேரம் கேட்டிருந்தார்கள். 11 மணி அளவிற்கு அவரும் ஒத்துக் கொண்டிருந்தார். 12 மணிக்கு டாக்டர் அம்பேத்கரிடம் நேரம் கேட்டு, அவரும் ஒத்துக் கொண்டிருந்தார். ஆனால் நிருபர்கள் காந்தியடிகளைச் சென்று சந்திக்க அரைமணி நேரம் தாமதமாகி விட்டது. சென்றார்கள் காந்தியடிகள் இல்லத் திற்கு. அங்கேயிருந்தவர்கள் ''காந்தியடிகள் உறங்கப் போய் விட்டார்கள்'' என்று சொன்னார்கள். பிறகு ஜின்னா வீட்டிற்குச் சென்றார்கள். ''நீங்கள் தாமதமாக வந்திருக்கிறீர்கள்; எனவே ஜின்னா உறங்கச் சென்று அரைமணி நேரமாகிறது'' என்று சொன்னார்கள். மூன்றாவதாக அம்பேத்கர் வீட்டிற்குச் சென்றார்கள். அவர் விழித்துக் கொண்டி ருந்தார் - இவர்கள் தாமதமாகச் சென்ற போதிலும்! அம்பேத்கரைப் பார்த்து நிருபர்கள் கேட்ட முதல் கேள்வி - ''காந்தி அடிகளைப் பார்க்கச் சென்றோம்; அவர் தூங்கி விட்டார்; ஜனாப் ஜின்னாவை பார்க்கச் சென்றோம்; அவரும் உறங்கிவிட்டார்; நீங்கள் மாத்திரம் விழித்துக் கொண் டிருக்கிறீர்களே, என்ன காரணம்?'' என்று கேட்டபோது, அம்பேத்கர் சொன்னார் ''காந்தியடிகளுடைய மக்களும், ஜனாப் ஜின்னாவின் மக்களும் விழித்துக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே அவர்கள் தூங்கிவிட்டார்கள். ஆனால் என்னுடைய மக்கள் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்; ஆகவே நான் இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறேன்'' (பலத்த கைதட்டல்) என்று கூறியதாக ஒரு

செய்தி உண்டு. எனவே அந்த உள்ளுணர்வை வைத்துதான் தம்பி வைரமுத்து ''எங்கே உனக்கு முன் மனிதர் விழிப்பரோ, அங்கே தோன்றுக கதிரவனே'' என்று பாடுகிறார்.

அதே பாட்டில்

''எங்கே விதவையர் கூந்தல் காயுமோ
அங்கே மலருக பூவினமே''

என்றும் எழுதியிருக்கிறார். இது தேசிய கவி பாரதியாரையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையும் நம் நினைவுக்குக் கொண்டு வருகின்ற கவிதை வரிகளாகும்.

''கோரிக்கையற்று கிடக்குதண்ணே வேரில் பழுத்த பலா'' என்று விதவையைப் பற்றி புரட்சிக் கவிஞர் பாடிய கவிதையை நினைவிற்குக் கொண்டு வரும் கவிதை இது. அந்தப் பாடலை அல்ல; அந்தக் கருத்தை நினைவிற்குக் கொண்டு வருகிறது, எங்கே விதவையர் கூந்தல் காயுமோ அங்கே மலருக பூவினமே - விதவையர் கூந்தலில் பூக்கள் ஏற வேண்டும், பூச்சரம் மிளிர வேண்டும் என்ற அந்தக் கருத்தை உள்ளடக்கிக் கவிஞர் வைரமுத்து ஒரு புரட்சிகரமான எண்ணம் கொண்டவர் சமுதாயத்திற்கு முன்னேற்றம் தேவை என்ற முனைப்பான ஆர்வம் படைத்தவர் என்பதை எடுத்துக் காட்டும் வகையில் அவர் அந்தப் பூக்களுக்கு கட்டளையிடுகிறார்.

என் நினைவிற்கும் உங்கள் நினைவிற்கும் ஒன்று கூற வேண்டும். ஆனந்தவிகடன் பத்திரிகையிலே ஒரு கவிஞன் எழுதியிருந்தான். ''அய்யோ விதவை'' என்று எழுதினால் அந்த சொல்லுக்குக் கூட பொட்டு கிடையாதே? வி-த-வை என்று எழுதினால் அந்த எழுத்திலே பொட்டு இல்லையே'' என்று அழுது எழுதினான். அதைப் படித்துவிட்டு நான் ராஜேஸ்வரி மண்டபத்திலே நடைபெற்ற ஒரு விழாவிலே பேசும்போது சொன்னேன். ''தம்பீ, நீ விதவை என்று அந்த நிகழ்ச்சியிலேயே வடமொழியிலே

எழுதினால் பொட்டு இருக்காது; கைம்பெண் என்று தமிழிலே எழுது, ஒரு பொட்டுக்குப் பதில் இரண்டு பொட்டு இருக்கும்'' (கைதட்டல்) என்று அந்த நிகழ்ச்சியிலே குறிப்பிட்டேன். இந்தக் கவிதை எனக்கு அந்த நினைவை இழுத்து வந்தது என்பதற்காக இதைக் குறிப்பிடுகிறேன்.

''ஞானத்தீ'' என்ற தலைப்பில் நெருப்பைப் பற்றி கூறும்போது நெருப்பு எப்போது, ஞானத் தீயாக மாறுகிறது என்பதை மிக அழகாகப் பாடியிருக்கிறார்.

''நெருப்புக்கு ஜாதி சொல்லி
நெருப்பையே எரித்தோம்
நெருப்புக்குப் பெயர் வைப்பதில்
நூற்றாண்டுகள் எரித்தோம்...
நெருப்பு கண்டு வியந்தவன் தீ என்றான்...
பயந்தவன்
பகவான் என்றான்...''

அக்னியைப் பார்த்து வியந்தவன் தீ என்றானாம். பயந்தவன் பகவான் என்றானாம். இந்த அக்னியைப் பற்றியும் ஒரு கதை உண்டு.

பெண்களுக்கு ஆண்களைப் போல முகத்திலே ஏன் தாடி மீசை இல்லை என்று ஒரு கேள்வி : இந்தக் கேள்விக்கு ''விப்ர புராணம்'' பதில் சொல்லியிருக்கிறது. புராணத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் யாரும் ஏதோ கருணாநிதி இங்கே சுயமரியாதை பிரச்சாரம் செய்வதாக கருதக்கூடாது. எல்லோருக்கும் வேண்டியது தான் சுயமரியாதை. சுயமரியாதை இல்லாமல் யாரும் வாழ முடியாது.

விப்ர புராணத்திலே மாண்டவியர் என்று ஒரு ரிஷி வருகிறார். ரிஷிக்கு ஒரு பத்தினி உண்டு. ரிஷியின் மனைவி என்று கூறக் கூடாது. ரிஷி பத்தினி! பல முனிவர்கள் இல்வாழ்க்கை

யிலேயே நல்ல ஆன்மிகவாதிகளாக விளங்கி இருக்கிறார்கள். ஏன் வள்ளுவரே கூட அவர் முனிவர் அல்ல என்றாலுங்கூட அவர் வாழ்க்கைத் துணையோடு தான் இருந்தார் என்பது தான் நாமறிந்த வரலாறு.

அதைப் போல மாண்டவியர் என்ற ரிஷி தன் பத்தினியோடு வாழ்ந்தபோது அழகான பெண் குழந்தை இருந்தது. இவர்களுக்கு பூலோகத்தைச் சுற்றிப் பார்க்க வேண்டுமென்று ஒரு ஆசை வந்தது. அப்படியானால் பெண்ணை அழைத்துக் கொண்டு போக முடியாது. ஏனென்றால் பூலோகத்தைச் சுற்றிப் பார்க்கும்போது ஆங்காங்கு அரக்கர்கள் இருப்பார்கள்; அவர்கள் கண்ணிலே இந்த பெண் பட நேரிடும். எனவே பத்திரமாக யாரிடமாவது ஒப்படைத்துவிட்டுப் போகலாம் என்று யாரிடம் ஒப்படைக்கலாம் என்று யோசித்தார்கள். பரமசிவனிடம் ஒப்படைக்கலாமா என்று யோசித்தார்கள்.

உடனே மாண்டவியர் சொன்னார். தாருகாவனத்து ரிஷி பத்தினிகளைப் பற்றி நீ கேள்விபட்டதில்லையா? அங்கேயே பரமசிவனைப் பற்றி தவறான கருத்து உண்டு. எனவே தாருகாவனத்து ரிஷி பத்தினிகள் பட்டபாட்டில் நம் பெண்ணை பரமசிவனிடம் ஒப்படைக்கக் கூடாது என்கிறார். (நான் சொல்லவில்லை, விப்ரபுராணம் கூறுகிறது) சரி, மகாவிஷ்ணுவிடம் ஒப்படைத்துவிட்டுப் போகலாம் என்று யோசிக்கிறார்கள். அதற்கு ''கூடாது, கூடாது, மகாவிஷ்ணு தான் கோபாலகிருஷ்ணனாக உருவெடுத்து கோபிகாஸ்தீரிகளிடம் விளையாடியவர்; அவரிடமும் இந்தப் பெண்ணை விட்டு விட்டுப் போகக் கூடாது'' என்கிறார்கள்.

சரி இந்திரனிடம் ஒப்படைக்கலாமா என்கிறார்கள். அய்யோ, அகலிகை கதை தெரியாதா, வேண்டாம் அந்த யோசனை'' என்று முடிவிற்கு வந்து இப்படி ஒவ்வொருவராகச் சொல்லி வேண்டாம், வேண்டாம் என்று கைவிட்டு கடைசியாக -

யோக்கியமானவன், நல்லவன் எமதர்மராஜன், அதனால் தான் அவனுக்கு எம தர்மன் என்றே பெயர் இருக்கிறது. எனவே அவனிடம் விட்டுவிட்டுப் போகலாமென்று சொல்லி, அந்தப் பெண்ணைக் கொண்டுபோய் விட்டுவிட்டு இவர்கள் சுற்றுப் பயணம் போய்விட்டார்கள்.

எமதர்மன் ஒருநாள், இரண்டு நாள் பெண்ணை வைத்திருந்தான். தினந்தோறும் அந்தப் பெண் பால், பழம் போன்றவைகளைக் கொண்டு வந்து கொடுக்க, பரிமாற, இப்படியாக ''தர்மன்'' முன்னால் ஒரு ''அ'' சேர்ந்துவிட்டது. உடனே தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான். அந்தப் பெண்ணும் சம்மதித்தாள். இவனுக்கு ஒரு பயம். இந்தப் பெண்ணோடு இன்பமாக இருப்பதை யாரும் கண்டுவிடக் கூடாது என்பதற்காக - இவளை ஒளித்து வைப்பதற்காக - அவளை தன் வயிற்றிலே பகல் எல்லாம் விழுங்கி வைத்திருப்பான். இரவிலே படுக்கை அறையிலே அவளை உமிழ்ந்து அவளோடு இன்பமாக இருப்பான். இப்படி பல நாட்கள் ஓடின.

ஒருநாள் அவன் நீராடுவதற்காகச் சென்றபோது அந்தப் பெண்ணை ஒரு மண்டபத்திலே உமிழ்ந்து வைத்துவிட்டு அவன் குளித்துக் கொண்டிருந்தான். அந்த நேரம் அந்த வழியாக வாயுபகவானும் அக்னி பகவானும் வந்தார்கள். அக்னி பகவானுக்கு இந்தப் பெண்ணைப் பார்த்ததும் மோகம் ஏற்பட்டு விட்டது. உடனே நண்பன் வாயுவைப் பார்த்து சொன்னான் - கொஞ்சம் மந்த மாருதமாக வீசு; அவளுக்கு ஒரு மயக்கத்தை ஏற்படுத்து - என்று கேட்கிறான். உடனே வாயு பகவான் அவ்வாறே செய்தான். அக்னி பகவான் அவன் அருகே நெருங்கினான். இருவருக்கும் கூடல்.

குளித்துக் கொண்டிருந்த எமன் திரும்பினான். எமன் பார்த்துவிடப் போகிறானோ என்று அந்தப் பெண், அக்னியைத் தூக்கி விழுங்கிவிட்டாள். எமனுக்கு அது தெரியாது. மண்ட

பத்திற்கு வந்து, வழக்கம் போல அவளைத் தூக்கி விழுங்கிவிட்டு போய்விட்டான். இப்போது எமனின் வயிற்றுக்குள்ளே அந்தப் பெண்; அந்தப் பெண்ணின் வயிற்றுக்குள்ளே அக்னி பகவான். பகல் எல்லாம் அவள் என்ன செய்தாள் என்றால் எமனின் வயிற்றுக்குள்ளேயே அக்னி பகவானை வெளியே துப்பி, இரண்டு பேருமே வயிற்றுக்குள்ளேயே இன்பமாக இருந்தார்கள். இரவிலே எமன் தன் வயிற்றுக்குள்ளிருந்து அவள் வெளியே துப்பி அவளோடு இன்பமாக இருக்கிறான். என்ன ஆயிற்றென்றால் உலகத்தில் அக்னியையே காணோம். உலகத்தில் அக்னி இல்லாவிட்டால் என்ன ஆகும்? அடுப்பு பற்ற வைக்க முடியவில்லை; தீப்பெட்டி எரியவில்லை. எல்லோரும், முப்பத்தி முக்கோடி தேவர்களும், நாற்பத்தி எண்ணாயிரம் ரிஷிகளும், கந்தர்வர், கின்னரர், கிம்புருடர், அஷ்டதிக்குப் பாலகர்கள் அத்தனை பேரும் (பலத்த கைதட்டல்) பரமசிவனிடம் போய் அக்னியைக் காணவில்லை என்று முறையிட்டார்கள்.

பரமசிவன் உடனே வாயுவை அழைத்து, உன் 'ப்ரெண்டு' தானே அக்னி பகவான்; நாளைக்கு 24 மணிநேரத்திற்குள்ளே அக்னியைக் கொண்டு வர வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறார். வாயுவிற்குத் தான் தெரியுமே அக்னி பகவான் எங்கிருக்கின்றான் என்று. அதற்காக என்ன செய்தாரென்றால், (அதற்குள் சுற்றுப்பயணம் சென்ற முனிவர் மாண்டவியரும் அவருடைய மனைவியும் திரும்பிவிட்டார்கள்.) வாயு பகவான் தன் அரண்மனையிலே ஒரு பெரிய விருந்து வைத்தான் எல்லோரும் வந்தார்கள். இலை போடப்பட்டது. வரிசையாக இலை போட்டுக் கொண்டு வரும்போது, வாயு பகவான் எமதர்மனுக்கு நேராக மூன்று இலை போட்டான். எமன் ''ஏன் எனக்கு மூன்று இலை?'' என்று கோபமாகக் கேட்டான். அதற்கு வாயு எமனைப் பார்த்து ''உன் வயிற்றுக்குள் இருக்கும் பெண்ணை வெளியே அனுப்பு - அதற்காக ஒரு இலை'' என்றான். எமன் துப்பினான், அந்தப் பெண் வெளியே வந்துவிட்டாள். ''இன்

னொரு இலை எதற்காக?'' என்று கேட்டான். உடனே வாயு, ''அம்மா, பதி விரதா சிரோண்மணி, உன் வயிற்றுக்குள் இருக்கின்ற என் நண்பனை அக்னி பகவானை வெளியே அனுப்பு'' என்கிறான்.

அவள் வெளியே அனுப்புகிறாள். அப்படி வெளியே அனுப்பும்போது, அக்னிக்குப் பயம். பெரியவர்களுக்கெல்லாம் நேராக வெளியே வர பயம் என்பதால் நடுங்கிக் கொண்டே வெளியே வருகிறான். வெளியே வந்த வேகத்திலே அந்தப் பெண்ணின் முகமெல்லாம் தீயில் கருகிப் போய்விட்டது. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். அதுவரை பெண்களுக்கு மீசை, தாடி உண்டு. அது கருகிப் போனதிலிருந்து பெண்களுக்கு முகத்திலே மீசை, தாடி கிடையாது. (பலத்த கைதட்டல்) இப்படி ஒரு புராணம். நான் எழுதியதல்ல. தாய்மார்கள் யாரும் முகம் சுளிக்கக் கூடாது. இதையெல்லாம் நம்பி நாம் ஏமாந்திருக்கிறோம் என்பதற்காகச் சொல்கிறேன். தம்பி வைரமுத்து ''பயந்தவன் பகவான்'' என்று எழுதியிருக்கிறாரே, அந்தப் பகவானின் கதையை நான் சொல்லாமல் இருந்தால் இந்தக் கவிதை முற்றுப் பெறாது என்பதற்காகத்தான் நான் இந்தக் கதையைச் சொன்னனே அல்லாமல் வேறல்ல.

அதே கவிதையில் இன்னொரு இடத்தில் சொல்கிறார். ''குளிர் காய - விலங்கு விரட்ட - சமைக்க - சைகை புரிய - கருவி செய்ய - களிமண் சுடப் பயன்பட்ட நெருப்பை - கற்பைக் கண்டறியும் தர்மா மீட்டராய் அழுக்குச் செய்தான் அயோத்தி மன்னன்'' (நான் எழுதவில்லை, வைரமுத்து எழுதியிருக்கிறார்) என்று அக்னி பிரவேசம் நடைபெற்றதே ராமாயணத்தில் - அதைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

இதே தலைப்பில் எழுதப்பட்ட கவிதையின் இறுதி வரியில்

''உள்ளே நெருப்பு
இல்லாதவர்க்கு
சூரியனும் ஒரு கரித்துண்டு!''

(அருமையான தத்துவம்)

உள்ளே நெருப்பு
உள்ளவருக்குக்
கரித்துண்டும் ஒரு சூரியன்...''

ஆழமாகச் சிந்தித்தால் தான் புரியும். உள்ளே நெருப்பு இல்லாதவர்க்கு என்றால் சூடு சொரணை இல்லாதவர்க்கு சூரியனும் ஒரு கரித் துண்டு. உள்ளே அக்கினி இருக்க வேண்டும். அது இல்லாதவர்க்கு சூரியனும் ஒரு கரித்துண்டுதான். உள்ளே நெருப்பு உள்ளவருக்கு - கரித் துண்டும் ஒரு சூரியன் - என்று ஒரு அருமையான தத்துவத்தை சூடு, சொரணை இருக்க வேண்டு மென்பதற்காக, அவர் சுட்டிக்காட்டியிருக்கிற தத்துவத்தை என்னால் மகிழ்ந்து, மகிழ்ந்து பாராட்டாமல் இருக்க முடியாது.

இன்னொன்று சொல்கிறார். விலங்குகள் பெருமையை அவரே சொல்லியிருக்கிறார். இங்கே ஒரு கவியரங்கத்திலே கூட அவர் பாடிய கவிதையிலே விலங்குகளைப் பற்றி பாடியதை நானே கேட்டுச் சுவைத்திருக்கிறேன், இதிலே கூறுகிறார்...

''ஒரு கடவுள் - காளை கொண்டான்
ஒரு கடவுள் - மயில் கொண்டான்
ஒரு கடவுள் - எலி கொண்டான்
ஒரு கடவுள் - கருடன் கொண்டான்
எந்தக் கடவுளையும்
விலங்கு சுமந்த தன்றி
மனிதன் சுமந்த தில்லை...

அதாவது மனிதனை விட விலங்கு உயர்ந்தது என்பதற்காகச் சொல்கிறார்... ஏன் மனிதன் சுமந்ததில்லை தெரியுமா -

மனிதன் சுமக்கச் சொன்னால்
கடத்தி விடுவானென்று
கடவுளுக்குத் தெரியாதா?'' (கைதட்டல்)

எவ்வளவு அருமையான தத்துவம்! கற்பனை அல்ல; நாட்டு நடப்பு! மேலும் எழுதுகிறார்...

"மனிதர்கள் வணங்கும்படி
சில விலங்குகள் உண்டு...

(வராக அவதாரத்தை வணங்குகிறோம்; கூர்மா அவதாரத்தை வணங்குகிறோம்; ஆஞ்சநேயரை வணங்குகிறோம்; அவர் கேட்கிறார்)

"மனிதர்கள் வணங்கும்படி
சில விலங்குகள் உண்டு
விலங்குகள் வணங்கும்படி
இங்கு மனிதர்கள் உண்டா?"

அற்புதமான கற்பனை மாத்திரமல்ல; அற்புதமான தத்துவம்.

இதைவிட உச்சக் கட்டத் தத்துவம் ஒன்று. "கால வித்தியாசம்" என்ற கவிதைத் தலைப்பில்

"பூமி தனக்கே சொந்தம் என்று
புலம்பித் திரிவதும் ஒரு காலம்
பூமிக்கே நீ சொந்தம் என்று
புரிந்து தெளிவதும் ஒரு காலம்"

பூமி நமக்குத்தான் சொந்தம் என்று புலம்பித் திரிவது ஒரு காலம். ஆனால் நாம் பூமிக்குத் தானே சொந்தம். எட்டடி மண்ணுக்கு அல்லது ஆறடி மண்ணுக்குத் தான் நாம் சொந்தம்.

"அயோத்தி ராமன் அழுகிறான்" என்ற தலைப்பிலே ஒரு கவிதை.

"கங்கை காவிரி
இணைக்க வேண்டும்
கரசேவகரே வருவீரா?"

கங்கையையும் காவேரியையும் இணைக்க வேண்டும், கர சேவகர்களே நீங்கள் வருவீர்களா? நீங்கள் பாபர் மசூதியை இடிக்கத்தானே போவீர்கள் என்கிறார்.

"காடுகள் மலைகள்
திருத்த வேண்டும்
கர சேவகரே வருவீரா?
வறுமைக் கோட்டை
அழிக்க வேண்டும்
கர சேவகரே வருவீரா?
மாட்டீர்கள் சேவகரே
மாட்டீர்கள்?
நாம் உடைக்கவே பிறந்தவர்கள்
படைப்பதற்கில்லை..."

கர சேவை என்றால் என்னவென்று உங்களுக்கெல்லாம் தெரியும். அதை யார் ஆதரித்தார்கள் என்பதும் உங்களுக்குத் தெரியும். (கைதட்டல்) நான் அரசியல் பேசவிரும்பவில்லை.

ஏதோ அயோத்திராமன் பிறந்த இடம் அது; அங்கே பாபர் மசூதி கட்டிவிட்டார்கள்; அதை இடிப்பது பற்றியெல்லாம் பெரிய பிரச்சினை. ஆனால் இவர் கேட்கிறார்...

அயோத்திராமன் அவதரித்தவனா? பிறந்தவனா என்று கேட்கிறார். அயோத்திராமன் பிறந்திருந்தால் அங்கே பாபர் மசூதி கட்டியிருக்கக் கூடாது தான். அங்கே அயோத்தியிலே ராமர் கோவில்தான் கட்ட வேண்டும். அவர் என்ன கேட்கிறார்.

"அயோத்திராமன்
அவதாரமா? மனிதனா?
அயோத்திராமன்

அவதாரமெனில்
அவன்
பிறப்புமற்றவன்
இறப்புமற்றவன்...
பிறவாதவனுக்கா
பிறப்பிடம் தேடுவீர்?
அயோத்தி ராமன்
மனிதன் தான் என்றால்
கர்ப்பத்தில் வந்தவன்
கடவுள் ஆகான்''

கர்ப்பத்திலே வந்தவன் கடவுளாக இருக்க முடியாது. அவதாரங்கள் கர்ப்பத்திலே வராது. ஆகவே கடவுளாக இருக்க முடியாது.

அதற்குப் பிறகு கவிஞர் தன் ஊரிலே ஓடிய ஒரு நதியைப் பற்றி பரிதாபமாக ஒரு கவிதை எழுதியிருக்கிறார். பொன்மணி அதைப்பற்றிச் சொல்லும்போது, பொன்மணிக்கும் கண் கலங்கி, அந்த நதியைப் பற்றிப் பாடும்போது தம்பி வைரமுத்துவிற்கும் கண் கலங்கி, அதைக் கேட்கும்போது எங்கள் ஊர் நதியை நினைத்துக் கொண்டு என்னுடைய கண்ணும் கலங்கியது. அதிலே சொல்கிறார்.

''பால் நுரைக்கும் பௌர்ணமி ராத்திரியில்
நிலவைக் கரைத்துக் கொண்டு
வெள்ளையாய் ஓடியதும்
எரிந்த மரங்களின்
கரிகள் சுமந்து
இரவின் திரவம் போல்
கறுப்பாய் ஓடியதும் (இரவின் திரவம் என்கிறார். பெரிய சொல்லாட்சி அது)

"எரிந்த மரங்களின்
கரிகள் சுமந்து
இரவின் திரவம் போல்
கறுப்பாய் ஓடியதும் (முதலில் வெள்ளை, இப்போது கறுப்பு)
மலைக்கிழவி போட்டுத் துப்பிய
தாம்பூலச் சாறு போல -
செஞ்சாத்துக் குழம்பாய்ச்
சிவப்பாய் ஓடியதும்..."

மலைக்கிழவி போட்டுத் துப்பிய தாம்பூலச் சாறாம்! ஏன் மலைக்கிழவி என்கிறார். மலைக்குமரி என்று ஏன் சொல்ல வில்லை, தெரியுமா? மலைக்குமரி தாம்பூலம் போட்டால் கீழே துப்ப மாட்டாள். அது துப்புகிற இடம் வேறாக இருக்கும். அது துப்புவதாக இருக்காது; தாம்பூலம் மாற்றிக் கொள்வதாக இருக்கும். எவ்வளவு எச்சரிகையாக சொல்கிறார், பாருங்கள். சொல்லிவிட்டு அந்த நதி எப்படி இளைத்தது என்றும் கூறுகிறார்.

"யானை போல் இருந்து அதன்
வால் போல் இளைத்தது"

என்கிறார்.

அபாரமான கற்பனை. நீங்கள் ஐந்து நிமிடம் கை தட்டலாம். (பலத்த நீண்ட கைதட்டல்) தம்பி வைரமுத்து! இன்னொன்றும் கூறுகிறார்.

"இன்று
கழுதைகளின்
ஒற்றையடிப் பாதையானதும்
இந்த நதிதான்"

என்கிறார்.

தம்பி, இது எந்த நதி என்று சொன்னால் - பி.டபிள்யூ.டி. மினிஸ்டர் இங்கே இருக்கிறார். (பலத்த கைதட்டல்) இது குறித்து எழுதி ஒரு விண்ணப்பமாகத் தந்தால், அடுத்த மாதமே அந்த நதியை பழைய நதியாக ஆக்கி அங்கே தம்பியை உலவ விட்டு அதற்காக ஒரு கவிதையை உன்னிடம் எழுதி வாங்குவேன் என்ற உறுதியை வழங்குகிறேன்.

உலகத்தைப் பற்றி பாடும்போது அவர் சொல்கிறார்.

''உலகின் வாயைத் தைத்திடு; அல்லது
இரண்டு செவிகளை இறுக்கி மூடிடு
உலகின் வாயைத் தைப்பது கடினம்
உந்தன் செவிகள் மூடுதல் சுலபம்''

என்று குறிப்பிடுகிறார்.

அதற்காக எப்போதும் செவிகளை மூடிக் கொண்டிருக்க முடியாது. எங்களைப் போன்ற அரசியல்வாதிகள் உலகம் என்ன சொல்கிறது என்று கேட்டுத்தான் ஆக வேண்டும். ஆகவே அறவே செவிகளை மூடி விட முடியாது. அதற்காக சொல்வதையெல்லாம் கேட்கவும் முடியாது. அதற்காக இன்னொருவர் சொல்ல நாம் கேட்பதா என்றும் இருக்கக் கூடாது. சொல்வதையெல்லாம் கேட்கவும் கூடாது. சொல்வதையெல்லாம் கேட்பதென்றால் சந்தைக்கு கழுதையை அப்பனும் மகனும் ஓட்டிச் சென்ற கதையாகிவிடும். பாருய்யா, அந்தக் கழுதை தனியாகப் போகிறது. கிழவன் அதிலே ஏறிக் கொண்டு போகக் கூடாதா? என்றான் ஒருவன். அவன் சொல்வது சரிதான் என்று அப்பாவை ஏறிக் கொள்ளச் சொன்னான் மகன். அப்பன் ஏறிக் கொண்டான். கொஞ்ச தூரம் போனதும் இன்னொருவன் பார்த்தான். ''இந்தக் கிழவன் பாருய்யா, கழுதையிலே ஏறிக்கொண்டு போகிறான். மகனையும் ஏற்றிக் கொண்டுபோகக் கூடாதா?'' என்றான். அவனும் ஏறிக்கொண்டான். இன்னொருத்தன் சொன்னான். ''இந்த இரண்டு

பேரையும் இந்தக் கழுதை தாங்குமாய்யா, கழுதை சாகப் போகிறது'' என்று சொன்னான். இரண்டு பேரும் என்ன செய்வதென்று கேட்டார்கள். அதற்கு அவன் கழுதையைத் தூக்கிக் கொண்டு போங்கள் என்று சொன்னதும், இரண்டு பேரும் சேர்ந்து ஒரு கம்பிலே கழுதையை தலைகீழாகக் கட்டித் தூக்கிக் கொண்டு போனார்கள். தூக்கிக்கொண்டு ஒரு ஆற்றோரமாக போகும்போது - எவ்வளவு நேரம்தான் கழுதை தலைகீழாகத் தொங்கும். துள்ளி ஆற்றிலே விழுந்துவிட்டது. எனவே எல்லோருடைய பேச்சையும் கேட்டால் கழுதையை ஓட்டிக் கொண்டு போனவன் கதையாக ஆகிவிடும். கேட்க வேண்டிய பேச்சைக் கேட்க வேண்டும். தீயவற்றைப் பார்க்காதே, தீயவற்றைக் கேட்காதே; தீயவற்றைச் சொல்லாதே என்பதைப் போல கேட்க வேண்டியவைகளை கேட்க வேண்டும். நல்லவைகளை கேட்க வேண்டும். நாம் திருந்திக் கொள்ள வேண்டும். அதற்காக செவிகளை மூடுவது சுலபம் என்றுதான் சொல்கிறாரே தவிர மூடிக் கொள் என்று கவிஞர் சொல்லவில்லை. எனவே அந்த வகையிலே நான் அவரைப் பாராட்டுகிறேன்.

இனத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

''காற்றின் ஈரம் பருகி வாழும்
பாலைவனத் தாவரம்''

பாலைவனத் தாவரத்திற்கு வேரிலேயா தண்ணீர் ஊற்று வார்கள்? இல்லை. வானத்திலிருந்து மழையா பொழியும்? இல்லை, ஈரக்காற்று அடித்தால்தான் அதற்கு தண்ணீர் கிடைக்கிறது. அதைத் தான் ''காற்றின் ஈரம் பருகி வாழும் பாலைவனத் தாவரம் போல்'' இது ஒரு விஞ்ஞான அடிப்படையிலே எழுதப்பட்ட கவிதை.

''காற்றின் ஈரம் பருகி வாழும்
பாலைவனத் தாவரம் போல்

முன்னாள் பெருமை என்னும்

முதுமக்கள் தாழியில் மூச்சு விடும் தமிழா''

சேரன் செங்குட்டுவன் ஆண்டான், ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் ஆண்டான், கரிகால் பெருவளத்தான் ஆண்டான், கல்லணை கட்டினான் என்று பழம்பெருமை பேசும் தமிழா இந்தப் பழம்பெருமை பேசுவது எப்படியிருக்கிறதென்றால், ''காற்றில் ஈரம் பருகி வாழும் பாலைவனத் தாவரம் போல் முன்னாள் பெருமை என்னும் முதுமக்கள் தாழியில் மூச்சுவிடும் தமிழா'' என்று கூறுகிறார். அதனால் பழம்பெருமை பாடாமல், அதற்காக பழம்பெருமையையும் அறவே அழித்து விடாமல் பழம்பெருமையின் அடிப்படையில் நம்முடைய முன்னோர்கள் நம்மையெல்லாம் இந்த உலகத்திற்கு தந்தவர்கள், அவர்களைத் தந்தவர்கள் என்கின்ற அந்த வரிசை இருக்கிறதே, அந்த வரிசையிலே வந்தது தமிழகத்தைப் பொறுத்தவரையிலே சங்க காலம் - அந்தச் சங்கக் காலம் நமக்கெல்லாம் பொற்காலம், அந்தச் சங்கக் காலத்தின் பண்பாட்டின் அடிப்படையில் ஒரு சமுதாயத்தை நாம் உருவாக்க வேண்டும். அந்தச் சமுதாயம் சாதிசமயமற்ற சமுதாயமாக இருக்க வேண்டும். ஒற்றுமையுள்ள சமுதாயமாக இருக்க வேண்டும். பிரிவினையற்ற, பிளவுகள் அற்ற சமுதாயமாக இருக்க வேண்டும். தீண்டாமை ஒழிந்த சமுதாயமாக இருக்க வேண்டும். அந்தச் சமுதாயத்தை உருவாக்க ''ஏடா தம்பீ, எடுடா பேனா'' அன்று அன்றைக்குப் புரட்சிக் கவிஞரும் பேரறிஞர் அண்ணாவும் சொன்னார்களே அதைப் போல நான் தம்பியை உரிமையோடு சொல்கிறேன் - ''ஏடா தம்பீ, எடுடா பேனா! உன் பேனாவிற்கு வெற்றி! வெற்றி!! வெற்றி!!! என்றைக்கும் கிடைக்கும்''

- முரசொலி 14.7.97

'ஹைக்கூ கவிதைகள்'

ஆராய்ச்சி நூல் வெளியீட்டு விழா

நிர்மலா சுரேஷ் எழுதியுள்ள இந்த அரிய நூலை வெளியிடுகின்ற விழாவிலே கலந்துகொண்டு - வெளியிடுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.

இந்த அரங்கத்தில் குழுமியிருக்கின்ற உங்களில் மிகப் பலருக்கு ஹைக்கூ கவிதைகள் என்ற சொற்றொடரே புதுமையாக இருக்குமென்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். (கைதட்டல்) எல்லோரும் இதைப்பற்றி பேசுகிறார்களே என்பதற்காக தெரிந்ததைப் போல தலையாட்டிக் கொண்டிருக்கின்ற பலபேர் இங்கேயிருக்கிறீர்கள் (பலத்த சிரிப்பு) என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும்.

அறிஞர் அண்ணா அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்பதற்கு முன்பு - இயக்கத்தை, எங்களையெல்லாம் அரவணைத்து நடத்திச் சென்ற காலக்கட்டத்தில் பொழுது போக்குக்காக பிற்பகல் காட்சிக்கு - மினர்வா தியேட்டரில் நடைபெறும் ஆங்கிலப் படத்திற்கு எங்களையெல்லாம் அழைத்துச் செல்வார்.

மிகச் சிறிய அரங்கம் - மினர்வா அரங்கம் என்பது. அங்கே படம் பார்க்கும்போது - நானாவது எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்த வன். உயர்நிலைப் பள்ளியைக் கூட எட்டிப்பார்க்காத பல கழக நண்பர்களும் எங்களோடு அங்கே வருவார்கள். படம் நடை

பெற்றுக் கொண்டிருக்கும் போது, நகைச்சுவைக் காட்சியின்போது எல்லோரும் சிரிப்பார்கள். அப்போது எங்களோடு வந்த அந்த சில நண்பர்களும் சேர்ந்து சிரிப்பார்கள். படம் முடிந்து திரும்பி வரும் போது, அண்ணா - அவர்களைப் பெயரைச் சொல்லி அழைத்துக் கேட்பார் - ''என்னப்பா, நாங்களெல்லாம் சிரிச்சோம், நீ ஏன் சிரிச்சே?'' என்று கேட்பார். ''சிரிக்காமல் இருந்தால் மற்றவர்கள் தவறாக எடுத்துக் கொள்வார்கள் என்பதற்காக சிரித்தோம்'' என்பார்கள். அதைப்போல ஹைக்கூ கவிதைகள் என்றால் என்ன வென்று தெரியாத பலபேர் இங்கேயிருப்பது எனக்குத் தெரியும். நான் அதைத் தெரிந்து கொண்டிருக்கிறேன் என்பதும் அவர்களுக்குத் தெரியும் (பலத்த சிரிப்பு)

இந்த ஆராய்ச்சி நூலை டாக்டர் சி.பா. அவர்கள் இங்கே அறிமுகப்படுத்தினார் என்பதை விட திருமதி நிர்மலா சுரேஷ் அவர்கள் வாயிலாக ஹைக்கூ கவிதைகள் இன்றைக்கு தமிழகத் திலே அறிமுகப்படுத்தப்படுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது.

ஏற்கெனவே என்னுடைய நண்பர் ஈரோடு தமிழன்பனைப் போன்றவர்கள், ஏன் நிர்மலா சுரேஷைப் போன்றவர்கள் ஹைக்கூ கவிதைகளை எழுதி அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள் என்ற போதிலும், இந்த விழா மூலம்தான் எப்படி ஜப்பான் நாட்டிலே ஹைக்கூ கவிதைகள் பரவியிருக்கிறதோ அதைப்போல தமிழகத் திலும் ஹைக்கூ கவிதைகள் பரவக் கூடிய காலக்கட்டம் இன்றைக்கு உதயமாகியிருக்கின்றது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

அப்படிப்பட்ட ஒரு அறிமுக விழாதான் ஹைக்கூ கவிதை களுக்கு இன்றைக்கு இங்கே நடைபெறுகின்றது. அவர்களுடைய இந்த ஆராய்ச்சி நூலில் ஹைக்கூ கவிதைகளைப் பற்றி அவர்கள் சொல்லும் போது:-

> ''புரிதல் அரிதானவர்க்கு ஹைக்கூ ஒரு புதிர்! புரிந்த வர்க்குக் கிடைப்பதுவோ புதையல்! விலகி நிற்பவர்க்கு

அது மாயம்; விளங்கிக் கொள்பவர்க்கு அது மானுட நேயம்! ஆர்வமில்லாதவர்க்கு அது வெறுமை; ஆர்வமுடைய வர்க்கு அது பொருண்மை! ஹைக்கூ ஏழு கடல் தாண்டும் மந்திரவாதியின் கிளியல்ல; எளிமையால், கட்டுக் கோப்பால், அதிர்வுகளை ஏற்படுத்தும் படிமங்களால், மின்னலடிக்கும் உள்ளுணர்வால், செறிவால் தன் மூன்றடிக்குள் அனுபவத்தை அளக்கும் முத்திரை! தமி ழில் வாமனக் கவிதையெனப் பெயர் சூட்டிக் கொண்டது''

என்று குறிப்பிடுகிறார்.

அதைத் தொடர்ந்து ''ஸென்'' உரை என்ற குறிப்பில் -

''மனிதனுக்குப் புரிய வைக்க
சொற்களைத் தேடாதீர்கள்;
சொற்களைப் புரிந்து கொள்ள
மனிதனைத் தேடுங்கள்''

என்று இந்தக் கவிதை வரிகளும் இடம் பெற்றுள்ளன.

ஒரு கதை உண்டு. கற்பனைக் கதைதான். தெனாலி ராமனைப் பற்றியது! மன்னனுக்கு முன்னால், மன்னனையும் மக்களையும் ஏமாற்ற அவன் சொன்னான். ''இந்திர லோகத்திலே ஒரு பட்டாடை இருக்கிறது; அந்தப் பட்டாடையை என் ஒருவனால்தான் கொண்டு வர முடியும்'' என்று சொன்னான். மேலும், ''கொண்டு வந்தால் என்ன தருவீர்கள்?'' என்று மன்னரைக் கேட்டான். மன்னன் ''பத்தாயிரம் வராகன் பொன் தருகிறேன்'' என்றான். பொருளைப் பெற்றுக் கொண்டு அதற்கு தவணை வாங்கிக் கொண்டான் தெனாலிராமன்.

ஆனால், பல நாட்கள் கொலு மண்பத்திற்கே பிறகு வர வில்லை. ''பத்தாயிரம் வராகன் வாங்கிக் கொண்டு போனானே. கொண்டு வா அவனை'' - என்று தெனாலிராமனை இழுத்து வரச்

செய்தார்கள். தெனாலிராமன் கொலுமண்டபத்திற்கு வந்தான். ''எங்கேயப்பா இந்திரலோகத்து பட்டுச் சேலை?'' என்று மன்னன் கேட்டான். ஒரு சிறிய குங்குமச் சிமிழ் போன்ற பாத்திரத்தைக் காட்டி, ''இதற்குள்ளே இருக்கிறது'' என்று சொன்னான். ''எங்கே எடு பார்ப்போம்'' என்றான் மன்னன். அந்தச் சிமிழைத் திறந்து ஏதோ ஒன்றை இழுப்பதைப் போல பாவனை செய்து - இதுதான் இந்திரலோகத்துக்குச் சேலை'' என்றான். ஆனால் அங்கே ஒன்றுமே இல்லை. வெறும் கையாலேயே முழம் போட்டு ''அறுபது முழம் இருக்கிறது பாருங்கள்'' என்றான். மன்னன் திகைத்தான். சொல்லிவிட்டு உடனடியாக தெனாலிராமன் சொன்னான். ''இது பகுத்தறிவு உள்ளவர்களுடைய கண்களுக்குத் தான் தெரியும்'' என்று சொன்னான். உடனே மன்னன், தெரியவில்லை என்று சொன்னால், தனக்கு பகுத்தறிவு இல்லை என்றாகி விடுமே என்பதற்காக, ''ஆஹா, அருமையாகத் தெரிகிறது, நல்ல வண்ணம், வெகு அழகாக இருக்கிறது'' (பலத்த சிரிப்பு) என்று கூறி, அமைச்சரைப் பார்த்து, ''உங்களுக்குத் தெரிகிறதா?'' என்று கேட்டான். அமைச்சரும் தனக்குத் தெரியவில்லை என்று சொன்னால், தன்னுடைய அறிவைப் பற்றிச் சந்தேகப்படுவார்கள் என்று பயந்து, ''அழகாக இருக்கிறது, அருமையான சேலை'' என்றான்.

கொலு மண்டபத்திலே உள்ள ஒவ்வொருவரும் அப்படியே ''ஆஹா, பிரமாதம், பிரமாதம்'' என்று சொன்னார்கள். பத்தாயிரம் வராகன் எள்!

அதைப்போல, இந்தக் ஹைக்கூ கவிதைகள் கவிதை உணர்வு உள்ளவர்களுக்குத்தான் தெரியுமென்று சொல்லிவிட்டு - உங்களுக்கு தெரிகிறா என்று கேட்டால், நீங்கள் எல்லோரும் எழுந்து நின்று கரம் தூக்கி - எங்களுக்குத் தெரிகிறது, தெரிகிறது என்று நிச்சயமாக சொல்வீர்கள் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் - இது இப்போது புரியாமல் இருந்தாலும், அதைப் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்த ஆராய்ச்சி

நூல் வெளியிடப்படுகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

“புயலுக்குப் பிறகு,
சிறுவன் ஆகாயத்தைத் துடைக்கிறான்
மேசைகளின் மீதிருந்து”

இதுதான் வியப்புக்குரியது. இரண்டு வரிகளுக்குப் பிறகு வருகின்ற மூன்றாவது வரி! புயலுக்குப் பிறகு சிறுவன் ஆகாயத்தை துடைக்கிறான் - மேசைகளின் மீதிருந்து! இதை ஆங்கிலத்தில்...

"after the strom
a boy wiping the sky
from the Tables"

இதற்கு தமிழாக்கம்தான் நான் இங்கே முன்பு குறிப்பிட்ட தாகும். புயலுக்குப் பிறகு சிறுவன் ஆகாயத்தை எப்படி துடைக்க முடியுமென்றால் - புயலால் பாதிக்கப்பட்ட ஆகாயம் - ஆகாய வெளியிலிருந்து சிதறிய பல பொழிவுகள் - இவைகள் எல்லாம் சிந்திய அந்த மேசையை அவன் துடைக்கிறான் என்பதிலிருந்து புயலால் ஏற்பட்ட விளைவுகளை கவிஞன் அழகாக சித்தரித்திருக் கிறான் என்பது புரிகிறது.

‘‘ஹைக்கூ என்பது நம்மை அழைக்கும் கைச் சைகை, பாதி திறந்த ஒரு கதவு, தூய்மையாய்த் துடைக்கப்பட்ட ஒரு கண்ணாடி’’ என்று ‘‘பிளித்’’ குறிப்பிடுவதையும் நம்முடைய நிர்மலா சுரேஷ் அவர்கள் வெகு அழகாக இந்நூலிலே விளக்கிக் காட்டி ஹைக் கூவின் தனித் தன்மையை விளக்கியிருக்கிறார்.

நம்முடைய டாக்டர் சி.பா. அவர்கள் இங்கே விளக்கியதைப் போல இதிலே மூன்றாவது வரிதான் அதனுடைய தனித்தன்மை!

“உதிரும் மலரொன்று
மீண்டும் கிளைக்குத் திரும்புகிறதோ:

(மரத்திலிருந்து மலர் உதிர்வதைக் காணுகிறான். அந்த உதிர்ந்த மலர் மீண்டும் கிளைக்குத் திரும்புவதையும் பார்க்கிறான். எப்படி முடியும்? மூன்றாவது வரி அந்தச் சந்தேகத்தைப் போக்குகின்றது)

ஓ! இது வண்ணத்துப் பூச்சி!''

வண்ணத்துப் பூச்சி கிளையை நோக்கிப் பறப்பதை ஹைக்கூ இப்படி வர்ணிக்கிறது.

அதைப்போல - பூனை ஒன்று இறந்து கிடந்தது என்று சொன்னால், அது சாதாரண விஷயம். ஐயோ பாவம், பூனை இறந்துவிட்டது என்று சொன்னாலும், அது ஒரு அவலச் சொற்றொடர், அவ்வளவுதான்! ஆனால் ஹைக்கூ அதை எப்படிச் சொல்கிறதென்றால்,

''இறந்த பூனை
திறந்த வாயுடன்
கொட்டும் மழையில்..''

மைக்கேல் கிளங்டாக் என்பவரின் ஆராய்ச்சி வெளிப் பாட்டை நிர்மலா சுரேஷ் வெளிக்காட்டியிருக்கிறார்.

''ஹைக்கூக்கள் மேலோட்டமானவையோ அல்லது பொது வானவையோ அல்ல. எல்லா ஹைக்கூக்களும் சிறப்பாக; குறிப் பாக ஒரு நிகழ்வை அல்லது கூர்ந்து நோக்கிய பார்வையை முன்வைக்கின்றன'' - இந்தப் பண்பை இன்றைய அமெரிக்க ஆய் வாளர் ஹிக்கின்சன் - Zoom lens effect எனப் பெயரிட்டு அழைத் தார். ஹைக்கூ ஒரு பரந்த காட்சியிலிருந்து ஒரு குவிந்த காட்சிக்கு ஒரு நிழற்படக் கருவியைப் (காமிரா) போல நம்மை அழைத்துச் செல்லும் ஒளிப்பதிவினைப் போலவும், படப்பிடிப்பைப்போல உள்ளது ஹைக்கூ என்று குறிப்பிடுகிறார்.

நம்முடைய தம்பி இயக்குனர் வசந்த் அவர்களுக்கு ''ஸூம்'' லென்சைப் பற்றி நன்றாகத் தெரியும். இந்தக் கவிதையில் முதலில் ஒரு சமவெளி காட்டப்படுகிறது.

''சமவெளியில்
பசுவின் உதடுகள்
புல்லின் ஈரத்தோடு''

சமவெளியில் என்பது ''லாங் ஷாட்''; பிறகுதான் மிடில் ஷாட்டை நோக்கி வந்து ஸூம்க்கு வரவேண்டும். லாங் ஷாட், சமவெளி; பசுவின் உதடுகள் - ஸூம் ஸுூம் நெருங்குகிறது. புல்லின் ஈரத்தோடு - புல் சாப்பிட்ட ஈரத்தோடு இருக்கிறது! இதுதான் லென்ஸ் பயன்படுத்துவதைப் போல!

தம்பி வசந்த் ஒரு கருத்தை இங்கே சொன்னார். இரண்டு உதடுகள் - ஆனால் ஒரே முத்தம்தான் என்றார். நான்கு உதடுகள் தேவை என்பதை அவர் மறந்து விட்டார். (பலத்த கைதட்டல்) முத்த மயக்கம்; அவ்வளவுதான்! (பலத்த சிரிப்பு) பாம்பைப் போல - புகை மேல் நோக்கியோ அல்லது வேறு திசை நோக்கியோ செல்வதை பாம்பு போல புகை வளைந்து செல்கிறது என்று சொன்னால் நம்முடைய கவனம் எல்லாம் பாம்பு வளைவதைப் பற்றித்தான் போகும் என்பதற்காக அதைச் சொல்லாமல்

''புகை எழும்...
வளைந்து
வானை நோக்கி''

என்று ஒரு ஹைக்கூ கவிதை வெளியிடப்பட்டுள்ளதை நிர்மலா சுரேஷ் இந்த நூலிலே எடுத்துக்காட்டி அணிகளற்ற அழகு - ஹைக்கூ கவிதைகளுடைய இலக்கணம் என்பதைக் குறிப்பிடுகிறார்.

சிவப்பு சிள்வண்டைப் பற்றி நான் சொல்லலாம் என்று இருந்தேன். ஆனால் தமிழ்க்குடிமகன் அவர்கள் அந்த வாய்ப்பைத் தட்டிப் பறித்துச் சென்று விட்டார்.

இன்னொரு அழகான, மிகவும் ரசிக்கத் தக்க, எண்ணிப் பார்த்து, சிந்திக்கத் தக்க ஒரு ஹைக்கூ கவிதை.

“அரிசியைத் தூவினேன்
இதுவும் ஒரு பாபம்தான்
கோழிகளுக்குள் சண்டை”

அரிசியைத் தூவினேன்... அப்படி தூவியது பாபமாம்: ஏனென்றால் அரிசிக்காக கோழிகள் சண்டை போட்டுக் கொள் கிறதாம்.

அடுத்து, ஒரு சமுதாயப் புரட்சி எண்ணத்தையும் ஹைக்கூ கவிதை வெளிப்படுத்தத் தவறவில்லை என்பதற்கு ஒரு எடுத்துக் காட்டு. இக்யு என்பார் பாடுகிறார்...

“தோலைப் பொறுத்தவரை
எத்தனை வேறுபாடு,
ஆணுக்கும் பெண்ணுக்கும்
ஆனால் எலும்பைப் பொறுத்தவரை
இருவரும் மனிதர்களே”

தோல்தான் ஆண், பெண் என்று இரு சாரரையும் வேறு படுத்திக் காட்டுகின்றன. ஆனால், எலும்பைப் பொறுத்தவரையில் இருவரும் மனிதர்களே என்று ஆண் பெண் சமத்துவத்தை ஹைக்கூ கவிதை கூறுகிறது.

ஆனால் அந்தக் காலத்துச் சிவவாக்கியர் - சித்தர் சிவ வாக்கியர்

“பறச்சி ஆவது ஏதடா?
பனத்தி ஆவது ஏதடா?
இறைச்சி தோல் எலும்பிலே
இலக்க மிட்டிருக்குதோ”

என்று அன்றைக்கே கேட்டார். அதனுடைய மறுவடிவமாக இந்த ஹைக்கூ கவிதை நமக்கு இன்று கிடைத்திருக்கின்றது.

ஸென் என்பது ஒரு இயல்பு என்பதையும் ஒரு தத்துவம் என்பதையும் உரையாற்றிய தமிழன்பன் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார். அதைப்பற்றி நிர்மலா சுரேஷ் எடுத்துக்காட்டும் போது எவ்வளவு அழகான உவமை நயத்தோடு, அதை எடுத்துக்காட்டியிருக்கிறார் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அவர் சொல்கிறார் ''ஸென் ஒரு இயல்பு; மனித மன இயல்பு; அது ஒரு குறிப்பிட்ட மனிதருக்கோ, வகுப்பினருக்கோ அல்லது நாட்டினருக்கோ வழங்கப்பட்ட சிறப்புச் செய்தியல்ல. எனவே, அது இந்தியாவிலிருந்து சீனத்துக்கு வந்தது, சீனாவிலிருந்து ஜப்பானுக்குச் சென்றது என்று நாம் கூறுவதெல்லாம், நம் நாட்டில் நாம் சுவாசிக்கும் காற்று எந்த நாட்டிலிருந்து வந்த காற்று என்று ஆராய்வதற்கு ஒப்பாகும்'' - எவ்வளவு அழகான உவமையின் மூலம் நிர்மலா சுரேஷ் இந்த உண்மையை தெளிவுபடுத்துகிறார் என்பதைக் கண்டு நான் மிகுந்த வியப்படைகிறேன்.

இன்னொரு ரசிக்கத் தக்க ஹைக்கூ கவிதை!

''நிலவுக்கொரு கைப்பிடி
நாம் மட்டும் அளிக்க முடிந்தால்

(நிலவுக்கு ஒரு கைப்பிடி நாம் மாத்திரம் அளிக்க முடிந்தால் என்று இந்த இரண்டு அடியோடு நிறுத்துகிறார். மிச்சத்தை உங்களால் கற்பனை செய்ய முடியாது. அவர் செய்கிறார்)

''நிலவுக்கொரு கைப்பிடி
நாம் மட்டும் அளிக்க முடிந்தால்
அது அழகிய விசிறியாகும்''

நிலவோடு ஒரு கைப்பிடியைப் பொருத்திப் பார்த்து - விஞ்ஞான ரீதியாகப் பொருத்திப் பார்க்க முடியாது. கற்பனை

ரீதியாகத்தான் - ஹைக்கூ கவிதையிலே கற்பனைக்கு இடம் இல்லை என்று நிர்மலா சுரேஷ் வாதாடியிருந்தாலும் கூட - இது அழகான கற்பனை.

இந்த ஆராய்ச்சியில் நம் தமிழ்நாட்டிலே உள்ள பல ஹைக்கூ கவிதைகளையும் நிர்மலா சுரேஷ் ஆராய்ந்து, அதிலே தனக்குள்ள கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார். சில மாறுபட்ட கருத்துக்களும் உண்டு. ஆதரவான கருத்துக்களும் உண்டு. குறிப்பாக அறிவுமதி யினுடைய ஹைக்கூ கவிதைகளைப் பற்றி நிர்மலா சுரேஷ் விமர் சித்த நேரத்தில் சிலவற்றிலே தனக்கு உடன்பாடில்லை என்றாலுங் கூட ஒன்றை இது மிக இயல்பாக அமைந்த படிவம் என்று பாராட்டிக் குறிப்பிடுகிறார். அது அறிவுமதியின் ஹைக்கூ கவிதை.

''உழுது வந்த களைப்பில்
படுக்கும் மாடுகள்
காயம் தேடும் காக்கை''

மாடு உழுது வந்த களைப்பிலே படுக்கிறது. காயம் தேடும் காக்கை! உழுதுழுது கழுத்தெல்லாம் புண்ணாகி படுத்திருக்கும் மாட்டின் மீது காயம் எங்கே என்று காகம் தேடுகிறதாம்! அதனுடைய கஷ்டம் இதற்குத் தெரியாது. இதனுடைய பசியைத் தீர்த்துக் கொள்ளத்தான் காக்கை மாட்டை நாடுகிறது என்பதை வெகு அழகாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்.

நிர்மலா சுரேஷ் அவர்களைப் பற்றி நான் என்ன சொல்லி யிருக்கிறேன் என்பதை நம்முடை டாக்டர் மு.பி.பா. அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார். ''திராவிடர் இயக்கத்தின் வேர் நிலைத்த தருவில் பூத்த மலர்'' என்று நான் ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டதை இந்தப் புத்தகத்திலே அவர்கள் எடுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

நான் அவ்வாறு குறிப்பிட்டதற்குக் காரணம், பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நிர்மலா சுரேஷ் என்ற பெயரை நான்

கேள்விப்பட்டிருக்கிறேன். ஒரு நிகழ்ச்சியிலே சந்தித்திருக்கிறேன். அதற்கு முன்பெல்லாம் தொலைக்காட்சியிலே செய்தி வாசிப்பவராக அவரைக் கண்டிருக்கிறேன். தொலைக்காட்சியிலே செய்தி வாசிக்கும்போது - அப்போதெல்லாம் தொலைக்காட்சி ஒருதலைப் பட்சமாகவே செய்திகளை வாசிக்கும். அதனால் செய்தி வாசிப்பவர்கள் மீதே நமக்கெல்லாம் ஒரு கோபம் இருக்கும். அந்தப் பார்வையோடு நிர்மலா சுரேஷை ஒரு விழா மேடையிலே சந்தித்தேன். அவர்கள் பேசி முடிந்த பிறகு, நான் பேசும்போது, ஏதோ கிண்டலாகவோ, தாக்குதலாகவோ ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டேன். மனம் புண்படும் படியாக அல்ல; அவர் சிந்திக்கும் படியாக!

நிகழ்ச்சி முடிந்த பிறகு, அவர் என்னைப் பார்த்து - ''என்ன அப்படி சொல்லி விட்டீர்களே, என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு? ''நான் திருச்சி இருதயராஜ் அவர்களின் மகள் அல்லவா? என்று சொன்னார்கள்.

சொன்னதும், எனக்கு எத்தனையோ ஆண்டு கால நினைவுகள் நெஞ்சிலே நிழலாடின. திருச்சியிலே இருதயராஜ் என்பவர், பேரறிஞர் அண்ணா அவர்களின் நெருக்கமான நண்பர். அண்ணா அவர்கள் திருச்சிக்குச் செல்லும் போதெல்லாம், இருதயராஜ் அவர்களை அழைத்து, அவரோடு உரையாடாமல் இருக்க மாட்டார்கள். வரலாற்று ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமுதாய ரீதியாக பல கருத்துக்களை அவரோடு கலந்து உரையாடுவார்கள். அப்போதெல்லாம் நானும் பக்கத்திலே இருந்து இருதயராஜ் அவர்களோடு பழகியிருக்கிறேன். அந்த முறையில் - நிர்மலா சுரேஷ், எனக்கு அருமை மகள் (பலத்த கைதட்டல்) என்னுடைய அன்புச் செல்வி. அந்த செல்வி ஒரு சிறப்பு வாய்ந்த கவிஞராக - அதற்கு மேலாக சிறப்பு வாய்ந்த கவிதைகளை எல்லாம் ஆராய்ந்து, ஆராய்ச்சி செய்து ஒரு நூலை வெளியிடுகிறவராக - அதுவும் நூறு, இருநூறு பக்கங்கள் அல்ல; 444 பக்கங்கள் கொண்ட ஒரு நூலை

வெளியிட்டிருக்கிறார் என்றால் - இருதயராஜ் இருந்து இன்றைக்கு அடைய வேண்டிய பெருமையை - புகழை - மகளே! நான் இங்கேயிருந்து அடைகிறேன் என்பதை எடுத்துச் சொல்லி - இந்த நிகழ்ச்சியிலே நான் கலந்து கொண்டிருக்கின்ற இந்த நேரம் எந்த நிலையிலே என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள்.

"அரங்கத்தில் அமைச்சர்கள் நிரம்ப
ஆனால் நான் அழுகிறேன்
ஓரிடம் காலி"

என்று கூறி என் உறையை நிறைவு செய்கிறேன்.

– முரசொலி 4.8.97

திருமதி ருக்மணி லட்சுமிபதி நூற்றாண்டு விழா

இன்று நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதிலும் இந்த நிகழ்ச்சியிலே, மறைந்த ஆனால் என்றும் மறையாமல் இருக்கின்ற திருமதி ருக்மணி லட்சுமிபதி அவர்களுடைய பெருமைகளை எடுத்துச் சொல்வதிலும், நான் உள்ளபடியே பெருமிதம் கொள்கிறேன்.

அம்மையார் அவர்கள் நாட்டிற்காக சமுதாயத்திற்காக அதிலும் குறிப்பாக பெண்களுக்காக சமுதாயப் புரட்சியிலேயே சாதியை ஒழிக்க வேண்டுமென்ற குறிக்கோளுக்காக அரும்பாடு பட்டவர் என்பது அவருடைய வாழ்க்கை வரலாற்றின் மூலமாக நாம் அறிந்து கொள்ளக்கூடிய உண்மையாகும்.

இந்தக் குடும்பப் பாரம்பரியம் நூறாண்டுகளுக்கு முன்பு கோல்கொண்டாவிலே தொடங்கி, அங்கிருந்து தமிழகத்திற்கு வந்து, தமிழகத்திலே ஒளி பரப்புகின்ற ஒரு குடும்பமாகும். கோல்கொண்டா என்பது, நவரத்தினங்களுக்குப் பெயர்பெற்ற ஒரு இடம். அதனால்தான் கோல்கொண்டாவிலிருந்து தமிழகத்திலே வந்து குடியேறிய அந்தக் குடும்பத்தில் ஒரு நவரத்தினமாக ஒளி விட்டார்கள், ருக்மணி லட்சுமிபதி அவர்கள் என்று சொன்னால் அது மிக மிக, பொருத்தமுடைய ஒன்றாகும்.

இங்கே பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் அவர்கள் தன்னுடைய இல்லத்தில் சாதி வேற்றுமை கூடாது,

சமத்துவம் வேண்டும் என்ற அந்த உயர்ந்த ஒரு குறிக்கோளை வாயளவிலே, உதட்டளவிலே சொல்லிக் கொண்டிராமல் செயலளவில் காட்டியவர். தன்னுடைய வீட்டிலேயிருந்த பிராமணச் சமுதாயத்தைச் சேர்ந்த சமையல்காரரை மாற்றிவிட்டு, பூங்காவனம் என்ற பெயருடைய ஒரு ஆதிதிராவிடப் பெண்மணியை சமையல்காரராக ஆக்கிக் கொண்ட பெருமை அம்மையார் ருக்மணி லட்சுமிபதி அவர்களைச் சாரும்.

அவர் தன் வாழ்க்கையிலே நகைகளையே அணியாமல் இருந்தார் - அவ்வளவு எளிமையாக இருந்தார் என்று பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள்.

ருக்மணி லட்சுமிபதி அவர்கள் நகைகளை அணியாமல் இருந்ததற்குக் காரணம்; அவருடைய நகைகளை யாரும் கோர்ட்டிலே கொண்டு போய் வைத்து விடவில்லை (பலத்த கைதட்டல்) அதன் காரணமாக நகைகளை அணியாமல் இருந்தார் என்று சொல்வதற்கில்லை. இருந்தும், அவைகளை அணியாமல் இருந்தார்; அதுதான் தியாகம். இல்லாததைச் செய்வதாகச் சொல்வதற்குப் பெயர் தியாகம் அல்ல. இருந்தும் அவைகளை அணியாமல் இருந்தார். இருந்தும் அதை இழப்பதுதான் தியாகம். அத்தகைய உத்தமப் பெண்மணியாக மறைந்த ருக்மணி லட்சுமிபதி அவர்கள் விளங்கியிருக்கிறார்கள்.

இங்கே திரு. மூப்பனார் அவர்கள் குறிப்பிட்டதைப்போல சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் முன்னின்று நடத்திய உப்புச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் 1930-ஆம் ஆண்டு மூதறிஞர் ராஜாஜி அவர்கள் முன்னின்று யாத்திரை செய்த அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கடும் தண்டனைகளை அனுபவித்தவர் ருக்மணி லட்சுமிபதி அவர்கள். அதற்குப் பிறகு 37-ஆம் ஆண்டில் இந்தியாவில் பல மாநிலங்களிலே காங்கிரஸ் ஆட்சி உருவான சமயத்தில் தமிழகத்தில் அன்றையதினம் தமிழகம் என்று சொல்ல இயலாது; சென்னை மாகாணத்தில் மற்ற பிரதேசங்

களும் சேர்ந்திருந்து ஒன்று பட்ட சென்னை மாகாணத்தில், துணை சபாநாயகராகப் பொறுப்பேற்று தன்னுடைய ஆற்றலை வெளிப் படுத்தியவர் அம்மையார் அவர்கள் ஆவார்கள்.

37-இல் துணை சபாநாயகராக இருந்த அம்மையார் அவர்கள் 46-ஆம் ஆண்டு பிரகாசம் அவர்கள் தலைமையிலே அமைச்சரவை அமைந்தபோது - அந்த அமைச்சரவையிலும் சுகாதார அமைச்சராகப் பொறுப்பேற்று - திறமையை வெளிப் படுத்தியவர் ஆவார்கள். இத்தனை பதவிப்பொறுப்புகளிலே அவர்கள் இருந்த போதுங்கூட, எளிமையாக, எல்லோரையும் அன்போடு அரவணைப்பவராக, சாதி சமயங்களைக் கடந்தவராக, நாட்டுப்பற்றிலே தணியாத நாட்டம் கொண்டவராக அவர்கள் விளங்கினார்கள். அதனால்தான் இன்றையதினம் அவருக்கு பல நினைவுகளை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

நம்முடைய டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். மார்ஷல் சாலையை ருக்மணி லட்சுமிபதி சாலை என்று பெயர் மாற்ற நான் உதவினேன் என்று!

ஒரு விழாவிற்கு அவர்கள் என்னை அழைத்தபோது, மார்ஷல் சாலையில் நடைபெற்ற அந்த விழா நிகழ்ச்சியில் ஒரு வேண்டுகோள் வைக்கப்பட்டது அரசுக்கு! இந்தச் சாலை ருக்மணி லட்சுமிபதி பெயரால் மாற்றப்பட வேண்டுமென்று, அந்த வேண்டுகோளை நான் ஆணையாக ஏற்று, அதே இடத்தில், அதே நிமிடத்தில் நாளை முதல் மார்ஷல் சாலை - ருக்மணி லட்சுமிபதி சாலை என்று அழைக்கப்படும் என்று குறிப்பிட்டேன். அவ்வாறே ஆணையிடப்பட்டது.

அதற்குப் பிறகு அந்தச் சாலையிலேயே ஒரு சிலை வைக்க வேண்டுமென்று டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் மிகவும் விரும்பினார்கள். அவரைச் சார்ந்தவர்கள் அம்மையார் மீது அன்பு கொண்டவர்கள் அத்தனை பேரும் விரும்பினார்கள். ஐந்தாண்டு

காலம் சிலை தயாராக இருந்தது. பீடம் கட்டுவதற்கு இடம் கிடைக்கவில்லை. அதற்குப் பிறகு மீண்டும் இந்த ஆட்சி உதயமான பிறகு சிலை வைப்பதற்கு ஐந்தாண்டு காலம் ஏற்பட்ட தாமதத்தை அவர் என்னிடத்திலே எடுத்துச் சொல்லி, அந்த சிலையைத் திறந்து வைக்க வேண்டுமென்று அழைத்தார். பெரியவர் சி.சுப்ரமணியம் அவர்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சி. அம்மையார் பொன்னம்மாள் அவர்களும், சதாசிவம் அவர்களும், அம்மையார் எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களும் கூட கலந்து கொண்ட நிகழ்ச்சி அது. அந்தச் சிலை திறந்து வைக்கப்பட்டது. அந்தச் சிலை திறப்பு விழாவிலேதான் நான் குறிப்பிட்டேன்; அம்மையார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவினையொட்டி, அஞ்சல் தலை ஒன்று வெளியிடுவதற்கு அரசின் சார்பாக மத்தியிலே உள்ளே அரசுக்கு எழுதப்படுமென்று குறிப்பிட்டேன். அவ்வாறே எழுதப்பட்டு, அதற்கான அனுமதியும் கிடைத்து இன்றைக்கு இந்த அஞ்சல் தலை வெளியிடப்பட்டிருக்கின்றது.

டாக்டர் ராமமூர்த்தி அவர்கள் இங்கே என்னை அழைக்கும் போது, ''முதலமைச்சர் கலைஞர் கருணாநிதியை பேச அழைக்கிறேன்'' என்று கூறவில்லை; ''என்னுடைய நண்பர் கலைஞர் கருணாநிதியை பேச அழைக்கிறேன்'' என்றார் இதுதான் நிலைக்கும். முதலமைச்சர் பதவி வரும், போகும். நான் டாக்டரைக் கேட்டுக் கொள்வதெல்லாம், நான் என்றைக்கும் உங்களுக்கு நண்பன் - அந்த நண்பன் என்ற முறையிலேயே என்னை எப்போதும் அழையுங்கள் (கைதட்டல்) முதலமைச்சர் என்பது நிலைத்த தல்ல. நண்பன், நட்பு என்பதுதான் நிலைத்த ஒன்று என்பதை அவருக்கு நான் நினைவூட்டுகிறேன். மூப்பனார் அவர்கள் இங்கே ஒன்றைச் சொன்னார்கள். நான் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்களிடத்திலே மிகுந்த அன்பு உள்ளவன். காரணம் பல இருந்தாலும்கூட, நானும் மூப்பனாரும் பிறந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர் சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள்.

சர்தார் என்று அவருக்குப் பட்டம் வந்ததற்குக் காரணமே - வல்லபாய் படேலுக்கு ஈடாக தமிழகத்திலே அன்றைக்கு ஒருவர் சுட்டிக்காட்டப்பட்டாரென்றால் சர்தார் வேதரத்தினம் அவர்கள் தான். அதனால்தான். அவரை சர்தார் வேதரத்தினம் என்று அழைப்பதுண்டு. அவருடைய அஞ்சல் தலை ஒன்றும் வெளியிடப் பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு நான் எழுதியிருக்கிறேன். அதற்கான அனுமதி விரைவிலே கிடைக்குமென்று நம்புகிறேன்.

சுதந்திரப் பொன் விழா கொண்டாடுகின்ற நேரத்தில் - இங்கே பொன்னம்மாள் அவர்கள் குறிப்பிட்டதைப் போல - தமிழகத்திலே உள்ள தியாகிகளுடைய சரித்திரங்களை எல்லாம் எழுத வேண்டும் என்கிற அந்தப்பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். இருக்கின்ற பணிகளுக்கிடையே அந்தப் பணியையும் நான் செய்வதற்கு தயாராக இருக்கிறேன். (பலத்த கை தட்டல்) என்பதை எடுத்துக்கூறி, தியாகிகளுடைய சரித்திரத்தையும் எழுத வேண்டும்; தியாகிகளின் தரித்திரத்தையும் போக்கவேண்டுமென்ற அந்த உணர்வோடு நாம் செயல்படுவோம் என்று குறிப்பிட்டு, இந்த விழாவிலே கலந்து கொண்டு உங்களை யெல்லாம் காணுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்காக மகிழ்ச் சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முரசொலி 7.8.97

சுதந்திரப் பொன்விழா - தமிழகத் தியாகிகள் வழியனுப்பு விழா

இந்த விழாவிற்கு இன்று வருகை தந்திருக்கும் தியாகிகளுக்கெல்லாம் முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக் கொளகிறேன். நன்றி தெரிவிப்பது இன்று நீங்கள் வருகை தந்ததற்காக அல்ல; இந்த நாடு மீட்கும் போராட்டத்திலே ஈடுபட்டு விடுதலைக் கொடியை ஏற்றி வைத்ததற்காக! டெல்லியில் நடைபெறுகின்ற சுதந்திரப் பொன் விழா நிகழ்ச்சியிலே 14-ஆம் தேதி கலந்து கொள்ள இன்றிரவு பயணப்படுகின்ற உங்களையெல்லாம் வழி அனுப்பி வைக்கின்ற வைபவம்தான் இந்த மண்டபத்திலே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தியாகிகளை வணங்கி, வாழ்த்தி, பாராட்டி, போற்றி, புகழ்ந்து அவர்களுடைய இன்னல்களைத் தீர்ப்பதிலும் ஈடுபாடு கொண்டு நடைபெறுகின்ற அரசாக இந்த அரசு விளங்குகிறது என்பதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக அறிவீர்கள்.

இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே பங்கு பெறுகின்ற வாய்ப்பு வயதின் காரணமாக எனக்கு ஏற்படவில்லை என்றாலுங்கூட, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாகச் சீலர்களையெல்லாம் பாராட்டுகின்ற - அவர்களுக்காகப் பாடுப

டுகின்ற ஒரு வாய்ப்பு ஆளுகின்ற பொறுப்பிலே இருந்து எனக்குக் கிடைத்திருப்பது நான் பெற்ற பேறு என்றே சொல்ல வேண்டும்.

பொன்விழாவையொட்டி மாத்திரம் நடைபெறுகின்ற நிகழ்ச்சி அல்ல; இங்கே எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டதைப் போல, சுதந்திரத்தினுடைய வெள்ளிவிழா நடைபெற்ற அந்த நேரத்திலும் நான்தான் முதலமைச்சராக இருக்கின்ற வாய்ப்பு பெற்றிருந்தேன். அப்போது தந்தை பெரியார் அவர்களுக்கும், மூதறிஞர் ராஜாஜி அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் அவர்களுக்கும் மற்றும் பல தியாகத் தலைவர்களுக்கும் தாமிரப் பத்திர விருதை வழங்குகின்ற அந்த அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அது மாத்திரமல்ல; அப்போதும் டெல்லிப்பட்டணத்திற்கு சென்ற தியாகிகளையெல்லாம் வழியனுப்பி வைக்கின்ற அந்தப் பணியும் எனக்குக் கிட்டியது.

வெள்ளி விழாக்களிலே மாத்திரமல்ல; பொன் விழாக்களிலே மாத்திரமல்ல; எப்பொழுதுமே நாட்டுத் தியாகிகளிடத்தில், நாட்டிற்காக, மொழிக்காக தியாகம் புரிந்தவர்களிடத்தில் நான் அல்லது நான் தலைமை ஏற்றிருக்கிற அரசு பெருமதிப்பு கொண்டுள்ளது என்பதை நீங்கள் எல்லாம் நன்கறிவீர்கள்.

இதே மண்டபத்தில் 73 அல்லது 74-ஆம் ஆண்டு என்று எனக்கு நினைவு! கோமதி சங்கர தீட்சிதர் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தி அவருடைய பிறந்தநாள் விழாவை அரசின் சார்பில் கொண்டாடி, அந்த விழாவிற்கு நான் தலைமை யேற்ற நிகழ்ச்சியெல்லாம் இன்றைக்கும் என் மனக்கண் முன்னால் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. செங்கல்வராயன் அவர்கள் இங்கே அமர்ந்திருக்கிறார்கள்; பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு உற்ற நண்பர்; இனிய நண்பர்; உண்மை நண்பர்; அவர்களுடைய பவள விழாவிற்காக ராஜேஸ்வரி மண்டபத்திலே நான் முன்னின்று நடத்திய நிகழ்ச்சியும் என் நினைவில் நிழலாடிக் கொண்டிருக்கின்றது.

இந்தியா சுதந்திரம் பெற்ற - அதற்காக நடைபெற்ற போராட்டத்திலே ஈடுபட்ட சிதம்பரனார் அவர்கள் சிறையிலே இழுத்த செக்கு எங்கே இருக்கிறது என்பதை நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தேடிப்பிடித்து - அது கோவை நகரச் சிறையிலே இருப்பதைக் கண்டுபிடித்து அதைக் கொண்டு வந்து இந்த வளாகத்திலே வைத்திருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

25-வது ஆண்டு விழாவிலேதான் தில்லையாடியிலே வள்ளியம்மை நகர் உருவாக்கி, வள்ளியம்மையோடு தென்னாப்பிரிக்காவிலே உத்தமர் காந்தியடிகளோடு நின்று, போரிட்ட நாராயணசாமி, நாகப்பன் என்ற இரண்டு ஆதிதிராவிட வீரர்களுடைய பெயரால் இரண்டு தொகுப்பு வீடுகள் அமைந்த பகுதிகளை உருவாக்கி அவர்களை வெள்ளி விழாவின் போது சிறப்பித்திருக்கிறோம்.

இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம். நான் அவைகளையெல்லாம் இங்கே அடுக்கிக் காட்ட விரும்பவில்லை. ஒவ்வொன்றையும் பார்க்கின்ற நேரத்திலே அந்த எண்ணம், அந்த நினைவு எல்லோருக்கும் ஏற்படும் என்ற நம்பிக்கையினால் நான் அவைகளைப் பற்றியெல்லாம் அதிகம் சொல்ல விரும்பவில்லை.

இன்று இங்கே நடைபெறுகின்ற இந்த நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு இருக்கின்ற தியாகச் சீலர்கள் அனைவரையும் அவர்களுடைய பாதம் தொட்டு நான் வணங்குகிறேன். தலைவர் மூப்பனார் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல் - அவர்களை நாம் வழியனுப்பி வைத்து வாழ்த்துகின்ற காரணத்தால் - நாம் பேறு பெற்றவர்களாக ஆகிறோம்; இது அவர்களுக்குச் செய்கின்ற சிறப்பு என்பதல்ல; நமக்கு நாமே செய்து கொள்கின்ற சிறப்பு - நமக்கு நாமே தேடிக் கொள்கின்ற பெருமை என்ற அந்த உணர்வோடுதான் எளிய முறையிலே இந்த நிகழ்ச்சி இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

டெல்லிக்குச் செல்கின்ற ஒவ்வொரு தியாகிக்கும் எங்களுடைய அன்பின் அடையாளமாக அவர்களுடைய தேவையை

நிறைவு செய்யக்கூடியது என்ற முறையிலே அல்ல - எங்களுடைய அன்பின் அடையாளமாக - இந்த நாட்டிற்கு அவர்கள் சிந்திய ரத்தத்திற்கு, அவர்கள் ஏற்றுக் கொண்ட இன்னல்களுக்கு பரிசாக அல்ல - நினைவாக கதர் வேட்டி அல்லது சேலை, கதர் சட்டை, கதர் துண்டு, கதர் சால்வை - இவைகளோடு டெல்லியிலே தமிழக அரசின் சார்பில் எல்லா செலவுகளையும் பார்த்துக் கொண்டாலும் கூட, தமிழக அரசு மாளிகையிலே தங்குவதற்கான இடவசதி செய்து கொடுக்கப்பட்டாலுங்கூட, அவர்களுக்கு இங்கேயிருந்து கூட மருத்துவர் குழு ஒன்று அனுப்பப்பட்டாலுங்கூட, அவர்கள் இரண்டாம் வகுப்பு ஏ.சி. வண்டியிலே பயணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும்கூட - அங்கே டெல்லியிலே கைச் செலவிற்கென்று எங்களால் இயன்ற தொகையாக ஆயிரம் ரூபாயை பொற்கிழியாக அவர்களுக்கு இங்கே வழங்கவிருக்கிறோம். (கைதட்டல்)

இவைகள் அத்தனையும் அவர்களுடைய தேவையினை நிறைவு செய்யக் கூடியதென்ற அந்த அடிப்படையிலே அல்ல; எங்களுடைய அன்பை வெளிப்படுத்துகின்ற வகையில் அவர்களுக்கு இவைகள் எல்லாம் வழங்கப்படுகின்றன என்று கூறி - அவைகளை உங்கள் முன்னிலையிலே வழங்குகிறேன் என்று அறிவித்து - தியாகிகளால் உருவான இந்த திருநாட்டில் என்றென்றும் இறையாண்மையையும் ஒற்றுமையையும் இந்தியாவினுடைய வலிமையையும் ஒற்றுமையையும் இந்தியாவினுடைய வலிவை மேலும் பெருக்குகின்ற முயற்சியை நாம் மேற்கொள்வோம் என்று கூறி, 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை இதயத்திலே பதித்து நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பாரதி பாடிய அந்தக் கவிதை வரிகளை நினைவில் கொண்டு சமத்துவம், சமதர்மம் இவைகள் செழித்தோங்க சூளுரைப்போம், சூளுரை மேற்கொள்வோம்.

- முரசொலி 12.8.97

சுதந்திர தின பொன்விழா

பேரன்பு கொண்டோரே,

பெரியோரே,

பெற்ற தாய்மாரே,

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே,

சுதந்திரத் திருநாளில் ஆகஸ்டு 15ஆம் நாள் தேசியக் கொடியேற்றும் உரிமை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில முதலமைச்சர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென மத்திய அரசுடன் வாதாடி, இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் 23 ஆண்டுகளுக்கு முன்பு 1974ல் மகிழ்ச்சியுடன் இந்த மணிக் கொடியை ஏற்றிவைத்திடும் வாய்ப்பு பெற்றிருந்த எனக்கு, இப்போது சுதந்திர நாள் பொன்விழா ஆண்டிலும் இந்தக் கொடியை ஏற்றிவைக்கும் பெரும் பேற்றினை வழங்கியுள்ள தமிழ்த் திருநாட்டு மக்கள் அனைவருக்கும் என் இதயமார்ந்த நன்றியையும் - பணிவு மிகுந்த வணக்கத்தையும் - பாசம் நிறைந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் அன்னைத் திருநாடு, அடிமை விலங்கை உடைத்தெறிந்து விடுதலை பெற்று ஆயிற்று ஐம்பது ஆண்டுகள் எனினும்; இன்னமும் நாம் முழுமையான சுதந்திர விடியலை எதிர்பார்த்து வைகறைப் பொழுதிலேதான் இருக்கிறோம் என்பதை மறந்து விடுவதற்கில்லை.

விடுதலை வேட்கை கொண்ட வீரன் ஒருவனைப் பார்த்து வெள்ளைக்கார துரையொருவன்,

“தொண்டு செய்யும் அடிமை - உனக்குச்
சுதந்திர நினைவோடா?
பண்டு கண்டதுண்டோ - அதற்குப்
பாத்திர மாவாயோ?
சாதிச் சண்டை போச்சோ? - உங்கள்
சமயச் சண்டை போச்சோ?
நீதி சொல்ல வந்தாய் - கண்முன்
நிற்கொணாது போடா!”

என்று கூறியதாகப் பாரதியார் பாடினாரே; அந்தப் பாட்டு இந்தச் சுதந்திரப் பொன்விழா ஆண்டிலும் பாடப்பட வேண்டிய நிலை இருப்பதை எண்ணிடும்போது புண்ணில் வேல்பட்டது போன்ற துடிதுடிப்பும் துன்பமுமன்றோ நம்மைத் துளைத்தெடுக்கிறது!

நினைத்துப் பார்க்க வேண்டாமா; நம் நெஞ்சில் நிழலாட வேண்டாமா; தமதுடலைக் குருதியில் நனைத்து உயிர் மூச்சை சுதந்திரக் கொடி பறந்திட காற்றாக வழங்கிய தியாகத் திருவிளக்குகள் எத்தனை பேர் இந்த நாட்டு விடுதலைக்கு அடித்தளமாக அமைந்துள்ளனர்!

தென்னாப்பிரிக்காவில் இனவெறி எதிர்ப்பும் போராட்டத்தில் தன்னுடன் சிறையேகி மாண்டுவிட்ட மகளிர்குல இளம் மணிச்சுடர் தில்லையாடி வள்ளியம்மாளின் தியாகம்தான்; .இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கான உணர்வைத் தனக்கு எழுப்பியது என்றுரைத்த உத்தமர் காந்தியடிகளின் தலைமையில் பெற்ற சுதந்திரத்திற்குப் பொன்விழா - சுதந்திரம் வாங்கித் தந்தவருக்கே என்ன பரிசளித்தது இந்த நாடு!

''என்னைப் பற்றிக் கவலையில்லை - நான் வாங்கித் தந்த சுதந்திரத்தையாவது காப்பாற்றுங்கள்'' என்ற வேண்டுகோளுடன் தானே காந்தியடிகள் கடைசியாகக் கண் மூடியிருப்பார்!

அதை நினைத்தாவது நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்திட இந்நாளில் உறுதி பூணுவோம்.

சுதந்திரமுடன் இயங்கிடும் எத்தனையோ நாடுகளின் நிலையோடு ஒப்பிடுகையில் நமது இந்திய நாட்டு நிலைமை, முற்றிலும் வேறுபட்டது. ஊட்டச்சத்து வாய்ந்த உணவுதான் குழந்தைகளுக்கு வழங்கப்பட வேண்டுமென வேறு நாடுகளில் அறிவுரைகள் செயல் வடிவம் பெறுகின்றபோது, எந்தச் சத்து பற்றியும் கவலை இல்லை, எதையாவது போட்டு, கத்துகிற வயிறை அடைப்பதற்கு உணவு என்ற பெயரால் ஒரு பொருள் கிடைக்குமா என ஏங்குகின்ற ஏழைகள் இங்கே அங்கிங்கெனாதபடி அலைந்து கொண்டிருக்கின்றனர்.

காயும் கதிரவனை மறைக்கக் கையையே குடையாகக் கொண்டும், மழையில் ஒதுங்க மரத்தடியையே மாளிகையாகப் பாவித்தும் நமது மக்கட் தொகையில் பெரும்பகுதியினர் காலத்தை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆண்டவனின் புத்திரர்கள் என்று அன்பொழுக அழைக்கப் படுகிற அரிசனங்கள் எனப்படும் ஆதிதிராவிடர் லட்சோப லட்சம் பேர் வாழுகின்ற வீடுகள் குக்கிராமத்துக் குப்பைத் தொட்டிகளாக இருக்கின்றன.

உணவு வழங்கும் உழவன் மானங்காக்க உடை தரும் நெசவாளி - வியர்வைத் துளிகளை தன்னைப் பெற்றெடுத்த இந்திய மண்ணுக்குப் பன்னீர்த் துளிகளாகத் தெளித்துக் கொண்டிருக்கும் தொழிலாளி - சுரங்கம் தோண்டுவோன் - முத்துக் குளிப்போன் - மீனவன் - உலைக்கூடத்தில் வதைபடுவோன் - மண்சுமப்போன் - மரம் ஏறுவோன் - உடை வெளுப்போன் - முடிதிருத்துவோன் -

ஏதோ இரண்டெழுத்துப் படித்து எழுத்தர் பணி புரிவோன் - இன்னோரன்ன மக்கள் தொகுதியினர் வாழ்விலே இன்பத் தென்றல் வீசிட வில்லை. அதற்காக முயற்சிகள் எடுக்கப்படாமல் இல்லை. ஆனால், அந்த முயற்சிகள், முழுப் பயனையும் அளித்திடத்தக்க வண்ணம் அமைந்திடவில்லை. ஐந்து பேருக்காகத் தயாரிக்கப் படும் விருந்து, பரிமாறப்படுகிற நேரத்தில் பத்துப் பதினைந்து பேருக்கு என்ற நிலை பெற்று விடுமேயானால், அதனை அருந்தி மகிழ்வதில் முழுமை எப்படி இருந்திட இயலும்?

"எல்லையுடைய புவியின் மீது
எல்லையற்ற வளர்ச்சி, சாத்தியமன்று"

என்பதை ஒவ்வொரு தனி மனிதனும் உணர்ந்து, அதற்கேற்ப நடந்தால்தான், வளர்ச்சித் திட்டங்களின் முழுப் பயனைச் சமுதாயம் பெற்றிட முடியும். எத்தகைய பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டினாலும், கட்டுக்கடங்காத வகையில் மக்கட் பெருக்கம் செல்லுமேயானால், தீட்டப்பட்ட பொருளாதாரத் திட்டங்கள், காட்டில் காய்ந்த நிலவாகத்தான் ஆகிவிடும்.

இத்துணை சிரமங்களுக்கிடையே மக்கட்பணி நடைபெறும் போது அரசின் முயற்சிகளைத் தகர்த்தெறியும் பொருளாதாரக் குற்றவாளிகள் - சமூக விரோதிகள், சாதி சமய வெறி பிடித்தோர்; எரியும் வீட்டில் பிடுங்கியவரை ஆதாயம் என்பதுபோலத் தங்கள் கைவரிசையைக் காட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள். இந்த மக்கள் நல விரோதிகளைத் தடுத்து நிறுத்த - அரசு எடுத்திடும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் முழு ஒத்துழைப்பைத் தந்திட வேண்டும்.

கடத்தல்காரர் - கறுப்புப் பண முதலைகள் - வரி ஏய்ப்போர் - கலப்பட வணிகர் - பதுக்கல் மனிதர் - ஊழல் பெருச்சாளிகள் - வன்முறை விரும்பிகள் - இவர்களைச் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்று கூறக்கூட நா கூசுகிறது. சமுதாயத்தை அழிக்கும் புற்று

நோயாக அவர்கள் வளர்ந்து வருகிறார்கள். அந்தக் கொடிய நோய் தடுக்கப்பட - அதன் கோரப்பிடியிலிருந்து நமது மக்கள் விடுவிக் கப்பட சபதம் ஏற்கும் ஆண்டாக இந்தப் பொன்விழா ஆண்டு அமைந்திடல் வேண்டும்.

இருள் - மழை - புயல் இவற்றுக்கிடையே மின்னல் வெளிச்சத்தில் வழி தெரிந்து நடப்பதைப்போல இந்த ஐம்பதாண்டு காலமாக இடையில் வந்த நெருக்கடி நெருப்பாற்றையும் கடந்து நிற்பதுதான், நமது இந்திய நாட்டின் ஜனநாயகமாகும்.

ஒரு துணைக் கண்டம் எனக் கூறப்படும் இந்தப் பெரிய நாடு, பெரிய ஜனநாயக நாடாகவும் திகழ்ந்து, மற்ற பல நாடுகளுக்கு மத்தியில் தனது மதிப்பை உயர்த்திக் கொண்டிருப்பதை இந்தப் பொன் விழா ஆண்டில் நினைத்துப் பூரிப்புக் கொள்கிறோம்.

மக்களாட்சியின் மாண்புக்குத் தமிழகத்தில் சங்க காலத்தி லேயே அடையாளம் உண்டு என்பதை நமது இலக்கியங்கள் அறிவிக்கின்றன. ஊராட்சித் தலைவர்கள் மக்களால் தேர்வு செய்யப்பட்டதை உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.

உள்ளாட்சி மன்றங்களில் ஊனமுற்றிருந்த ஜனநாயகத்தைக் குணப்படுத்தி, கடந்த ஆண்டு நடமாட வைத்த பெருமை உங்களால் உருவாக்கப்பட்ட இந்த அரசுக்கு உண்டு. அந்த உள்ளாட்சிகளுக்குத் தேவையான நிதியும் - போதுமான அதிகாரப் பொறுப்புகளும் படிப்படியாக வழங்கப்பட்டு வருகின்றன.

கிராமங்கள்தான் நாட்டின் முதுகெலும்பு என்று காந்தியடி கள் சொன்ன வாசகத்தை மறவாமல் - நாடு, நகரம், கிராமம், குக்கிராமம், பட்டி தொட்டி அனைத்திலும் இந்த அரசின் பணிகள் பரவலாக நடைபெறுவதற்கு கட்சிச் சார்பற்ற முறையில் அனைத்து மக்களின் அன்பான ஆதரவும் வேண்டப்படுகிறது.

அடிப்படை வசதிகளான பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர், சாலை வசதி, மின்சாரம், மருத்துவ வசதி, உணவு, உடை, உறையுள்

போன்ற மக்களின் குறைந்த பட்ச தேவைகளை நிறைவு செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கித்தான் இந்த அரசின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

தியாகங்கள் பல செய்து இந்தத் திருநாட்டை மீட்டவர்கள் - நாட்டின் நலிவு போக்க நாளும் உழைத்திடும் நல்லவர்கள் - அனைவரும் காணும் கனவுகளை நிறைவேற்றிடத் தொடர்பயணம் மேற்கொண்டிருக்கும் நாம், அந்தத் தியாக சீலர்களைப் போற்றிப் புகழ்வதுடன் நில்லாமல், அவர்தம் வாழ்வில் வறுமைத் தேள் கொட்டாமலும் பாதுகாத்திடும் பொறுப்பையும் ஏற்றுள்ளோம்.

அந்தத் தியாகிகளின் ஓய்வூதியமாக மாதம் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வழங்கி வருகிறது தமிழக அரசு!

சுதந்திரம் அடைந்த ஐம்பதாம் ஆண்டு பொன் விழா நினைவாக - இனிமேல் விடுதலைப்போர் தியாகிகளுக்கு மத்திய அரசு இந்தப் பொன்விழா ஆண்டில் அறிவிக்கும் ஓய்வூதியப் பயன் எவ்வளவோ - அந்த அளவுக்குச் சமமான பயனை மாநில அரசு ஓய்வூதியம் பெறும் தியாகிகளும் பெற்றிட வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இங்கே அறிவிக்கிறேன். (பலத்த கை தட்டல்)

சிதம்பரனார் சிறையில் இழுத்த செக்கைத் தேடிக் கண்டுபிடித்து அதனைச் சென்னையில் காட்சிப் பொருளாக வைத்தது முதல்... தியாகத் தலைவர்களின் நினைவாக எத்தனையோ செயல்களை ஆற்றியுள்ள இந்த அரசு;

ஆகஸ்டு 31-மதுரையில் நடத்த இருக்கும் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டையொட்டி, அதே நாளில் தியாகச் செம்மல் முன்னாள் அமைச்சர் ஆக்கன் அவர்களின் சிலையமைப்பு விழாவை நடத்த இருக்கிறது (கை தட்டல்)

நீண்ட காலக் கோரிக்கையாக இருந்துவரும் விசுவநாததாஸ் அவர்கள் வாழ்ந்த மதுரை திருமங்கலம் இல்லத்தை அரசு நினை

வகமாக இந்தப் பொன்விழா ஆண்டில் மாற்றிட இருக்கிறது என்பது மட்டுமல்ல; கட்டபொம்மன் வாரிசுகளுக்கும், மருது பாண்டியர் வாரிசுகளுக்கும், சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கும் உதவி டுவது போல விசுவநாததாஸ் வாரிசுகளுக்கும் உதவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (கை தட்டல்)

சுதந்திர தின வெள்ளி விழா 1972 ஆம் ஆண்டு நான் அறிவித்தது போலவே; இந்தப் பொன்விழா ஆண்டிலும் சிறை வாழ் கைதிகளுக்கு சலுகைகள் சிலவற்றை அறிவிக்கிறேன்.

பத்தாண்டுகளுக்கு மேல் தண்டனை பெற்றோருக்கு ஒன்றரை ஆண்டுக் காலத் தண்டனைக் குறைப்பு. இந்தச் சலுகை மூலம் 139 சிறைக் கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

ஐந்தாண்டுகளுக்கு மேல் பத்தாண்டுகளுக்குள் தண்டனை பெற்றோருக்கு ஓராண்டு காலம் தண்டனைக் குறைப்பு. இதன் மூலம் 24 கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

ஓராண்டுக்கு மேல் ஐந்தாண்டுகள் வரை தண்டனை பெற்றோருக்கு நான்கரை மாதம் தண்டனைக் குறைப்பு இதன் வாயிலாக 64 சிறைக் கைதிகள் விடுதலை பெறுவார்கள்.

மூன்று மாதங்களுக்கு மேல் ஓராண்டு வரை தண்டனை பெற்றோர் பாதிக் காலத்தண்டனை அனுபவித்திருந்தால் மீதிக் காலத் தண்டனை குறைக்கப்பட்டு விடுதலையாவர். இதன் மூலம் 166 கைதிகள் விடுதலை அடைவார்கள்.

இதே கைதிகள் பாதிக் காலத் தண்டனை அனுபவிக்காமல் இருந்தால், அவர்களுக்கு மூன்று மாதம் தண்டனைக் குறைப்பு. இந்தச் சலுகை காரணமாக 72 கைதிகள் விடுதலை அடைவார்கள்.

மூன்று மாதமும் அதற்குக் குறைவாகவும் தண்டனை பெற்றோர் அனைவருமே விடுதலையாவர். இந்த வகையில் 89 சிறைக் கைதிகள் விடுதலை ஆவார்கள்.

எனவே தற்போது அறிவிக்கப்படும் இந்தச் சலுகைகளின் பலனாக 554 சிறைக் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்படுவ

தோடு, சுமார் 3,300 சிறைக் கைதிகள் தண்டனை குறைப்புப் பயனையும் அடைவார்கள் என்பதை இந்தப் பொன்விழா நாளில் அறிவிப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த அறிவிப்புகள் தேன் குடங்கள் அல்ல; வெறும் தேன் துளிகள்தான் என்பதை நானறிவேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள் - பிற்படுத்தப்பட்ட மக்கள் - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் - நடுத்தர மக்கள் - அலுவலர்கள் - அனைத்துத் தொழிலாளர்கள் - எல்லோரது பிரச்சினைகளையும் மையமாக வைத்து, அரசின் சக்கரம் சுழல வேண்டுமென்ற அண்ணா அவர்களின் வழி நின்று, நாளும் செயல்படும் இந்த அரசு என உறுதி அளிக்கிறேன்.

நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு, இறையாண்மை காத்து, தமிழர் கொற்றம் சிறக்கப் பணியாற்றுவோம்!

நாட்டுக்குழைத்த நல்லோர் வழியில் நடைபோடுவோம்!

உத்தமர் காந்தியடிகள் - உண்மையே கடவுள் என்றார்!

அறிஞர் அண்ணா - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்றார்!

கைமாறு கருதாமல் கடமையைச் செய் என்றார் தந்தை பெரியார்!

உழைப்பே உயர்வு தரும் என்றார் பெருந்தலைவர் காமராசர்!

இவர்தம் எண்ணமெல்லாம் தமிழர் வாழ்வில் வண்ணமாகப் பொலிவுற, இந்தச் சுதந்திரப் பொன்விழா நாளில் தொண்டாற்ற தூய சபதம் ஏற்றிடுவோம்!

- முரசொலி 16.8.97

மாநகராட்சியில்
சுதந்திரப் பொன்விழா

சுதந்திர பொன்விழா நிகழ்ச்சியை இந்தியத் திருநாடு அங்கிங் கெனாதபடி எங்கெங்கும் கொண்டாடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் தமிழகம் எந்த மாநிலத்திற்கும் சளைக்கவில்லை என்பது கூட அல்ல - எல்லா மாநிலத்திற்கும் வழிகாட்டக் கூடியது என்ற அளவில் இந்த சுதந்திரப் பொன்விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அதில் ஒரு கூறாக, சென்னை மாநகராட்சி மன்றம் இன்றைய இனிய விழாவை ஏற்பாடு செய்து நன்றி தெரிவிக்கின்ற - பெரியவர்களுக்கு மரியாதை காட்டுகின்ற - வழி காட்டியாக இருந்தவர்களுக்கெல்லாம் அன்பினை வழங்குகின்ற பல்வேறு நிகழ்ச்சிகளை இணைத்து சுதந்திர பொன்விழா நினைவுத் தூண் ஒன்றை நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டு விழாவையும், அறிஞர் அண்ணா பெயரால் அமைந்துள்ள அண்ணா மறுமலர்ச்சி திட்டத்திற்கான துவக்க விழாவையும் நடத்துகின்ற பாங்கினைக் கண்டு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

இங்கே இந்த மாமன்றத்தில் ஆளுகிற தரப்பில் மன்றத்தின் தலைவராக இருப்பவருக்குப் பெயர் மலையன். எதிர்க்கட்சித் தலை வராக இருப்பவருக்குப் பெயர் வெற்றிவேல். எதிர்க்கட்சி வேலாக இருக்குமென்ற காரணத்தால்தான் மலையை ஆளுங் கட்சித் தலைவராக அமர்த்தியிருக்கிறோம். மலையை வேல் பிளந்த புராண கதை எல்லாம் உண்டு. என்றாலுங்கூட, இந்த வேல்

அப்படிப்பட்ட வேல் அல்ல (கைதட்டல்) இது பழனி மலை மீது அடக்கமாக அமர்ந்திருக்கின்ற பழனிவேலைப் போன்ற வேல் இந்த வெற்றிவேல் என்பது (கைதட்டல்) எனக்கு நன்றாகத் தெரியும்.

அடக்கம் இருந்தாலும், இலட்சியங்களை விட்டுக்கொடுக்கா மல், கொள்கை பிறழாமல் தன்னுடைய கட்சியை எடுத்துரைப்ப திலே எந்தவகையிலும் தயக்கமும் காட்டாமல் பணியாற்றக்கூடிய வெற்றிவேலை எதிர்க்கட்சியின் தலைவராகவும், வந்து தாக்கு கின்ற வேலும் மழுங்காமல், மலையிலும் சிறிதும் சேதாரம் ஏற்படா மல் காக்கின்ற மன்றத் தலைவராக மலையனையும் பெற்று மாநக ராட்சி மன்றத்திலே எல்லா கட்சிகளையும் சார்ந்த உறுப்பினர் களையும் - இவர் இன்ன கட்சிக்காரர், இவர் இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர் என்ற வேறுபாடு எள்ளளவும் இல்லாமல் அவர்களை இன்றைக்கு தலைமையேற்று அவர்களுடைய பெரும் துணை யோடு மாநகரத்தின் பணிகளை மேயர் மு.க. ஸ்டாலின் நடத்திக் கொண்டிருப்பதையும் - அவருக்குத் துணையாக துணை மேயர் இருப்பதையும் நான் எண்ணியெண்ணி மகிழ்வதைப் போலவே நம்முடைய பெரியவர் செங்கல்வராயன் அவர்களும் அந்த மகிழ்ச்சியிலே திளைத்து இந்தப் பொன்விழாவிலே தன்னுடைய பொன்னான வாயால், சில பொன்னான பாராட்டுச் சொற்களை யெல்லாம் வழங்கியிருக்கிறார்கள்.

அவர்கள் இன்றைக்கு தமிழகத்திலே நடைபெறுகின்ற ஆட்சியைப் பற்றியும் நல்லாட்சி நடைபெறுகிறது என்று சொன்னார்கள். வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷி என்று பட்டம் வாங்குவது சுலபம் அல்ல. வசிஷ்டர் வாயாலேயே இது நல்லாட்சி தான் என்று இன்றைக்கு பட்டம் பெற்ற பிறகு வேறு யார் சொன்னா லும் நான் அதைப்பற்றிக் கவலைப்படப் போவதில்லை. ஏனென்றால் இந்த நாட்டிற்கு சுதந்திரம் பெறுவதற்காக எதையும் எதிர்பாராமல், இவருக்கு இன்னது கிடைக்குமென்று பலர்

எதிர்பார்த்த நேரத்தில் எல்லாம் கிடைக்காமல் போன போது கூட, தான் ஏற்றுக் கொண்ட கொள்கையிலே உறுதியாக இருந்து லவலேசமும் தடம் பிறழாமல் தன்னுடைய பொது வாழ்க்கையை ஆரம்பித்த இடத்திலேயிருந்து இந்த முதுமைக் கோலத்திலே - முதுமைக்காலத்திலே கூட உறுதியாகப் பின்பற்றி வருகின்ற ஒரு தியாகச் சுடர் டி. செங்கல்வராயன் அவர்கள் ஆவார்கள். அவர்கள் இன்றைக்கு நடைபெறுகின்ற மாநில ஆட்சியையும், மாநகராட்சி யையும் புகழ்ந்து பேசியிருப்பது இந்தப் பொன் விழாவிலே எங்களுக்கு தியாகிகளால் சூட்டப்பட்ட பொற் பதக்கங்கள் என்று நான் கருதுகிறேன். அதற்கான என்னுடைய நன்றியை, வணக் கத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழகம் தான் பல இந்தியத் திருநாட்டின் நிகழ்வுகளுக் கெல்லாம் முன்னோடியாக இருந்திருக்கின்றது. இங்கே உள் ளாட்சித் துறை அமைச்சர் தம்பி கோ.சி.மணி எடுத்துக்காட்டி யதைப் போல, மேயர் தன் உரையிலே குறிப்பிட்டதைப் போல இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கான திட்டங்கள் கூட உத்தமர் காந்தியடிகள், முதறிஞர் இராஜாஜி இவர்கள் எல்லாம் கலந்து ஆலோசித்த இடமாகவே தமிழகத்தின் தலைநகரமான சென்னை மாநகரம் இருந்திருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்கும்போதும், முதல் சுதந்திரப் போராட்டம் வேலூர் பகுதியிலேதான் தொடங்கியது என்பதை வரலாற்று ரீதியாக அறிகின்ற போதும் காந்தியடிகள் இந்தியாவிலே உள்ள வறுமை நிலையை அடையாளம் காணுகின்ற பகுதியாக மதுரை மாவட்டப் பகுதி இருந்தது; அதற்குப் பிறகுதான் அவர் முழ வேட்டியும், முழத் துண்டும் அணியத் தொடங்கினார் என்ற அந்தச் சரித்திரமும், தமிழகத்திலே இருந்து தொடங்கின.

நான் பல நிகழ்ச்சிகளிலே குறிப்பிட்டதைப் போல, தென்னாப்பிரிக்கா இன வெறி எதிர்ப்புப் போராட்டத்திலே

ஈடுபட்டிருந்த காந்தியடிகளுக்கு துணையாக இருந்தவர்கள் தில்லையாடியைச் சேர்ந்த வள்ளியம்மாள் என்ற ஆதிதிராவிடப் பெண். நாகப்பன், நாராயணசாமி என்ற இரண்டு ஆதி திராவிடத் தோழர்கள் காந்தியடிகளோடு தென்னாப்பிரிக்கா போராட்டத் திலே ஈடுபட்டு சிறைச்சாலைக்குச் சென்றவர்கள்; சிறைச்சாலை யிலே அனுபவித்த கொடுமைகளின் காரணமாக வெளியே வந்த சில நாட்களுக்கெல்லாம் மறைந்து போனவர்கள், மாண்டு போனவர்கள்.

அந்த நிகழ்ச்சியை வைத்து காந்தியடிகள் சொன்னதாக வரலாறு கூறுகிறது. ''தில்லையாடி வள்ளி அம்மாளும், நாகப்ப னும், நாராயணசாமியும் என்னோடு இணைந்து நடத்திய இந்த இனவெறி எதிர்ப்புப் போராட்டம், இந்தியாவிலே விடுதலைப் போராட்டத்திற்கு என்னைத் தூண்டிவிட்ட தூண்டுகோலாகும்'' என்றும் காந்தியடிகள் குறிப்பிட்டிருக்கிறார். எனவே இந்தியாவில் இன்று சுதந்திரப் பொன்விழா நாளை - பொன்விழா ஆண்டை நாம் கொண்டாடுகிறோம் என்றால், அதற்கு தமிழகம்தான் அன்றைக் குத் தாயகமாக இருந்திருக்கின்றது - விடுதலைப் போராட்டத்திற்கு என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

இந்தத் தமிழகம் புரட்சிக்காக மாத்திரமல்ல; விடுதலைப் போராட்டத்திற்காக மாத்திரமல்ல. சுதந்திரம் பெறுவதற்கு முன்பும், சுதந்திரம் பெற்ற பிறகும்கூட பல ஆக்க ரீதியான செயல்பாடு களுக்கும் முன்னோடியாக இருந்திருக்கின்றது இதோ நம் முன்னால் நின்று கொண்டிருக்கின்ற வெள்ளுடை வேந்தர், திராவிட இயக்க முன்னோடி சர். பி.டி. தியாகராயர் சென்னை மாநகரத்தின் தலைவராக இருந்தபோதுதான் - சென்னை மாநகரத் திலே பள்ளிப் பிள்ளைகளுக்கான மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அந்தத் திட்டத்தின் வளர்ச்சியாகத்தான் அதற்குப் பிறகு பல ஆண்டுகளுக்குப் பின் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை -

தியாகராயர் மாநகராட்சி மன்றத்திலே அறிமுகப்படுத்தியதை தூண்டுகோலாகக் கொண்டு மாநிலம் முழுதும் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

அந்தத் திட்டம் அரசின் சார்பாகவே தனித்து செயல்படாமல் ஆங்காங்குள்ள பெற்றோர்கள் - பெற்றோர்களிடத்தில் ஆசிரியர்கள் சென்று பணம் வசூலித்து அதன் மூலமாக நடைபெற்ற திட்டமாகும். அதற்குப் பிறகு திராவிட இயக்கத்திலே ஆட்சிக்கு வந்த என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த போது சத்துணவுத் திட்டத்தை அறிமுகப் படுத்தினார். அதற்குப் பிறகு 89 ல் நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது - முன்னவர் கொண்டு வந்த திட்டத்தை பின்னால் வந்தவர்கள் சிதைக்கக் கூடாது என்ற அரசியல் நாகரிகத்தோடு, அதை மேலும் வளர்க்க வேண்டுமென்ற அடிப்படைப் பண்போடு சத்துணவு - முட்டையோடு கூடிய சத்துணவு என்று அறிமுகப் படுத்தப்பட்டது. இவ்வளவிற்கும் பிறகுதான் தமிழ் நாட்டிலே சத்துணவுத் துறையிலே - மதிய உணவுத் துறையிலே இந்தப் புரட்சி ஏற்பட்ட பிறகுதான் அகில இந்திய அளவிலே இப்படி மக்களுக்கு மாணவர்களுக்கு சத்துணவு அளிக்க வேண்டுமென்ற ஒரு திட்டத்தை முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் அறிவித்தார்கள் என்பதை நீங்கள் எல்லாம் மறந்திருக்க முடியாது.

தம்பி கோ.சி.மணி இங்கே சுட்டிக்காட்டியதைப் போல், 1974-ஆம் ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த அந்தக் காலகட்டத்தில் ஆதி திராவிட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அறிவித்து இரண்டாண்டு காலத்திலே ஒரு இலட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று திட்டமிட்டு - திட்டம் 74-ஆம் ஆண்டு தொடங்கி ஒன்றரை ஆண்டுக்காலத்திலே 35,000 வீடுகள் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசமாக காங்கிரீட் வீடுகள் கட்டித் தரப்பட்டு - பிறகு

ஆட்சி கலைக்கப்பட்ட காரணத்தால் அந்தத் திட்டத்திலே தொய்வு ஏற்பட்டு, மீண்டும் 89 - 90இல் நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டம் வேகமாகச் செயல்படுத்தப்பட்டு இப்போது மீண்டும் அந்தத் திட்டம் அகில இந்தியாவிலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டு - மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்கு 'இந்திரா காந்தி நினைவு வீடு கட்டும் திட்டம்' என்று பெயர் வைத்திருப்பதாக கோ.சி.மணி இங்கே சொன்னார்.

நான் அந்தத் திட்டத்தின் பெயரைப் பற்றிக் கவலைப்பட வில்லை. திட்டம், திட்டமாக இருந்தால் போதும் என்பதுதான். அந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒருதொகை தருகிறது. மாநில அரசு ஒரு தொகை ஈடு செய்கிறது. அதுவும் போதாமல், அந்தத் தொகுப்பு வீடுகளுக்கெல்லாம் ஆதிதிராவிட மக்களுக்கு சாதாரண வீடுகளாக இருக்கக் கூடாது; காங்கிரீட் தளம் வேண்டுமென் பதற்காக ஏறத்தாழ 11,000 ரூபாயை அந்த வீடுகளுக்காக தமிழக அரசு செலவழிக்கின்றது.

மாநில அரசு செலவழித்தாலும், மத்திய அரசு செலவழித் தாலும் இரண்டும் மக்கள் பணம்தான். அதை நானும் மறந்துவிடக் கூடாது. மத்தியிலே இருப்பவர்களும் மறந்துவிடக் கூடாது. மத்தி யிலிருந்து பணம் கொடுக்கிறோம் என்று சொல்வார்களானால், மாநிலங்களிலேயிருந்து வசூலிக்கப்படுகின்ற வரிதான் மத்தியிலே குவிந்து, அங்கிருந்து இங்கே வருகிறது என்பதை மறந்துவிடக் கூடாது. அதைப்போல மாநில அரசாகிய நாங்கள் செய்கிறோம் என்று சொல்கிற நேரத்தில், மக்களிடமிருந்து வசூலிக்கப் படுகின்ற வரிதான் எங்களிடமிருந்தும் உங்களுக்கு மீண்டும் பலன்களாக கிடைக்கின்றது என்பதை நானும் மறந்து விடக்கூடாது. நீங்களும் மறந்து விடக் கூடாது.

இன்றைக்கு மாநகராட்சி மன்றத் தேர்தல் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்றிருக்கின்றது. அதற்கே கூட ஒரு வெள்ளி விழா கொண்டாடலாம். 25 ஆண்டுகள் மாநகராட்சி

மன்றங்கள் செயல்படாமல் இருந்து இன்றைக்கு ஆறு மாநகராட்சி மன்றங்கள் தமிழ்நாட்டிலே செயல்படுகிறதென்றால் அது தேர்தல் நேரத்திலே நாங்கள் அளித்த வாக்குறுதியைச் செயல்படுத்தியது தான். 'சொன்னதைச் செய்வோம்' 'செய்வதைச் சொல்வோம்' என்ற அந்த வாக்குறுதியை நிறைவேற்றிய காரணத்தால்தான் இன்றைக்கு மாநகராட்சி மன்றம் சென்னையில் சுதந்திரப் பொன்விழா நாளைக் கொண்டாடுகின்ற இந்தக்காட்சியை நாமெல்லாம் காண்கிறோம்.

ஆனால், நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சென்னையைப் பொறுத்த வரையிலே 25 ஆண்டு காலமாக மாநகராட்சி மன்றத் தேர்தல் நடைபெறவில்லை. அப்படி நடைபெறாமல் இருந்த மதுரை மாநகராட்சி, கோவை மாநகராட்சி, மற்ற மாநகராட்சி மன்றங்களுக்கும் பல்வேறு ஊராட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தேர்தல் நடை பெற்று பெருந்தலைவர் காமராஜர் உருவாக்கிய பஞ்சாயத்து சட்டம், பஞ்சாயத்து திட்டத்திற்கு மாறாக ஒரு குழப்பான திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு அதிலே பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும், மாவட்டப் பஞ்சாயத்தும் ஒன்றோடொன்று இணையாமல் தனித்தனியாக திரிசங்கு சொர்க்கம் போல தொங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு பஞ்சாயத்து ராஜ் சட்டம் வந்தபோதே, அதை எதிர்த்த பெருமை எங்களுடைய இயக்கத்திற்கு உண்டு; எனக்கு உண்டு. எதிர்த்ததற்குக் காரணம் - இன்றைக்குச் சொல்கிறோமே, காமராஜர் வழி என்று - அந்தக் காமராஜர் வழியிலேதான் அன்றைக்கு எதிர்த்தோம். அவர் வழி நின்று தான் எதிர்த்தோம். ராஜீவ்காந்தி கொண்டு வந்த அந்தத் திட்டத்தை நாங்கள் காமராஜர் வழி நின்று எதிர்த்தோம்.

என்ன சொல்லி எதிர்த்தோம்? காமராஜர் இந்தச் சமுதாய நலத் திட்டத்தில் ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம் என்ற இந்த இரண்டு தட்டுக்களோடு நிறுத்தி விட்டார். ஜில்லா போர்டுகள் தேவையில்லை என்று ஒழித்து விட்டார். அவர் கொண்டு வந்த திட்டம்தான் தமிழகத்திலே வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்

டிருக்கின்றது; அதை மேலும் திருத்த வேண்டுமென்றால், செப்பனிட வேண்டுமென்றால், மக்களால் நேரடியாகத் தேர்ந் தெடுக்கப்படுகின்ற தேர்தல் ஒன்றை அறிமுகப்படுத்தினால் போதுமென்று எண்ணி அண்ணா அவர்கள் ஊராட்சி மன்றங் களுக்கு நேரடித் தேர்தலைக் கொண்டு வந்தார். பிறகு எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்தபோது ஒன்றியங்களுக்கும், நகர்மன்றங் களுக்கும் நேரடித் தேர்தலைக் கொண்டு வந்தார். அதோடு நிறுத்தியிருந்தால் இன்றைக்கு குழப்பங்களே வந்திருக்காது. அவருக்கு அதிகாரம் இல்லை. இவருக்கு அதிகாரம் இல்லை என்றெல்லாம் இன்றைக்குச் சொல்கிறோம்.

ஊராட்சி மன்றங்களுக்கு அதிகாரத்தைக் கொடுக்காதே என்று ஒரு சட்டமன்ற உறுப்பினரே எங்களுக்கு கடிதம் எழுதி யிருக்கிறார். அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதை நான் சொல்ல விரும்பவில்லை. இந்த அதிகாரத்தை - கல் எடுக்கின்ற - குவாரி தோண்டுகின்ற அதனால் வருகின்ற வருமானத்தைப் பெறுகின்ற அதிகாரத்தை ஊராட்சி மன்றங்களுக்குத் தரக்கூடாது என்று ஒரு சட்டமன்ற உறுப்பினர் எழுதிய கடிதமே என்னிடத்திலே இருக்கிறது. என்ன காரணம்? அதிகாரங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்கின்ற எண்ணம் பலருக்கு சுலபத்திலே வருவ தில்லை. அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்கும்போது, அது மிகப் பரவலாக பகிர்ந்து அளிக்கப்படவேண்டும். மாவட்ட ஊராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்து கொடுத்தால் 29 இடங்களோடு அந்த பகிர்ந்தளிப்பு முடிந்து விடும். ஊராட்சி மன்றங்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட இடங்களுக்கு அது பகிர்ந்தளிக்கப்படும். எனவேதான் இந்த அரசு ஊராட்சி மன்றங்களுக்கு பல அதிகாரங்களை இன்றைக்குப் பகிர்ந்து கொடுத்திருக்கின்றது.

ஆனால் பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே உள்ள சொத்தை, சோடைகள், ஓட்டை, உடைசல்கள் - இவைகளின் காரணமாக,

பஞ்சாயத்து ராஜ், இன்றைக்கு நாம் எண்ணியவாறு சீரோடும் சிறப்போடும் நடைபெறவில்லை என்பது உண்மை. எனவேதான் நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன். மத்தியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சியாளர்கள் இந்தப் பஞ்சாயத்துராஜ் சட்டத்தை மறு பரிசீலனை செய்து, அதிலே திருத்தம் கொண்டு வந்து - காமராஜர் ஆட்சியை இங்கே உருவாக்குவது கூட பிறகு இருக்கட்டும், காமராஜர் கொண்டு வந்த உள்ளாட்சித் திட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு - பஞ்சாயத்து ராஜ் சட்டத்திலே கொண்டு வருவதற்கு முனைய வேண்டும். அப்படி முனைந்தால் அவர்களுக்கு நான் தோளோடு தோள் நின்று குரல் கொடுப்பேன் என்ற உறுதியையும் இந்த விழாவிலே நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த விழாவிலே வெற்றிவேல் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்; எதிர்கட்சி அல்லவா; அமைச்சர்கள் வரும்போது கோரிக்கை வைக்காமல் இருக்க முடியுமா? ஆகவே வைத்தார். என்ன கோரிக்கை என்றால் - நிரம்ப பணியிடங்கள் காலி இருக்கின்றன; அவைகளை நிரப்ப வேண்டும்; அப்படி நிரப்புவதற்கு, தேசத் தியாகிகளுடைய வாரிசுகளுக்கு இடம் அளிக்க வேண்டும் என்று சொன்னார். அந்த நல்ல எண்ணத்தை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். ஆனால், வேலை வாய்ப்பு களுக்கு காலி இடங்களிலே பணி அமர்த்தும்போது, கடைப்பிடிக் கின்ற முறை வேலை வாய்ப்பு அலுவலகத்திலே பதிவு செய்யப் பட்டவர்களுக்கான முன்னுரிமை அடிப்படையிலேதான் அவர் களை வேலைக்குச் சேர்க்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இருந்தாலும் விதி விலக்காக ஏற்கெனவே ஒரு முறை உண்டு. ஒரு அலுவலகத்திலே வேலை செய்தவர்களுடைய மறைவிற்குப் பிறகு அவர்களுடைய வாரிசுதாரர்கள் இருந்தால் அந்தப் பிள்ளை களுக்கு அல்லது பெண்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம் என்று ஒரு விதி விலக்கு இருக்கிறது. அதை மேலும் விரிவாக்கி வெற்றிவேல் சொன்னவாறு, தேசத் தியாகிகளுடைய வாரிசுதாரர்

களுக்கும், மொழிக்காவலர்களுடைய வாரிசுதாரர்களுக்கும் அந்த வேலை வாய்ப்புகளில் முன்னுரிமை வழங்க முடியுமா என்பதை அரசு பரிசீலித்து மேயர் ஸ்டாலின் அவர்களுக்குத் தெரிவிக்கும் என்பதை வெற்றிவேல் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (கை தட்டல்)

நான் இந்த விழாவிலே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது சென்னை மாநகராட்சி மன்றத்திற்காக அல்ல; பொதுவாக உள்ளாட்சி மன்றங்களுக்காகச் சொல்கிறேன். காலையிலே பத்திரிகையிலே ஒரு செய்தி படித்தேன். தஞ்சை மாவட்டத்திலே சீராலூர் என்கின்ற ஒரு ஊராட்சி மன்றத்திலே தலைவர், துணைத் தலைவர் இரண்டு பேருமே சேர்ந்து ஒரு நல்ல காரியம் (?) செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு அதிகாரம் அளித்திருக்கி றோம். ''செக்'' கிலே கையெழுத்துப் போடும் அதிகாரம்.

உங்களுக்குத் தெரியுமா? நான் நான்கு, ஐந்து கோடிக்கு மேற்பட்ட மக்களுக்கு முதலமைச்சர். ஆனால் அரசு காசோலையில் கையெழுத்து போடுகின்ற அதிகாரம் எனக்குக் கிடையாது. ஊராட்சித் தலைவர்களுக்கு அந்த அதிகாரம் உண்டு. பஞ்சாயத்து யூனியன் தலைவருக்கு அந்த அதிகாரம் கிடையாது. மாவட்ட ஊராட்சித் தலைவருக்கும் கிடையாது. ''செக்'' கிலே கையெழுத் துப் போடுகின்ற அதிகாரம் - முதலமைச்சருக்குக் கூட கிடையாது - ஊராட்சித் தலைவருக்கு உண்டு. அதைப் பயன்படுத்திக் கொண்டு - அந்த சீராலூர் ஊராட்சி மன்றத் தலைவரும், துணைத் தலைவரும் இரண்டாயிரம் ரூபாய் எடுக்க வேண்டியதற்குப் பதிலாக நாற்பதாயிரம் ரூபாய் எடுத்து தங்கள் வீட்டுத் தேவையான பீரோ, மேஜை, நாற்காலி, மின்சார விசிறி எல்லாம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் இல்லாத இடத்திற்கு இப்போது அவர்கள் போயிருக்கிறார்கள். அதாவது சிறைச் சாலைக்கு அவர்கள் போயிருக்கிறார்கள். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி - அவர்கள் போய்த்தான் தீர வேண்டும்.

இன்னொரு ஊர் - சூரக்கோட்டை - அங்கே உள்ள ஊராட்சியில் ஒருவர்; நான் கட்சிப் பெயரையெல்லாம் சொல்ல விரும்பவில்லை. முதலிலே நான் கூறிய அந்த இருவரும் தி.மு.க. அனுதாபிகள் என்று தினமலரிலே போடப்பட்டுள்ளது. அது உண்மையோ பொய்யோ தெரியாது. எந்தவித அனுதாபியாக இருந்தாலும் சரி - எங்க அனுதாபம் கிடையாது (கை தட்டல்) சட்டத்தின் அனுதாபம் கிடையாது; ஊழலை ஒழிக்கிறது மாத்திரமல்ல; ஊழலைத் தடுக்க வேண்டும் ஊழல் புரிகிறவர்களைத் தண்டிக்க வேண்டும். அதுதான் தி.மு.கழக ஆட்சியின் குறிக்கோள். தவறு செய்தவர்களைத் தப்ப விடக் கூடாது. தப்ப விடு என்று சிபாரிசு செய்யவும் யாரும் வரக் கூடாது. அப்படி வந்தால், முதலில் சிபாரிசு செய்ய வருகிறவர்களைத்தான் பிடித்து உள்ளே போட வேண்டும்.

சூரக்கோட்டையில் - இன்னொரு கட்சியைச் சேர்ந்தவர் - நான் பெயர் சொல்ல விரும்பவில்லை. விரைவில் பெயர் வெளியே வரும். ஆனால் ஊராட்சி மன்றத்திலே நிற்கும்போது சுயேச்சையாகத்தான் நிற்பார்கள். அவர் நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் அல்ல; ஒரு இலட்சத்து நாற்பத்தாறாயிரம் ரூபாயை சுரண்டிக் கொண்டு, முன் ஜாமீன் பெறுவதற்காக சென்னைக்கு வந்து சுற்றிக் கொண்டிருக்கிறார். ஆகவே, மக்களாட்சியின் மாண்பை வளர்க்க வேண்டும், அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டுமென்று எண்ணுகின்ற நேரத்தில், அதற்கு தடையாக, இடையூறாக, முட்டுக்கட்டையாக இன்றைக்கு இப்படியும் சிலபேர் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

நான் இதிலே எவ்வளவு கண்டிப்பானவன் என்பதை சென்னை மாநகராட்சி மன்றத்திலே 1974-ஆம் ஆண்டு வாக்கிலே நான் எடுத்த நடவடிக்கையிலேயிருந்தே நீங்கள் எல்லாம் புரிந்து கொண்டிருக்கலாம். பெரியவர் செங்கல்வராயன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதே மாமன்றத்தில் நடைபெற்ற ஒரு ஊழல், சட்டமன்றத்திலே டாக்டர் ஹண்டே அவர்கள் அதை வெளிப்படுத்திய போது - அதைப்பற்றி நானும் கேள்விப்பட்டிருந்த

காரணத்தால் உடனடியாக நான் மன்றத்திலே எழுந்து சொன்னேன். ''இன்று முதல் சென்னை மாநகராட்சி மன்றம் கலைக்கப்படுகிறது'' என்று கூறி எனக்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்றில் லாமல் அத்தனை பேர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொன்னேன். என் ஆருயிர் நண்பர்களாக இருந்த முன்னாள் மேயர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் சிறையிலே வாடினார்கள்.

எனவே, உங்களுக்கு நான் நிச்சயமாகச் சொல்கிறேன். இங்கே பேசும்போது பெரியவர் செங்கல்வராயன் குறிப்பிட்டார். கலைஞருக்கு அவருடைய பெற்றோர் வைத்த பெயரின்படி - அவர் பெயர் கருணாநிதி, கருணையும் இருக்கிறது, நிதியும் இருக்கிறது என்று சொன்னார். ஐயா, செங்கல்வராயன் அவர்களே, என் பெற்றோர்கள் சரியாகத்தான் பெயர் வைத்தார்கள். கருணை அதிகம் இருக்கிறது. அது மூன்றெழுத்து - கருணை; நிதி குறைவாகத்தான் இருக்கின்றது. அதனால் தான் இரண்டு எழுத்து - நிதி. நிதி குறைவாக இருக்கிறது. கருணை அதிகம் இருந் தாலும்கூட, தவறு செய்பவர்களைக் கண்டால், அது ''கருணை'' - ''கடுமை''யாக மாறும் என்பதையும் தவறு செய்யாதவர்கள்தான் தமிழகத்தை, இந்தியத் திருநாட்டைக் காப்பாற்றக் கூடியவர்கள் - வருங்காலத்தை நிர்மாணிக்கக் கூடியவர்கள் - புதிய சமுதாயத்தை உருவாக்கக் கூடியவர்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லி, இந்த இனிய நிகழ்ச்சியிலே என்னுடைய தலைவர் அறிஞர் அண்ணாவின் பெயரால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத் தைத் தொடங்கி வைக்கின்ற சென்னை மாநகராட்சி மன்றத்துக்கும், மேயர் அவர்களுக்கும், துணை மேயர் அவர்களுக்கும், மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த அன்பினை, பாராட்டினை வாழ்த்தினை தெரிவித்து இந்த அளவில் விடைபெறுகிறேன்.

- முரசொலி 20.8.97

சங்ககாலத் தமிழ் நாணயங்கள்

நூல் வெளியீட்டு விழா

இது ஒரு நல்ல மாலைப்பொழுது! மாலை பெரிதாக அணிவித்த தால் மாலைப் பொழுது என்று கூறவில்லை (கைதட்டல்). நம்முடைய பழந்தமிழகத்தை எண்ணிப் பார்க்கவும், பழைய மன்னர்களுடைய வரலாற்றுச் சிறப்பை சிந்தித்துப் போற்றவும், மறைக்கப்பட்டுள்ள அந்த கருவூலங்களை எல்லாம் எதிர்காலத் திலாவது இளைய சமுதாயத்திற்குத் தெரியப்படுத்த வேண்டு மென்ற ஊக்கத்தைப் பெறவும் இந்த மாலைப்பொழுதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை அன்பிற்குரிய தினமலர் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நமக்கு வழங்கியிருக்கிறார்கள். அவருக்கு நான் என்னுடைய வாழ்த்துக்களையும் இனிய பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தினமலர் கிருஷ்ணமூர்த்தி! அவருடைய நூல் வெளியீட்டு விழா. அதை நான் வெளியிடுகிறேன்! சில பேருக்கு வியப்பாக இருக்கும் (கைதட்டல்). சென்ற ஆண்டு நான் மதுரைக்குப் போயிருந்த போது, என்னுடைய மகன் மு.க. அழகிரியின் வீட்டிற்குச் சென்றேன். அப்போது பத்திரிகைகளைப் பற்றிய பேச்சு வந்தது. அழகிரி சொன்னான். ''அப்பா! இதோ இருக்கிற 'எதிர்த்த வீடு'தான் தினமலர் ஆசிரியரின் வீடு'' என்று சொன்னான். (கைதட்டல்) இதிலே உள்ள நயத்தை நீங்கள் புரிந்து கொள்ள

வேண்டும். ''எதிர்த்த வீடு'' (பலத்த கைதட்டல்) ''எதிர்த்த'' என்பது கடந்த காலம் (பாஸ்ட் டென்ஸ்). அவர் அப்படியானால் இப்போது நான் எதிர்க்கவில்லையா என்று கேட்பார் (கைதட்டல்). அந்த எதிர்ப்பிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சிக்கு அறிவுரை இருக்கின்ற காரணத்தால், அந்த எதிர்ப்பை ஏற்றுக் கொள்கிறேன் நான்.

எடுத்துக்காட்டாக, நான் மதுரைக்குச் சென்றால் - திருச்சிக் குச் சென்றால் அன்றைய தினமலரில் ஒரு பக்கம் எனக்காக ஒதுக்கப் படும். (கைதட்டல்) நான் அங்கே வருகிறேன் என்ற விளம்பரத்திற் காக அல்ல! அந்த நகரத்திலே உள்ள குறைகளை எல்லாம் எனக்கு எடுத்துக் காட்டுவதற்காக வெளியிட்டிருப்பார்கள். (கைதட்டல்)

நான் திருச்சிக்குச் சென்றிருந்தேன். அங்கே உள்ள மாநகராட்சி மன்றத்தில் சில அதிகாரிகள் செய்த தவற்றினை தினமலர் எடுத்துக் காட்டியிருந்தது. உடனடியாக அவர் மீது - அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. இப்படி இந்தச் செய்தியை வெளியிட்டு விட்டார்களே என்று நான் சினம் கொள்ளவில்லை. மதுரைக்குச் சென்றிருந்தேன். அங்கே ஒரு அதிகாரியின் தவறை தினமலர் சுட்டிக்காட்டியிருந்தது. உடனடி யாக அன்றைக்கே அதற்காக விசாரணையை நடத்தி முறைப்படி - சட்டப்படி அவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் தினமலரின் ஆசிரியரும், நிறுவனருமாக இருந்த ராமசுப்பு அவர்கள் அந்த பத்திரிகையை எப்படி நடத்தினார் என்பது எனக்குத் தெரியும்.

அவருடைய வாழ்க்கைக் குறிப்பைப் படிக்கும்போது ஒரு நாள் ஒரு நிருபர் அவசர அவசரமாக அலுவலகத்திற்குள் நுழைந்து, தான் கொண்டுவந்த செய்தியை வெளியிட வேண்டு மென்று பரபரப்பு காட்டியிருக்கிறார். ''அது என்ன செய்தி?'' என்று நிறுவனர் ராமசுப்பு கேட்டிருக்கிறார். அதற்கு அந்த நிருபர், ''ஒரு பயங்கரமான கொலைச் செய்தி'' என்றார். ''இதற்கா, இவ்வளவு

அவசரம் காட்டுகிறாய்? இந்தக் கொலைச் செய்தியை வெளியிடுவதால், நாளைய தினம் இதைப் படிக்கின்ற மக்களுக்கு உடனடியாக என்ன பயன் விளையப் போகிறது; எனவே, இப்படிப்பட்ட செய்திகளில் எல்லாம் அவசரப்படாதீர்கள், பரபரப்பு காட்டாதீர்கள்; மக்களுக்குத் தேவையான பிரச்சினைகள், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள், அதிலே அரசு காட்டுகின்ற தாமதம், அதை எடுத்து விளக்குகின்ற அளவிற்கு செய்திகள் வெளியிட வேண்டும்; அதிலே அவசரம், ஆர்வம் காட்டுங்கள்'' என்று அவர் சொன்னதாக அவருடைய வாழ்க்கை குறிப்பு இருக்கிறது.

ராமசுப்பு அவர்களை நான் நன்றாக அறிவேன். அவர்கள் நேற்றைய தினம் நடைபெற்ற மதுரை தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் எந்த ஒரு ஆழ்ந்த கருத்துக்காக நாங்கள் எல்லாம் பணியாற்ற சூளுரை மேற்கொண்டோமோ, அவ்வழியில் நின்று அந்தக் காலத்திலேயே பணியாற்றியவர். தாழ்த்தப்பட்ட ஆதிதிரா விட மக்களை அரவணைத்து தன்னுடைய பொது வாழ்க்கையை நடத்தியவர். அவர்களோடு அமர்ந்து ஆலயங்களிலே சமபந்தி விருந்து அருந்தியவர். உடல் நலிவுற்றிருந்த நேரத்திலேகூட, ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் நடத்திய விழாவிற்கு மருத்துவர்களுடைய ஆணையை மீறிச் சென்று அதிலே கலந்து கொண்டவர் என்பதெல்லாம் அவருக்குரிய தனிச் சிறப்புக்களாகும்.

அவாகளுடைய அருமை மகன் நண்பர் இரா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் இன்று வெளியிட்டுள்ள இந்த நூலின் மேன்மை குறித்து எனக்கு முன்னால் பேசிய விழாத் தலைவர் அவர்களும் நூலைப் பெற்றுக் கொண்ட நீதியரசர் அவர்களும் மற்றும் பேராசிரியப் பெருமக்களும், நண்பர் நாகசாமி அவர்களும் தங்களுடைய அருமையான பாராட்டுக்களை எல்லாம் இங்கே வழங்கியிருக்கிறார்கள்.

இங்கே நாகசாமி அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். ''பழைய நாணயமாக இந்தப் பாண்டியனின் சின்னத்திலே புலிச்சின்னம் இருக்கிறது. முதலமைச்சர் எப்படியாவது மத்திய அரசை வலியுறுத்தி கப்பல் படையின் கொடியில் புலிச் சின்னத்தைப் பொறிக்கச் செய்ய வேண்டும்'' என்று என்னை வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். இருக்கின்ற வம்பு போதாதா? (பலத்த கைதட்டல்) ஏதோ நாகசாமிக்கு என்னை வம்பிலே இழுத்து மாட்டிவிட வேண்டுமென்று எண்ணம் இருப்பதாக அறிகிறேன். (பலத்த சிரிப்பு) ஆனால் அவர் வரலாற்று ரீதியாக அதை எடுத்துச் சொன்னார்.

வரலாற்றுக்கும் சூழ்நிலைகளுக்கும் வேறுபாடு புரியாத, மாறுபாடு புரியாத மக்கள் - ஆட்சிகள் - நாட்டிலே இருக்கிறது என்பது தெரிந்திருந்தும் கூட, அவருக்குரிய அந்த ஆசையின் காரணமாக இதனைச் செய்ய வேண்டுமென்று அவர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள்.

அது மாத்திரமல்ல, அவர் பேசும்போதும் நீதியரசர் மோகன் பேசும்போதும் என்னைப் பற்றி சில புகழுரைகளைச் சொன்னார்கள். நம்முடைய கிருஷ்ணமூர்த்தி அவர்களும் சொன்னார்கள். கலையிலே எனக்கு ஈடுபாடு உண்டு என்பது உண்மைதான் என்றாலும், நான் எல்லாவற்றையும் விமர்சிக்கக் கூடிய அளவிற்கு ஆற்றல் பெற்றவன் அல்ல. ஆர்வம் படைத்தவன். ஆனால் ஆற்றல் பெற்றவன் அல்ல. எல்லாம் எனக்குத் தெரியுமென்று சொல்லி, உங்கள் முன்னால் எதுவும் தெரியாதவனாக நிற்க நான் விரும்ப வில்லை. எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்கிற ஆசை மிக்குடைய நான் - ஆனால் எல்லாம் எனக்குத் தெரியும் என்கின்ற ஆணவம் எனக்கு என்றைக்கும் கிடையாது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில பேருக்கு சிலவற்றில்தான் ஆழ்ந்த பற்றும், அக்கறையும், ஆர்வமும், திறமையும் இருக்க முடியும். சிலவற்றைப் பற்றி

தெரிந்து வைத்திருக்க முடியும். இது அவரவர்களுக்கு உரியது என்று விட்டுவிட வேண்டும்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமேயானால் ஒரு கதை உண்டு. கிரேக்க தேசத்தில் ஒரு ஒப்பற்ற ஓவியன். அவன் தன்னுடைய ஓவியங்களைத் தீட்டி, வீட்டு வாசலிலே - தெருவிலே போவோர் வருவோர் எல்லாம் பார்த்துச் செல்லும் வண்ணம் - நாள்தோறும் வைப்பது வழக்கம். அப்படி ஒரு நாள் ஒரு ஓவியத்தைத் தீட்டி தன் வீட்டு வாசலிலே வைத்திருந்தான். வீதி வழியே ஒரு செருப்பு தைக்கின்ற தொழிலாளி போனான். போனவன் அந்த ஓவியத்தைப் பார்த்து நின்றான், ஓவியன் அவனைப் பார்த்து ''என்ன பார்க்கிறாய்'' என்று கேட்டான். ''ஒன்றுமில்லை, நன்றாகத்தான் ஓவியம் எழுதியிருக்கிறாய்; ஆனால் கால் செருப்பிலே, ஒரு செருப்பிற்கும் இன்னொரு செருப்பிற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்தாயா?'' என்று கேட்டான். ஓவியன் தவறைப் புரிந்து கொண்டு, ''மன்னிக்க வேண்டும், திருத்தி விடுகிறேன்'' என்று சொல்லி, உடனடியாக அதைத் திருத்தி விட்டான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அதே ஓவியன் ஒரு பெண்ணின் ஓவியத்தை எழுதி வைத்திருந்தான். அதே செருப்பு தைக்கிற தொழிலாளி அந்த வழியாக வந்தான். வந்தவன், அந்த ஓவியத்தைப் பார்த்து விட்டு நின்றான். ஓவியன் அவனைப் பார்த்து, ''என்ன இன்று பார்க்கிறாய்'' என்று கேட்டான். ''இல்லை, இந்தப் பெண்ணுக்கு நீ எழுதியிருக்கின்ற புருவம் சரியில்லை'' என்றான். ஓவியனுக்கு கோபம் வந்துவிட்டது. ''ஏய், நீ செருப்போடு நில்லு. (பலத்த சிரிப்பு) இதற்கெல்லாம் வராதே'' என்று கூறிவிட்டான்.

அது மாதிரி எனக்கு எல்லாம் தெரியுமென்று சொல்லி, கல்வெட்டைப் பற்றி எனக்குத் தெரியும், சங்க கால நாணயங்களைப் பற்றி எனக்குத் தெரியும், இலக்கியங்களைப் பற்றியெல்

லாம் எனக்குத் தெரியுமென்று சொல்லி, நான் அந்த ஓவியனுக்கு முன்னால் குட்டுப்பட்ட, அந்தத் தொழிலாளியாக மாற விரும்ப வில்லை என்பதையும் முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, எனக்கு எல்லாம் தெரியுமென்று என்னைப் புகழ வேண்டாமென்று நாகசாமியை - நீதியரசரை - அவரைப் போன்ற வர்களையெல்லாம் கேட்டுக் கொள்ளவும் நான் விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டினுடைய வரலாறு மன்னிக்க வேண்டும் - தமிழ்நாட்டிற்கென்றே ஒரு வரலாறே இல்லை. என்ன இப்படிச் சொல்கிறானே என்று கோபித்துக் கொள்ளக் கூடாது. நான் சொல்வதின் உண்மையான பொருள் - தமிழ்நாட்டிற்கென்று வரலாறே எழுதப்படவில்லை. தமிழ்நாட்டினுடைய வரலாறு எழுதப்படாததற்குக் காரணம், தமிழ் மன்னர்கள் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்தவர்கள், அந்த மன்னர்களைப் போற்றவும், புகழவும் பாடல்களை இயற்றினார்களே அல்லாமல், வரலாற்றை எழுத வேண்டுமென்று யாரும் எண்ணவில்லை. அதனால்தான் இந்திய நாட்டு வரலாற்றைப் பற்றி வின்சன்ட் ஸ்மித் சொல்லும் போது, இந்திய நாட்டு வரலாறு காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டும்; கங்கைக் கரையிலிருந்து எழுதப் பட்டது தவறு என்று குறிப்பிட்டார். அதனையே மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களும் எடுத்துச் சொன்னார்.

அதையேதான் பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணா மலைப் பல்கலைக் கழகத்திலே உரையாற்றும் போது ''ஆற்றோ ரம்'' என்ற தலைப்பிலே உரையாற்றி இந்திய நாட்டு வரலாறு காவிரிக் கரையிலிருந்து எழுதப்பட்டிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். அந்த ஆதங்கம் என்னுடைய உள்ளத்திலே நீண்ட நாட்களாக இருந்த காரணத்தினால், அறிஞர் அண்ணா அவர் களுக்குப் பிறகு நான் ஆட்சிப் பொறுப்பேற்ற போது, டாக்டர் மு.வ. போன்ற பெருமக்களையெல்லாம் அழைத்து, தமிழகத்தின் வரலாற்றை நீங்கள் அனைவரும் சேர்ந்து, ஆய்ந்து, சிந்தித்து, தொகுத்து எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

''தொல் பழங்காலம்'' என்ற அந்தக் காலத்திலேயிருந்து அந்த வரலாற்றை அவர்கள் எழுதுவதாக வாக்களித்து எழுதத் தொடங்கினார்கள். தொல் பழங்காலந்தொட்டு இது வரையிலே மூன்று நான்கு பாகங்கள் எழுதி முடிக்கப்பட்டிருக்கின்றன. எந்த வரலாற்றை தமிழகத்தில் எழுத முற்பட்டாலும், அதற்கு பழைய சுவடிகள் எதுவும் நமக்குத் துணையாக இல்லை. நமக்குத் துணை நிற்பதெல்லாம் இலக்கியச் சான்றுகள், இலக்கியப் பாடல்கள் - அகநானூறு, புறநானூறு, வேறுபல சங்ககால இலக்கியங்கள் இவைகளை வைத்துத்தான்.

இது இப்படியிருக்கக் கூடுமென்ற யூகத்திலேதான் வரலாற்றை உருவாக்க வேண்டிய சூழ்நிலை தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இருக்கின்றது. அந்தக் குறையைப் போக்குகின்ற அளவில் மேலும் நமக்குத் துணை நிற்கின்ற நிலையில்தான் கல்வெட்டுக்கள் இருக்கின்றன. அதைப்போல செப்புப் பட்டயங்கள் இருக்கின்றன. நம்முடைய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வெளியிட்டிருக்கின்ற நூலில் காணப்படுகின்ற சங்க காலத்து நாணயங்கள் இருக்கின்றன. இவைகளையெல்லாம் வைத்துத்தான், தமிழ் மன்னர்களுடைய வரலாற்றை, தமிழர்களுடைய வரலாற்றை - தமிழர்களுடைய நாகரிகத்தை, கலாச்சாரத்தை, பண்பாட்டை, தமிழர்களுக்கும் வெளிநாட்டு மக்களுக்கும் இருந்த வாணிபத் தொடர்பையெல்லாம் சொல்ல முடிகிறது.

1956-ஆம் ஆண்டில் திருச்சியில் நடைபெற்ற எங்கள் கட்சியின் மாநில மாநாட்டில் ''திராவிடத்தின் உலகத் தொடர்புகள்'' என்ற தலைப்பிலே என்னைப் பேசுமாறு அறிஞர் அண்ணா அவர்கள் பணித்திருந்தார்கள். அவர்கள் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதற்காக நான் - திராவிடத்தின் உலகத் தொடர்புகள் என்ற தலைப்பிலே பேசுவதற்காக பல நூல்களை எல்லாம் எடுத்துப் படித்தேன். அப்படி படித்த நேரத்தில் நம்முடைய உலகத் தொடர்புகளை இதுபோன்ற நாணயங்களின் மூலமாகவும்,

கல்வெட்டுக்களின் மூலமாகவும், அந்த நாடுகளிலே கிடைக்கின்ற ஆதாரங்களின் மூலமாகவும்தான் அறிந்து கொள்ள முடிந்தது. அந்தத் தலைப்பிலே இந்தச் செய்திகளையெல்லாம் அன்றைக்கு நான் எடுத்துச் சொன்னேன்.

குறிப்பாக நம்முடைய தமிழ்நாட்டு வரலாற்றை இன்றைக்கும் சுட்டிக் காட்டுகின்ற அளவிற்கு நம்முடைய நாணயங்கள் இருக்கின்றன. இந்த நாணயங்களை எல்லாம் கண்டுபிடிப்பதற்கு நம்முடைய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அரும்பாடுபட்டிருக்கிறார் என்பதை இந்த நூலைப் படிக்கும்போதும், அவர் இங்கே பேசிய அந்த உரையைக் கேட்கும்போதும் நம்மால் உணர முடிகின்றது.

அவர்கள் எப்படியெல்லாம் இந்த நாணயங்களைத் தேடிக் கண்டுபிடித்திருக்கிறார் என்பதை அவரே இப்படி குறிப்பிடுகிறார். அதுவும் தற்காலத்திலே - நாணயத்தைத் தேடுவது என்பது சாதாரணமான காரியமல்ல. நான் அவர் தேடிய நாணயத்தைத்தான் சொல்கிறேன். நீங்கள் எண்ணுகின்ற நாணயத்தை அல்ல (கை தட்டல்) அவரே கூறிய வாசகத்தைப் படிக்கும்போது அவர் எவ்வளவு இன்னல்களை இதற்காக ஏற்றுக் கொண்டார், எத்தகைய முயற்சிகளிலே ஈடுபட்டார் என்பது நமக்குத் தெளிவாகின்றது. அவர் சொல்கிறார்;

‘‘மதுரையில் ஒரு நாணயச் சேகரிப்பாளரிடமிருந்து சில நாணயங்கள் வாங்கினேன். அந்த நாணயத் தொகுப்பில் தமிழ்-பிராமி எழுத்துள்ள நாணயம் ஒன்று இருப்பதைக் கண்டேன். இந்த நாணயத்தைப் பார்த்தவுடன் பெருமகிழ்ச்சி அடைந்தேன். இருண்ட குகைக்குள் செல்ல ஏதோ ஒரு ஒளி விளக்குக் கிடைத்தது போல உணர்ந்தேன். பல்லாண்டுகளாக தொல் எழுத்து ஆய்வில் ஈடுபட்டிருந்ததால் இந்த நாணயத்தில் உள்ள எழுத்தை என்னால் படிக்க முடிந்தது. தமிழகத்தில் தமிழ் - பிராமி எழுத்தைப் படிக்கத் தெரிந்தவர்கள் வெகுசிலரே உள்ளனர். தமிழ்த்தாயின் அருளாலேயே இந்த நாணயம் என் கைக்குக் கிடைத்ததாக கருதுகிறேன்.

அழுக்கும் பாசியும் பிடித்திருந்த நாணயத்தை மதுரையில் வைத்தே தூய்மை செய்து பல மணி நேரம் எழுத்துக்களின் அமைப்பை உற்று உற்று நோக்கினேன். பிறகு சென்னைக்குத் திரும்பி உருப்பெருக்குக் கண்ணாடி கொண்டு (எவ்வளவு அழகான தமிழ்ச்சொல் - பூதக்கண்ணாடி என்பதற்குப் பதிலாக) பல மணிநேரம் எழுத்துக் களை வரிசைப்படுத்தி எழுதிப்பார்த்தேன். 'பெருவழுதி' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருந்ததை உறுதிப்படுத்திக் கொண்டேன்.''

இப்படி கிருஷ்ணமூர்த்தி அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட பெருவழுதி என்ற பெயர்தான் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆவான். இது சங்ககால பாண்டிய மன்னனைக் குறிப்பதாகும். அந்தப் பாண்டிய மன்னன் பெருவழுதி காலத்து நாணயம்தான் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கண்டுபிடித்த அந்த நாணயம் என்பதை எண்ணும்பொழுது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

ஒரேயொரு வருத்தம் எனக்கு உண்டு - இந்த மேடையில், அந்த அழுக்குப் படிந்த நாணயத்தை முதன் முதலாக இவருடைய கையிலே கொடுத்தவர் - மதுரையைச் சேர்ந்த ஒரு நண்பர். இங்கே மற்றவர்களுக்கெல்லாம் பெரிய வெள்ளித் தட்டுக் கொடுத்து விட்டு - அவருக்கு மாத்திரம் சின்ன வெள்ளித் தட்டை இந்த நிறுவனத்தின் சார்பில் வழங்கியபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒருவேளை உருப்பெருக்கும் கண்ணாடியால் (பலத்த கைதட்டல்) நாணயத்தைப் பார்த்த மாதிரி - இந்தச் சின்ன வெள்ளித் தட்டையும் அவர் பார்த்துக் கொள்ளட்டும் (பலத்த கைதட்டல்) என்பதற்காக கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு நகைச்சுவையாக அதனை அளித்திருப்பாரோ என்று நான் எண்ணுகிறேன்.

அதன் பிறகு பாயும் புலி உள்ள நாணயங்களையும் கண்டுபிடித்து, அவை சங்ககாலச் சோழர் நாணயங்கள் என்பதையும் கிருஷ்ணமூர்த்தி உணர்த்தியிருக்கிறார்.

தொடர்ந்து 86-ஆம் ஆண்டு கரூரிலிருந்து வில், அம்பு பொறிக்கப்பட்ட சங்கக் காலச் சேரர்களின் செப்பு நாணயங்களும்

இவரால்தான் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது தமிழ்நாட்டிலே உள்ள சில அறிஞர்கள் அல்லது வடபுலத்திலே உள்ள சில அறிஞர்கள் எல்லாம் தென்னகத்திலே குறிப்பாக தமிழகத்திலே இந்த நாணயங்கள் புழக்கத்திலே இல்லை என்கின்ற ஒரு தவறான கருத்தை வெளியிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் அந்தக் கருத்தை முறியடிக்கும் வகையில் இந்த நாணயங்களை எல்லாம் கண்டுபிடித்து வெளியிட்ட பெருமை நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களைச் சாரும் (கைதட்டல்) என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

நூறாண்டுகளுக்கு முன்பு ஆங்கிலேய அறிஞன் வால்டர் எலியட் என்பான் தமிழக நாணயவியல் துறைக்குச் செய்த பணி பாராட்டுக்குரிய பணி என்று அனைவரும் போற்றுவார்கள். அந்த வால்டர் எலியட், லண்டன் மாநகரிலிருந்து 1886-ஆம் ஆண்டில் ''தென்னிந்திய நாணயங்கள்'' என்னும் நூலை வெளியிட்டார். அந்தச் செய்தி நமக்கு எவ்வளவு செந்தேனாக இனிக்கிறதோ, அதைப் போலத்தான் இன்று கிருஷ்ணமூர்த்தி அவர்கள் வெளியிட்ட இந்த நூலும் நமக்குச் செந்தேனாக இனிக்கிறது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அது மாத்திரம் அல்ல. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய ஆற்றலால் தட்டச்சு இயந்திரத்திலே தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தும் போது உருவாகின்ற நடைமுறைச் சிக்கல்களை யெல்லாம் சீர்படுத்த முனைந்து வரிவடிவ சூத்திரத்தையும் அவர் கண்டுபிடித்திருக்கிறார். அதையே பயன்படுத்தி 'லைனோ - டைப்மெஷின்'' என்ற அச்சுக் கோப்பு முறையை அறிமுகப் படுத்தியவரும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்தான் என்பதை எண்ணும்பொழுது நான் அவரை மேலும்மேலும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கம்ப்யூட்டரிலே, கணிப்பொறியிலே தமிழ் வரிவடிங்களைப் பயன்படுத்துவதற்குரிய சூத்திரம் (பார்முலா) இல்லாத காரணத்தால், கணினியில் தமிழைப் பயன்படுத்த முடியாத சூழல் இருந்தது. அதற்குரிய தமிழ் வரி வடிவ சூத்திரத்தை கம்ப்யூட்டர் பொறியாளர் களின் தொழில் நுட்ப ஒருங்கிணைப்போடு கண்டுபிடித்துக் கொடுத்து மிகப்பெரிய சாதனை இவரால் நிகழ்த்தப்பட்டுள்ளது. இவருடைய கண்டுபிடிப்பு முறை - கிருஷ்ணமூர்த்தி டிசைன் - என்று அழைக்கப்படுகிறது ஒன்றே அதற்குப் பொருத்தமான ஒன்றாகும்.

அவரது இந்த நூல் அழகானது, அறிவுப்பூர்வமாக ஆய்வு செய்து அகழ்ந்தெடுத்து, நம்முடைய கரங்களிலே ஒப்படைக்கப் பட்டுள்ளது. தமிழர்களுடைய வரலாற்றுக்கு புதிய வரலாற்றைத் தொடங்குவதற்கு இந்தப் பழைய வரலாறு பயன்படும் என்ற என்னுடைய நம்பிக்கையைத் தெரிவித்து - வாழ்க கிருஷ்ணமூர்த்தி என்று வாழ்த்துகின்றேன்.

- முரசொலி 2.9.97

மதுரை தீண்டாமை ஒழிப்பு மாநாடு

மற்றவர்கள் எல்லாம் பேசும்போது, அரசியல் கட்சித் தலைவர்களே என்று சுருக்கமாக விளித்தார்கள். ஆனால் நான் மாநாட்டுத் தலைவர் என்பது மாத்திரமல்ல; இந்த மாநாடு நடத்த வேண்டுமென்று விரும்பி உங்களை எல்லாம் அழைத்தவன் என்பதால் ஒவ்வொருவராக விளித்து, அவர்களுக்கெல்லாம் வழங்க வேண்டிய நன்றியினையும் அவற்றோடு இணைத்து என்னுடைய உரையைத் தொடங்குகிறேன்.

இன்று காலையில் நடைபெற்ற மனிதச் சங்கிலி, மாலையில் தியாகச் செம்மல் கக்கன் அவர்களுடைய சிலை திறப்பு விழா, அதற்கிடையே மீனாட்சி அம்மன் கோவிலிலும், தேவாலயத்திலும், மசூதியிலும் நடைபெற்ற சமபந்தி விருந்துகள், அதனைத் தொடர்ந்து இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பெருமைக்குரிய இந்த மாநாடு, இவற்றை எல்லாம் சீருற, சிறப்புற, எழுச்சியுற, எழிலுற அமைத்திட வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவ்வாறே செயல்பட்டு முடித்துள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், செய்தித் துறை அமைச்சகத்துக்கும், அவர்களோடு ஒத்துழைத்த ஏனைய அலுவலர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் சிறப்பாக பல்வேறு அலுவல்கள் இருந்த போதிலும், அவரவர்களுடைய கட்சிகளுக்குரிய பல பணிகளில் ஈடுபட

வேண்டிய நெருக்கடியான நிலை இருந்தபோதிலும், அவற்றை யெல்லாம் விட இது பெரும் பணி, சிறப்பான பணி, செய்து முடிக்க வேண்டிய பணி, தொடர வேண்டிய பணி என்ற தூய உள்ளத்தோடு இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு சிரமம் பாராமல் வந்துள்ள கட்சிகளின் தலைவர்களையும் சமயச் சான்றோர்களையும் நான் மீண்டும் மீண்டும் வரவேற்று நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கு நடைபெற்றது ஒரு மாநாடு அல்ல; ஒரு கருத்தரங்கம் என்ற கருத்தினை முன்னால் பேசியவர்கள் எல்லாம் வெளி யிட்டார்கள்.

எனக்கே கூட, வந்து அமர்ந்ததிலிருந்து, நான் பேசுவேன் என்று அழைக்கப்படுகிற வரையில் என்ன பேசுவது என்று சிந்தனை செய்வதற்கே நேரமில்லாமலே போயிற்று. காரணம், சில மாநாடுகளில், சில கருத்தரங்குகளில், சில பேச்சரங்கங்களில் பேசுகின்ற நண்பர்கள் அல்லது தலைவர்கள், நம்மைப் போன்ற வர்கள் மேடையில் அமர்ந்து சிந்திப்பதற்கு நேரம் தருவார்கள். ஆனால் இங்கே பேசிய தலைவர்கள் யாரும் அந்த நேரத்தை எனக்குத் தரவில்லை. காரணம் அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையிலும் நான் ஒன்றிப் போனேன்; இணைந்தேன்; கலந்தேன்; கசிந்துருகினேன்.

ஐம்பதாண்டு காலமாகிறது; இந்தியத் திருநாட்டுக்கு சுதந்திரம் கிடைத்து; நாம் விடுதலைப் பெற்று ஐம்பதாண்டு காலத்திற்குப் பிறகும் நாம் நம்முடைய சமுதாய மக்கள் மற்றொரு சுதந்திரத்திற்காகப் போராட வேண்டிய சூழ்நிலை இருக்கிறதே, என்பதை எண்ணிப் பார்க்கும்போதும், அந்த சூழ்நிலையை எப்படி செப்பனிட்டு செயல்படுத்துவது, எவ்வாறு அவர்களுக்கு அந்த விடுதலையைப் பெற்றுத் தருவது? என்பதை எண்ணும் போதும், ஒரு பொறுப்பில் இருக்கிற என்னைப் போன்றவர்களுக்கு எவ்வளவு கவலையும் வேதனையும் இருக்கும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல திட்டங்கள், பல முறைகள், பல பணிகள், வேண்டு கோளாகவும் அன்புக் கட்டளையாகவும் எனக்கு இங்கே பிறப்பிக்கப்பட்டன. பேராசிரியர் பேசும்போதும் குறிப்பிட்டதைக் போல தத்துவங்களுக்கும் அவைகளை நடைமுறைப்படுத்துவதற் கும் இடையே உள்ள வேறுபாட்டை எண்ணிப்பார்க்கும்போது தான், நடைமுறைப்படுத்த வேண்டிய இடத்தில் இருக்கிற ஒரு அரசு எத்தனை எத்தனை சிக்கல்களுக்கு இடையே, பிரச்சினைகளுக்கு இடையே இந்தப் பணியை ஆற்ற வேண்டியிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது அனுபவ ரீதியாக!

இந்த ஒன்றரையாண்டு காலத்தில் தமிழ்நாட்டில் எத் தனையோ நலத் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி அது ஏழை, எளிய மக்களுக்கு வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களுக்கு, சாதாரண, சாமானிய மக்களுக்கு, அடக்கப்பட்ட மக்களுக்கு, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, நடுத்தர மக்களுக்கு, பாட்டாளி மக்க ளுக்கு, விவசாயிகளுக்கு சென்றடைய வேண்டுமென்று எண்ணு கிற நேரத்தில் சென்றடைய முடியாமல் ஏற்படுகிற இடர்ப்பாடுகள் எவை என்பதை இங்கே பேசிய தலைவர்கள் சில பேர் சுருக்கமாக, அதே நேரத்தில் மிகுந்த வேதனையோடு குறிப்பிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய இளையபெருமாள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். டிசம்பர் 6ஆம் தேதிக்குள் இதைச் செய்து முடிக்காவிட்டால் நான் என்ன ஆவேனோ தெரியாது என்று மிகுந்த உருக்கத்தோடு, உணர்ச்சியோடு குறிப்பிட்டார்கள். அதை நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டி, அவர் பொறுமை காட்ட வேண்டும் என்று சொன்னார்கள். இளைய பெருமாள் அவர்கள் குறிப்பிட்டது ஒவ்வொரு மாவட்டத்திலும், வட்டவாரியாக, அதாவது தாலுகா ரீதியாக நல்லிணக்கக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். அந்தக் குழுக்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களை, சட்டமன்ற உறுப்பினர்களை, நிர்வாகப் பொறுப்புகளில் மக்களுடைய பிரதிநிதிகள் இருந்தால் அவர்களை

உள்ளடக்கியதாக அந்தக் குழுக்கள் அமைந்திட வேண்டும். அந்தக் குழுக்கள் அந்தப் பகுதிகளில் அமைதியை உருவாக்கவும், அமைதி கெடக் கூடிய சூழ்நிலை ஏற்படுமானால் அதைத் தடுக்கக் கூடியதாக அமைந்திட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள்.

இந்தக் கருத்தை அவர்கள் என்னிடம் ஏற்கனவே சொல்லியிருக்கிறார்கள். நான் அதைப் பற்றி கலந்து பேசிக் கொண்டிருக்கிறேன். இது கலந்து பேசி காலம் கடந்து அறிவிக்க வேண்டிய ஒன்றல்ல என்பதை நான் நன்றாக அறிவேன். இப்போதே அறிவிக்கிறேன். டிசம்பர் 6ஆம் தேதி வரையில் இளையபெருமாள் காத்திருக்கவேண்டிய அவசியமில்லை. இளையபெருமாள் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குழு இன்னும் ஒரு வார காலத்தில் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படுவதற்கான ஆணை இந்த அரசின் சார்பில் இடப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றொன்று, இங்கே நாம் சமுதாய ரீதியாக உள்ள மாற்றங்கள், ஏற்பட வேண்டிய நிலைகள் இவைகளை எல்லாம் பேசிக் கொண்டிருக்கும் போதே வைக்கப்படுகிற கோரிக்கைகள் என்னென்ன என்பதையும், இன்றைக்கு சில பிரிவு மக்களிடத்தில் அதிலும் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில் ஏற்பட்டிருக்கின்ற அதிருப்திக்கு என்ன காரணம் என்பதையும் ஆராய்ந்து பார்த்தால், மிக முக்கியமாக இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீட்டில் ஏற்கனவே 16 சதவிகிதம் என்று இருந்ததை நான் 1969இல் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதம் என்று உயர்த்தினேன்.

பிறகு எண்பத்து ஒன்பதில் பொறுப்பேற்ற போது 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடி மக்களுக்கும் என்று இருந்ததை மேலும் ஒரு சதவிகிதம் அதிகமாக்கி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் என்றும், பழங்குடி மக்களுக்கு ஒரு சதவிகிதம் என்றும் 19 சதவிகிதம் இருபிரிவினருக்கும் என்று உயர்த்திய பிறகும்கூட அந்த சதவிகிதத்தின்படி, தாழ்த்தப்பட்ட

மக்களுக்கு வேலை வாய்ப்புகளில் உரிய இடம் கிடைக்கவில்லை என்கின்ற மன நிறைவற்ற தன்மை அவர்களை இன்றைக்கு உலுக்கிக் கொண்டிருக்கிறது.

அதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனால் அதற்கான காரணத்தை தயவு செய்து நாம் புரிந்து கொள்ள வேண்டும். காலியிடங்கள் நிரப்பப்படவில்லை என்பது தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், படித்தவர்கள், இவர்களிடம் எடுத்துச் சொல்லப் படுகிற வாதம். அதன் காரணமாக கிளர்ச்சிகள், போராட்டங்கள் - ஆர்ப்பாட்டங்கள்! நான் அவைகளையெல்லாம் தவறு என்று சொல்லமாட்டேன். அது எண்ணக் குமுறல். ஜனநாயக நாட்டில் எண்ணக் குமுறல்களுக்கு இடம் தர வேண்டும். அது நம்முடைய அடிகளார் குறிப்பிட்டதைப் போல வன்முறை விளிம்பை தொட்டு விடக் கூடாது. அந்த அளவிலே அந்த எண்ணக் குமுறல்களை மதிக்க வேண்டிய கடமை ஒரு ஜனநாயக அரசுக்கு உண்டு.

காலியிடங்கள் நிரப்பப்படவில்லை; பதினெட்டு அல்லது பத்தொன்பது சதவிகிதம் இடங்கள் இன்றைக்கு நிரப்பப்பட வில்லை என்று இருக்கின்ற அந்த குறைபாட்டை இந்த அரசு நன்றாக உணர்ந்து இருக்கிறது. அதற்காக நான் மாநாட்டில் ஒரு அறிவிப்பை செய்ய விரும்புகிறேன். அத்துடன் ஒரு விளக்கத்தை யும். சேர்த்து தெரிவிக்க விரும்புகிறேன்.

அரசு வேலைவாய்ப்புகளில் ஆதி திராவிடர்களுக்கு பதினெட்டு சதவிகிதமும், பழங்குடியினருக்கு ஒரு சதவிகிதமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங் களை நிரப்ப குறிப்பிட்ட கல்வித் தகுதி மற்றும் பயிற்சித் தகுதி உடையவர்கள் இல்லாத காரணத்தால் பல்வேறு அரசுத் துறைகளில் ஏராளமான பணியிடங்கள் நிரப்பப்படாமல், கடந்த காலங்களில் அவை காலியாகவே விடப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர்களுக்கு தேவையான கல்வித் தகுதியையும், பயிற்சித் தகுதியையும் வழங்குவதிலும் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கென உள்ள ஒதுக்கீட்டை முழுமையாக நிரப்பிட வேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறையுடைய இந்த அரசு நிரப்பப்படாமல் உள்ள காலியிடங்களை நிரப்ப சிறப்பு பணி அமர்த்தும் தீவிர முயற்சியை (ஸ்பெஷல் ரெக்ரூட்மெண்ட்ட்ரைவ்) மேற்கொண்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப கல்வி மற்றும் பயிற்சி தகுதி பெற்றோர் தேவையான எண்ணிக்கை இல்லை என்பதை அறிந்து விதிகளைத் தளர்வு செய்து இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பி.எட் பயிற்சி பெற்றவர்களையும் நியமனம் செய்துகொள்ள இப்பொழுது ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. அத்தோடு, தேவையான அளவுக்கு இடைநிலை பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்கிட 13 இடைநிலை ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் ஐந்து கோடி ரூபாய் செலவில் அண்மையிலே ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இப்படி ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங்களை முழுமையாக நிரப்பிட கழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. இந்த நிலையில் இதை கண்காணிக்க குழு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை ஒன்று எழுந்துள்ளது. அந்த கோரிக்கையை ஏற்பதில் திறந்த, வெளிப்படையான மனத்தோடு செயல்பட்டு வருகின்ற கழக அரசுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை.

ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள பணியிடங் கள் முறையாக நிரப்பப்படுவதை கண்காணிப்பதற்கும், கடந்த காலங்களில் நிரப்பப்படாமல் காலியாக உள்ள பணியிடங்களை ஒரு கால வரையறைக்குள் நிரப்புவதற்குரிய வழிவகைகளை காண்பதற்கும் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சரை கன்வீனராக, அமைப்பாளராக கொண்டு குழு ஒன்று உருவாக்கப்படும். அந்தக் குழுவில் சட்டமன்றப் பேரவையிலேயுள்ள கட்சிகளின் ஆதி திராவிட சமுதாயத்தைச் சேர்ந்தோர் இடம் பெறுவார்கள். அந்த

உறுப்பினர்கள் யார் யார் என்று பிறகு அறிவிக்கப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றொன்று, ஒரு கோரிக்கை என்ன? ஒரு அறிவுரையாக அருமை நண்பர் சங்கரய்யா இங்கே சொன்னார்கள். தீண்டாமைப் பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி மாநாட்டின் தொடக்கத்தில் என்னால் படிக்கப்பட்டு ஒவ்வொரு சொல் தொடராக நீங்களும் திரும்பச் சொல்லி நாம் அனைவரும் இந்த மாநாட்டிலே அந்த உறுதிமொழியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இது மாணவர்களுடைய மனதிலும் பதிய வேண்டு மென்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இன்று காலையிலே நான் கண்ட காட்சியிலிருந்து ஒரு நம்பிக்கை எனக்கேற்படுகிறது. காலையிலே நடைபெற்ற மனித சங்கிலியில் பெரும்பாலான மாணவ-மாணவியர் சற்றொப்ப பதிமூன்று கிலோமீட்டர் தொலைவிற்கு நின்றார்கள். கை கோத்து நின்றார்கள், கை கோத்து நிற்க முடியாமல் நெருங்கி நின்றார்கள். தோளோடு தோள் சேர்த்து நின்றார்கள். காரணம் இடமில்லாத காரணத்தால் அவர்கள் அனைவரும் கைகோத்து நின்றிருப்பார் களேயானால் இரண்டு அடுக்காக பல இடங்களில் நின்றார்கள். அப்படி இரண்டு அடுக்காக நில்லாமல் ஒரே வரிசையில் நின்றிருப்பார்களேயானால் மனித சங்கிலியின் நீளம் பதிமூன்று கிலோமீட்டர் தூரத்தோடு முடியாமல் 25 கிலோமீட்டர் நீளத்திற்கு இந்த மனித சங்கிலி என்று நாம் கணக்கிட்டிருக்க முடியும். அவ்வளவு எழுச்சி. பெரியவர்கள், பெண்டிர், மாணவ - மாணவியர், தொழிலாளர்கள், அலுவலர்கள் அத்தனை பேரும் இன்றைக்கு இருந்ததை என்னால் காண முடிந்தது. எனவே நான் நிச்சயமாக இந்த உறுதிமொழி மாணவர்கள் மனதில் பதியும் என்று நம்புகிறேன். ஓரளவு பதிந்திருக்கின்ற காரணத்தால்தான் இன் றைக்கு கைகோத்து நின்றார்கள். மனித சங்கிலியாக நின்றார்கள்.

மாநாடு மாத்திரமல்ல; ஒவ்வொரு மாவட்டத் தலைநகரத்தி லும் மனித சங்கிலியும் நடைபெற வேண்டும். இந்த மாநாடும் நடைபெற வேண்டும் என்று நான் விரும்புகிறேன். எனவே இங்கு எடுத்து வைக்கப்பட்ட தலைவர்களின் இந்த கோரிக்கை தொடர்ந்து நிறைவேற்றப்படும் என்பதையும் நான் இங்கே உங்கள் முன்னால் அறிவிக்கின்றேன்.

இந்த உறுதிமொழியை பள்ளிக்கூடங்களில் - கல்லூரிகளில் கூட வாரம் ஒரு முறையாவது ஆசிரியர்கள் ஒவ்வொரு வகுப்பறையிலும் படிக்க மாணவர்கள் திரும்பச் சொல்லி இந்த உறுதிமொழி வாரம்தோறும் எடுத்துக்கொள்ள வேண்டும். அதற்கான தாக்கீதுகளை நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பி வைப்பார் என்பதை யும் இந்த மாநாட்டில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சாதி ஒழிவதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இங்கே சொன்னார்கள். சங்கரய்யா மேலவளவு பற்றி குறிப்பிட்டார். அதைப்போல பல இடங்களில் தேனீர் கடையிலே இரண்டு கிளாஸ்கள் வைக்கப் படுவதும், சில இடங்களில் ஒரு கிளாஸ், இன்னொன்று கொட்டங் குச்சி என்று இருப்பதுமான நிலைமை பழைய காலத்திலே ஆரம்பமாகி இன்றைக்கு எல்லா இடங்களில் இல்லாவிட்டாலும் ஒருசில இடங்களில் இருக்கத்தான் செய்கின்றன.

நான் டாக்டர் அம்பேத்கர் அவர்களுடைய புத்தகம் ஒன்றை படித்தேன். அந்தப் புத்தகத்தினுடைய தலைப்பு அம்பேத்கருடைய எழுத்தும் - பேச்சும் என்பதாகும் ஆங்கிலப் புத்தகம் அது. அந்தப் புத்தகத்தின் ஐந்தாம் தொகுப்பில் 118ஆம் பக்கத்தில் அண்ணல் அம்பேத்கர் அவர்கள் ஒரு இணைப்பை வைத்து அந்தப் புத்தகத்தை தொடர்கிறார்.

அந்த இணைப்பு என்னவென்றால் ''சுவாமி ஆனந்த் தீர்த். அகில இந்திய அரிஜன சேவா சங்கத்தின் பிராந்திய அதிகாரி

அவர்'' அவர் தமிழ்நாட்டில் தன்னுடைய அனுபவம் குறித்து எழுதிய ஒரு டைரி அது. அது 9.3.1952ஆம் ஆண்டு 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையில் வெளியாகியிருக்கிறது. அப்படி வெளியான கட்டுரையை டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தன்னுடைய எழுத்தும் பேச்சும் என்ற புத்தகத்திலே இணைத்து வெளியிட்டிருக்கிறார்.

அதில் அவர் என்ன சொல்கிறார், 52ஆம் ஆண்டு அகில இந்திய சேவா சங்கத்தின் பிராந்திய அதிகாரி சுவாமி ஆனந்தத் தீர்த், மதுரை மாவட்டம் வருகிறார். இதே மேலவளவுக்கு செல்கிறார். அப்போது இங்கு சிலையாக திறந்து வைக்கப்பட்ட தியாகச் செம்மல் கக்கன் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர். 52ஆம் ஆண்டு ஆனந்தத் தீர்த் அந்தப் பகுதிக்கு வந்தபோது மேலவளவில் சங்கரய்யா அவர்கள் குறிப்பிட்டதைப் போல ஆதிதிராவிட தோழர்களுக்கு கொட்டங்கச்சியிலேதான் தேனீரோ, காப்பியோ கடையிலே விற்கப்பட்டது.

இதைப்பார்த்த சுவாமி ஆனந்த் தீர்த் அந்த கடைக்காரர் மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால் அன்றைக்கு அந்த வழக்கில் நீதிபதி விதித்த அபராத தொகை வெறும் பத்து ரூபாய்தான். அதை மிகுந்த ஆதங்கத்தோடு அங்கலாய்ப்போடு சுவாமி ஆனந்த்தீர்த் தன்னுடைய கட்டுரையில் குறிப்பிடுகின்றார். அதை அம்பேத்கர் எடுத்துக்காட்டுகிறார்.

மறுபடியும் இரண்டு சிறுவர்களை அழைத்துக் கொண்டு கீழவளவு என்ற பகுதிக்கு ஆனந்தீர்த் செல்கிறார். அதே 52ஆம் ஆண்டு; அந்த இரண்டு பேருக்கும் கொட்டங்கச்சியில் தேனீர் கொடுக்கக் கூடாது, கிளாசிலே கொடு என்று கேட்கிறார். அவர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். மறுத்தது மட்டுமல்லாமல் அவர்களை யும் அடித்ததோடு நிற்காமல் சுவாமி ஆனந்த் தீர்த் அவர்களையும் அடித்து உதைக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு வன்முறைச் செயல் அங்கே நடைபெற்றதை அவர் தன்னுடைய கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

எனவே 52ஆம் ஆண்டு முதல் சுதந்திரம் பெற்ற ஐந்தாவது ஆண்டிலே இந்த நிலைமை இருந்திருக்கிறது.

இன்றைக்கு அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும் கூட இடுகாடு, சுடுகாடு என்ற இடங்களில் சாதி, பேத உணர்வு, வேற்றுமை உணர்வு, தாழ்வு மனப்பான்மை, பிளவு மனப்பான்மை இவைகள் எல்லாம் கொடிகட்டிப் பறக்கின்ற காட்சியை நாம் காண்கின்றோம். எல்லோரும் ஒரே குரலில் சொன்னோம். நானும் சொல்கிறேன். இதிலே மனதளவில்தான் மாற்றம் வேண்டும்.

நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் ஆரம்பித்து தொடர்ந்து பேசிய அனைவரும் மனதளவில்தான் இந்த மாற்றம் ஏற்பட வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டிருக்கின்றோம். அதற்கு அம்பேத்கர் இந்த சாதி ஒழிப்புக்கு ஒரு வழி சொல்லியிருக்கிறார். ''சாதி ஒழிப்புக்கு உண்மையான வழி கலப்பு திருமணம்தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். ரத்த கலப்பின் மூலம்தான் உற்றார், உறவினர் என்ற உணர்வு ஏற்படும். இந்த உறவு, இந்த உணர்வு ஏற்பட்டு வலுவடைந்தாலன்றி சாதியினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமையுணர்வு ஒருவருக்கொருவர் அன்னியராக நினைப்பது மறையவே மறையாது. சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியை கரைக்க முடியாது.'' சமபந்தி போஜனமும் கலப்பு மணமும் சாதாரண நடைமுறையாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும். எனவே நாம் இன்றைக்கு சமபந்தி போஜனம் நடத்தினோமென்றால் அது அம்பேத்கர் அவர்களுடைய வழியில் அவர் சொன்ன அந்தக் கருத்தின்படி நடத்தியிருக்கின்றோம்.

சமபந்தி விருந்து நடத்திவிட்டோம். ஆனால் எத்தனை பேர் கலப்புத் திருமணத்திற்கு தயாராக இருக்கிறோம். ஆனவர்களை கேட்கவில்லை (திருமணம்) இன்னும் ஆகாதவர்களைக் கேட்கின் றேன். ஆனவர்கள் நான் தயார் என்று கையை உயர்த்திவிடா தீர்கள். நான் கேட்பதற்கு உரிமை படைத்தவன். நம்முடைய

பேராசிரியர் தீரன் அவர்களும், ஜனதா தளத்தின் தலைவர் வடிவேலு அவர்களும் இங்கே பேசும்போது குறிப்பிட்டார்கள். என்னுடைய குடும்பத்திலேயே பல கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்தவன் நான்; அதிலும் குறிப்பாக ஆதிதிராவிடப் பெண்ணை என்னுடைய மருமகளாக ஏற்றுக்கொண்டவன் நான். ஏற்றுக் கொண்டவன் மட்டும் அல்ல; நானே வரவழைத்து என்னுடைய மகனுக்கு கட்டி வைத்தவன். இன்றைக்கும் ஆதிதிராவிட பேரக் குழந்தையை, பேத்திக் குழந்தையை எடுத்து கொஞ்சுகின்றேன்; முத்தமிடுகின்றேன். ஒரு பெண்ணை எடுத்தது மாத்திரமல்ல; என்னுடைய வீட்டுப் பெண்ணை, என்னுடைய பேத்தியை ஒரு தலித் (சொன்னால்தான் உங்களுக்குப் புரியும்) ஆதிதிராவிடர்க்கு கலப்புத் திருமணம் செய்து வைத்ததும் நான்தான். எனவே அந்த உரிமையோடு கூடத்தான் நான் சொல்லுகின்றேன். கலப்புத் திருமணம் சாதியை ஒழிப்பதற்கு பெரும் கருவியாக பயன்படுமென்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

அந்த கலப்புத் திருமணத்தை ஊக்கப்படுத்துகின்ற வகையில் ஒரு அறிவிப்பை அரசின் சார்பாக இங்கே செய்ய விரும்புகிறேன்.

கலப்பு திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகளுக்கு ஏற்கனவே அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண உதவித் திட்டமாக 5 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு பிறகு 10 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

சுதந்திர பொன்விழா ஆண்டையொட்டி நான் ஒரு அறிவிப்பு செய்கிறேன். இப்பொழுது தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடைபெறும் இந்த நேரத்தில் சாதியற்ற சமுதாயம் அமைந்திட வேண்டும் என்ற நோக்கத்தில் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருள் மணமகனோ அல்லது மணமகளோ இருவரில் ஒருவர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தால் அந்தத் தம்பதி யருக்கு 20 ஆயிரம் ரூபாய்

நிதி வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வெறும் கலப்புத் திருமணம் மட்டும் போதாது? அதற்கு 10 ஆயிரம் ரூபாய்தான். ஏழைப் பெண்கள் எட்டாவது வரை படித்திருந்தால் அவர்களுடைய வருமான வரம்பை மையமாக வைத்து அவர் களுக்கு இப்பொழுது 10 ஆயிரம் ரூபாய் திருமண உதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

இந்த 97, 98 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு மாத்திரம் 46 ஆயிரம் பெண்களுக்கு 46 கோடி ரூபாய் இதற்காக வழங்கப்பட்டு வருகிறது. இஃதன்னியில் கலப்புத் திருமணம் என்றால், அதிலே மணமகன் ஆதிதிராவிடராக இருக்க வேண்டும் அல்லது மணமகள் ஆதிதிராவிடராக இருக்க வேண்டும். இருவரில் ஒருவர் ஆதி திராவிடராக இருந்து நடைபெறும் திருமணத்திற்கு 20 ஆயிரம் ரூபாய் அரசின் நிதியாக வழங்கப்படும் என்பதை இந்த மாநாட்டில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே இந்த மாநாடு எல்லா வகையிலும் ஒரு உணர்வை நம்மிடையே எழுப்ப உதவியிருக்கின்ற மாநாடாகும். இந்த மாநாட்டின் மூலமாக மதுரை தருகின்ற இந்தச் செய்தியின் வாயிலாக மாநிலமுழுவதும் ''தீண்டாமை ஒழிப்போம்'' என்கின்ற அந்த குரல் ஒலிக்குமென்று எதிர்ப்பார்க்கின்றேன். இருந்தாலும் கூட மாவட்டத் தலைநகரங்களில் அடுத்து கோவை, நெல்லை, திருச்சி இவ்வாறாக பல மாவட்டத் தலைநகரங்களில் மனித சங்கிலிகளும் சமபந்தி விருந்துகளும் தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளுகம் நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகளை இந்தப் பொன்விழா ஆண்டில் அரசு செய்திடும் என்பதை தெரிவித்துக் கொண்டு இந்த மாநாட்டின் வெற்றி உண்மையிலேயே தீண்டாமை ஒழிவதிலேதான் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி என்னுடைய உரையை நிறைவு செய்கின்றேன்.

- முரசொலி 1.9.97

டாக்டர் ராதாகிருஷ்ணன்
விருது வழங்கு விழா

வள்ளுவர் கோட்டத்திற்கு இதைக் கட்டி முடித்து பதிமூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 89ஆம் ஆண்டு நான் வந்தேன். பின்னர் இரண்டாண்டு காலத்தில் சில பல நேரங்களில் இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அதற்குப் பிறகு சற்றொப்ப ஏழாண்டு காலத்திற்குப் பின்னர், இன்றைக்கு வள்ளுவர் கோட்டத்திலே உங்களையெல்லாம் காணுகின்ற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

இந்த ஏழாண்டுக்குப் பிறகு இப்பொழுது வள்ளுவர் கோட்டம் உண்மையிலேயே வள்ளுவர் கோட்டமாக மாற்றப் பட்டிருக்கின்றது. இடையிலே - நான் வேதனையோடு சொல்லிக் கொள்வேன். வள்ளுவர் யாத்த முப்பாலில் மூன்றாவது பால்தான் வள்ளுவர் கோட்டத்திலே கடந்த ஆட்சியிலே நடைமுறைப் படுத்தப்பட்டது என்பதை - நானல்ல - நடுநிலை வார ஏடுகள் ஆதாரப்பூர்வமான புகைப்படங்களோடு வெளியிட்டதை நீங்கள் பார்த்து கண்கலங்கியிருக்கிறீர்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

இன்றைக்கு புதிய எழுச்சியோடும் புத்தொளியோடும் வருகை தந்து என்னெதிரே வீற்றிருக்கின்ற உங்களையெல்லாம் காணும்போது நான் மிகுந்த உற்சாகம் பெறுகிறேன். ஊக்கம் பெறுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன்; பெருமிதம் கொள்கிறேன்.

இங்கே டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுடைய பிறந்த நாள், ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகின்ற நாளில் இந்தியத் திருநாடு முழுமையும் ஆசிரியப் பெருமக்கள் கூடி அந்த நல்லவரின் பெயர் போற்றி - அந்த வல்லவரின் திறன் வாழ்த்தி, அதைப்போல எதிர்கால இளைஞர்களையெல்லாம் நல்லவர் களாக, வல்லவர்களாக ஆக்க வேண்டுமென்று சூளுரை மேற் கொள்கின்ற நாளாக இந்த நாளை கருதியிருக்கிறார்கள்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் தன் உரையிலே குறிப்பிட் டதைப் போல டெல்லிப் பட்டணத்திலே ஆசிரியர்கள் தேசிய விருது பெறுகிறார்கள், இந்த நாளில்! இந்த நாளில் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது என்கிற ஒரு விருது கடந்த ஆண்டு வரையிலே அந்தப் பெயரிலே வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு விருது வழங்கப்பட்ட விழாவிலே - மேடையிலே அமர்ந்திருக்கும்போது எனக்கொரு சிந்தனை.

இவ்வளவு பேர் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இவர்களில் சிலர்தான் நல்லாசிரியர்கள் என்றால் மற்றவர்கள் யார்? நல்லாசிரியர்கள் அல்லவா? என்ற கேள்வி எழும். அது ஆசிரியர் சமுதாயத்தைத் புண்படுத்துகின்ற நிலையை உருவாக்குகின்றது. எனவே இந்த விருதுக்கு நல்லாசிரியர் விருது என்று பெயர் வேண்டாம். டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களின் பிறந்த நாளில் அளிக்கப்படுகின்ற காரணத்தால், டாக்டர் ராதா கிருஷ்ணன் விருது என்ற பெயரே இருக்கட்டுமென்று அறிவித்தேன். (கைதட்டல்)

அந்த அறிவிப்பு எல்லா ஏடுகளிலும் வெளிவந்தது. ஆசிரியப் பெருமக்கள் அதைப் பாராட்டியிருக்கிறீர்கள். இன் றைக்கு இந்த விழாவிலேகூட ராதாகிருஷ்ணன் விருது வழங்கப் படுமென்றுதான் அழைப்பிதழிலே அச்சடிக்கப்பபட்டிருக்கின்றது. ஆனால் இன்று காலையிலே கூட சில பத்திரிகைகளைப் பார்த்தால், நல்லாசிரியர் விருது வழங்கப்படும் என்றுதான் செய்தி வெளி யிட்டிருக்கிறார்கள். பத்திரிகைகள் என்ன? ''சன் டி.வி''யிலே

(பலத்த சிரிப்பு) இன்றைக்கு பிற்பகல் ஒன்றரை மணி அளவில் நான் செய்திகேட்டபோது ராதாகிருஷ்ணன் விருது என்றே அவர்கள் சொல்லவில்லை. நல்லாசிரியர் விருது என்றுதான் சொன்னார்கள். அந்தச் செய்தி எனக்கு உள்ளபடியே மிகுந்த வெறுப்பையும் கசப்பையும் ஏற்படுத்தியது.

ஒன்று புழக்கத்திற்கு வர வேண்டும், மனதிலே பதிய வேண்டும் என்று எண்ணிச் செயல்படும்போது ஏற்கெனவே ஏற்றுக்கொண்ட ஒன்றைத்தான் மீண்டும் மீண்டும் சொல்வோம். பதிய வைத்துக் கொள்வோம் என்ற நிலை கூடாது.

உதாரணமாக அண்ணா அவர்கள் மறைந்த பிறகு ''மவுண்ட் ரோட்'' என்ற சாலைக்கு ''அண்ணா சாலை'' என்று பெயர் வைத்தேன். இப்போதுகூட உங்களில் பலர்கூட ''மவுண்ட் ரோட்'' என்றுதான் சொல்வீர்கள். ஏன், எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த வர்கள்கூட சிலர் என்னிடத்திலே வரும்போது 'எங்கேயிருந்து வருகிறீர்கள்' என்று கேட்டால் 'மவுண்ட் ரோட்டிலிருந்து வருகி றேன் என்பார்கள். நான் திருத்தி ''இல்லையில்லை'', ''அண்ணா சாலை'' என்பேன். ''ஆமாம்'' என்பார்கள்.

இன்னமும் ''மெட்ராஸ்'' என்றே சொல்லிப் பழக்கப்பட்ட வர்கள் ''சென்னை'' என்று சொல்ல தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளவில்லை. ஆனால், வெளிநாட்டிலிருந்து வருகிறார்களே, அவர்கள் சென்னை என்றே உச்சரிக்கின்றார்கள். ஜப்பான் நாட்டி லிருந்து, கொரிய நாட்டிலிருந்து, அமெரிக்க நாட்டிலிருந்தெல்லாம் தொழிற் சாலைகள் இன்றைக்கு தமிழ்நாட்டிற்கு வந்துகொண்டிருக் கின்றன. அந்தத் தொழிலதிபர்கள் என்னைச் சந்தித்து என்னிடத் திலே பேசும்போதும், அந்தத் தொழிற்சாலையிலே பணிபுரிகின்ற மேலாளர்கள், மற்ற அலுவலாளர்கள் வெளிநாட்டுக்காரர்களாகிய அவர்கள் என்னையோ மற்ற அமைச்சர்களையோ சந்தித்துப் பேசும்போதும் ''சென்னை'' என்றுதான் சொல்கிறார்கள்.

அவர்களுக்கு இருக்கின்ற அந்தப் பற்று தமிழர்களுக்கு எப்போது வரப் போகிறது என்ற வேதனையோடு அவர்கள் சென்னை என்று உச்சரிக்கும்போது மகிழ்ச்சியடைந்தாலுங்கூட, இந்த உணர்வு தமிழர்களுக்கும் வந்தாக வேண்டுமே என்ற அந்தக் கவலையோடு அந்த மகிழ்ச்சியை நான் அனுபவித்துக் கொண்டி ருக்கிறேன்.

ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராக இருந்து தன்னு டைய அறிவுத்திறனால், ஆற்றலால் உயர்ந்து, உயர்ந்து, உயர்ந்து இந்தியாவின் குடியரசு துணைத்தலைவராக, பின்னர் இந்தியாவின் குடியரசுத் தலைவராக பொறுப்பேற்றார்கள். பொதுவாக ஆசிரியர் கள் என்றால், அவர்கள் ஏணிகளாகப் பயன்படக் கூடியவர்கள் என்று சொல்வது வழக்கம். ஏணிகளாக மாத்திரமல்ல, கோபுரத்தின் சிகரங்களாகவும், கலசங்களாகவும் அவர்கள் ஆகக்கூடும் என்ப தற்கு எடுத்துக்காட்டுத்தான் டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்கள் ஆவார்கள். அவர்கள் ஏணியாக இருந்து பல மாணவர்களை ஊக்கப்படுத்தினார்கள், ஏற்றிவிட்டார்கள்; பிறகு அந்த ஏணியே கலசமாக மாறி, இந்தியத் திருநாட்டின் கோபுரக் கலசமாக ஒளி விட்டதையும் நாமெல்லாம் அறிவோம்.

என்னுடைய அமைச்சரவையிலேகூட - மன்னிக்கவும் - உங் களுடைய அமைச்சரவையிலேகூட எத்தனை பேர் ஆசிரியர்கள் நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற நேரத்தில் நியமிக்கப்பட்டார் கள் என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

பேராசிரியர், கல்வி அமைச்சர்; முனைவர் தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழித்துறை அமைச்சர்; டாக்டர் பொன்முடி போக்குவரத்துத்துறை, நெடுஞ்சாலைத்துறை அமைச்சர்; மறைந்த தங்கப்பாண்டியன், வணிக வரித்துறை அமைச்சர்; முல்லை வேந்தன், ஆசிரியர், செய்தித்துறை அமைச்சர்; சமயநல்லூர் செல்வராஜ், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்; புலவர் செங்குட்டுவன் கால்நடைத் துறை அமைச்சர். இப்படி ஏழு

ஆசிரியர்கள் இந்த அமைச்சரவையிலே இடம் பெற்றார்கள் என்பதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள் என்று கருதுகிறேன். இதுவரை யாரும் அந்தக் கணக்கைப் போட்டுப் பார்த்து, அதற்காக ஒரு பாராட்டுக்கூட நீங்கள் சொல்லாத காரணத்தால் (பலத்த சிரிப்பு) உங்களுடைய கவனத்திற்கேகூட இது வரவில்லை என்று நான் கருதுகிறேன்.

ஆசிரியர் சமுதாயத்தை நம்பித்தான் நாடு இருக்கின்றது. சமுதாயம் இருக்கின்றது. ஏன் ஒரு நாட்டினுடைய எதிர்காலமே இருக்கின்றது. அதனால்தான் ஆசிரியர்கள் மனம் வேதனைப்படாமல் அவர்கள் விரும்புகின்றவற்றை ஏற்றுக்கொண்டு செய்கின்ற அரசாக ஒரு அரசு இருக்க வேண்டுமென்ற வகையில் இந்த அரசு நடைபோட்டு வருவதை நீங்கள் எல்லாம் மிக நன்றாக உணர்வீர்கள். இப்பொழுது கூட சில இடங்களிலிருந்து சில குரல்கள் வந்தது - உங்களுக்குத் தெரியும். நீங்கள் கூட அதைப்பற்றி கொஞ்சம் அச்சத்தோடு இருக்கிறீர்கள் என்பதும் எனக்குப் புரியும்.

ஊராட்சி மன்றங்களுக்கு, ஒன்றியங்களுக்கெல்லாம் நிரம்ப அதிகாரங்களைத் தர வேண்டுமென்பதற்காக - அதைப்பற்றி ஆய்வு செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. சில ஆசிரியப் பெருமக்கள், சில ஆசிரியச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் கடிதம் மூலமாகவும், நேரிலும் என்னோடு தொடர்பு கொண்டு - என்ன, மீண்டும் எங்களையெல்லாம் ஒன்றியத்திலே கொண்டு போய் இணைத்து விடுவீர்களா என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், உங்களை ஊராட்சி ஒன்றியத்தோடு இணைக்க வேண்டும் என்ற ஒரு முயற்சி நடைபெற்றுக் கொண்டிருப்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

நான் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். என்ன திருத்தம் வந்தாலும் - என்ன அதிகார மாற்றங்கள், ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஊராட்சி மன்றத்திற்கும் அல்லது மாவட்ட ஊராட்சிக்கும் புதிதாக அமையவிருக்கின்ற குழுவினால் வந்தாலும்கூட நீங்கள்

ஏற்கெனவே பெற்ற உரிமையை நிச்சயமாக இழக்க மாட்டீர்கள் என்பதை மிக உறுதியாக உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர் சமுதாயத்தை எதிர்காலத்தின் புரட்சி மலர்களாக, புதிய மணமிக்க மலர்களாக, இந்த நாட்டைக் காக்கும் காவலர் களாக - பொறுப்புள்ளவர்களாக ஆக்க வேண்டிய பெரும் கட மையை ஏற்றிருக்கின்ற உங்களுக்கு - எனக்கு முன்னால் இங்கே பேசிய அமைச்சர் பெருமக்களும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் எடுத்துக் காட்டியதைப் போல, எல்லாவிதமான உதவிகளையும், உரிமைகளையும், நன்மைகளையும் தயங்காமல், தட்டாமல் இந்த அரசு நிறைவேற்றி வந்திருக்கின்றது.

குறிப்பாக அரசு அலுவலர்களோடு இணைந்துள்ள ஆசிரி யர் சமுதாயத்தை - அரசு அலுவலர்களுக்கு என்னென்ன உரிமைகள், வாய்ப்புகள் அளிக்கப்படுகிறதோ, அதிலே எள்ளள வும் வேறுபாடில்லாமல் உங்களுக்கும் அளிக்கப்படுகின்றது என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். அந்தக் கருத்திலே என்றைக்கும் மாற்றம் வராது என்பதையும் தெரிவித்துக் கொள்கி றேன். வரவிருக்கின்ற மத்திய அரசின் ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமலுக்கு வருகின்ற நேரத்திலே கூட, அதற்கேற்ப மாநில அரசு செயல்படுகின்ற நேரத்திலே கூட ஆசிரியப் பெரு மக்களை நாங்கள் மறந்து விடமாட்டோம்.

இந்தியாவில் கல்வி கற்றோருடைய மொத்த விழுக்காடு 52.11; அதில் தமிழகத்திலே கல்வி கற்றோருடைய விழுக்காடு 63.72 விழுக்காடாகும். இது மன நிறைவைத் தரக்கூடியதல்ல. இது தோற்றத்திலே மகிழ்ச்சி தந்தாலும்கூட முழுமையான மன நிறை வைத் தரக் கூடியதல்ல. ஏனென்றால் இதைப்பற்றி கணிக்கின்றவர் கள் - பெருகிக் கொண்டு போகின்ற மக்கள் பெருக்கத்தை எண்ணிப் பார்த்து, அதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு பார்க்கும்போது இரண்டாயிரமாவது ஆண்டில் இந்தக் கணக்கு மாறி, இந்த விழுக்காடு தமிழகத்திலே ஐம்பது சதவிகிதமாக ஆகக் கூடும் என்ற

கவலையைத் தெரிவித்திருக்கின்றார்கள். மக்கள் பெருக்கம் அந்த அளவிற்கு வேகத்திலே போய்க் கொண்டிருக்கின்றது.

என்னதான், தமிழ்நாடு இந்தியாவிலேயே, குடும்ப நலத் திட்டத்திலே முன் வரிசையிலே இருக்கிறது என்று சொன்னாலுங் கூட, கட்டுக்கடங்காத அளவிற்கு மக்கள் பெருக்கம் இன்றைக்கு பெருகிக் கொண்டேயிருக்குமானால், எல்லோருக்கும் கல்வி கொடுப்பது என்பது இயலாத ஒன்றாக ஒரு அரசுக்கு ஆகிவிடும். எத்தனையோ மடங்கு கல்வித் துறையிலே இன்றைக்கு நாம் அதிகமாகச் செலவிட்டுக் கொண்டிருக்கிறோம். அந்த முழுப்பயன் களும் மாணவச் செல்வங்களுக்குப் போய்ச் சேருவதற்கு ஏற்ற கருவியாக இருக்கின்றவர்கள் என் எதிரிலே அமர்ந்திருக்கின்ற ஆசிரியப் பெருமக்களாகிய நீங்கள்தான் என்பதை நான் என்றைக்கும் மறக்கமாட்டேன். அந்தக் கடமை உணர்வை நீங்களும் மறக்கக் கூடாது என்பதை இங்கே தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

கல்வி சமூக மாற்றத்திற்கு ஒரு கருவி என்ற வகையிலேதான் (Education is a tool for social change) ஒரு மேல்நாட்டு அறிஞன் குறிப்பிட்டான்.

இதே கருத்தைத்தான் வள்ளுவப் பெருந்தகை.

"அறிவு அற்றம் காக்கும் கருவி செருவார்க்கும்
உள்ளழிக்கல் ஆகா அரண்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மக்கள் கல்வி வாய்ப்புகளை உரிய முறையில் பெற இயலாத சூழ்நிலை நிலவியது உண்மை. ஆனால், அந்தக் கல்வி வாய்ப்புக்களை பெற்றிருந்த வர்கள் கல்லாதவர்களை அடக்கி ஒடுக்கி தங்கள் ஆதிக்கத்திற்கு கொண்டு வந்த வரலாறும் உண்மை. அந்தக் காலக் கட்டத்திலே தான் - தமிழகத்தைப் பொறுத்தவரை 1916ஆம் ஆண்டுவாக்கில்

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றம் கொண்டது. அந்தத் தோற்றத்திற்குப் பிறகுதான் எல்லோருக்கும் கல்வி வாய்ப்பு வேண்டும்; வேலைவாய்ப்பு வேண்டும் என்ற உரிமைக் குரல் விண் முட்ட எழுந்தது. அந்த உரிமைக் குரல்களின் முன்னோடிகளாக இருந்த திராவிட இயக்கத்தின் தலைவர்களை யாரும் மறந்து விட முடியாது. அவர்களுடைய உழைப்பின் வடிவம்தான் என் எதிரே அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான ஆசிரியப் பெருமக்கள் என்று சொன்னால் அதை யாரும் மறைக்கவும் முடியாது; மறுக்கவும் முடியாது.

அந்த இயக்கத்தின் தோன்றலாக இருக்கின்ற அரசுதான் இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கழக அரசு என்பதை நீங்கள் மறந்து விட மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன்.

கோத்தாரிக் கல்விக் குழு ஒரு கருத்தைச் சொன்னது. ''இந்திய நாட்டின் எதிர்காலம் வகுப்பறைகளிலே தீர்மானிக்கப் படுகிறது.'' என்று! தந்தை பெரியார் அவர்கள் உங்களைப்பற்றி ஒரு கருத்தைச் சொன்னார் - ''நாடு மக்களால் உருப்படுகிறது; மக்கள் ஆசிரியர்களால் உருப்படுகிறார்கள்'' என்று தந்தை பெரியார் சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்கள், ''ஆசிரியர் கள் இன்று ஏங்கினால் நாளைக்கு நாடு ஏங்கும்'' என்று சொன்னார் கள். இவர்கள் வழிநின்றுதான் இன்றைக்கு நானும், கல்வி அமைச்சர் பேராசிரியர் அவர்களும் உங்களுக்காக தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றோம்; பணி புரிந்து கொண்டிருக்கின்றோம்.

உங்களுடைய தேவை எந்த அளவிற்கு இந்த அரசினால் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையெல்லாம் கருதிப் பார்த்துத்தான் இடைநிலை ஆசிரியர்களாக தேர்வு செய்வதிலே கூட, நியமிக்கப்படுவதிலேகூட, இருந்த தொல்லைகளை எல்லாம் - நீங்கள் உங்கள் சங்கங்களின் சார்பாக எங்களுக்கு எடுத்துரைத்த நேரத்தில் வேலை வாய்ப்பு அலுவலகங்களிலே பதிவு பெற்றவர் களின் முன்னுரிமை அடிப்படையிலேதான் இடைநிலை ஆசிரியர்

கள் நியமனம் என்கிற கொள்கையை அழுத்தந்திருத்தமாக கடைப் பிடித்து, ஏற்கெனவே இருந்த ஊழல் முறைக்கு பிரயாணச் சீட்டுக் கொடுத்து அனுப்பி விட்டு இன்றைக்கு நீங்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகின்ற அளவுக்கு கிட்டத்தட்ட முதற்கட்டமாக சென்ற ஆண்டு 13,140 இடைநிலை ஆசிரியர் பணி உங்கள் வீட்டின் கதவைத் தட்டி உங்களுக்கு வழங்கப்பட்டது என்பதை நீங்கள் மறந்து விட மாட்டீர்கள்.

அதைப்போல இந்த ஆண்டிலும், அதே முறையில் வேலை வாய்ப்பு அலுவலக பதிவு முன்னுரிமைப்படி 10,384 இடைநிலை ஆசிரியர் பணிகள் இன்றைக்கு வழங்கப்பட்டு வருகின்றன. ஐந்தாண்டுக் கால ஆட்சியில் - கடந்த காலத்தை நினைவூட்ட நான் விரும்பவில்லை - இருந்தாலும் வரலாற்றை நாம் மறந்துவிடக் கூடாது. உங்களில் பலபேர் வரலாற்றைப் போதிக்கின்ற ஆசிரி யர்கள் இருக்கிறீர்கள். எனவே, பழைய சரித்திரங்களை மறந்து விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

கடந்த ஐந்தாண்டுக் கால ஆட்சியில் - ஐந்தாண்டு முடிவடை கின்ற நேரத்தில் - 8,450 இடைநிலை ஆசிரியர்களுக்கு மாத்திரம் தான் வேலை தரப்பட்டது. அதுவும் வேலைவாய்ப்பு அலுவலகத் திலே பதிவு செய்து கொண்ட முன்னுரிமை அடிப்படையிலே அல்ல. அது வேறு முன்னுரிமையின்படி. (பலத்த சிரிப்பு) அது என்ன முன்னுரிமை என்று நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால், 96,97இல் எந்தவிதமான குற்றச்சாட்டுக்களுக்கும் இடம் இல்லாமல் 23,524 இடைநிலை ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் பெருமிதத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்வேன்.

அது மாத்திரமல்ல; காலியாக இருந்த பட்டதாரி, முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணி இடங்கள் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு

வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் எல்லாம் பணியிலே அமர்த்தப்பட்டுள்ளார்கள். முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரை கடந்த ஆண்டில் 686 ஆசிரியர் கள் நியமனம் செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டு 821 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட, பணிகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. அதே போல பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் கடந்த ஆண்டில் 629 பட்டதாரி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டார்கள். இந்த ஆண்டில் 600 பட்டதாரி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படு கிறார்கள்.

அதைப் போலவே தலைமை ஆசிரியர் பணிகள் - இந்தப் புதிய ஆசிரியர் நியமனங்கள் மாத்திரமல்லாமல் முந்தைய ஆட்சிக் காலத்தில் பல ஆண்டுகளாக தலைமை ஆசிரியர் பணி இடங்கள் நிரப்பப்படாமலே இருந்தன. ஆனால், பல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் - இதன் காரணமாக நிர்வாகச் சீர்கேடு களுக்கு உள்ளாகி விடுவதைக் கண்ட இந்த அரசு - நம்முடைய கல்வித் துறை வாயிலாக செய்த பெரும் கடமையாக - உயர்நிலைப் பள்ளிகளிலே 192 தலைமை ஆசிரியர்களையும், மேல்நிலைப் பள்ளிகளிலே 428 தலைமை ஆசிரியர்களையும் நியமனம் செய்து ஆணையிட்டது. இந்த நடப்பு ஆண்டிலும் கூட 231 உயர்நிலைப் பள்ளிகளுக்கும், 225 மேல்நிலைப் பள்ளிகளுக்கும் தலைமை ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்று; கடந்த ஆட்சியில் ஆசிரியர்களுக்கு மாறுதல் வழங்கிய விதத்தில் - அப்பொழுது நியமிக்கப்பட்டவர்களே 8,450 பேர்தான். அதிலே குறிப்பாக பெரும்பான்மையான பெண்கள் தொலைதூரங்களுக்கு மாவட்டம் விட்டு மாவட்டங்களுக்கெல் லாம் பணி அமர்த்தப்பட்டார்கள். மாறுதல் செய்வது எதற்காக என்பது உங்களுக்குத் தெரியும் (சிரிப்பு). அதனுடைய மர்மமும்

உங்களுக்குப் புரியும் (பலத்த சிரிப்பு). மாறுதல் செய்தால், மறுபடியும் மீண்டும் பழைய இடத்திற்கே மாறுதல் கேட்பார்கள். மாறுதல் கேட்க வருகிற நேரத்தில் எங்களுக்கு என்ன ஆறுதல் என்று கேட்பவர்களும் உண்டு. அதற்காகவே மாறுதல்கள் நடைபெற்ற காலம் அது.

ஆனால் இப்படி பாதிக்கப்பட்ட பெண் ஆசிரியர்களை எல்லோரும் அவரவர்களும் தங்களுடைய சொந்த ஊருக்கு மாறுதலிலே செல்லும் வண்ணம் கடந்த ஆண்டு பிப்ரவரி திங்களிலே சிறப்பு ஆணை ஒன்று வெளியிட்டதும் இந்த அரசுதான் என்பதை நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். (கைதட்டல்)

அதைப்போல உயர் கல்விக்கு ஆசிரியர்கள் தொடர்ந்து கற்க வேண்டும், அப்போதுதான் அவர்களிடம் கற்கும் மாணவர்கள் சிறந்த அறிவுள்ளவராக திகழ முடியும் என்ற அடிப்படையில் ஆசிரியர்கள் எந்தக் காலத்திலும் மாணவர்கள்தான் - அவர்கள் ஆசிரியர்களாக ஆனாலும் கூட - அவர்கள் மாணவர்கள்தான். ஒவ்வொரு நாளும் காலையிலே பள்ளிக்குச் சென்று பாடம் நடத்துவதாக இருந்தால் முதல் நாள் இரவே அவர்கள் பாடம் படித்துக் கொண்டு சென்றால் தான் அந்த மாணவர்களை நல்ல மாணவர்களாக உருவாக்க முடியும்.

முதல்நாள் இரவு பாடம் படிப்பவர்களுக்காகச் சொல்கிறேன். யாராவது படிக்காமல் இருந்தால், இனிமேல் படிப்பீர்கள் என்ற அந்த நம்பிக்கையோடு சொல்கிறேன்; அந்த வேண்டுகோளோடு சொல்கிறேன். மறுநாள் காலையிலே பள்ளியிலே சென்று பாடம் நடத்துவதாக இருந்தால், முதல் நாள் இரவு படித்தாக வேண்டும் என்ன பாடம் நாளைக்குப் போதிக்கப் போகிறோம்? என்ன பாடம் கற்றுத் தரப் போகிறோம் என்பதை முதல்நாள் படித்துக்கொண்டுதான் செல்ல வேண்டும். நான் முதலமைச்சர் தான். நீங்கள் ஆசிரியர்கள். நம்முடைய கல்வி அமைச்சர், மற்றவர்கள் எல்லாம் இங்கே பேசுகிறோம் என்றால் - ஆசிரியர்கள்

மாநாடுதானே, அங்கே போய் ஏதாவது பேசிவிட்டு வரலாம் என்ற அலட்சியப் போக்கிலே வராமல் நாங்களும் என்ன இங்கே பேசுவது என்பதை படித்துக் கொண்டுதான் வருகிறோம். (பலத்த கைதட்டல்)

அதைப்போல மாணவர்களுக்கு என்ன கற்றுத் தருவது என்பதைப் படித்துக் கொண்டு வர வேண்டியவர்கள் ஆசிரியர்கள். அது மாத்திரமல்ல; இன்னும் எதிர்காலத்திலே அவர்களுக்கு என்னென்ன சொல்லித் தரலாம் என்பதைப் படிக்க வேண்டுமென்ற காரணத்தினால், அதைக் கருத்திலே கொண்டு, ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் பணியாற்றும் காலத்தில், உயர்கல்வி பெறுவதை ஊக்கு விக்கும் விதத்தில், ஆசிரியர்கள் பெறும் உயர் கல்விக்கு ஊக்க ஊதிய உயர்வுகள் வழங்கும் புதிய ஒரு புரட்சிகரமான திட்டத்தை 69ம் ஆண்டிலேயே அறிவித்து நடைமுறைப்படுத்தியதும் இந்த அரசுதான் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு அலுவலர்களைப் போலவே வாகனங்கள் வாங்குவதற்கான கடன் வசதி 35,000 ரூபாய் வரை உயர்த்தப்பட்டு, அந்தக் கடன் வசதியை தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தி ஆணையிட்டதும் இந்த அரசுதான் என்பதையும் நீங்கள் நன்கறிவீர்கள்.

இவைகள் எல்லாம் ஆசிரியர்களுக்காகச் செய்யப்பட்ட நல் உதவிகள், தொடர்ந்து செய்யப்படவிருக்கின்ற உதவிகளிலே ஒரு கட்டம். அதைப் போல - பேராசிரியர் இங்கே எடுத்துக் காட்டி யதைப் போல - மாணவர்கள், மாவட்ட அளவில், மாநில அளவில் ப்ளஸ் 2 தேர்வுகளிலும், எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளிலும் - முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள் இங்கே பரிசு பெறவிருக் கிறார்கள்.

இங்கே பரிசு பெறாத இன்னொரு பட்டியலும் இருக்கிறது. அந்தப் பட்டியல் என்னவென்றால், ஒரு வீட்டிலே இதுவரை

பட்டதாரிகள் இல்லாமல் முதலாவதாக ஒரு பட்டதாரி மாணவன் - முதல் பத்து மதிப்பெண் எடுத்தால் - அந்த மாணவர்களுக்கு தொழிற்கல்விகளிலே ஒவ்வொரு பிரிவிலும் பத்து மாணவர்கள் வீதம் - அரசாங்கமே செலவு செய்து அந்தத் தொழிற்கல்வியை அவர்களுக்கும் தரும் என்கின்ற அந்த நிலை ஏற்படுத்தப் பட்டுள்ளது.

இந்தப் பட்டியலிலே இடம் பெற்றவர்கள் இன்று பரிசு பெற வில்லை. அவர்கள் எல்லாம் அடுத்து ஒரு நிகழ்ச்சியிலே அந்தப் பரிசுகளை பெறுவார்கள். அவர்களுக்கு அரசு அளித்த உறுதி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு அவர்களுடைய கல்வி வாய்ப்பு களை அரசு கவனிக்கக்கூடிய அந்த நிலையை எடுத்துள்ளது என்பதையும் எடுத்துக்கூறி, பரிசு பெறுகின்ற - டாக்டர் ராதா கிருஷ்ணன்விருது பெறுகிற ஆசிரியப் பெருமக்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துக்களைக்கூறி, பரிசையும் அரசு உதவி களையும் பெறுகின்ற மாணவச் செல்வங்களுக்கெல்லாம் என்னுடைய பாராட்டையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முரசொலி 6.9.97

அன்னை வேளாங்கண்ணி ஆலய வெள்ளி விழா

இந்த நல்ல மாலை நேரத்தில் இங்கே நடைபெறுவது வெள்ளி விழா நிகழ்ச்சி பற்றி உரைகளா? அல்லது கவியரங்கமா? என்று தெரியாத அளவிற்கு ஒரு திகைப்பு. ஏனென்றால் வரவேற்றவர்கள், வாழ்த்தியவர்கள், வாழ்த்து மடல் படித்தவர்கள், அடுத்து யார் பேசுவார் என்று சொன்னவர்கள் அத்தனை பேருமே, கவிதை நடையிலே தங்களுடைய பேச்சுக்களை அமைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நானும் கவியரங்கம் கேட்டு நீண்ட நாளாகிறது. எனவே இன்றைக்கு அந்த அரிய வாய்ப்பை அன்னை வேளாங்கண்ணி திருத்தலத்திலே பெற்றிருக்கிறேன். அதற்காக என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் சற்றொப்ப 25 ஆண்டுகளுக்கு முன்பு மணியை ஒலிக்கின்ற பணியினை நான் நடத்தியிருக்கிறேன். அந்த மணியோசை மாறாமல், இன்றைக்கும் வெள்ளி விழா நிகழ்ச்சியிலே கலந்து கொள்கிற வாய்ப்பினை நான் பெற்றிருக்கிறேன்.

தம்பி பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல இந்த 25 ஆண்டுகளில் நான்காவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்றிருக்கிறேன் என்றால், என்னுடைய தனிப்பட்ட ஆற்றல், வலிமை என்றெல்லாம் சொல்வதைவிட மேடையிலும், எதிரே அமர்ந்திருக்கின்ற உங்கள் நல்ல

உள்ளங்களுடைய வாழ்த்துதான் இன்றைக்கு நான் உங்கள் முன் முதலமைச்சராக நின்று கொண்டிருப்பது!

அன்னை வேளாங்கண்ணி என்றதும், அல்போன்ஸ் சொன்னார். கலைஞருக்கு தாயிடத்திலே பற்று உண்டு - மாதா பக்தி உண்டு - என்றார். ஆம், அஞ்சுகத் தாயிடமும் பக்தி உண்டு. அன்னை சிவகாமியிடமும் பக்தி உண்டு - காமராஜரைப் பெற்ற காரணத்தால். (கைதட்டல்) அன்னை சத்யாவிடமும் பக்தி உண்டு - அருமை நண்பர் எம்.ஜி ஆரைப்பெற்ற காரணத்தால். (கைதட்டல்) அன்னை வேளாங்கண்ணியிடமும் பக்தி உண்டு. அற்புத மனிதர் ஏசுநாதரைப் பெற்ற காரணத்தால். (பலத்த கைதட்டல்)

தாய்மையை மதிக்கத் தெரியாதவர்கள் இந்தத் தரணியிலே உள்ள மக்களால் ஏற்கத் தகாதவர்கள், தாயின்றி எதுவும் இல்லை. அந்தத் தாய்ப் பாசத்திற்கு நிகரானது எந்தப்பாசமும் இல்லை. தாய்ப் பாசத்திற்குப் பிறகுதான், படிப்படியாக வருகின்ற மற்ற பாசங்கள். ஆனால், எந்தப் பாசமும் தாய்ப் பாசத்தை தோற்கடிக்க முடியாத பாசங்கள். அந்த பாச உணர்வோடுதான் பல்லாயிரம் பேர் இந்த விழாவிலே கூடியிருக்கிறோம்.

அதுவும் அன்னை வேளாங்கண்ணி என்று இதை அழைக்கின்ற நேரத்தில் தனிப்பட்ட ஒரு சுயநலமும் எனக்குண்டு. ஏனென்றால் வேளாங்கண்ணி ஆலயம் இருப்பது எங்கள் தஞ்சை மாவட்டத்திலேதான். (கைதட்டல்) தரணி முழுதுமிருந்து கிறித்துவ பெருமக்கள் அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தை தேடி தஞ்சை மாவட்டத்திற்குத்தான் வருகிறார்கள்.

எனவே, தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் எங்கள் மாவட்டத்திலே இருக்கின்ற அன்னை வேளாங்கண்ணி சென்னையிலும் உங்களால் போற்றப்படுகிற - புகழப்படுகிற தாயாக - வணங்கப்படுகிற தாயாக - வாழ்த்தப்படுகிற தாயாக இருப்பதைக் காண நான் மிகுந்த பெருமையடைகிறேன் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இடத்திற்குப் பெயர் ''பெசண்ட் நகர்''. சென்னையிலே ஏற்கெனவே இது 'பெசண்ட் நகராக'' இல்லை, ஒரு ''பேஷண்ட்'' (Patient) நகராக இருந்தது. (பலத்த சிரிப்பு) ''பேஷண்ட்'' (Patient) நகராக இருந்ததை, பெசண்ட் நகராக மாற்றுகின்ற முயற்சியிலே கடந்த காலத்திலே கழக அரசு ஈடுபட்டது.

வீட்டு வசதி வாரியம் ஒன்றை நான் முதலிலே பொறுப்பிலே இருந்த போது உருவாக்கி அந்த வாரியத்தின் சார்பாக சென்னை யைச் சுற்றி பல புறப்பகுதி நகரங்களை உருவாக்க முயன்றபோது அப்படி உருவான நகரங்கள்தான் கே.கே. நகர், அண்ணா நகர், மறைமலைநகர் என்ற நகரங்கள். அந்த அடிப்படையிலே உருவான துதான் இந்தப் பெசண்ட் நகர்.

உங்களிலே பெரியவர்கள் நினைவு வைத்திருக்கக் கூடும். காலை நேரங்களில் கடற்கரையிலே உலவுவதற்காக நான் செல்வ துண்டு. இன்றைய காமராஜர் சாலை கடற்கரையிலே உலவச் சென் றால் எனக்கு வசதியில்லை. காரணம், என்னைச் சுற்றி பத்து பேர் வந்து விடுவார்கள். இன்னும் பலபேர் அங்கேயே மனுக்களைக் கொடுக்கவும் தொடங்கி விடுவார்கள்.

அதனால் இந்த நீண்ட கடற்கரையில் ஒதுக்குப்புறமாக ஒரு பகுதியைத் தேர்ந்தெடுத்து அங்கே சென்று ஒவ்வொரு நாளும் உல வலாம் என்று நான் தேர்ந்தெடுத்த இடம்தான் எலியட்ஸ் கடற்கரை. தேர்ந்தெடுத்து இங்கே நான் வந்து உலவுவதற்காகத் தொடங்கிய போது, கடற்கரை முழுதும் குப்பைக் கூளங்கள், ராவணன் மீசை என்று அழைக்கப்படுகிற பெரிய முள் பந்துகள், கால்பந்து போல பெரிய அளவிற்கு நெருஞ்சி முள், பூதாகாரமாக உருவெடுத்ததைப் போல - அந்தப் பெரிய முட்கள் பறந்து கொண்டே இருக்கும். பந்து போல கடற்கரையிலே ஓடிக் கொண்டே இருக்கும். அப்போது எங்கள் தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் அமைத்த 'சீரணிப்படை' என்று ஒன்று இருந்தது.

அந்தச் சீரணிப் படையை அழைத்து ''இந்த ராவணன் மீசை என்று சொல்லப்படுகின்ற முட்களை எல்லாம் அகற்றுங்கள் - இந்த

இடத்தை தூய்மைப்படுத்துங்கள்'' என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள அவர்களும் ஒரு வார காலத்திற்குள்ளாக அதை நிறைவேற்றி இந்தப் பகுதியிலே உள்ள உங்களைப் போன்ற மக்கள் எல்லாம் நல்ல ஒத்துழைப்புத் தந்த காரணத்தால் கடற்கரை இந்தப் பகுதியிலே தூய்மையானது. இந்தப் பகுதியிலே உள்ள மீனவர்கள் தங்களுடைய ஒத்துழைப்பைத் தந்தார்கள். தூய்மையான இந்தக் கடற்கரையிலேதான் தூய்மையின் சின்னமாக அன்னை வேளாங் கண்ணி ஆலயம் அமைந்திருக்கின்றது.

இந்த ஆலயத்தினுடைய வளர்ச்சியிலே எனக்கு முக்கிய பங்கு உண்டோ இல்லையோ, தொடர்பு உண்டு. அந்தத் தொடர்பு தான் இந்த ஆலயத்தை எழுப்பிய நேரத்தில் ஆலய மணியை நான்தான் வந்து ஒலிக்கச் செய்ய வேண்டுமென்று பேராயர் அருளப்பா அவர்கள் ஆணையிட்டார்கள். அதை நிறைவேற்றி வைத்தேன். இந்த வெள்ளி விழாவிலே கலந்து கொள்ள வேண்டு மென்பதை அருட்தந்தை லாரன்ஸ் அவர்கள் ஒரு திருமண விழா விற்கு நான் இங்கே வந்த போது குறிப்பிட்டார்கள்.

அப்போதே நான் சொன்னேன். வெள்ளி விழா - பொன் விழா - பவள விழா - வைர விழா - என்று எந்த விழாவானாலும் நான் முதலமைச்சராக இல்லாமல் தமிழ் நாட்டிலே நடைபெற முடியாது; சட்டமன்றத்தின் வெள்ளி விழாவையும் நான்தான் முதலமைச்சராக இருந்து நடத்தினேன்; இந்திய சுதந்திர வெள்ளி விழாவையும் நான் தான் முதலமைச்சராக இருந்து நடத்தினேன்; இப்போது சுதந்திரப் பொன் விழாவும் நான் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில்தான் வந்திருக்கின்றது. அதைப்போல அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வெள்ளி விழாவும் நான் முதலமைச் சராக இருக்கும் போதுதான் வந்திருக்கிறது.

எனவே நான் பல இடங்களிலேகூட சொல்லியிருக்கிறேன். என்னை நீங்கள் ''விழா முதலமைச்சர்'' என்று சொல்லலாம். விழா முதலமைச்சர் என்றால் ''FESTIVAL CHIEF MINISTER'' என்று அர்த்தமல்ல. விழாத முதலமைச்சர் (கைதட்டல்) - விழாமல்

இருப்பது என்னுடைய வலிமையால் அல்ல. உங்களுடைய தாங்குதலால் (கைதட்டல்) நான் விழாமல் இருப்பேன் என்ற நம்பிக்கை. அதைத்தான் இங்கே தம்பி பீட்டர் அல்போன்ஸ் சொன்னார்.

அவர் ரொம்ப பேராசையோடு சொன்னார். நூறாண்டு காலம் நானே முதலமைச்சராக இருக்க வேண்டுமென்று அவர் மிகவும் பேராசைப்பட்டார். இயற்கை ஒவ்வொருவருக்கும் ஒரு கால வரம்பை நிர்ணயித்திருக்கின்றது. ஆனால், அந்தக் கால வரம்பிற்குள்ளாக அவர்கள் ஆற்ற வேண்டிய கடமையை ஆற்ற வேண்டும் என்பதைத்தான் அது இந்து மதம் ஆனாலும், கிறித்துவ மதம் ஆனாலும், புத்த மதம் ஆனாலும், இஸ்லாமிய மார்க்க மானாலும் அத்தனையும் அதைத்தான் நமக்கு கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கின்றன. அந்தக் கடமையை நாம் ஆற்றியாக வேண்டும். அந்தக் கடமையைச் செய்கின்ற நேரத்தில் நம்முடைய உள்ளத்திலே எத்தகைய தூய்மை இருக்க வேண்டும் என்பதனை இங்கே வெளியிடப்பட்டுள்ள வெள்ளி விழா மலரில் நான் கண்டேன். விளிம்பு கட்டி, அந்த அருமையான மொழிகளைத் தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

“கடவுள் நம்பிக்கையும்
பக்தி முயற்சிகளும்
கண்மூடித் தனமான செயல்களால்
கேலிக்குள்ளாகி வருகின்றன
குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியாது
ஆன்மீகக் குருடர்களால்,
ஆன்மீகம் சிதைந்து போகும்;
இதனால் மதம் மதிப்பிழந்து போகிறது
மனிதம் சிதைந்து போகிறது.
நமது தவறான வாழ்க்கை முறைகளால்
மனிதம் சிதைந்து போகின்றது சிந்தியுங்கள்!”

என்ற இந்தப் பொன்மொழி வெள்ளிவிழா மலரிலே விளிம்பு கட்டி வெளியிடப்பட்டிருப்பதை நான் படித்துப் பார்த்தேன்.

அந்த மலரிலேயே அன்னை வேளாங்கண்ணியைப் பற்றிக் குறிப்பிடும்போது -

"அன்னை மரியாளின் சிறப்பு,
இயேசுவைப் பெற்றெடுத்தது
என்பதோடு முற்றுப்பெறவில்லை
கருவுற்ற எலிசபெத்துக்கு
ஓடிச்சென்று
மருத்துவச்சியாக பணியாற்றியதும் -
ஏழைத் தம்பதியர் குறை போக்க
இயேசுவை அணுகிய செயலும்
இயேசு சிலுவையிலே அறையப்பட்டவுடன்
சிலுவையின் அடியிலே துணிவோடு நின்று
தைரியமாக சமாளித்த அந்தச் சிறப்பும்

விவிலியம் கூறுவதுபோல அன்னை மரியாளின் சிறப்பாகும்."

அந்த உறுதி, துணிவு, தாய்மை, பாசம், இவைகளோடு நாம் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் அன்னை வேளாங்கண்ணி ஆலய வெள்ளிவிழா நேரத்திலே நாம் மேற்கொள்ள வேண்டிய சூளுரையாகும்.

சிலர் கேட்கலாம். நாங்கள் அழைத்தால் வர மறுக்கிறாய்? இஸ்லாமியர் அழைத்தால் செல்கிறாய்; கிறித்தவர்கள் அழைத்தால் செல்கிறாய்; என்று கேட்கலாம்.. நாங்கள் என்பது நீங்கள் வேறு, நாங்கள் வேறு என்று எண்ணுகிற நேரத்தில்தான் நாங்கள் என்ற சொல்லுக்கு பொருள் உண்டு.

நாங்கள் என்பதிலே - நான் என்னை தமிழன், திராவிடன் என்று சொல்லிக்கொண்டாலுங்கூட, அவர்கள் சொல்வதைப்போல

இந்து மதக்காரன், இந்து மதத்தைச் சேர்ந்தவன் - ஆனால் இந்து மதத்திலே இருப்பவர்கள் எங்களை அழைக்கின்ற நேரத்தில் எல்லோரும் சமம், வாருங்கள் என்று அழைத்தால் அட்டியின்றி செல்வேன். நீயும், நானும் ஒன்று ஆண்டவன் முன்பு என்று அழைத்தால் தட்டாமல் செல்வேன். ஆண்டவன் படைப்பிலே மேல் சாதி, கீழ் சாதி என்று இல்லை; எல்லாம் ஒரே சாதிதான் மனித சாதிதான் என்று சொல்லி அழைத்தால் கட்டாயம் செல்வேன்.

நான் இந்துக் கடவுள்களுடைய விழாக்களிலே கலந்து கொள்ள வேண்டும் அல்லது வேண்டாம் என்ற இந்தப் பிரச்சினை யில் நான் என்றைக்கும் என்னைச் சிக்க வைத்துக்கொள்ள விரும்புவதில்லை.

ஒரு முதலமைச்சர் - தம்பி ஜேப்பியார் இங்கே சொன் னதைப் போல - எல்லோருக்கும் பொதுவானவன்தான். எனக் கென்று சில கொள்கைகள் உண்டு. ஆனால் நான் எல்லோருக்கும் பொதுவானவன். எல்லோருக்கும் பொதுவானவனாக இருக்கின்ற காரணத்தால்தான் நான் இஸ்லாமியர்கள் அழைத்தால் அந்த விருந்துக்கும் செல்கிறேன்; கிறித்தவப் பெருமக்கள் அழைத்தால் அந்த விழாவிற்கும் வருகிறேன்; மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலும், கபாலீஸ்வரர் கோவிலிலும் சமபந்தி விருந்துக்கும் செல்கிறேன். எல்லோருக்கும் பொதுவானவன்தான் நான்.

சிலபேர் அழைக்கும்போது நாங்கள் மற்ற மதங்களை வாழவிட மாட்டோம் என்று சொல்லாவிட்டாலும் செயலால் உணர்த்தி அழைக்கின்ற நேரத்தில் நான் அங்கே செல்ல விரும்ப வில்லை. ஏனென்றால் அவர்கள் செய்கின்ற பாவங்களுக்கு நானும் பங்குதாராராக ஆகிவிடக் கூடாது என்ற காரணத்தால், நான் அந்த அழைப்புக்களை ஏற்றுக் கொள்வதில்லை. (கைதட்டல்)

அஃதன்னியில் நான் எல்லோருக்கும் பொதுவானவன் தான். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலே நான் சென்று விருந்து அருந்தவில்லையா? என்னோடு எதிர்க்கட்சித் தலைவரும்,

பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் மற்றும் பல்வேறு சமயத் தலைவர்களும் கலந்து கொள்ளவில்லையா? இங்கே கபாலீஸ்வரர் கோவிலில் நானும் தலைவர் மூப்பனார் அவர்களும், குன்றக்குடி அடிகளாரும், நல்லக்கண்ணு அவர்களும், பல்வேறு சமுதாயத் தைச் சேர்ந்த நண்பர்களும் தாய்மார்களும் அமர்ந்து உணவருந்த வில்லையா? அந்தச் சமத்துவம் எங்கிருக்கிறதோ, அந்த இடத் திற்கு நான் செல்ல என்றைக்கும் மறுக்க மாட்டேன்.

இங்கே நான் படித்துக் காட்டினேனே - வெள்ளி விழா மலரி லே இருக்கின்ற வாசகம் -

"கடவுள் நம்பிக்கையும் பக்தி முயற்சிகளும் கண்மூடித் தனமான செயல்களால் கேலிக்குள்ளாகி வருகின்றன."

என்ற அந்த வாசகம் இருக்கிறதே, இந்த அடிப்படையிலேதான் நான் அன்றைக்கு பராசக்தியில் எழுதினேன்.

"கோயில் கூடாது என்பதல்ல; கோயில் கொடியவர்களின் கூடார மாக இருக்கக் கூடாது"

என்று வசனம் எழுதினேன். அதை இந்த அடிப்படைத் தத்துவத்தின் படிதானே நான் அன்றைக்கே 45 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியிருக்கிறேன்.

எனவேதான் இந்த மார்க்கம் எங்கள் மனதைக் கவருகிறது. ஒருமுறை ஒரு மத விழாவிற்கு - மத விழா என்றால் மதத்தை மாத்தி ரம் பரப்புகின்ற அல்லது மற்ற மதங்களை வெறுக்கின்ற மத விழா அல்ல. ஒரு நிகழ்ச்சிக்கு திருவாரூருக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் வந்திருந்தார்கள். அண்ணாவிற்கு முன்பு பேசியவர்கள் தங்கள் மதத்தைப் பற்றிய சில அற்புதங்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

இறுதியாகப் பேசிய அறிஞர் அண்ணா சொன்னார்கள். "அற்புதங்கள் இருப்பதற்காக உங்கள் மத விழாவிற்கு நான் வரவில்லை; இந்த விழாவிற்கு நான் வரவில்லை. அற்புதங்கள்

நிகழ்த்துவதென்றால், அத்தகைய ஆண்டவன்கள் எங்களிடத்திலே ஆயிரக்கணக்கிலே இருக்கிறார்கள். எங்கள் ஆண்டவன் நெற்றிக் கண்ணைத் திறந்தாலே திரிபுரமும் எரியும். எங்கள் ஆண்டவன் ஒரு வேலாயுதத்தை விட்டால் பல மலைகளைக் குடையும்; எனவே நான் அற்புதங்களுக்காக வரவில்லை. அன்புக்காக வந்திருக் கிறேன். நீங்கள் உலகத்தை வழிநடத்திச் செல்கிற அமைதிக்காக வந்திருக்கிறேன். நீங்கள் மக்களையெல்லாம் மக்களாகப் பாவிக்கின்ற அந்த எண்ணத்தை மதித்து நான் வந்திருக்கிறேன்'' என்று சொன்னார்கள்.

எனவே, அந்த அண்ணா வழியில் 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் வாக்கியத்தை அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகமெங்கும் பரப்பி, அதையே மக்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும், அந்த அளவிற்கு பின்பற்றினாலே நாட்டில் உள்ள மூடநம்பிக்கைகள் தொலைந்து நல்ல சமதர்ம சமுதாயத்தை உருவாக்க முடியும்.

பாரதியாருடைய கனவை, வடலூர் ராமலிங்கனாருடைய கனவை, புரட்சிக்கவிஞர் பாரதிதாசனுடைய கருத்தை, உத்தமர் காந்தியடிகளுடைய எண்ணத்தை இவைகளை எல்லாம் நாம் ஓங்கச் செய்ய முடியும் என்ற அந்த உண்மையை அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள் என்றால், இந்தக் கருத்தெல்லாம் உங்களைப் போன்றவர்களிடமிருந்து, இங்கே வீற்றிருக்கின்ற அருட்தந்தை அவர்களின் உரையிலேயிருந்து நம்முடைய விழாவிற்கு முன்னிலை ஏற்றிருக்கின்ற பேராயர் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்களே... எங்களுக்கெல்லாம் வாழ்த்து வழங்கினார்களே. அந்த வாழ்த்துகளிலே பொதிந்து கிடக்கின்ற கருத்துக்களிலேயிருந்து நாங்கள் பெற்ற எண்ணக் கருவூலங்களா கத்தான் அவைகளை எல்லாம் எண்ணுகிறோம்.

கிறித்துவ மதச் சின்னமாக நீங்கள் பயன்படுத்துவது சிலுவை. அது இயேசுநாதருடைய தியாகச் சின்னம். தியாகச் சின்னம் மாத்திரமல்ல. அந்தச் சின்னத்தை உற்று நோக்கினால்

''கூட்டல்'' (+) அடையாளம். மனிதர்களை எல்லாம் ஒன்றாகக் கூட்டுகின்ற சின்னமாக அந்தச் சின்னம் அமைந்திருக்கின்றது (பலத்த கைதட்டல்) எனவேதான் ஒன்றோடொன்றை இணைக்கின்ற - ஒன்றோடொன்றை கூட்டுகின்ற - அந்தச் சின்னத்தின் மகிமையை உணர்ந்திருக்கின்ற ஒரு மதத்தை - ஒரு மார்க்கத்தைப் பின்பற்றுகின்ற உங்களையெல்லாம் நான் பாராட்டுகிறேன்.

நீங்கள் எடுக்கின்ற விழாவிலே நானும் கலந்துகொள்கிற பேறு பெற்றமைக்காகப் பெருமையடைகிறேன். இங்கே வீற்றிருக்கின்ற பெரியவர்கள், இளைஞர்கள், அருமைத்தாய்மார்கள், சகோதரிகள் அனைவருடைய நல்ல எண்ணத்தையும் நான் பெற்று இன்றைக்கு உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன் என்றால் - நான் ஆற்ற வேண்டிய கடமைகளை முழுவதும் ஆற்றிவிட்டேன் என்கின்ற ஆணவத்தோடு இதை நான் உணரவில்லை. இன்னும் ஆற்ற வேண்டிய கடமைகள் பல இருக்கின்றன என்ற அடக்க உணர்ச்சியோடு, அப்படி ஆற்றுவதற்கான வலிமையை எனக்குத் தாருங்கள்; அன்னை வேளாங்கண்ணி தேவாலயத்தின் வெள்ளி விழாவிலே கலந்து கொண்டிருக்கின்ற நீங்கள் அந்தத் திறனை எனக்குத் தாருங்கள்; அந்த ஆதரவை எனக்கு வழங்குங்கள்.

அப்படி வழங்குவீர்களேயானால் மேலும் மேலும் என்னுடைய காலம்வரையில் என் பணி உங்களுக்காக தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும் என்ற செய்தியை இந்த நல்ல விழாவிலே விடுத்து, அன்பான வரவேற்பிற்கும், பாராட்டுதல்களுக்கும், புகழுரைகளுக்கும் நான் ஏற்றவன்தானா என்பது கேள்விக்குறியாக இருந்தாலுங்கூட ஏற்றவனாக நடந்து கொள்ள முயற்சிக்கிறேன்.

- முரசொலி 9.9.97

ஆழ்வார்கள் ஆய்வு மைய விழா

ஆழ்வார்கள் ஆய்வு மையத்திற்கு நான் வந்ததைப் பற்றி விமர்சிப்பதற்கு சில பேர் இருக்கிறார்கள் என்று விழா நாயகர் ஆர்.எம்.வீ. அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். இது முதல் தடவையாக இருந்தால் விமர்சிப்பதில் அர்த்தம் உண்டு. நான் ஆழ்வார் மையத்திற்கு வந்திருப்பது இது இரண்டாவது முறை. எனவே முதல் தடவையிலேயே அத்தகைய விமர்சனங்களுக்கெல்லாம் விடையளித்துவிட்ட காரணத்தினால், இரண்டாவது முறை வந்திருக்கும் போது விளக்கமோ விடையோ அளிக்கத் தேவையில்லை என்று நான் கருதுகிறேன்.

நான் ஒரு நிகழ்ச்சிக்கு செல்வதென்றால் - அந்த நிகழ்ச்சியைப் பொறுத்து - இதற்கு நான் யாரிடம் அனுமதி பெற வேண்டுமென்று என் மனட்சாட்சியின்படி எண்ணுகிற நேரத்தில் - சில நிகழ்ச்சிகளுக்கு பெரியாரிடம் அனுமதி பெறுவேன்; சில நிகழ்ச்சிகளுக்கு அறிஞர் அண்ணாவிடம் அனுமதி பெறுவேன். சில நிகழ்ச்சிகளுக்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடம் அனுமதி பெறுவேன். அந்த வகையில் இந்த நிகழ்ச்சிக்கு புரட்சிக்கவிஞர் பாரதிதாசனிடம் அனுமதி பெற்று வந்திருக்கிறேன்.

எப்படியென்றால் புரட்சிக் கவிஞர் அவர்கள் இராமானுஜரைப் பற்றிப் பாடிய வரிகள் அந்த அனுமதியை எனக்கு வழங்கியிருக்கின்றன.

"முத்தியோ சிலரின் சொத்தென இருக்கையில்
இத்தமிழ் நாடுதன் இருந்தவப் பயனாய்
இராமனுசனை ஈன்ற தன்றோ?"

என்று புரட்சிக் கவிஞர் பாடியிருக்கிறார்.

பக்தி, முக்தி இவைகள் எல்லாம் ஒருசிலருடைய சொத்தாகக் கருதப்பட்ட காலக்கட்டத்தில் அதை பொதுவுடமையாக ஆக்கிய பெருமை - பக்தியைக் கூட பொதுவுடமையாக ஆக்கிக் கொடுத்த பெருமை தமிழகத்திலே ஒருவருக்கு உண்டென்றால், அது இராமானுசருக்குத்தான் உண்டு என்பதை தன்னுடைய கவிதை வாயிலாக எடுத்துக் காட்டியவர் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்.

எனவே நான் இராமானுசரைப் பாராட்டுகின்ற விழாவிற்கு வந்ததைப் பற்றி சிலபேர் ஆச்சரியப்பட்டால் அவர்களுக்கு நான் சொல்கின்ற பதில் - பழைய பதில் ஒன்றுண்டு. நம்முடைய நீதியரசரும், குழந்தைசாமி அவர்களும், சௌந்தரா அம்மையார் அவர்களும், செல்லப்பன் போன்றவர்களும் அடிக்கடி கலந்து கொள்கின்ற காரைக்குடி கம்பன் விழாவில் நானும் இரண்டொரு முறை அழைக்கப் பட்டிருக்கிறேன். சா.க. என்று அரசியல்வாதிகளாலும், இலக்கியவாதிகளாலும் அன்போடு அழைக்கப்பட்ட காரைக்குடி கம்பனடிப்பொடி எனப்படும் சா. கணேசன் அவர்கள் என்னை அந்த விழாவிற்கு அழைத்திருக்கிறார்.

நான் அப்படி அழைக்கப்பட்ட போது முதல் நிகழ்ச்சியில் சொன்னேன். "கம்பன் விழாவிற்கு கருணாநிதி வருவது ஆச்சரியமாக இருக்கிறதே, என்று சிலபேர் இங்கே சுவரொட்டி போட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்கின்ற பதில் இதுதான். கம்பன் விழாவிற்கு கருணாநிதி வருவது ஆச்சரியமல்ல; கருணாநிதியை கம்பன் விழாவிற்கு அழைத்திருப்பதுதான் ஆச்சரியம்" - (கைதட்டல்) என்று நான் பதில் சொன்னேன்.

கம்பனுடைய இலக்கியத்தைப் பற்றி தமிழகத்தில் ஒரு சர்ச்சை எழுந்ததுண்டு. அந்தச் சர்ச்சையின் அடிப்படையில்

பேரறிஞர் அண்ணா அவர்களும், ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்களும் சொற்போர் நடத்தியதும் உண்டு. அந்தச் சர்ச்சையின் அடிப்படையிலே அண்ணா அவர்களும் பசுமலை நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களும் சொற்போர் நடத்தியதுண்டு. அந்தச் சொற்போர், தமிழகத்திலே பெருமளவிற்குப் பேசப்பட்டதுண்டு. தந்தை பெரியார் அவர்கள் கம்பராமாயணத்திற்கு எதிராக குரல் கொடுத்த அந்தக் காலக் கட்டத்தில் அண்ணா அவர்கள் அத்தகைய சொற்போர் மேடைகளிலே சேதுப் பிள்ளை அவர்களையும், சோமசுந்தர பாரதியார் அவர்களையும் எதிர்த்து வாதாடினார்.

அப்படி வாதாடியபோது கூட அண்ணா அவர்கள் தன்னுடைய முடிவுரையாக அந்த வாத அரங்குகளில் எதை எடுத்து வைத்தாரென்றால், ''நான் கம்பனுடைய தமிழைச் சுவைக்கிறேன்; கம்பனுடைய தமிழைப் பாராட்டுகிறேன; கம்பனுடைய கதையிலே நான் குற்றம் கண்டாலும்கூட, கம்பனுடைய கதையை சுவைப்பவன் அல்ல என்றாலுங்கூட, அவருடைய கவிதையை, தமிழை, தமிழ் அழகை, தமிழ் எழிலை, அந்த இலக்கியத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றுதான் அண்ணா அவர்கள் கம்பனைப் பற்றி தன்னுடைய கருத்தை அன்றைக்கு வெளியிட்டிருக்கின்றார்கள்.

ஆனால் இராமானுசரைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் - அவருடைய இலக்கியத்தை, அவருடைய கருத்தை என்கிறபோது இலக்கியத்தையும் ஏற்றுக் கொள்கிறவனாக - அவருடைய கருத்தையும் ஏற்றுக் கொள்கின்றவனாக நான் இருக்கின்ற காரணத்தால் - இராமானுசரைப் பாராட்டுகின்ற இந்த விழாவில் நான் கலந்து கொள்வது என்னுடைய கடமை.

ஆழ்வார்கள் பன்னிருவர் பாடிய பாடல்கள் - இவற்றையெல்லாம் தொகுத்து ஒரு பெரிய நூலாக - அதற்கு பொருளுரை எல்லாம் எழுதி நம்முடைய தம்பி ஜெகத்ரட்சகன் வெளியிட்டிருக்கிறார். அந்தப் புத்தகம் வருகிற வரையிலே நான் கூட ஜெகத்ரட்சகன் அவர்களைப் பற்றிக் கொண்டிருந்த மதிப்பீடு சற்று வித்தி

யாசமானதுதான். அந்தப் புத்தகத்தைப் படித்த பிறகு - அவர் கடந்த ஆண்டு இந்த அரங்கத்திலே ஆற்றிய உரையைக் கேட்ட பிறகு - ஆழ்வார்களுடைய பாடல்கள் ஜெகத்ரட்சகனை எந்த அளவிற்கு - ஒரு நல்ல தமிழறிஞராக மாற்றியிருக்கிறது என்பதை எண்ணி யெண்ணி மகிழ்ந்து அப்போதே பாராட்டியவன் நான்.

எனவே அந்த ஆழ்வார்களுடைய நாலாயிர திவ்வியப் பிரபந்தம் திராவிட வேதம் என்று யாரால் சொல்லப்பட்ட தென்றால், இராமானுசரால் சொல்லப்பட்டது. அந்தத் திராவிட வேதம் இன்றைக்கு வைணவக் கோவில்களில் எல்லாம் பாடப்படு கிறது, படிக்கப்படுகிறதென்றால், அதற்கு மூலக் காரணமாகத் திகழ்பவர் இராமானுசர்தான்.

அவர் ஆன்மிகவாதிதான். ஆன்மிகவாதி என்றாலுங்கூட, அந்த ஆன்மிகத்தோடு கலந்து அவர் அளித்த கருத்து சாதாரண மானதல்ல. இங்கே நம்முடைய ஆர்.எம்.வீ. அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, உத்தமர் காந்தியடிகள் ஆலயப் பிரவேசம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து - அதை நிறைவேற்றுவதற்கு முன்பு - 850 ஆண்டுகளுக்கு முன்பு அதை கர்நாடக மாநிலத்திலே நடத்திக் காட்டியவர் இராமானுசர் அவர்கள் ஆவார்கள்.

கர்நாடக மாநிலத்தில் திருநாராயணபுரம் என்று அன்றைக்கு அழைக்கப்பட்டு - இன்றைக்கு மேலக்கோட்டை என்று அழைக்கப் படுகின்ற அந்த ஊர்க் கோவில்களில் ஆதிதிராவிடர்கள் - தாழ்ந்த சாதிக்காரர்கள் நுழையக் கூடாது என்ற தடையை அகற்றி - ஆலயப் பிரவேசத்தை காந்தியடிகளுக்கு 850 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திக்காட்டிய பெருமை ஒருவருக்கு உண்டு என்றால் அது இராமானுசர் ஒருவருக்குத்தான் உண்டு. அத்தகைய சீரிய, செழுமிய, புரட்சிகரமான கருத்துக்களுக்குச் சொந்தக்காரராக அவர் விளங்கினார்.

அவர் திருவரங்கத்திலே வாழ்ந்த காலக் கட்டத்தில் உறங்கா வல்லிதாசர் என்று ஒருவர் அவருடைய பிரதம மாணவராக

இருக்கிறார். அவருடைய கருத்துக்களைப் பிரச்சாரம் செய்ய 700 பேர் இருந்தார்கள். அந்த 700 பேருமே வேடர் குலத்தைச் சேர்ந்தவர்கள் - தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்பட்டவர்கள், அவர்களை வைத்துத்தான் அவர் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும்; பக்தி ஒரு குலத்தவருக்கு மாத்திரம் உரியதல்ல; எல்லோருக்கும் உரிய ஒன்று என்கின்ற அந்தக் கருத்தை, அவர்களை வைத்துத்தான் பிரச்சாரம் செய்தார். அவர்களிலே ஒருவர்தான் உறங்காவல்லிதாசர் என்பவர்.

ஒருநாள் ஆற்றிலே குளித்துவிட்டு இராமானுசர் வீதி வழியாக வரும்போது உறங்காவல்லிதாசருடைய கரங்களைப் பிடித்துக் கொண்டு வந்தார். அதைப் பார்த்த அந்தணர்கள் வெகுண்டெழுந்தார்கள், அவர்களைப் பார்த்து இராமனுசர் சொன்னார் - ஒருவனுக்கு கல்விச் செருக்கு, செல்வச் செருக்கு, சாதிச் செருக்கு இந்த மூன்றும் கூடாது; உங்களிடத்திலே கல்விச் செருக்கு இல்லை; உங்களிடத்திலே செல்வச் செருக்கில்லை; ஆனால் சாதிச் செருக்கு இருக்கிறது என்று சுட்டிக்காட்டாமல், அவர் மிகுந்த சாதுர்யமாகச் சொன்னார் - ''நான் அழைத்து வருகிறேனே, இந்த உறங்காவல்லிதாசன் - வேடன்தான்; சாதாரண குலத்தில் பிறந்தவன்தான்; அவனிடத்திலே கல்விச் செருக்கு இல்லை; செல்வம் இல்லை, ஆகவே அந்த செல்வச் செருக்கும் இல்லை; அவனிடம் சாதிச் செருக்கும் இல்லை; காரணம், அவன் உயர்ந்த சாதிக்காரன் அல்ல; எனவே சாதிச் செருக்கும் இல்லை'' என்று சொன்னார். சொன்னவுடனே அந்தணர்களுக்கெல்லாம் அது புரிந்தது. தங்களைத் திருத்திக் கொண்டார்கள் என்பது இராமனுசருடைய வாழ்க்கை வரலாற்றிலே ஒரு பகுதி.

இங்கே நீதியரசர் பேசும்போது திருக்கோட்டியூர் இராமனுசர், தான் குரு வென்று ஏற்றுக் கொண்ட, திருக்கோட்டியூர் நம்பியிடத்தில் பாடம் கற்க எவ்வளவு சிரமங்களை ஏற்றுக் கொண்டார் என்று குறிப்பிட்டார்கள். திருவரங்கத்திலிருந்து ஒரு

முறை அல்ல; இருமுறை அல்ல; 18 முறை திருக்கோட்டியூருக்குச் சென்றிருக்கிறார், திருக்கோட்டியூர் நம்பியைச் சந்திக்க! ஒவ்வொரு முறையும் சந்திக்க நம்பி மறுத்துவிட்டார். 18-வது முறைதான் திருக்கோட்டியூர் நம்பி அவரைச் சந்தித்து, - அந்த மந்திரத்தை அவருடைய காதுகளில் ஓதி - ''இதை உனக்கு ஓதியிருக்கிறேன்; நீ மோட்சத்திற்குச் செல்வாய்; வீடு பேறு அடைவாய்; இதை நீ யாருக்காவது சொன்னால் நரகத்துக்குத்தான் போவாய்; உனக்கு மோட்சம் கிடைக்காது'' - என்று அவரை மிரட்டி வைத்தார்.

அப்பொழுது இதைக் கேட்டுக் கொண்டு வெளியே வந்த - 18 முறை பல கஷ்டங்களைச் சந்தித்து - கடைசியாகப் பெற்ற அந்த மந்திரத்தை மனதிலே பதிய வைத்துக் கொண்டு இராமனுசர் தான் பெற்ற இன்பம் வையகம் பெறட்டும் என்று - எல்லோருக்கும் அந்த மந்திரத்தைச் சொல்ல வேண்டுமென்று - திருக்கோட்டியூர் கோபுரத்திலே ஏறி நின்று அந்த மந்திரத்தை திருக்கோட்டியூரிலே உள்ள எல்லா மக்களுக்கும் சொன்னதாகவும் - அதைப் பார்த்து குருநாதர் கோபித்துக்கொண்டதாகவும் - என்னிடத்தில் சத்தியம் செய்து கொடுத்துவிட்டு அதை மீறிவிட்டாயே என்று சினம் அடைந்ததாகவும் - உடனே இராமானுசர் குருநாதரைப் பார்த்து - ''நீங்கள்தான் சொன்னீர்கள்; இதைக் கேட்டவருக்கு மோட்சம் கிடைக்கும்; அந்த ரகசியத்தை நான் வெளியிட்டால் எனக்கு நரகம் கிடைக்கும் என்று சொன்னீர்கள்; நான் பல மக்களுடைய மோட்சத்தைத் தான் விரும்புகிறேன்; அதற்காக நான் நரகத்திற்குச் சென்றாலும் பரவாயில்லை; என்னைத் தியாகம் செய்து கொள்கிறேன்'' - என்று குறிப்பிட்டார் என்பதும் இராமனுசருடைய வரலாறாகும்.

எனக்கு ஒன்று நினைவிற்கு வருகிறது. நான் எழுதிய ''திரும்பிப்பார்'' என்ற ஒரு திரைப்படத்தில் - ஒரு உரையாடல், திருந்தவே முடியாதவனாக இருந்த ஒரு தீயவன் கடைசியாக திருந்தி தன்னைப் பற்றி - தன்னுடைய குறைகளைப் பற்றி தானே

உணர்ந்து அதை வெளிப்படுத்தும் போது - குமுறிக் கொண்டு சொல்கிறான், ''திரும்பிப்பார், திரும்பிப்பார்'' என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டே வரும்போது, ''கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே, அந்தக் கொள்கையிலிருந்து எத்தனை முறை வழுக்கி விழுந்திருக்கிறீர்கள்; திரும்பிப் பாருங்கள்'' என்று சொல்வான். நடிகர் திலகம் சிவாஜி அந்தப் பாத்திரத்தை ஏற்றிருப்பார்.

இந்த வசனத்தை, தணிக்கை அதிகாரி வெட்டிவிட்டார். ஏன் அதை வெட்டுகிறீர்கள் என்று கேட்டேன். அப்பொழுது தணிக்கை அதிகாரி சொன்னார். ''கோபுரம் ஏறி நிற்கும் தலைவர்களே'' என்று நீ இராமானுசரை அல்லவா குறிப்பிடுகிறாய்'' என்று சொன்னார். நான் அவ்வாறு நினைத்தே அதை எழுதவில்லை. நான் பொதுவாக கொள்கை முழக்கம் செய்வதற்காக உச்சியில் நிற்பதைத்தான் சுட்டிக்காட்டி எழுதியிருந்தேன். ஆனால் தணிக்கை அதிகாரி கொள்கை முழக்கம் செய்வதற்காக கோபுரம் ஏறி நிற்கும் என்று நீ சொல்வது இராமானுசரைக் கிண்டல் செய்வது என்று சொன்னார். அதற்குப் பிறகுதான் இராமானுசரைப் பற்றி படிக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கேற்பட்டது. அந்த வகையில் தணிக்கை அதிகாரிக்கு நன்றி கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

இராமனுசர் பல்லாண்டு காலம் வாழ்ந்தார் என்று பெருமை யோடு ஆர்.எம்.வீ. குறிப்பிட்டார். ஒருவர் வாழ்ந்தது எத்தனை ஆண்டு காலம் என்பதல்ல; வாழ்ந்த காலத்திலே செய்து முடித்தது; செய்ய யத்தனித்தது; செய்துவிட்டுப் போனது இவைகள்தான் முக்கியம் என்பதற்கு எடுத்துக்காட்டாக இராமானுசர் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

அவருடைய பெயரால் இன்று விருது வழங்கப்பட்டிருக் கிறது. என்னுடைய அனுமதியைப் பெறாமலே என்னுடைய பெயராலும் விருது வழங்கப்பட்டிருக்கிறது. என்னுடைய இனிய நண்பர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயராலும் விருது வழங்கப்

பட்டிருக்கிறது. என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரால் விருது வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த விருதுகளைப் பெற்றவர்கள் - எழுத்தாளர் சாவி அவர்கள் - இங்கே உரையாற்றும்போதே எவ்வளவு பெரிய நகைச் சுவையாளர் அவர் என்பதை நீங்கள் நேரடியாகக் கண்டீர்கள். அவர் ஒரு எழுத்தாளர் என்பதை விட தேசத் தியாகிகளில் ஒருவர் அவர். இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்தின் போது சிறைவாசம் மேற்கொண்டவர். அலிப்பூர் சிறைச்சாலையில் அவர் பல பெருந்தலைவர்களோடு காராக்கிருக வாசத்தை அனுபவித்த வர். அவருடைய எழுத்துக்களில் தமிழ் மணம் கமழும். தேசிய மணமும் கமழும். அத்தகைய எழுத்தாளர் எனக்கு நண்பராக இருக்கிறார் என்பதில் நான் பெருமையடைகிறேன். அவருக்கு என் பெயரால் தரப்பட்ட விருதை வழங்கியதில் மேலும் ஒரு பேறு பெற்றவனாக நான் ஆகிறேன்.

நீதியரசர் இஸ்மாயில் அவர்களுக்கு இராமானுசர் விருது வழங்கப்பட்டிருக்கிறது. அதையும் வழங்குகின்ற பெருமை எனக்குக் கிடைத்திருக்கின்றது. தமிழ்நாட்டில் காரைக்குடி சா. கணேசன் அவர்களுக்குப் பிறகு கம்பராமாயணம் என்றால் நீதியரசர் இஸ்மாயில் அவர்களுடைய நினைவுதான் வருகின்ற அளவிற்கு கம்பராமாயணத்தோடு தன்னை ஈடுபடுத்திக்கொண் டவர் அவர். அவ்வாறே தமிழ் இலக்கியத்தோடு, தமிழ் உணர்வோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டவர் அவர். அவருக்கும் விருது வழங்குவதில் நான் பெருமை கொள்கிறேன்.

குழந்தைசாமி அவர்கள் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தராகப் பணியாற்றியது மாத்திரமல்ல - அவரே ஒரு பல்கலைக் கழகம் - என்கின்ற அளவிற்கு தமிழ்க் களஞ்சியமாகத் திகழ்ந்துகொண்டிருப்பவர். அவர்களை எல்லாம் நானும் இந்த அர சும் தேவையான வகைகளிலே பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதிலேயிருந்து - அவர்களுக்கு பயன் என்பதற்காக அல்ல;

நாட்டிற்கு, தமிழுக்கு, மொழிக்கு, மக்களுக்குப் பயன் தருவதற்காக அவர்களையெல்லாம் நாங்கள் பயன்படுத்திக் கொள்கிறோம். அவருக்கு விருது வழங்கியதிலே நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

அம்மையார் கவியரசி சௌந்தரா கைலாசம் அவர்கள் பல கவியரங்களிலே தன்னுடைய திறமையை நிலைநாட்டியவர்கள். முருகன்பால் மிகுந்த பக்தி கொண்டவர்கள். அவர்களுடைய கவிதைகளில் அநேகமாக எல்லாமே முருகனுடைய பெயரைச் சொல்லித்தான் முடிவுறும். அந்த அளவிற்கு முருகன் பக்தி கொண்டவர்கள். ஒருமுறை ஒரு கவியரங்கத்திற்கு தலைமை வகித்தேன். அதற்கு அம்மையார் அவர்கள் உடல் நலம் இல்லாத காரணத்தால் வர இயலவில்லை. தன்னுடைய மகளை தான் வர முடியாத காரணத்தால் அந்தக் கவியரங்கத்திலே கலந்து கொள்ள அனுப்பி வைத்தார்கள். கவிதையை எழுதி மகளிடம் கொடுத்து அனுப்பி வைத்தார்கள். நான் அந்தச் செல்வியை கவிதையைப் படிக்க அழைக்கும்போது ''செல்வி! பாடம்மா! நீ கேட்ட தாலாட்டை!'' - என்று சொல்லி அழைத்தேன். அது இன்னமும் என்னுடைய நினைவிலே பதிந்து போயிருக்கிறது. பகுத்தறிவுக் கொள்கையிலே எனக்குள்ள கருத்தும், அவருக்குள்ள கருத்தும் - அரசியல் துறையிலே கூட அவருக்குள்ள கருத்தும், எனக்குள்ள கருத்தும் வேறாக இருந்தாலும்கூட - ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கின்ற உறுப்பினர்களோடு - அந்தக் குடும்ப உறுப்பினர் களிலே ஒருவராகவே ஆகிவிடக் கூடிய அளவிற்கு கலந்து பழகக் கூடிய கனிவான உள்ளம் கொண்டவர்கள் அம்மையார் அவர்கள், அவர்களுக்கு இந்த நாளில் விருது வழங்குகின்ற பேறு பெற்றமைக்காக நான் மிகுந்த பெருமையடைகிறேன்.

இந்த விருது வழங்கும் விழாக்களுக்கெல்லாம் முத்தாய்ப்பாக ஒரு நிகழ்ச்சி - நம்முடைய ஆர். எம். வீ. அவர்களுடைய 72ஆவது பிறந்தநாள் விழா. இந்த 72 என்றாலே எனக்கொரு

அதிர்ச்சி (கைதட்டல்). ஒரு காலத்தில் 72தான் என்னையும் ஆர். எம். வீ. அவர்களையும் பிரித்தது. (கைதட்டல்) 1972ஆம் ஆண்டு என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த இயக்கத்திலிருந்து ஒதுங்கியிருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்ட அந்தக் காலக்கட்டத்தில் எனக்கும் எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் இடையே இந்தப் பிளவு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அரும்பாடுபட்டவர் - அழுத கண்ணீரோடு என்னை அணைத்துப் பிடித்தவாறு இந்த நிலைமையை எப்படியாவது தவிர்த்துவிடுங்கள் என்றெல்லாம் எனக்கு அன்றைக்கு அறிவுரை வழங்கியவர். அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளக் கூடிய கட்டம் மனப்பான்மை எனக்கு இருந்தது என்பது அவருக்குத் தெரியும். ஆனால் அதைத் தடுத்தவர்கள் எல்லாம் இன்றைக்கு என்னிடமும் இல்லை; அவரிடமும் இல்லை; எம்.ஜி.ஆரை என்னிடமிருந்து பிரிக்க வேண்டுமென்று யார் அன்றைக்கு கருதினார்களோ, அதற்காக திட்டங்களை வகுத்தார்களோ, அதை நிறைவேற்றிக் கொண்டார் களோ, நான் வேண்டாம், வேண்டாம் என்று தடுத்துக் கொண்டி ருக்கும்போதே செய்தியை பத்திரிகையாளர்களிடம் யார் வெளியிட்டார்களோ அவர்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும்.

ஆனால் அன்றைக்கு நானும் எம்.ஜி.ஆரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்று கருதிய என்னுடைய அன்பிற்குரிய சகோதரர் ஆர்.எம்.வீ. அவர்கள் அன்றைக்கு இருந்த அதே நிலையிலேதான் இன்றைக்கும் இருக்கிறார். (கைதட்டல்) அவர் என்னிடமிருந்து ஒதுங்கியிருந்த நேரம், பிரிந்திருந்த நேரம்; பல பேர் என்னைக் கேட்டார்கள். ''என்ன ஆர்.எம்.வீ. கொள்கையிலே நிரம்பப் பிடிப்புள்ளவர் ஆயிற்றே? உங்களைப் போலவே இளமைக் காலத்திலேயே இந்த இயக்கத்திற்கு வந்தவர் ஆயிற்றே? நீங்கள் எப்படி ராமசுப்பையா என்கின்ற கழகத்தினுடைய முதுபெரும் கிழவரை அடிக்கடி நினைவு கூறுவீர்களோ அதைப் போல இவரையும் நினைவு கூறுபவராயிற்றே? அவர் எப்படி நின்று

விட்டார் உங்களோடு வராமல்?'' என்று கேட்டபோது நான் சொன்னேன். ''இதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றேன். ''நான் வீரப்பனைப் பாராட்டுகிறேன்'' என்று சொன்னேன்.

நண்பர்கள் திகைத்துக் கேட்டபோது நான் அவர்களிடம் குறிப்பிட்டது, ''எம்.ஜி.ஆர். அவர்கள் ஆர்.எம்.வீ. அவர்களை மிகவும் நேசிக்கிறார். தனிப்பட்ட முறையிலே ஆர்.எம்.வீ. அவர்களுடைய வாழ்க்கை உயருவதற்கு எம்.ஜீ.ஆர். அவர்கள் காரணம் என்பதை நானும் அறிவேன்; நாடும் அறியும். (கைதட்டல்) எம்.ஜி.ஆரை விட்டுவிட்டு அவர் என்னோடு வந்திருந்தால்தான் எனக்கு வீரப்பன் மீது அதிருப்தி வருமே தவிர - வராத காரணத்தால் அவர் மீது எனக்கிருந்த அன்பு பல மடங்கு அதிகமாகப் பெருகியிருக்கிறது'' என்று அன்றைக்கே சொன்னவன் நான்.

ஏதோ இந்த அவையிலே கூட்டத்திற்காக சொல்கின்ற விஷயமல்ல. என்னோடு நெருங்கியுள்ள நண்பர்களிடத்திலே நான் சொல்லி - வீரப்பன் அவர்களுக்கும் இது அன்றைக்கே தெரியும். அவர் அன்று தொட்டு இன்று வரையிலே எம்.ஜி.ஆர். அவர்களிடத்திலே பல மனமாறுபாடுகள் அவருக்கும் வீரப்பன் அவர்களுக்கும் ஏற்பட்டாலுங்கூட, அவருடைய ஒரே இலட்சியம் எம்.ஜி.ஆர் . அவர்கள் நன்றாக இருக்க வேண்டும் (கைதட்டல்) எம்.ஜி.ஆர். அவர்களுடைய வாழ்க்கை ஒளிவிட்டுப் பிரகாசிக்க வேண்டும் அதைப் பறிக்க யார் வந்தாலும் அதற்குத் தடைக்கல்லாக தான் நிற்க வேண்டுமென்று விரும்பியவர்தான் ஆர்.எம்.வீ. அவர்கள்.

அதிலே அவர்கள் கடைசி வரையிலே உறுதியாக இருந்து வெற்றியும் பெற்றார்கள். எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திற்குப் பிறகு வேண்டுமானால் எம்.ஜி.ஆருடைய எண்ணங்களை, எம்.ஜி.ஆருடைய ஆசைகளை நிறைவேற்றுவதற்கு இன்றைக்கு ஆர்.எம்.வீ. அவர்கள் ஒரு பெரும் படையைத் திரட்டி அதற்காகப் பாடுபட வேண்டியிருக்கிறதென்றாலுங்கூட அன்றைக்கு அதில்

முழு வெற்றி பெற்றிருக்கிறார். இன்றைக்கும் அதே உறுதியோடு இன்றைக்கு எம்.ஜி.ஆருடைய வாரிசு யார் என்றால் அவருடைய வீட்டிலே இருக்கின்ற மக்கள் அல்ல. வேறு யாரும் அல்ல; எம்.ஜி.ஆர். அவர்களுடைய உண்மையான வாரிசாக - அழுத்தம் திருத்தமான வாரிசாக - திட்டவட்டமான வாரிசாக இன்றைக்குத் திகழக்கூடிய ஒரே நண்பர் ஆர்.எம்.வீ. அவர்கள்தான் (பலத்த கைதட்டல்) என்பதை நாடு மிக நன்றாக அறியும்.

அதனால்தான் இன்றைக்கு அறிவியக்கத்தோடு ஆன்மீகத்தை கலக்கிறார் என்று நான் சொல்வதையெல்லாம் உன்னிப்பாகக் கேட்டுக் கொண்டிருந்து அதை இங்கே திரும்பச் சொன்னார் - கலைஞர் எப்பொழுது பேசினாலும் - வீரப்பனுக்கு மிகப் பிடித்தமான ஆன்மீகம் என்று சொல்வார் - என்று இங்கே குறிப்பிட்டார்கள். ஆன்மீகமாக இருந்தாலும் அல்லது பகுத்தறிவாக இருந்தாலும் அதில் இரண்டிலும் தமிழ் உணர்வு இருந்தால் அதை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். தமிழில் அர்ச்சனை வேண்டுமென்று சொல்கிறோம். அதை தந்தை பெரியாரும் ஆதரித்தார். தமிழிலே அர்ச்சனை செய்யத்தான் வேண்டுமென்பதை பெரியாரும் ஆதரித்தார். அப்போது சில பேர் பெரியாருக்குத்தான் கோயிலே பிடிக்காதே, பிறகு ஏன் தமிழில் அர்ச்சனை வேண்டும் என்கிறார் என்று கேட்டார்கள். என்னையும் கேட்டார்கள். ''நீ பெரியாரின் மாணவன் ஆயிற்றே. பிறகு ஏன் தமிழில் கோவிலில் அர்ச்சனை கேட்கிறாய்?'' என்று கேட்டார்கள். கோவிலைப் பற்றியது கொள்கைப் பிரச்சினை. தமிழ் அர்ச்சனை என்பது மொழிப் பிரச்சினை. உரிமைப் பிரச்சினை. இது உரிமையின்பாற்பட்டது; அது கொள்கையின்பாற்பட்டது. கோவிலுக்குச் செல்வதா வேண்டாமா என்பது கொள்கையின்பாற்பட்டது. அந்தக் கோவில் இருக்கின்ற வரை, அந்தக் கோவிலுக்குள் பயன்படுத்தவேண்டியது தமிழா அல்லவா என்று கேட்டால் தமிழ்தான் என்று சொல்வது என்னுடைய உரிமைப் பிரச்சினை.

இதைப் பெரியாரும் சொன்னார். பெரியார் வழி வந்த நாங்களும் சொல்கிறோம். எனவேதான் ஆன்மீக வாயிலாகவும் தமிழ் வளருமேயானால், தமிழ் உணர்வு வெளிப்படுமேயானால், தமிழ் உணர்வு மேலும் மேலும் கூர்மைப்படுமேயானால், அந்த ஆன்மீகத்தையும் நாங்கள் வரவேற்கத் தயாராக இருக்கிறோம். அத்தகைய ஆன்மீகம் வாழ வேண்டும், வளர வேண்டுமென்று விரும்புகின்றவர்கள் நாங்கள்.

எப்படியோ தமிழ் உணர்ச்சி இன்றைக்கு மங்கிப் போய்க் கொண்டிருக்கின்ற காலக்கட்டம். - நாமெல்லாம் ஒரே இனம், ஒரு சாதி, தமிழ் சாதி என்பது மறைந்து பல சாதிகளாகப் பிரிந்திருக்கின்ற இந்தக் காலக் கட்டத்தில் நமக்கு இராமனுசருடைய ஆன்மீகமும் தேவைப்படுகிறது; அறிஞர் அண்ணா அவர்களுடைய அறிவு இயக்கமும் தேவைப்படுகிறது. தந்தை பெரியார் அவர்களுடைய சுயமரியாதை இயக்கமும் தேவைப்படுகிறது. உத்தமர் காந்தியடிகளுடைய அகிம்சா தத்துவமும் தேவைப்படுகிறது. புத்தருடைய சமத்துவக் கொள்கையும் தேவைப்படுகிறது.

இப்படி ஒரு இனம் - ஒரு சமுதாயம் உய்விக்கப்பட வேண்டுமேயானால், ஒரு சமுதாயத்தை வாழ வைக்க வேண்டுமேயானால், ஒரு சமுதாயத்தை ஒற்றுமைப்படுத்த வேண்டுமேயானால் எங்கெங்கிருந்து என்ன என்ன கருவிகள் கிடைக்கிறதோ அந்தக் கருவிகளையெல்லாம் பெற்றுத்தான் தீரவேண்டும். அந்தக் கருவிகளை ஒழுங்காகப் பயன்படுத்தினால், செம்மையாகப் பயன்படுத்தினால் நம்முடைய எண்ணங்கள் நிறைவேறும்.

அந்த ஒரு எண்ணத்தின் அடிப்படையிலே ஆர்.எம்.வீ. அவர்கள் இன்றைக்கு இந்த ஆழ்வார் மையத்திலே தன்னுடைய முயற்சிகளை செய்துகொண்டிருக்கின்றார். அந்த முயற்சிகளுக்கு அவருக்கு இன்றைக்கு வெற்றிகளும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. நாமும் அவரை வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

72 ஆண்டு - 72ஐ இன்றைக்கு 74 வாழ்த்துகிறது (கைதட்டல்) நம்முடைய மூப்பனார் அவர்கள் தனக்கு வாழ்த்துவதற்கு வயதில்லை என்று சொல்லி - தான் இளைஞர் என்பதை இங்கே நிரூபித்துக் காட்டினார். வாழ்க என்று சொல்ல வயதானவர்களுக்குத்தான் உரிமை என்றில்லை. சின்னக் குழந்தைகள் கூட பெரியாரைப் பார்த்து - பெரியார் வாழ்க என்று சொல்லலாம்; காந்தி அடிகள் வாழ்க என்று சொல்லலாம். அண்ணா வாழ்க என்று சொல்லலாம். அதைப்போல வயது குறைவாக இருந்தாலுங்கூட அந்த உள்ளத்திலிருந்து வருகின்ற உணர்வுகள் தான் முக்கியம். இங்கே அமர்ந்திருக்கின்ற அத்தனை பேருடைய உள்ளமும் மேடையிலே இருக்கின்ற எங்களுடைய உள்ளமும் ஒன்றாகி ஆர்.எம்.வீ. அவர்களை 72 ஆண்டுகள் அல்ல; இராமானுசர் வாழ்ந்தது போல 120 ஆண்டுகளுக்கு மேலும் நீங்கள் வாழ வாழ்க என்று வாழ்த்துகின்றேன்.

- முரசொலி 10.9.97

அன்னை தெரசாவின்
படத்திறப்பு

வேறு பல அலுவல்கள் காலை முதல் இருந்த காரணத்தால் சற்று காலந்தாழ்ந்து வர நேரிட்டது. அந்த அலுவல்களை மீண்டும் தொடர வேண்டிய காரணத்தால் இடையிலேயே அஞ்சலி செலுத்தி விட்டு செல்ல வேண்டிய சூழ்நிலையில் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்

அன்னை தெரசா மறைவையொட்டி சென்னைத் தொலைக் காட்சியிலும் வானொலியிலும் என்னிடம் இரங்கல் உரை கேட்ட போது நான் சொன்ன வாசகம் ''பருந்துகளும் கழுகுகளும் வட்ட மிடும் இந்த உலகத்தில் சமூக சேவை எனும் தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த அன்னப்பட்சி மறைந்துவிட்டது'' என்று குறிப்பிட்டேன்

அன்னம் ஒரு பறவையையும் குறிக்கும். அன்னம் அன்னை தெரசாவையும் குறிக்கும். அன்னம், அவர்கள் ஏழையெளிய மக்களுக்கு அளித்த உணவையும் குறிக்கும். இப்படி எல்லா வகையிலும் வெண்புறாவாக - சமாதானப் பறவையாக ஏழைகளை உறவினராகக் கொண்டிருந்த - நலிந்த மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிய அன்னை தெரசா அவர்கள் மறைந்து விட்டார் என்று சொல்வதைவிட நம் அனைவருடைய - உலக மக்கள் அனைவருடைய உள்ளத்திலும் நிறைந்துவிட்டார் என்று சொல்வதுதான் பொருத்தமுடையதாகும்.

அன்னை அவர்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்தில் 1962 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் ஆசியாவின் ஜோதி பண்டித ஜவகர் லால் நேரு அவர்கள் பிரதமராக இருந்த அந்தக் காலத்தில் சிறந்த சமூக சேவகிக்கென் 'பத்மஸ்ரீ' விருது வழங்கப்பட்டது பெரிதல்ல - அந்த விருதை வாங்கிச் சென்ற அன்னை தெரசா அவர்களைப் பற்றி - பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்டதுதான் என்றென்றைக் கும் அழியாத வரிகளாக விளங்கிக் கொண்டிருக்கின்றது.

குடியரசுத் தலைவருடைய கையிலே இருந்து அன்னை தெரசா அவர்கள் விருதினை வாங்கிச் சென்ற காட்சி கொடிய நோய் வாய்ப்பட்ட ஒரு குழந்தையை தன் இரு கைகளாலும் பரிவோடு ஏந்தி எடுத்துச் செல்வது போன்ற ஒரு காட்சியை நினைவுறுத்தியது என்று குறிப்பிட்டார்கள். அது மாத்திரமல்ல; ''அந்தக் காட்சியைக் கண்டபோது என் கண்ணீர்த் துளிகளை கட்டுப்படுத்துவது எனக்கு மிகவும் அரிதாக இருந்தது. அப்படியே உருகிப் போனேன்'' என்று தன்னுடைய சகோதரி விஜயலட்சுமி பண்டிட் அவர்களிடம் நேரு சொன்னதாக ஒரு குறிப்பு.

இன்னொன்று. மேற்கு வங்கத்தின் முதலமைச்சர் பி.சி. ராய், முதலமைச்சர்களிலேயே மிகுந்த புகழ் வாய்ந்தவர். பண்டித நேரு அவர்களை பெயர் சொல்லி அழைக்கக் கூடிய அளவிற்கு பண்டித நேருவிடம் பழகியவர். அவர் அன்னையினுடைய அறப்பணி களைக் குறித்து உதிர்த்த வார்த்தைகள்; பி.சி.ராய் அவர்களுடைய 80வது பிறந்த நாள், அப்பொழுது அவர் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அன்னை தெரசாவைப் பற்றி செய்தியாளர்கள் மேற்கு வங்க முதல்வராக இருந்த பி.சி.ராய் அவர்களிடம் கேட்டபோது - பி.சி.ராய் கூறுகிறார். - அந்த வாசகத்தை அப்படியே படித்துக் காட்டுகிறேன்.

''இந்த என் பிறந்தநாளில் இந்த முதிய வயதில் முதன் முத லாக யாரைப் பற்றிய நினைவு எனக்கு வந்தது தெரியுமா?

நாட்டின் விடுதலைக்காக எந்தத் தலைவரோடு ஒன்றி நின்று போராடினேனோ அந்த என் அருமைத் தலைவர் மகாத்மா காந்தி அவர்களின் நினைவுகூட எனக்கு வர வில்லை. என் உயிருக்குயிரான உற்ற தோழர் ஜவகர்லால் நேரு அவர்களின் எண்ணமும், என் நெஞ்சில் எழ வில்லை. ஏன், எனக்கு நெருக்கமான என் உற்றார், உறவினர் எவரைப் பற்றிய சிந்தனையுமே எனக்கு வர வில்லை. ஆனால் எனது அலுவலகத்துக்குச் செல்லும் அந்த மாடிப்படிகளில் நான் காலடி வைத்து ஏறும்போது ஒரே ஒரு எளிய உருவம் மட்டுமே என் நெஞ்சம் முழுவ தும் நிறைந்திருந்தது. திக்கற்ற ஏழைகளையும், நோயாளி களையும், குழந்தைகளையும் காப்பாற்றுவதற்காக, அவர் களின் கண்ணீரைத் துடைப்பதற்காக தம் வாழ்வையே ஒப்படைத்துக் கொண்டு அல்லும் பகலும் அயராது உழைக்கிறாரே அந்த தெரசாவின் மெலிந்த வடிவமே என் இதயம், மூளை எல்லாவற்றையுமே சுற்றி வளைத்துக் கொண்டுவிட்டது''

என்று பி.சி.ராய் பாராட்டுகிறார்.

பிறந்தநாளில் காந்தி அடிகளை நினைக்கவில்லை. பண்டித நேருவை பிறந்த நாளில் நினைக்கவில்லை. அன்னை தெரசாவின் உருவம்தான் தன் கண் முன்னால் நின்றது என்று மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் பி.சி. ராய் சொன்ன இந்த வாசகம் அவருக்கு மாத்திரம் சொந்தமானதல்ல. நம் அனைவருக்கும் சொந்தமான ஒரு வாசகமாக ஆகி விட்டிருக்கின்றது.

அன்னை அவர்கள் நம்மை விட்டு நீங்கிவிட்டார், பிரிந்து விட்டார் என்று யாரும் கருதத் தேவையில்லை. அவருடைய உழைப்பு; ஓய்வற்ற சேவை, ஏழை மக்கள்பால் கொண்டிருந்த இரக்கம், அன்பு நோயாளிகளிடம் காட்டிய பரிவு, நலிந்தோரிடத் திலே அவர் கொண்டிருந்த நாட்டம் இவைகள் எல்லாம் அன்னை யின் வடிவிலே நம்முடைய உள்ளத்திலே பதிந்திருக்கின்றன.

அவைகளைச் செயற்படுத்துவது ஒன்றே அன்னை நம்மிடத் திலே விரும்பியது. மலர்களை விட மென்மையான உள்ளத்தோடு ஏழையெளிவர்கள்பால் நாம் காட்டுகின்ற அன்பும் கருணை யும்தான் அன்னை தெரசா விரும்பியது, அதை செய்வோம். அந்த வழி நடப்போம். அதையே நம்முடைய இந்த இரங்கல் நிகழ்ச்சி யிலே மேற்கொள்கிற சூளுரையாகக் கொள்வோம்.

– முரசொலி 11.9.97

பாரதியார் விழா

தம்பி டி.கே.எஸ். கலைவாணன் குறிப்பிட்டதைப் போல சற்றொப்ப 27 ஆண்டுகளுக்குப் பிறகு பாரதி விழா நிகழ்ச்சியிலே கலந்து கொள்கிற ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கிறேன் என்றாலும் கூட, அந்த வாய்ப்பு பாரதி சங்கத்தின் சார்பாக கிடைத்த வாய்ப்பு என்பதுதான் உண்மையே அல்லாமல் - இதற்கிடையே பல கவியரங்குகளில், பாரதி பற்றியும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பற்றியும் எடுத்துச் சொல்கிற அரிய வாய்ப்புகளை நான் பெற்றிருக்கிறேன் என்பதை இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

கல்கி ராஜேந்திரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அரங்கம் நிரம்பவில்லை என்பது குறித்து அதற்கொரு காரணமும் கூறினார்கள். அலுவலகத்திலிருந்து வருகிறவர்கள் எல்லாம் சாய்வு நாற்காலியிலே அமர்ந்து கொண்டு தொலைக்காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்; அதனால்தான் அரங்கம் நிரம்பவில்லை என்றார்கள்.

நேற்று முன்தினம் கலைவாணர் அரங்கிலே ஆர்.எம்.வீ. அவர்களுடைய பிறந்தநாள் விழா, ஆழ்வார் மையத்தின் விழா, சாவி போன்றவர்களுக்கு விருது வழங்குவிழா நடைபெற்றது. அன்று கலைவாணர் அரங்கம் நிரம்பித்தான் இருந்தது. அன்று யாரும் தொலைக்காட்சிக்கு முன்னால் உட்கார்ந்து கொண்டு படம் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. பாரதி சங்கம் கொஞ்சம் சிக்கனத்தை கைவிட்டு, கை சுடுமே என்று பார்க்காமல், தாராளமாக

விழாவினை நடத்தினால் இந்த மன்றமும் போதாது, கலைவாணர் அரங்கமும் போதாது; பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபமே தேவைப்படும் என்பதை நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற விழாக்கள் ராஜேஸ்வரி மண்டபத்தில் நடந்தால், அந்த விழா நடப்பதை விளம்பரம் மூலமாக அறியாதவர்கள்கூட சாலை வழியாகச் செல்பவர்கள் ஏதோ ஒலிபெருக்கி ஓசை கேட்கிறதே, என்னவென்று பார்ப்போம் என்று மண்டபத்திற்குள் நுழைவார்கள். இந்த மண்டபம் இருக்கிற அமைப்போ உள்ளே என்ன நடக்கிறது என்று வெளியே போகிறவர்களுக்கு தெரியாத நிலையிலே உள்ள அமைப்பு (கைதட்டல்).

இதை நான் நண்பர் சாவி அவர்களிடம் சொன்னேன். இதிலே ஏன் இவ்வளவு சிக்கனம், கொஞ்சம் விளம்பரம் செய்திருக்கக் கூடாதா? பாரதியார்தான் சிக்கனமாக வாழ வேண்டிய நிலையிலே இருந்தார்; பாரதி விழா நடத்துபவர்களும் அந்த நிலையிலா இருக்கிறார்கள்? என்று நான் அவர்களிடத்தில் கேட்டேன். இருந்தாலும் இங்கே வந்துள்ள ஒவ்வொருவரையும் ஆயிரம் பேருக்கு சமமாகக் கருதிக்கொள்ள வேண்டும் என்று நண்பர் கல்கி ராஜேந்திரன் சொன்னார். (சிரிப்பு) இதிலே என்ன? ஆசைப்படுவதுதான் ஆசைப்படுகிறோம்; ஆயிரம் பேர் என்ன? (பலத்த சிரிப்பு) ஒவ்வொருவரையும் பத்தாயிரம் பேருக்கு, லட்சம் பேருக்கு சமமாக எண்ணிக்கொண்டு நான் பேசுவதில் எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது.

இந்த விழா நிகழ்ச்சியிலே திரு. மகாலிங்கம் அவர்களாலும், கவிதை படித்த திருமதி ஆண்டாள் பிரியதரிசினி அவர்களாலும் சில கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அமைச்சர் வருகிற விழாக்களில் கோரிக்கைகள் இடம் பெறுவது இயல்பு. அதிலும் முதலமைச்சரே வந்தால் ஒருவேளை கோரிக்கை வைக்காவிட்டால் கோபித்துக் கொள்வாரோ என்ற அச்சத்தின் காரணமாக கோரிக்கைகளை வைக்கிறார்கள்.

நண்பர் மகாலிங்கம் வைத்த கோரிக்கை - இந்தியாவிலே பல்வேறு பகுதிகளில் பயனற்றுப் போகின்ற தண்ணீரையெல்லாம் பயனுள்ள பாசனத்திற்கு - பாதுகாக்கப்பட்ட குடிநீருக்கு திருப்பி விடுகின்ற முயற்சியில் இந் நாட்டிலே ஆட்சி நடத்துவோர் ஈடுபட வேண்டுமென்றார்.

சுதந்திரம் பெற்று இந்த ஐம்பதாண்டு காலத்தில் உலகத்திலே இருக்கின்ற பல்வேறு நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியா ஒரு தனிப்பெரும் வேளாண்மைத் தொழிலை நம்பியிருக்கின்ற நாடாகும். எனவே, சுதந்திரம் பெற்றவுடனேயே இது வேளாண்மை கொழிக்கின்ற நாடு என்பதைச் சிந்தித்து, அதற்கேற்ற வகையிலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்குமேயானால், இந்நேரம் கங்கையும் காவிரியும் ஒன்றாக ஆகி இந்தியா முழுவதிலும் வேளாண்மைச் செல்வம் கொழிக்கின்ற நிலை ஏற்பட்டிருக்கும். என்ன காரணத்தாலோ அந்த வகையிலே சிந்திக்காமல், வேறு வகையிலே சிந்தித்து பல தொழிற்சாலைகள், கனரகத் தொழிற்சாலைகள், கனிவளத் தொழிற்சாலைகள் என்ற அளவிலே ஈடுபட்ட காரணத்தாலும், இந்த நதிகளை ஒன்றாக்கும் திட்டத்தைப் பற்றி சிந்திக்காமலேயே இருந்து விட்ட காரணத்தாலும், இதை இரண்டாவது நிலையிலே வைத்துவிட்ட காரணத்தாலும் - நாம் இன்றைக்கு அந்தப் பயனைப் பெற முடியவில்லை.

ஒன்றை நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காவிரிப் பிரச்சினைக்காக தமிழக அரசு சார்பில் நானும், கர்நாடக அரசின் சார்பில் நண்பர் வீரேந்திர பட்டீல் அவர்களும், கேரள அரசின் சார்பில் நண்பர் அச்சுதமேனன் அவர்களும் டெல்லியிலே பலமுறை மத்திய அமைச்சர்கள் முன்னால் பேச்சுவார்த்தை நடத்தியபோது - மத்தியிலே நீர்ப்பாசனத் துறை அமைச்சராக கே.எல்.ராவ் அவர்கள் இருந்த காலக்கட்டத்தில் - இந்தப் பிரச்சினையை நான் எழுப்பினேன்.

''ஏன் காவிரியையும் கங்கையையும் ஒன்றாக்குகின்ற திட்டத்தை நிறைவேற்ற முயற்சி மேற்கொள்ளக் கூடாது? அப்படி

நிறைவேற்றப்பட்டால், இந்தப் பிரச்சினைகள் எல்லாம், மாநிலத் திற்கு மாநிலம் ஏற்படுகின்ற மனக்கசப்புகள் எல்லாம் கூட ஏற்படாத ஒரு தன்மை உருவாகுமே'' என்று கேட்ட போது - ''இதைப் பலர் என்னிடம் கேட்கிறார்கள்; அதற்காகவே இன்றிரவு என் வீட்டில் ஒரு விருந்துக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீயும், அச்சுதமேனனும், வீரேந்திர பட்டீலும், இன்னும் சில முதலமைச்சர் களும் அங்கே அழைக்கப்படுகிறீர்கள்; வாருங்கள்'' என்றார்.

அன்று இரவு விருந்து முடிந்ததும், ஒரு பெரிய இந்திய தேசப் படத்தை அவர்கள் எங்கள் முன் தொங்கவிட்டு, அரை மணி நேரம் கங்கை, காவிரி இரண்டையும் ஒன்றாக ஆக்குகின்ற அந்தப் பிரச்சினையைப் பற்றி கே.எல்.ராவ் எங்களுக்கு விளக்கமளித்தார். எத்தனை உயரமான இடங்களை, எத்தனை பள்ளமான இடங்களை எல்லாம் தாண்டி கங்கையை காவிரியோடு இணைக்க வேண்டி யிருக்கிறது என்ற அந்த வர்ணனைகளை எல்லாம் தந்துவிட்டுச் சொன்னார். ''ஒரு இடத்திலே உள்ள மேட்டைக்கடக்க - தண்ணீர் மேட்டிலே ஏறி, மறுபடியும் கீழே வந்து சமவெளிக்கு வருவ தென்றால், அந்த முதல் பம்பிங் ஸ்டேஷனுக்குத் தேவைப்படுகின்ற மின்சாரம் - இன்றைக்கு இந்தியா முழுவதும் பயன்படுத்துகின்ற மின்சாரம் அதற்கு மட்டும் தேவை'' என்றார். அதிலிருந்து அது எவ்வளவு சாத்தியமற்ற திட்டம் என்பதை அவர்கள் விளக்கி னார்கள்.

ஆனால், இதை சுதந்திரம் பெற்ற அந்தக் காலகட்டத் திலேயே சிந்தித்து செயல்படுத்த முனைந்திருந்தால், அந்த மின்சாரத்தையும் உருவாக்கியிருக்க முடியும். நான் அப்போது சொன்னேன். ''கங்கையிலிருந்து காவிரியை இணைக்க முடியா விட்டாலுங்கூட, தற்காலிகமாக கோதாவரியிலிருந்து காவிரிக்கு ஒரு இணைப்பு தந்தால் எதிர்காலத்தில் வேண்டுமானால் கங்கையி லிருந்து கோதாவரிக்கு இணைப்பு ஏற்படுத்தி, பிறகு காவிரி எண்ணத்தை முழுமைப்படுத்தலாம், அந்த ஏற்பாட்டையாவது

செய்யுங்கள்'' என்று நான் கேட்டேன். அதற்கு அவர் ''நல்ல யோசனைதான், அதைப்பற்றி யோசிக்கலாம்'' என்றார்.

அதற்குப் பிறகு அந்தத் திட்டமோ, ஏற்பாடுகளோ எதுவும் நடைபெறாமல் அது கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. இப்பொழுதும் அந்த முயற்சியிலே நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஆனால் அதற்கான நிலைமைகள் முற்றாக இன்னும் நிறைவேற முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்போதைக்கு காவிரி இங்கே வந்தாலே போதுமென்ற நிலைமை இருப்பதால், இதைத் தீர்த்துக் கொண்டு தான் மற்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேச முடியும்.

இப்போது நாம் அதைப்பற்றி பேசினால், திரு. மகாலிங்கம் சொன்னதைப் போல, கங்கையையும் காவிரியையும் இணையுங்கள்; கோதாவரியையும் காவிரியையும் இணையுங்கள் என்று சொன்னால், உடனடியாக கர்நாடக முதலமைச்சர் நண்பர் படேல் அவர்கள், ''அதை முடித்துக் கொண்டு வாருங்கள்; பிறகு காவிரி பற்றி பார்த்துக் கொள்ளலாம்'' என்று கூறிவிடுவார். எனவே முதலில் நாம் காவிரிப் பிரச்சினையை முடித்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அடுத்து, தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும்; பயிற்று மொழியாக வேண்டும் என்ற கருத்தை மகாலிங்கம் சொன்னார். அறிஞர் அண்ணா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது அன்றைக்கு அவையிலே உறுப்பினராக இருந்த சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் உரையாற்றிய நேரத்தில் இந்தக் கருத்தை அழுத்தந்திருத்தமாக தெரிவித்த நேரத்தில், அண்ணா அவர்கள் எழுந்து ''இன்னும் ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக தமிழை பயிற்று மொழியாக, ஆட்சி மொழியாக ஆக்கியே தீருவேன்'' என்று உறுதியளித்தார்.

உறுதியளித்த அண்ணா அவர்கள் 2 ஆண்டுக் காலத்தில் மறைந்தார்கள். அந்தப் பொறுப்பை நான் சுமந்தேன். அப்போது 70 அல்லது 71ஆம் ஆண்டு தமிழ் பயிற்று மொழி என்று அறிவித்

தேன் அண்ணா அவர்களுடைய சட்டப்பேரவை வாக்குறுதியை அடிப்படையாகவைத்து ''தமிழை பயிற்று மொழியாக்குகிறோம்'' என்று அறிவித்தேன். அதற்கான நடைமுறைகள் எல்லாம் தொடங்கப்பட்டன. ஆனால் தமிழ்நாட்டில் உள்ள எல்லா கல்லூரிகள், பள்ளிகளின் மாணவர்களும் பெரும் போராட்டத்திலே ஈடுபட்டு, தமிழகமே நிலைகுலைந்து போகக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. அதற்குப் பின்னால் சில அரசியல் கட்சிகளும் இருந்தன. பல தலைவர்களும் இருந்தார்கள். அவர்கள் எல்லாம் யார் யார் என்பது மகாலிங்கம் அவர்களுக்குத் தெரியும். எனவே, நான் இந்த மேடையை அரசியல் மேடையாக ஆக்க விரும்பாமல், அதனை வெளியிடாமல் விட்டு விடுகிறேன்.

அப்போது சிலம்புச் செல்வர் என்னைச் சந்தித்து ''தமிழைக் காப்பாற்றுவது பிறகு இருக்கட்டும். முதலில் ஆட்சியைக் காப்பாற்றுவோம்; ஆட்சியைக் காப்பாற்றினால்தான் எப்போதாவது தமிழைக் காப்பாற்ற முடியும்'' என்றார். ''என்ன செய்யலாம்'' என்று கேட்டேன். அப்போது அவர், ஒரு குழுவை நியமித்து, இந்தத் தமிழ் பயிற்று மொழியைப் பற்றி ஒரு அறிக்கையை அந்தக் குழுவிடம் பெறுங்கள் என்று சொல்லி - அதன் பிறகுதான் ஏ.எல். முதலியாரைக் கொண்ட குழுவை அமைத்து - அந்தக் குழுதான் தமிழ் பயிற்று மொழி என்பது கட்டாயமில்லை. யார் யாருக்கு விருப்பம் இருக்கிறதோ அவர்கள் தமிழை பயிற்று மொழியாக ஏற்றுக் கொள்ளலாம். அதற்கு தனிச் சலுகைகள், அவர்களுக்கு சிறப்பு ஆதாயங்கள் கிடைக்கும் என்ற அளவிலே அந்த மொழிப் பிரச்சினை அன்றைய தினம் ஓரளவிற்கு நிதானப்படுத்தப்பட்டது.

ஆனால் இன்றைக்கு ஏற்பட்டுள்ள சூழ்நிலை அன்றைக்குள்ள சூழ்நிலை அல்ல. இன்றைக்கு அவர்கள் இந்த மேடையிலே தமிழை பயிற்றுமொழியாக ஆக்க வேண்டும், ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில் நீங்கள் எல்லாம் கையொலி எழுப்பினீர்கள். இது ஒரு பெரிய மாற்றம். முன்பெல்

லாம் நாங்கள் அந்தக் கையொலியைப் பெற்றிருக்க முடியாது. இன்றைக்கு அந்தக் கையொலி எழும்பிய காரணத்தால் எங்களுக் கெல்லாம் ஒரு நம்பிக்கை (கைதட்டல்) படிப்படையாக ஆனால் உறுதியாக தமிழகத்திலே தமிழ்தான் கோலோச்சும் என்ற நிலையை இந்த அரசு உருவாக்கும் (பலத்த கைதட்டல்) என்பதை பாரதி விழாவில் நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதிலே என்ன சிக்கல் என்றால் - இந்தியாவின் ஆட்சி மொழியாக இந்தி - போனால் போகிறதென்று ஆங்கிலம் இருக் கின்ற இந்தக் காலக் கட்டத்தில் - ஆங்கிலத்தை அறவே அகற்றி விட்டால் இந்தியின் ஆதிக்கம்தான் வந்து சேரும்.

ஒன்றைச் சொல்கிறேன். அண்ணா அவர்கள் சட்ட மன்றத் திலே எதிர்க்கட்சித் தலைவர். நான் அவருக்குப் பக்கத்திலே அமர்ந்திருக்கிறேன். முதலமைச்சராக பெருந்தலைவர் காமராஜர் எதிரே அமர்ந்திருந்தார். கம்யூனிஸ்ட் கட்சியின் மிக முக்கியமான தலைவரான எம். கல்யாண சுந்தரம் தமிழை பயிற்று மொழியாக ஆக்க வேண்டுமென்று காரசாரமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்.

அப்பொழுது பெருந்தலைவர் காமராஜர் அண்ணாவையும் என்னையும் மேஜைக்கிடையே கையை அசைத்து எங்களை அழைத்துச் சொன்னார். ''என்ன கம்யூனிஸ்டுகள்தான் சொல்கிறார் கள் பயிற்றுமொழி, பயிற்றுமொழி என்று; நீங்கள் அதைக் கேட்டுக் கொண்டு, அதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே; ஆங்கி லத்தை அகற்றிவிட்டா அந்த இடத்திலே இந்தி வந்து குந்திக் கும்மே'' என்று அவருக்கேயுரிய மொழியில் சொன்னார். அவை முடிந்து அண்ணாவும் நானும் காரில் வரும்போது அண்ணா என்னிடம் ''எவ்வளவு பெரிய சித்தாந்தத்தை காமராஜர் எவ்வளவு எளிய மொழியிலே சொன்னார் பார்த்தாயா?'' (கைதட்டல்) என்று சொன்னார்.

இவைகளையெல்லாம் நாம் சிந்திக்க வேண்டும். ஆங்கி லத்தை அறவே எடுத்துவிட்டால் தமிழ்தான் இன்றைக்கு ஆட்சி

மொழியாக இருக்க முடியுமா என்றால் முடியாது. ஏனென்றால் தமிழ்நாட்டிலே இருக்கும் பிள்ளைகள் பதவிகள் பெறவேண்டுமேயானால், உத்தியோகம் பெற வேண்டுமேயானால், ஆட்சி மொழியாக இந்தி மொழியை அல்லது நம்முடைய போராட்டத்தின் காரணமாக இருக்கின்ற ஆங்கில மொழியை இரண்டில் ஒன்றைக் கற்றுத் தீரவேண்டியிருக்கிறது.

எனவேதான் நாம் ஒரு மொழிக் கொள்கையை வகுத்திருக்கிறோம். இந்தியாவிலே அரசியல் சட்ட அட்டவணையிலே இருக்கின்ற ஆட்சி மொழிகள் அத்தனையும், தேசிய மொழிகள் அத்தனையும் இந்தியாவின் ஆட்சி மொழிகளாக ஆக வேண்டும்; எல்லா மொழிகளாலும் அந்தத் தகுதியைப் பெற முடியுமா என்று கேட்டால், எல்லா மொழிகளும் பிறகு ஆட்சி மொழிகளாகட்டும்; அதுவரையிலே எல்லாத் தகுதியையும் பெற்ற தமிழ் - ஆட்சி மொழியாகட்டும் என்று கூறுகிறோம். அப்படி ஒரு நிலையை அகில இந்திய அளவிலே - மத்திய அளவிலே ஏற்படுத்தினால் தான் இங்கே நாம் தமிழை இன்னும் வேகமாக ஆட்சி மொழியாக ஆக்குவதிலே பொருள் இருக்க முடியும். அர்த்தம் இருக்க முடியும்.

அதற்காக ஏதோ அந்தக் கொள்கையிலே நாம் விட்டுக் கொடுத்து விட்டோம் என்றோ, தமிழ் கட்டாயமாக ஆக்கப்படாமல் போய்விடும் என்றோ யாரும் கருதத் தேவையில்லை. தமிழ் ஆட்சி மொழியாக ஆக வேண்டும் என்பதற்காகத்தான் தமிழுக்காக என்றே ஒரு தனி அமைச்சகமே, தனி அமைச்சரே இன்றைக்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறார். அந்த அமைச்சகத்தின் சார்பில் தமிழ் வளர்ச்சி, பண்பாடு இவைகள் மாத்திரமல்லாமல், தமிழ் ஆட்சி மொழி ஆவதற்கான அந்த சூழ்நிலையும் படிப்படியாக உறுதியாக இன்றைக்கு மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை நான் திரு.மகாலிங்கம் அவர்களுடைய முறையீட்டிற்கு விளக்கமாக அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆண்டாள் பிரியதரிசினி ஒரு கோரிக்கை வைத்தார். ஆண்டாளின் கோரிக்கை அரங்கநாதனிடம் எடுபட்டதோ

இல்லையோ, (கைதட்டல்) இங்கே எடுபடுகிறது அம்மணி என்று ஆண்டாளுக்குச் சொல்லிக் கொள்கிறேன். (பலத்த கைதட்டல்) பாரதி விருது இளங்கவிஞர்களுக்கெல்லாம் தரப்பட வேண்டு மென்று கேட்டார். இங்கே ஆண்டாள் அவர்களும், மதிவண்ணன் அவர்களும் பாடிய கவிதைகளைக் கேட்டபோது ஆமாம், பாரதி விருது நிச்சயமாக அறிவிக்கப்பட வேண்டிய ஒன்றுதான் என்ற முடிவுக்கு நான் வந்தேன் (பலத்த கைதட்டல்) எனவே தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையின் மூலமாக அந்தப் பணியை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்கள் நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலேயே ஆணை பிறப்பிக்கிறேன் (பலத்த கைதட்டல்).

பாரதியைப் பற்றி திராவிடர் இயக்கத்திலே உள்ள நாங்கள் பேசுவது சில நேரத்திலே சில பேருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத் தியது உண்டு. அப்படிப்பார்த்தால் கல்கி ராஜேந்திரன் இன்றைக்கு பாரதியை பாராட்டுகிறார் என்றால், அவருடைய தந்தையார் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஒரு காலத்திலே பாரதியை முழுமை யாக ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலை கூட இருந்தது. அதுதான் பாரதிக்குப் பெருமை. ஏற்றுக் கொள்ளாதவர்கள் எல்லாம் இன்றைக்கு ஏற்றுக் கொள்கிறார்களே, அதுதான் பாரதிக்குப் பெருமை. (கைதட்டல்).

திராவிடர் இயக்கம் ஒரு காலத்தில் பாரதியை ஏற்றுக் கொள்ளவில்லைதான். ஆனால், திராவிடர் இயக்கம் இன்றைக்கு பாரதியை ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு உங்கள் முன் வந்து நிற்கிறதென்றால் அது பாரதி பெற்ற பெருமை. பாரதியின் சிறப்பு. பாரதியின் பாட்டுக்குள்ள வலிமை; அவருடைய கருத்துக்கு உள்ள பலம் என்பதை நாம் ஒத்துக் கொண்டுதான் தீரவேண்டும்.

பாரதி கடவுள்களைப் பற்றி பாடினார். பராசக்தியைப் பற்றி, கண்ணனைப் பற்றிப் பாடினார் என்பதையெல்லாம் வைத்துக் கொண்டு திராவிடர் இயக்கம் அல்லது சுயமரியாதை இயக்கம் அவரைப் புறந்தள்ளிவிட முடியாது.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எத்தனையோ சுயமரியாதைக் கருத்துக்களை பாடல்களாக தந்திருக்கிறார் என்றாலுங் கூட, அவர் தொடக்கத்திலே பாடியது சுப்ரமணிய துதி அமுது தான். பாரதிதாசன் சுப்ரமணிய துதி அமுது பாடினார் என்பதற்காக அவர் பாடியுள்ள பகுத்தறிவுக் கருத்துக்களை எல்லாம் தள்ளிவிட முடியாது. அவர் கதர்பாட்டு, ராட்டைபாட்டு பாடினார் என்பதற் காக அவருடைய புரட்சிக் கருத்துக்களையெல்லாம் ஏற்றுக் கொள்ள இயலாது என்று சொல்லிவிட முடியாது.

அதைப்போல பாரதியார் கடவுள் பாட்டு பாடினார், பராசக்தி பாட்டு பாடினார் என்றாலும், அதிலே பொதிந்து கிடக்கும் கருத்துக்களையெல்லாம் எண்ணிப்பார்த்த காரணத்தால்தான் கனக சுப்புரத்தினம் என்ற தன்னுடைய இயற்பெயரை பாரதிக்கு தாசன் என்று, மாற்றிக் கொண்ட புரட்சிக்கவிஞர், பாரதியைப் பற்றி பாடும் போது; ''மக்கள் தொகுதி எக்குறை யாலே
மிக்க துன்பம் மேவு கின்றதோ
அக்குறை தீர்க்கும் ஆற்றல் வாய்ந் தோனைச்
சிக்கென ஈன்று சீர்பெறல் இயற்கையாம்.
ஜாரின் கொடுமை தாங்கா உருசியம் (ரஷ்யா)
ஏருற லெனினை ஈன்றே தீரும்!
செல்வர் சில்லோர் நல்வாழ் வுக்கே
எல்லா மக்களும் என்ற பிரான்சில்
குடிகள் குடிகட் கெனக் கவி குவிக்க
விக்டர் யூகோ மேவினான் அன்றோ?
தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமை திறவாமல் இருந்த நிலையில்
தமிழகம், தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.

என்று பாடுகின்ற பாரதிதாசன் மேலும் சொல்கிறார்;

பாரதியைப்பற்றி;

"பைந்தமிழ்த் தேர்ப்பாகன், அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவி முரசு!
நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டில்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்!
என்னென்று சொல்வேன்! என்னென்று சொல்வேன்!
தமிழால், பாரதி தகுதி பெற்றதும்
தமிழ், பாரதியால் தகுதி பெற்றதும்
எவ்வாறென்பதை எடுத்துரைக் கின்றேன்"

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாரதியின் புகழைப் பாடுகின்றார்.

பாரதியார் காலத்திலே இளமைக் காலந்தொட்டு அவரோடு பழகி வாழ்ந்த நாவலர் சோமசுந்தர பாரதியார் பாரதியைப் பற்றி எழுதிய கட்டுரையிலே குறிப்பிடுகிறார்.

"பாரதியார் தமது ஏழாவது வயதிலேயே அருமையான தமிழ்க் கவிதைகளை விளையாட்டாக விரைந்து கவனம்

செய்வதைக் கண்ட வித்வான்கள் அவரது தந்தையாரைப் புகழ்ந்துரைப்பதை நான் நேரில் அறிவேன். அந்த வயதில் எளிதில் பாடல் எழுதி தமிழ் வாணர்கள் மெச்சும்படி காட்டிய திறமையை நேரில் கண்ட பொழுதுதான்; கேவலம் படிப்பினால் பாவன்மை வராது; கவிகள், பிறப்பிலேயே அமைய வேண்டும் என்று அறிந்தேன்.''

என்று சோமசுந்தர பாரதியார் குறிப்பிடுகிறார்.

பாரதியின் பூர்வீகம் எட்டையபுரம் என்று, நாம் எட்டைய புரத்திலே உள்ள அவருடைய வீட்டைக் கூட அரசின் நினைவக மாக ஆக்கியிருக்கிறோம் ஆனால் அவருடைய பாட்டனார், தகப்பனார் பிறந்த ஊர் சீவலப்பேரி, நெல்லை மாவட்டத்திலே உள்ள சீவலப்பேரி! பாரதி எப்படி வீரமாகப் பாடினான் என்பதற்கு சீவலப்பேரி என்ற அந்தப் பெயரை எண்ணிக்கொண்டாலே உங்களுக்கு அது புரியும். ஏதோ படத்தை வைத்துக் கொண்டு நான் இதைக் குறிப்பிடவில்லை. சீவலப்பேரி, புலித்தேவன் போன்ற மாபெரும் வீரர்கள் எல்லாம் உலவிய மண். அங்கே பிறந்த அவருடைய பாட்டனார். தகப்பனார் அதன் பிறகு அவர்கள் குடியேறிய இடம் எட்டையபுரம். எட்டைபுரத்திலே பாரதி வறுமையிலே வாடினார். அவருடைய தந்தையார் எட்டையபுரம் சமஸ்தானத்தில் ஒரு நல்ல பதவியிலே இருந்த போதிலும்கூட வறுமை அவர்களை எப்படியோ வந்து கவ்விக் கொண்டது. தந்தையாருடைய முதல் துணை வியார், பாரதியின் தாயார், லெட்சுமி அவர்கள் மறைந்து விடு கிறார்கள். பிறகு பாரதியின் தந்தை வள்ளியம்மை என்ற ஒரு பெண்ணை இரண்டாவதாக திருமணம் செய்து கொள்கிறார்.

எனக்கு இதிலே ஒரு சிறிய சந்தேகம். அந்தணர் சமுதாயத் திலே வள்ளியம்மை என்ற ஒரு பெயர் எப்படி வந்தது என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அது கூட பாரதியாரின் தந்தையே புரட்சிக்காரராக மாறி வள்ளியம்மை என்ற பெண்ணை மணந்து கொண்டாரோ என்னவோ எனக்குத் தெரியாது.

இருந்தாலும் மிக வறுமையான ஒரு குடும்பத்தில் தன் சிற்றன்னை வள்ளியம்மாள் அவர்களுடைய அன்பான அரவணைப்பில் வளர்ந்து சோமசுந்தர பாரதி போன்ற இளமைப் பருவத்து நண்பர்களையெல்லாம் பெற்று அவர் காசி இந்துக் கல்லூரியிலே படித்த காலத்தில் அங்குள்ள மாணவர்கள் எல்லாம் மீசை வளர்ப்பது பழக்கம். பாரதியார் மாணவனாக இருந்த போது வாரந்தோறும் மீசையை மழித்துக்கொண்டு வகுப்புக்குச் செல்வார். அந்த மாணவர்கள் பாரதியைப் பார்த்துக் கேட்டார்கள். ''நாங்கள் எல்லாம் எங்கள் வீட்டிலே யாராவது இறந்துவிட்டால் மீசையை மழித்துக் கொள்வோம். நீ வாரந்தோறும் மீசையை மழித்துக் கொள்கிறாயே, வாரந்தோறும் உங்கள் வீட்டில் யாராவது இறந்து விடுகிறார்களா?'' என்று கேட்டார்களாம். அதைக்கேட்ட பாரதி துணுக்குற்று அன்று முதல் வளர்த்த மீசைதான் அந்த அழகான மீசை. ஆணித்தரமான மீசை, அவருடை கவிக்கு மேலும் வீரத்தை ஊட்டுகின்ற மீசை - பாரதியாருடைய அந்த மீசை என்று அவருடைய வாழ்க்கைக் குறிப்பு கூறிக் கொண்டிருக்கிறது.

பாரதியார் இந்திய நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்காக தன்னுடைய கவிதைகளை எல்லாம் முரசங்களாக யாத்துத் தந்தார் என்றாலுங்கூட அது இன்றைக்கு எங்கள் மீது தொடர்ந்து ஒரு பழி கூறப்பட்டு வருகிறதே, என்ன இருந்தாலும் கருணாநிதி தியாகிகளைப் பற்றி வரலாறு எழுதினாலும், தியாகிகளை மதித்தாலும் அவர்களுக்காக விழா எடுத்தாலும், அவர்களுக்காக நினைவுச் சின்னங்களை அமைத்தாலும் ஒரு காலத்திலே வெள்ளைக்காரர்களை வரவேற்றவர்கள்தானே என்ற ஒரு பழி எங்கள் மீது என்றைக்கும் உண்டு.

ஆனால் எங்களுடைய பாரம்பரிய இயக்கமான திராவிட இயக்கத்தினுடைய தொன்மையான இயக்கமான நீதிக்கட்சி - தென்னிந்திய நல உரிமைச் சங்கம் - ஜஸ்டிஸ் கட்சி - இந்தக் கட்சி வெள்ளைக்காரர்கள் ஆண்ட காலத்தில் அவருடைய ஆட்சியை

யும் ஓரளவிற்கு ஏற்றுக் கொண்டு எதிர்ப்பையும் காட்டிக்கொண்டு - அதே நேரத்தில் சமுதாய விடுதலைக்காகவும் பாடுபட்டுக் கொண்டிருந்தது.

அதைத்தான் ம.பொ.சி. 'விடுதலைப் போராட்டம்' என்ற நூலிலே குறிப்பிடுகிறார். ''நாங்கள் எல்லாம் நாட்டின் விடுதலைக் காகப் பாடுபட்டுக் கொண்டிருந்தபோது திராவிடர் இயக்கம் சமுதாய விடுதலைக்காக பாடுபட்டுக் கொண்டிருந்தது. நாட்டு விடுதலைக்குப் பிறகு தேவைப்படுவது சமுதாய விடுதலை என்பதால், அதுவும் தேவைப்பட்ட ஒரு இயக்கமாக இருந்தது'' என்று சொல்கிறார்.

அவ்வளவு வீரமாக விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டி ருந்த காங்கிரஸ் இயக்கம், அதனுடைய தலைவர்கள் எல்லாம் கூட வெள்ளைக்கார அரசர்களை வரவேற்கத் தவறியதில்லை.

சாவி அவர்கள் குறிப்பிட்டார்களே, ''சக்கரவர்த்தினி'' என்ற பத்திரிகை, அது ஒரு மாதப் பத்திரிகை. அதனுடைய ஆசிரியர் பாரதியார். அதிலே அவர் குறிப்பிடுகிறார்.

> வேல்ஸ் இளவரசர் அவர்களுடைய வருகையால் இந்திய நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள். அவர் இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்வது இந்திய மக்களுக்கு நன்மை தரும்''

என்றெல்லாம் தன்னுடைய கட்டுரையிலே குறிப்பிட்டுவிட்டு - வேல்ஸ் இளவரசரோடு வந்த இளவரசியைப் பற்றிக் குறிப்பிடும் போது - பாரதியின் அதே வாசகத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

> ''சொற்பத் திரவியமுள்ள குடும்பத்திலே பிறந்த பெண்கள் கூட இத்தேசத்தில் நகைப் பைத்தியம் கொண்டு அலை கிறார்கள். (அப்போதே எழுதியிருக்கிறார்) வயிற்றிலே சோற்றை விட்டாலும் நமது ஸ்திரீகளுக்கு காதிலே 'வயிரக் கம்மல்' மிக அவசியமாகத் தோன்றுகிறது. அப்படி

யிருக்க சக்ரேசுவரனுடைய மகளாகிய (சக்ரவர்த்தியின் மகளாகிய) இளவரசி விசேஷ ஆபரணங்கள் ஏதுமின்றி வெகு சாதாரணமாகத் திகழ்ந்தமை வெகு ஆச்சரியமாக இருந்தது''

என்று 1906 ஆம் ஆண்டு சக்கரவர்த்தினி என்ற மாத பத்திரிகையில் பாரதியார் எழுதிக் காட்டுகிறார்.

எழுதுவதற்குக் காரணம் இந்தப் பண்புகள் - வெள்ளைக்கார ஆட்சியை எதிர்த்தாலுங்கூட - அந்தப் பண்புகள் நம்முடைய நாட்டிற்குத் தேவை. அந்த எளிமை தேவை. ஆடம்பரமற்ற தன்மை தேவை என்பதிலே அவருக்கு இருந்த அக்கறையின் காரணமாக அதைச் சொல்கிறார்.

அந்த நேரத்திலேதான் காங்கிரஸ் மாநாடு காசியிலே கோகலே தலைமையிலே நடைபெற்றது. அந்தத் தலைமை உரையிலே கோகலே குறிப்பிடுகிறார். ''வேல்ஸ் இளவரசரும் இளவரசியும் நமது தேசத்துக்கு வந்திருக்கிறபடியால் அவர்களுக்கு பக்தியுடனும் வணக்கத்துடனும் நல்வரவு கூறுதல் நமது முதல் கடமையாக இருக்கிறது'' என்று கோகலே 1905 டிசம்பர் மாதம் நடைபெற்ற காசி காங்கிரஸ் மாநாட்டிலே பேசியிருக்கிறார்.

எனவே, அவர்கள் பேசியதற்கும் நாங்கள் பேசியதற்கும் சில வருஷங்கள் வித்தியாசம் இருக்கலாம். அதற்காக நாங்கள் வெள்ளைக்கார தாசர்கள்; விடுதலை வீரர்களைப் பாராட்டலாமா என்ற முடிவுக்கு யாரும் வந்துவிட வேண்டாம். கல்கி ராஜேந்திரன் உட்பட நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் கல்கி ராஜேந்திரன் ஒரு தீவிர தேச விடுதலை இயக்கத்தினுடைய பாரம்பரியத்திற்குரியவர். அதைப் போலவே சாவி அவர்கள், அலிப்பூர் சிறைச்சாலையிலே தேச விடுதலைக்காக அடைபட்டுக் கிடந்தவர்.

கல்கி அவர்களும் நாட்டு விடுதலைக்காக சிறைப்பட்டவர். அப்படிப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யாரும் நாங்களும்

இதைப் போல வெள்ளைக்காரர்களை வரவேற்றது உண்டு; நீங்களும் வரவேற்றது உண்டு; ஆனால் கொஞ்சம் கால வித்தியாசம் - கால வித்தியாசம் என்றால் கால இடைவெளி என்று வைத்துக் கொள்ளலாம்; எங்கள் கால வித்தியாசம் என்றும் வைத்துக் கொள்ளலாம். (கைதட்டல்) நாங்கள் வெள்ளைக்கார தாசர்கள் எனப்படுகிறோம். அவ்வளவுதான்; வேறல்ல; இருந்தாலும் ஒரு நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்கள் - பாடுபடாதவர்கள் எல்லோருக்கும் சேர்ந்துதான் சுதந்திரம் வந்திருக்கிறது.

அதனால்தான் சுதந்திரம் 47ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் நாள் வந்தபோது - அதை துக்க நாள் என்று தந்தை பெரியார் அறிவித்த நேரத்தில் - அறிஞர் அண்ணா அவர்கள் ''வெள்ளைக்காரன் ஒழிந்தான் என்பதைக் கொண்டாட எனக்கு இருக்கின்ற ஒரேநாள் இந்த நாள்தான்; எனவே இதை நான் துக்க நாள் என்று சொல்ல மாட்டேன்; இதை இன்ப நாள் என்று அறிவிக்கிறேன்; இதற்காக தந்தை பெரியார் என்ன நடவடிக்கை எடுத்தாலும் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்'' என்று சொன்னார்.

எனவேதான், நாங்கள் அரசியலிலே அறிஞர் அண்ணாவின் பரம்பரையாகவும், சமுதாயத் துறையிலே நாங்கள் பெரியாரின் பரம்பரையாகவும் இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறோம் என்பதையும் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கொரு ஆச்சரியம்; அதே நேரத்தில் வருத்தம், ஆதங்கம், வேதனை.

பாரதியார் -

''ஆயிரம் தெங்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள் - பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வ
முண்டா மெனல் கேளீரோ?

மாடனை காடனை வேடனைப் போற்றி
மயங்கும் மதியிலிகாள்! எத
னூடும் நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி அறியீரோ?"

என்று ஆயிரம் தெய்வங்கள் தேவையில்லை என்றார் பாரதி. இன்றைக்குப் பார்த்தால் அவரையே ஆழ்வாராக்கி (கைதட்டல்) ஆலயத்திலே வைத்து விட்டார்கள் என்பதைக் கேள்விப்படும் போது நான் மெத்தவும் வேதனைப்படுகிறேன். ஆயிரம் தெய்வங் கள் வேண்டாம் என்றவரை ஒரு தெய்வமாக, ஒரு ஆழ்வாராக ஆக்கி - ஆழ்வார்கள் 12 பேர் மாத்திரமல்ல; 13-வது ஆழ்வார் இவர் என்று சொல்லி ஆழ்வார் மையத்திற்கு ஒரு புதிய ஆராய்ச் சியை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலையை உருவாக்கியிருக் கிறார்களே இது சரிதானா என்பதை தயவுசெய்து அனைவரும் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத் துறையிலே அவருக்கிருந்த ஆர்வம் எத்தகையது என்பதற்கு அவருடைய வாசகம் ஒன்றைச் சொன்னாலே போது மென்று கருதுகிறேன். அவர் அரசியலிலே மிகுந்த ஈடுபாட்டோடு தீவிரமான விடுதலைப் பாட்டுக்களைப் பாடிக் கொண்டிருந்த போது சமூகத் துறையிலும் அவர் பணியாற்றிக் கொண்டிருந்தார். பூணூல் போடுவதில்லை. குடுமியைக் கத்தரித்து விட்டு கிராப்பு வைத்துக் கொண்டார். மீசை வைத்துக் கொண்டார்.

பிராமணர் குலத்திற்கு எதிராக மீசையை பெரிதாக வளர்த்துக் கொண்டார். பூணூலை அறுத்தெறிந்து விட்டார். அது மாத்திரமல்ல; புதுச்சேரியிலே கனகலிங்கம் என்ற ஒரு ஆதி திராவிட பையனை அழைத்து வந்து, அவனுக்கு பூணூல் மாட்டி உபநயனமும் செய்து வைத்தார். இதையெல்லாம் கண்ட உயர் சாதிக்காரர்கள் - அவருடைய சாதிக்காரர்கள் - அந்தணப் பெரு மக்கள் வெகுண்டெழுந்தார்கள். அப்பொழுது பாரதியார் சொன்னார். ''ஒரு கண்ணைத் திறந்து வைத்துக்கொண்டு,

இன்னொரு கண்ணை மூடிக் கொண்டு உறங்கு என்கிறார்களே, இது எவ்வாறு சாத்தியம்'' என்று கேட்டார்.

''சமூகத் தொண்டு, நாட்டு விடுதலைத் தொண்டு என்பது இரண்டு கண்கள். இதில் சமூகத் தொண்டை நிறுத்திவிட்டு, விடுதலைத் தொண்டை மட்டும் ஆற்று என்கிறார்களே, இது எப்படி சாத்தியம்? ஒரு கண்ணை மூடிக் கொண்டு ஒரு கண்ணைத் திறந்து வைத்துக்கொண்டு தூங்க முடியுமா? எனவேதான் நான் இந்த இரண்டு தொண்டையும் ஆற்றுகிறேன்'' என்று பாரதியார் அன்றைக்குக் குறிப்பிட்டார்.

இங்கே சாதி மத பேதங்களைப் பற்றியெல்லாம் எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னார்கள். பாரதியாருடைய பாட்டு - எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பாடிய பாட்டிலேயே - வெள்ளைக்காரன் ஒரு இந்தியனைப் பார்த்து - நம் நாட்டவனைப் பார்த்து கேட்பதைப் போல - இவன் சுதந்திரத்திற்காக முரசு கொட்டுகிறான்; அவனைப் பார்த்து வெள்ளைக்காரன் கேட்பதைப் போல நையாண்டியாக ஆனால் வேதனையோடு, ஆதங்கத்தோடு பாரதிப் புலவன் பாடிக்காட்டுகிறான்.

''தொண்டு செய்யும் அடிமை, உனக்கு சுதந்திர நினைவோடா? பண்டு கண்டதுண்டோ? அதற்கு பாத்திரம் ஆவாயோ?'' (சுதந்திரத்திற்கு நீ பாத்திரம் ஆவாயோ? என்று கேட்டுவிட்டு அடுத்த வரியிலே பாரதி கேட்கிறார்) ''சாதிச் சண்டை போச்சோ? உங்கள் சமயச் சண்டை போச்சோ?'' இந்த இரண்டு சண்டையும் போகாமல் சுதந்திரம் உனக்கு எதற்காக? என்று அன்றைக்கு பாரதி கேட்டார்.

இன்றைக்கு பாரதி இருந்திருந்தால், இன்றைக்கும் அதையேதான் கேட்டிருப்பார். அந்த நிலையிலே இன்று நாடு இருக்கிறதா இல்லையா என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்றைக்கும் சாதியால், மதத்தால் பேதப்பட்டுக் கிடக்கி றோம். நாம் நம்மை மனிதர்கள், ஒரே குலம் என்று எண்ணுவ தில்லை. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற அந்தக் கருத்துக்கு நம்மை நாம் இன்னமும் ஆட்படுத்திக் கொள்ளவில்லை.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று என்றைக்கோ சங்கக் காலப் புலவன் கணியன் பூங்குன்றன் பாட - அதை அன்னை இந்திரா காந்தி ரஷ்யாவிற்குச் சென்ற போது அங்கே எடுத்துச் சொல்லி - அவ்வளவு பெருமை பெற்ற வரிகளுக்குரிய தமிழ் இனம் - இந்த இனம் யாதும் ஊரே, யாவரும் கேளிர் (யாவரும் கேளிர் என்றால் எல்லோரும் நம்முடைய உறவினர்கள் என்று பொருள்) சில பேர் அந்த 'கேளிர்' என்பதை கொஞ்சம் நீட்டிச் சொல்லி 'கேளீர் - எல்லோரும் கேளுங்கள் என்று கூடச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; அது அல்ல. யாதும் ஊரே, யாவரும் கேளிர் - எல்லோரும் உறவினர்கள்; எல்லாம் நம்முடைய ஊரே; என்ற அந்தக் கருத்துக்குச் சொந்தக்கார இனம் நம்முடைய இனம்.

ஆனால் இன்றைக்கு வெட்டிக் கொண்டு சாகிறோம்; சுட்டுக் கொண்டு சாகிறோம். வீடுகள் எரிக்கப்படுகின்றன; மனிதர்கள் உயிரோடு எரிக்கப்படுகிறார்கள். மதவெறியால், சாதி வெறியால் என்றெல்லாம் பார்க்கும் போது சுதந்திரப் பொன்விழா - இன்னமும் பொன் விழாவாக ஆகாமல், புண் விழாவாக இருக்கிறதே என்பதை எண்ணிப் பார்த்து - பாரதியின் பணி இன்னமும் தேவை; பாரதியின் பாட்டு இன்னமும் தேவை; பாரதியின் சேவை இன்னமும் தேவை; பாரதியைப் போன்ற உள்ளம் நமக்கெல்லாம் தேவை என்பதை இந்த பாரதி விழாவிலே எடுத்துரைத்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

- முரசொலி 12.9.97

கன்னிமாரா பொது நூலக நூற்றாண்டு விழா

கன்னிமாரா பொது நூலகத்தின் நூற்றாண்டு விழா - பொது நூலகத் துறையின் வெள்ளிவிழா - ஆகிய இரு விழாக்களும் சீரோடும் சிறப்போடும் நடைபெறுகின்ற இந்த நாளில் உங்களோடு இந்த விழாவில் கலந்துகொள்கிற வாய்ப்பு பெற்றமைக்காக என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நூலகத்தின் சிறப்புக்களை எனக்கு முன்னால் இங்கே உரையாற்றிய பேராசிரியர் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும், மற்றும் நண்பர்களும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த விழாவிவ் ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். எங்களுக்கெல்லாம் மாறி மாறி பல பொன்னாடைகள் இங்கே வழங்கப்பட்டன. இந்த பொன்னாடைகளுக்குப் பதிலாக நூல்களே வழங்கப்பட்டிருக்குமானால் (கைதட்டல்) நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்திருப்பேன்.

ஒருவேளை, நல்லி சொல்லக்கூடும் - பொன்னாடையும் நூலில் ஆனதுதானே என்று சொல்லக்கூடும். (பலத்த கைதட்டல்) இருந்தாலும் ஒரு பொன்னாடையின் விலையும், அதற்குப் பதிலாக நீங்கள் நூல்களாக வழங்கினால் எத்தனை நூல்களை நாங்கள் பெற்றிருக்க முடியும் என்ற நிலையையும் எண்ணிப் பார்த்தால் - இனியாவது நடைபெறுகின்ற விழாக்களில், அது நூலகத்தின்

விழாவாகத்தான் இருக்க வேண்டுமென்றில்லை; அது மணவிழா நிகழ்ச்சியாக இருந்தாலும் பரிசளிப்பது, அன்பளிப்பு வழங்குவது, மாலை மரியாதை செய்வது என்ற இவற்றுக்குப் பதிலாக நூல்களை வழங்குவதை கன்னிமாரா பொது நூலக நூற்றாண்டு விழாவிலே யிருந்து நாம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (பலத்த கைதட்டல்)

நூலகம் அமைத்தல், படிப்பகம் அமைத்தல் இவை எத்துணை பயனுடையது என்பதை நான் என்னுடைய பொது வாழ்க்கையிலேயே கண்டவன். நான் இளம் மாணவனாக இருந்த காலக்கட்டத்தில் திருவாரூரில் சிறுவர் சீர்திருத்தச் சங்கம் என்று ஒரு அமைப்பை உருவாக்கி ஒரு சிறிய ஓலைக் குடிசையிலே அந்தச் சங்கத்தை நடத்திக் கொண்டிருந்த போது, அந்தச் சங்கத்திற்குள்ளே யும் பத்து, பதினைந்து நூல்கள் - பெரியவர்கள், பெருமக்கள் எழுதிய நூல்கள் - அங்கே படிப்பதற்கென்று இருந்தது உண்டு.

அதன் பின்னர், 45, 46ஆம் ஆண்டுகளில் நான் கோவையில் - திரைப்படத் தொழிலில் ஈடுபாடு கொண்டு அங்கே கோவைக்கு அருகேயுள்ள சிங்காநல்லூரில் வாழ்ந்து வந்தேன். அந்தச் சிங்காநல்லூர் பகுதி, அந்தக் காலக்கட்டத்தில் ஒரு பயங்கரமான வன்முறைப் பகுதி. அங்கேதான் எனக்கு வீடு கிடைத்தது. குடும்பத் தோடு நான் அங்கே வசித்துக் கொண்டிருந்தேன். அங்கே இருந்தா லுங்கூட, நான் ஏற்றுக்கொண்ட கொள்கைகளை, அந்தப் பகுதி யிலே பரப்பிட வேண்டுமென்ற அவா எனக்கு மிகையாக இருந்தது. ஆனால் அந்த ஆவலை வெளியிட்டால் உயிருக்கே ஆபத்து என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட இடம். அங்கே ஒவ்வொரு நாளும் ஒரு கொலை விழும் - அரசியல் கொலை.

அந்த இடத்திலிருந்து நான் திரைப்படத் தொழிலில் வசனங்களை எழுதுகிற, திரைக்கதை எழுதுகிற அந்தப் பணியை ஆற்றிக் கொண்டிருந்தபோது - எனக்கொரு நண்பர் அங்கே கிடைத்தார். அவர் பெயர் அண்ணாசாமி. அவரும் நானும் நெருங்

கிப் பழகினோம். இன்னும் சொல்லப் போனால், அவருடைய வீட்டின் ஒரு பகுதியிலேதான் நான் குடும்பத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தேன். எனக்கு எப்படியாவது அந்தப் பகுதியிலே வேறு பல கட்சிகளுடைய வன்முறைக்களுக்கிடையிலேயும் நம்முடைய கொள்கைகளை - தந்தை பெரியாரின் சிந்தனைகளை - அண்ணாவின் எண்ணங்களைப் பரப்ப வேண்டும் என்ற அந்த ஆர்வம் என்னைத் துளைத்துக் கொண்டேயிருந்த காரணரத்தால் - நானும் நண்பர் அண்ணாசாமியும் சேர்ந்து ஒரு யோசனை செய்தோம்.

பாரதி படிப்பகம் - பாரதி நூலகம் என்ற ஒன்றை அங்கே அமைத்தோம். பாரதியின் பெயரால் நூலகம், படிப்பகம் அமைத்தால்தான் அங்கே, அது இருக்கும். இல்லாவிட்டால் உடைத்தெறியப்படும், அந்தக் காலக்கட்டத்தில்! பாரதிதாசன் பெயராலோ, பெரியார் பெயராலோ, அண்ணா பெயராலோ நூலகம் அமைத்தால் அவைகள் அங்கே அந்தக் காலத்தில் இருக்க முடியாது.

எனவே, பாரதியார் பெயரால் நூலகம் அமைத்து, அதிலே திராவிடர் இயக்கச் சார்பற்ற ஏடுகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி, அதைப் படிக்கின்ற ஆர்வத்தை அந்தப் பகுதியிலே உள்ள மக்களிடத்திலே பரப்பி, ஒவ்வொரு நாளும் அவர்களும் வந்து காலை, மாலை நேரங்களில் அங்கே வாங்கி வழங்கப்படுகின்ற நாளேடுகளை, வார ஏடுகளை, புத்தகங்களைப் படித்துக் கொண்டிருந்த போது - வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதைப் போல - வார ஏடுகளிலே திராவிடநாடு ஏடு வர வழைக்கப்பட்டது. குடியரசு ஏடு வரவழைக்கப்பட்டது. நாளேடு களில் - மற்ற நாளேடுகளோடு ஒரு நாளேடாக விடுதலை ஏடு வரவழைக்கப்பட்டது.

இன்றைக்குச் சொல்கிறேன்; சிங்காநல்லூர் எங்கள் இயக்கத் தின் கோட்டையாக இருக்கிறதென்றால், அன்றைக்கு 45ஆம்

ஆண்டு உருவான பாரதி படிப்பகம்தான் காரணம் என்று கூறு வேன். (கைதட்டல்)

எனவே நூலகத்தின் பயனை, படிப்பகத்தின் பயனை அனுபவ ரீதியாக நான் உணர்ந்தவன் என்ற காரணத்தால், மற்றவர்களும் நூலகத்தின் பயனைத் துய்க்க வேண்டும், உணர வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நல்ல விழாவிலே நான் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா அவர்கள் எந்த அளவிற்கு ஆர்வத்தோடு புத்தகங்களைப் படிப்பார்கள் என்பதை நம்முடைய பேராசிரியர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்கிற அண்ணா அவர்க ளின் ஆர்வம் - அதற்கு ஒரு உச்சக் கட்டத்தைச் சொல்ல வேண்டு மென்றால் - அண்ணா அவர்கள் நோய்வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று - அமெரிக்காவிலிருந்து திரும்பிவந்து மீண்டும் இரண்டா வது தடவையாக நோய் அவரை பற்றிக்கொண்டு அடையார் மருத்துவ மனையிலே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்ற சூழ்நிலையில் இரண்டாவது முறையாக மருத்துவமனையிலே அண்ணா அனுமதிக்கப்பட்டார். நானும் பேராசிரியர் போன்றவர் களும் அவரைச் சூழ இருந்தோம்.

அவரை அறுவை சிகிச்சைக்காக அழைத்துச் செல்கின்ற நேரம் வரையில் - (அறுவைச் சிகிச்சைக்குச் சென்றபிறகு அண்ணா கண் திறக்கவில்லை; பிறகு மறைந்து விட்டார்) - ஆனால் செல் கின்ற நேரம் வரையிலே அவர் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண் டேயிருந்தார். அந்தப் புத்தகத்தை கீழே வைக்கவே இல்லை. அங்கிருந்த மருத்துவர்கள் அண்ணா அவர்களை அறுவைச் சிகிச்சை அறைக்கு வாருங்கள் என்று அழைத்துச் செல்ல வந்த பிறகுதான், அந்தப் புத்தகத்தை அண்ணா அவர்கள் மூடி வைத்தார் கள். அப்படி இறுதிக் கட்டத்திலே கூட - இறுதி மூச்சு விடுகின்ற

நேரத்திலே கூட - தன்னுடைய உயிர் இனி நிலைக்கப் போவ தில்லை; என்றுதானே உணர்ந்த அந்தச் சூழலிலே கூட அண்ணா அவர்கள் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தார் என்பதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு புத்தகங்களைப் படிப்பதே ஒரு அலுப்பான விஷயம்; தேவையற்ற வேலை; என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற இளைய தலைமுறைக்கு இந்தச் செய்தி எட்ட வேண்டும் என்பதற்காகத்தான் அடையார் மருத்துவமனையிலே அறுவை சிகிச்சைக்குச் செல்கின்ற அந்தக்கணம் வரையிலே புத்தகம் படித்துக் கொண்டிருந்த அண்ணா அவர்களின் செயலை நான் நினைவூட்ட வேண்டியவனாக இருக்கிறேன்.

இங்கே நல்லி பேசும்போது சரஸ்வதி மகாலைப் பற்றியெல் லாம் சொன்னார். நூல் நிலையங்களைப் பற்றி நாம் எண்ணுகிற நேரத்தில் பல இலக்கியங்கள், பல காப்பியங்கள் எல்லாம் இன்றைக்கு அழியாமல் காப்பாற்றப்படுவதற்குக் காரணமாக இருந்த இரண்டு சான்றோர்களை நாம் மறந்து விட முடியாது.

தாமோதரனார், உ.வே. சாமிநாதய்யர் என்ற இந்த இரண்டு பெரியவர்களும் நூல்களை - பழைய ஏடுகளை - சுவடிகளை தேடி அலைந்து எவ்வளவு சிரமப்பட்டார்கள்! எதற்காக? அவர்கள் படித்து மகிழ்வதற்காகவா? அல்ல. தாங்களும் படித்து, எதிர்காலச் சமுதாயமும் அதைப் படிக்க வேண்டும், பழைய இலக்கியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும், என்ற உணர்வோடு அவர்கள் அரும்பாடுபட்டு அவைகளையெல்லாம் திரட்டித் தந்தார்கள். இல்லாவிட்டால் இன்றைக்கு பளபளப்பாக அச்சு வாகனம் ஏறி நம்முடைய கண்களுக்கும் கருத்துக்களுக்கும் விருந்தாக இருக்கின்ற பல இலக்கியங்கள் நமக்குக் கிட்டாமலே போயிருக் கும். அத்தகைய பெரியவர்களை எல்லாம் இதுபோன்ற விழாக் களிலே நாம் நினைவு கூர்வது அவர்களுக்கு நாம் செலுத்துகின்ற நன்றிக்கடனாகும்.

புத்தக நிலையங்களைப் பற்றி, நூலகங்களைப் பற்றி புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்:

''மனிதரெலாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப் போல் விரிவடைந்து
தனி மனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வதற்கும்,
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை''

என்று குறிப்பிடுகிறார். அந்தச் சுவடிச் சாலை ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டும் என்பதைத்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தினார்கள்.

1949-ஆம் ஆண்டு வானொலியில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ''வீட்டிற்கு ஒரு புத்தகசாலை'' என்ற தலைப்பிலே பேசிய அந்த உரையை உங்கள் முன்னால் நான் வைக்க விரும்புகிறேன்.

அண்ணா பேசுகிறார்:-

''பெரும்பாலான வீடுகளின் அமைப்பையே பாருங்கள். கூடம் - பாதுகாப்பான அறை - படுக்கை அறை - சமையலறை - பூஜை அறை இவை எல்லாம் இருக்கும் - புத்தகம் உள்ள இடம், படிப்பதற்கென்று ஓர் அறை - தேடிப் பாருங்கள் மிக மிகக் கஷ்டம். பல வீடுகளிலே, தூண்களின் மீது சாளரங்களின் இடுக்கில், பிள்ளையார் மாடத்தில் சில புத்தகங்கள் இருக்கும். ஆனால், புத்தக சாலை உண்டா? என்று கேளுங்கள் - பதில் கூற மாட்டார்கள்; ஒரு புன்னகை தோன்றும். ''பைத்தியக்காரா! இது வீடு. நீ என்ன இங்கு வந்து, புத்தக சாலை கேட்கிறாயே!'' என்று பொருள், அந்தப் புன்னகைக்கு!

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும்; பீரோக்கள் இருக்கும்; அவைகளில் வெள்ளிப் பாத்திர

தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச் செம்பும் இருக்கும்; பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறுகடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்திய சாலை அளவுக்கு இருக்கும் அப்படிப் பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூட, புத்தகசாலை இராது; இருக்க வேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை! அவசியமும் தோன்றுவது இல்லை.

"இந்தச் செப்புக்குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவா கல்யாணத்தின்போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் தாம்பாளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தின ஜமக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின் போது திரு வண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது இதை வாங்கினோம்" என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ் வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால், பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று கூறமாட்டார்கள்.

வீட்டில் அலங்காரத்தையும் விசேஷகால உபயோகத்திற் கான சாதனங்களையும் கவனிப்பது போல, வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்த வேண்டும். அக்கறை காட்ட வேண்டும். அறிவு ஆயுதமாக்கிவிட்ட நாட்களிலே வாழும் நாம், இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது, நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகமாகும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கை யில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும், போக போக்கியப்

பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப் படைத் தேவை. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தான தும், முதல் இடம், புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும்.

எவ்வளவு செலவு? ஏது அவ்வளவு பணம்? என்று கேட்பர். பலருக்குத் தேவையான அளவு புத்தகம் வாங்கத்தான் முடியாது - இந்தக் குறையைப் போக்க பொதுப் புத்தக சாலைகளை நடத்தி, சர்க்கார், நகர சபைகள், பொதுநலக் கழகங்கள் பணிபுரிய வேண்டும். ஆனால் சில அடிப்படை அறிவுக்குத் தேவையான புத்தகங்களையாவது, வீடு களில் சேகரித்துப் பயன்படுத்தும் முறை இருக்க வேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும். மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழி செய்ய வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள் கூட அல்ல - அடிப்படை உண்மைகளையாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விசேஷங்களின்போது, வெளி யூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும் போது, புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக் கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தக சாலையை அமைத்து விடலாம்.

உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன் படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும். பழைய முறைகளையும் எண்ணங்களையும் மேலும் ஊட்டக்கூடிய ஏடுகளைச் சேகரித்து அதற்குப் புத்தகசாலை என்று பெயரிடுவது, குருடர்களைக் கூட்டி வைத்து, அவர்கள் உள்ள இடத்துக்கு, வழிகாட்டுவோர்

வாழும் இடம் என்று பெயரிடுவது போன்ற கோமாளிக் கூத்தாக முடியும்.

ஒவ்வோர் வீட்டிலும் வசதி கிடைத்ததும், வசதி ஏற் படுத்திக்கொண்டதும், அமைக்க வேண்டிய புத்தக சாலை யில் நாட்டு வரலாறு, உலக நாடுகளின் நிலையைக் குறிக்கும் நூல்கள் இவை முதலிடம் பெற வேண்டும். பொதுவாகவே, மக்களின் அறிவுக்குத் தெளிவும் ஆண் மைக்கு உரமும், ஒழுக்கத்துக்கு வலிவும் தரத்தக்க நூல் கள் இருக்க வேண்டுமேயொழிய, வாழும் இடத்தை வகை யற்றது என்று கூறி, விண்ணுலகுக்கு வழிகாட்டும் நூல் களும், மாயா வாதத்தையும், மன மருட்சியையும் தரும் ஏடுகளும், தன்னம்பிக்கையைக் கெடுத்து, விதியை அதிகமாக வலியுறுத்திப் பெண்களை இழித்தும் பழித்தும் பேசிடும் நூல்களும் இருத்தலாகாது.

பஞ்சாங்கம் அல்ல. புத்தகசாலையில் இருக்க வேண்டியது அட்லாஸ் - உலகப்படம் இருக்க வேண்டும்.

பூகோள, சரித ஏடுகள் கட்டாயம் இருக்க வேண்டும் - நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தை யும், வாழ்வுக்கான நல்ல நிலைகளையும் உருவாக்க வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்கவேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கிய சாரத்தைச் சாமான்யரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்க வேண்டும். குறைந்த பட்சம், மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலைதேசங்களைக் கண்டவர்கள்,

வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் 'வீட்டிற்கோர் புத்தகசாலை' அமைத்துக் கொண்டால் நாட்டுக்கு நல்ல நிலை ஏற்படும்''

என்று அண்ணா அவர்கள் 1949ஆம் ஆண்டிலேயே வானொலி மூலமாகச் சொல்வது இயலாதிருந்த அந்தக் காலக் கட்டத்தில், இந்தக் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்.

ஆங்கிலேயர்களால் - எனக்கு முன்னால் பேசியவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல - அடிமைத் தனம் போன்ற பல துன்பங்கள் நமக்கு ஏற்பட்டாலுங்கூட - உலகத்தைக் காணுகின்ற அறிவை வளர்க்கின்ற பல அற்புதச் சாதனைகளும் நிகழ்த்தப் பட்டிருக்கின்றது. அவற்றிலே ஒன்று லைப்ரரி - நூலகம் என்று சொன்னால் மிகையாகாது.

கன்னிமாரா என்று இந்த நூலகத்திற்குப் பெயர் வந்ததே - சென்னை மாகாணக் கவர்னராக இருந்த கன்னிமாரா பிரபு 1890-ஆம் ஆண்டு திட்டமிட்டு - அவர் பணியிலிருந்து திரும்ப இங்கிலாந்து சென்ற பிறகு - உருவானது 1896இல் இந்தக் கன்னிமாரா நூலகம். இப்படி உருவான இந்த நூலகம், பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல - 1950இல் பொது நூலகச் சட்டம் கொண்டுவரப்பட்டு - பொது நூலகமாகவும், தமிழக நூலகங்களுக் கெல்லாம் தலைமை நூலகமாகவும் இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. 1954இல் மத்திய அரசு நூல்கள் விநியோகச் சட்டம் என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மும்பாய், கல்கத்தா, புதுடெல்லி, சென்னை கன்னிமாரா ஆகிய நூலகங்களையெல்லாம் தேசிய மதிப்பைப் பெறக்கூடிய நிலையை உருவாக்கியது. 1910ஆம் ஆண்டு இந்த நூலகத்திலே 48,000 நூல்கள் இருந்தன. ஆனால் இன்றைக்கு ஐந்தேகால் இலட்சம் நூல்கள் இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஐந்தேகால் லட்சம் நூல்களை மூன்றரை இலட்சம் வாசகர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். 1896இல் கன்னிமாரா நூலகக் கட்டிடம் உருவாக்கப்பட்டு, நூலகம் தொடங்கியதற்குப் பிறகு - 78 ஆண்டுகளுக்குப் பிறகு 1974இல் கழகம் ஆட்சியிலே இருந்தபோதுதான் இந்தக் கட்டிடத்தோடு சேர்த்து மூன்றடுக்குக் கட்டடம் கட்டப்பட்டது என்பதை நான் மிகுந்த பெருமையோடு சொல்லிக் கொள்கிறேன்.

இன்றைக்கு பேராசிரியர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல இந்த நூற்றாண்டு விழாவையொட்டி ஒரு கோடியே 48 லட்சம் ரூபாய் (பேராசிரியர் கூட ஒரு கோடியே 45 இலட்சம் என்றார் - கொடுத்தவன் நான்) (பலத்த சிரிப்பு) கூடுதல் கட்டிட வசதிக்காக வழங்கப்பட்டிருக்கின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அது மாத்திரமல்ல; வாசகர்களின் வசதிகளைப் பெருக்க - நூலகத்திற்குத் தேவையான தளவாடப் பொருள்களை எல்லாம் வாங்குவதற்கு ஒரு கோடி ரூபாய் மேலும் கன்னிமாரா நூலகத்திற்கு (பலத்த கைதட்டல்) இந்த ஆண்டு ஒதுக்கப் பட்டிருக்கிறது.

நூலகத்தை மக்கள் இயக்கமாக மாற்ற 1989ஆம் ஆண்டு நாங்கள் இரண்டாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தோமே, அந்தக் காலக் கட்டத்தில் பேராசிரியர் அவர்களுடைய உறுதுணையோடு தமிழகம் முழுவதும் நூலகங்கள் - இதை மக்கள் இயக்கமாக ஆக்க வேண்டுமென்ற திட்டத்தின்படி தமிழகம் முழுவதும் நூலகங்கள் பரவலாகத் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு இன்றைக்கு அந்த நூலகங்களில் உறுப்பினர்களாக மாத்திரம் 25 இலட்சம் பேர் இருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

பகுதி நேர நூலகங்களாக - அந்த மக்கள் இயக்கமாக நூலகங்களை மாற்றியதின் காரணமாக 1,146 நூலகங்கள் இருக்கின்றன.

கல்கத்தாவில் ராஜாராம் மோகன்ராய் அவர்கள் பெயரால் ஒரு அறக்கட்டளை இருக்கின்றது. அந்த அறக்கட்டளை எந்தவொரு மாநில அரசு அந்த மாநிலத்திலே இருக்கிற நூலகத் திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கினாலும் அதற்கு ஈடாக ஒரு தொகையை ஒதுக்கிக் கொண்டிருக்கின்றது. கடந்த கால ஆட்சியில் நூலகங்களுக்காக பத்து லட்ச ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். உடனே ராஜாராம் மோகன் ராய் அறக்கட்டளையும் பத்து லட்ச ரூபாய் நிதி அளித்தது. இந்த ஆட்சியில் நாங்கள் நூலகங்களுக்காக முப்பது லட்ச ரூபாய் வழங்கப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு இந்தியா விலுள்ள எல்லா மாநிலங்களைக் காட்டிலும் நூலக விவகாரத்தில் தமிழ்நாடுதான் இந்த அறக்கட்டளையின் அதிக தொகையைப் பெற்ற ஒரேயொரு மாநிலம் (கைதட்டல்) என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

1974ஆம் ஆண்டு நூலக அலுவலர்கள் 13 பேர். 74இல் எந்த ஆட்சி என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது நூலக அலுவலர்கள் 13 பேர் நியமிக்கப்பட்டார்கள். 89-91இல் எந்த ஆட்சி என்பது உங்களுக்குத் தெரியும். அப்போது மூன்று நூலக அலுவலர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிறகு 96, 97இல் இப்பொழுது ஏழு நூலகர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மொத்தம் 23 பேர். இடையிலே என்னவென்று கேட்காதீர்கள். எதுவும் இல்லாத காரணத்தால் அதை விட்டுவிட்டேன். இல்லாததை எப்படிச் சொல்ல முடியும்.

எனவே 29 மாவட்டங்களில் தமிழகத்திலே 23 நூலக அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். மற்ற மாவட்டங் களிலும் நியமிக்கப்படவிருக்கிறார்கள் என்பதையும் நூல் பயிலு வதிலேதன்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியைச் செலவிட்ட பேரறிஞர் அண்ணா அவர்களுடைய தம்பிகளாகிய நாங்கள் இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தால் நூலகத்தின் பெருமையை உணர்ந்தவர்கள் - படிப்பின் பெரு

மையை உணர்ந்தவர்கள் - புத்தகத்தின் பெருமையை உணர்ந்தவர்கள். எனவே நூலகங்கள் எல்லா இடங்களிலும் கன்னிமாரா நூலகத்தைப் போல பல கன்னிமாரா நூலகங்கள் தமிழகம் முழுதும் உருவாக இந்த அரசு தொடர்ந்து முனைப்போடு பணியாற்றும் என்ற நல்ல செய்தியை இந்த விழாவிலே அறிவிக்கிறேன்.

இந்த விழாவிலே நம்முடைய எம்.ஏ.எம். அவர்கள் ஐந்து இலட்ச ரூபாயை இந்த நூலகத்திற்காக வழங்கி கலைஞர் கட்டளையிட்டால் இன்னும் வழங்குவேன் என்று சொன்னார். அவர் வழங்குவதற்கு முன்பே என்னைக் கேட்டிருந்தால் எவ்வளவு வழங்க வேண்டுமென்று சொல்லியிருப்பேன். (பலத்த சிரிப்பு) இனிமேன் நான் கட்டளையிட விரும்பவில்லை. தானாகவே வழங்குவார் என்று எதிர்பார்க்கிறேன்.

நம்முடைய நல்லி அவர்கள் புத்தகக் கண்காட்சிக்கு ஒரு கட்டிடத்தைக் கட்ட வேண்டுமென்று சொன்னார். நான் அவருக்குச் சொல்லிக் கொள்கிறேன். உங்கள் பெயரால் ஒரு கட்டடத்தை கட்டுங்கள். (பலத்த சிரிப்பு) நூலில் மூழ்கித் திளைக்கின்ற உங்களுக்கு, ஆயிரக்கணக்கான நூல்களைப் படிக்கும் உங்களுக்கு, இளமை முதல் புத்தகங்களைப் படிப்பதிலே ஆர்வம் உள்ள உங்களுக்கு இந்த ஆர்வம் பிறக்கட்டும். இன்றைக்கு கன்னிமாரா பிரபுவின் பெயரை நாம் எப்படிச் சொல்லிக் கொண்டிருக்கின்றோமோ, அதைப் போல அந்தப் புத்தகக் கண்காட்சி சாலை (கைதட்டல்) நல்லி குப்புசாமியின் பெயரைச் சொல்லிக் கொண்டேயிருக்குமென்று நான் கருதுகிறேன். இப்போது தியாகராயர் நகரிலே மாத்திரம் நல்லியிருந்தால் போதாது. நூலகத்திலும் நல்லியின் பெயர் இருக்க வேண்டுமென்று கூறி, வாழ்த்தி விடைபெறுகிறேன்.

- முரசொலி 13.9.97

சேலம் பெரியார் பல்கலைக்கழக

தொடக்க விழா

சேலம் நகரத்தில் இன்று காலையிலிருந்து விழாக்கோலம் கண்டு வருகிறோம். இந்த விழாக்கோலத்தை அதிக செலவில் ஏற்பாடு செய்யவில்லை என்று எனக்கு முன்னால் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அதிக செலவு செய்யலாமா என்று என்னைக் கேட்டபோது, 'அடக்கி வாசியுங்கள்' என்று நான்தான், மூன்று லட்ச ரூபாய்க்கு மாத்திரம் அனுமதி கொடுத்தேன்.

ஆனால், நிறைவேற்றப்பட்டிருக்கின்ற செலவு அதைவிட அதிகம் என்பதை என்னால் உணர முடிகிறது. எப்படி இது என்று தம்பி வீரபாண்டி ஆறுமுகம் அவர்களிடத்தில் கேட்டேன். சற்றொப்ப 40-க்கு மேற்பட்ட கல்லூரிகளும் அதற்கு மேற்பட்ட மேல்நிலைப்பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் இவைகளெல்லாம் சேர்ந்து இந்த மூன்று மாவட்டங்களிலும் உள்ளவை; ஒவ்வொரு கல்லூரியிலும் உள்ள நல்ல நோக்கம் கொண்டவர்கள் பேராசிரியர்கள் அனைவரும், ஒருங்கிணைந்து குழுக்கள் அமைத்துக் கொண்டு - குழுக்கள் அமைப்பது தனித்தனியாகப் போக அல்ல; ஒற்றுமையாக இருப்பதற்குத்தான் - என்ற வகையில் குழுக்களை அமைத்துக்கொண்டு அந்த குழுக்களின் சார்பில் சேலம் நகரில் பல்வேறு இடங்களில் பல்வேறு கல்லூரிகளின் சார்பில் வரவேற்பு வளைவுகளும், தோரணங்களும், பதாகைகளும் இந்த அலங்காரமான பந்தலும், வண்ண விளக்குகளும் அமைக்கப்

பட்டுள்ளன என்று என்னிடம் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் குறிப்பிட்டார்.

இதைத்தான் இன்றைக்கு இந்த அரசு கிராமப்பகுதிகளில் 'நமக்கு நாமே' என்ற தலைப்பில் நிறைவேற்றி வருகிறது. நம்முடைய காரியங்களை நாமே செய்து கொள்ள வேண்டும். நம்முடைய நன்மைகளுக்காக நம்முடைய மக்களுக்காக நாமே கடமை ஆற்ற வேண்டும் என்ற அந்த உணர்வு வரவேண்டும் என்பதற்காகத்தான் கிராமப் பகுதிகளில் 'அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்றும் 'நமக்கு நாமே திட்டம்' என்றும் இரண்டு திட்டங்களை கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்து அதை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

நாளைக்குக் கூட அந்தத் திட்டங்களை நாமக்கல் மாவட்டத் தில் நாங்கள் சென்று நிறைவேற்ற இருக்கிறோம். இத்தகைய உணர்வு எல்லா மக்களிடத்திலும் வருகின்ற வகையிலே ஒரு விழாவைக் கூட நமக்கு நாமே என்ற அளவில் நடத்திக் காட்ட முடியும் என்று முதன்முதலாக தமிழகத்திற்கு அறிவித்திருப்பதும் சேலம்தான் என்பதை எண்ணும்போது நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

தம்பி வீரபாண்டி ஆறுமுகம் எந்தக் காரியத்தை எடுத்தாலும் சோடை போகாமல், சொத்தையாகாமல் சூரத்தனமாக அனைவருக்கும் எடுத்துக்காட்டாக, மற்றவர்கள் கடைப்பிடிக்கக் கூடியதாக, மற்றவர்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று முயற்சி மேற்கொள்ளக்கூடியதாக அமைத்துக் காட்டுவதில் வல்லவர் என்பதை அண்மையில் அவர் நடத்தி முடித்த மாநில மாநாட்டிலேயே இந்த நாடு புரிந்து கொண்டிருக்கிறது.

எந்த மாநில மாநாடு என்றெல்லாம் நான் சொல்ல விரும்ப வில்லை. காரணம் கவர்னரை வைத்துக்கொண்டு அதையெல்லாம் பேசக்கூடாது என்பது அரசியல் நாகரிகம். எனவே, அத்தகைய

செயல்வீரராக விளங்குகின்ற தம்பி வீரபாண்டி ஆறுமுகத்தின் ஒத்துழைப்புடன் துணைவேந்தர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர், அரசு நிர்வாக அதிகாரிகள், பல்வேறு கல்லூரிகளின் முதல்வர்கள் பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், அனைவருடைய ஒத்துழைப்போடும் இன்று நடைபெற்ற பேரணியை நான், பேராசிரியர், மற்றும் அமைச்சர் பெருமக்கள் முழுவதுமாக ஏறத்தாழ மூன்று மணி நேரம் கண்டோம்.

நம்முடைய கவர்னர் அவர்கள் இடையில் ஒரு மணி நேரம்தான் அந்த நிகழ்ச்சியைப் பார்த்தார் என்றாலும்கூட நாங்கள் பார்த்த அந்தக்காட்சி மாணவர் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற எழுச்சியை - உற்சாகத்தை - உத்வேகத்தை - ஒரு கட்டுப்பாட்டை எங்களுக்கு உணர்த்தியது.

சில நாட்களுக்கு முன்பு மதுரை மாநகரத்தில் தீண்டாமை ஒழிப்புக்காக நடைபெற்ற மாநாட்டையொட்டி எல்லா கல்லூரி, பள்ளி மாணவர்களும், ஆசிரியர்களும் அடங்கிய மனிதச் சங்கிலி ஒன்று ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் நீளத்திற்கு நடைபெற்றது.

அது பெரிய மனிதச்சங்கிலி; தமிழ்நாட்டில் நடைபெற்ற எல்லா மனிதச் சங்கிலியையும் விட - எல்லா மனிதச் சங்கிலிகளையும் வெல்லக்கூடிய அளவிற்கு நடைபெற்ற மனிதச் சங்கிலி. அதிலே பெரும்பாலும் 90 சதவிகிதம் கலந்து கொண்டவர்கள் மாணவ - மாணவியர்கள்தான்.

எனக்கொரு நம்பிக்கை. இப்பொழுதுகூட அங்கே இங்கே சிறுசிறு சலசலப்புகள் இருக்கிறதே, அந்த சலசலப்புகளுக்கு எல்லாம்கூட இடமில்லாமல் மதுரையில் மாணவ - மாணவிகள் மிகுந்த அடக்கத்தோடு, கட்டுப்பாட்டோடு கைகோத்து நின்ற காட்சியைக் கண்டபோது - சேலத்திலும் இன்றைக்கு அதே காட்சியைக் கண்ட காரணத்தால் என்னுடைய நம்பிக்கை இரட்டிப்பாயிற்று. இதுதொடர வேண்டும் என்று நான் விரும்பு கிறேன்.

அந்தப் பேரணியில் அணிவகுத்து வந்த மாணவியர் - மாணவர்கள் - அவர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ லட்சம் பேர் இருக்கலாம். அந்த லட்சம் மாணவ - மாணவிகளுடைய கரங்களில் தந்தை பெரியாருடைய உருவம் பொறித்த கொடிச் சின்னங்கள் இருந்ததை பார்க்கும்போது, நான் மெய்சிலிர்த்துப் போனேன். புல்லரித்தது எனக்கு. பெரியாருடைய பெயரைக் கேட்டாலே வெறுப்பு கொண்ட சிலருடைய மத்தியில் - பெரியாருடைய பெயரைக் கேட்டாலே ஏதோ ஒரு பயங்கரமான பெயர் என்று அஞ்சி நடுங்கிய இந்த பூமியில், மாணவச் செல்வங்கள், எதிர்கால வாரிசுகள், எதிர்கால மன்னர்கள் - எதிர்காலத்தலைவர்கள் - எதிர்கால சிந்தனையாளர்கள் - எதிர்கால விஞ்ஞானிகள் - அவர்களுடைய கரங்களில் தந்தை பெரியாரின் உருவம் பொறித்த கொடிகள் லட்சக்கணக்கானவை இன்றைக்கு இருந்ததை நான் கண்டபோது, 1945-ஆம் ஆண்டு தந்தை பெரியாருடைய மாணவனாக ஈரோடு குருகுலத்தில் படித்த நேரத்தில் அய்யா பெரியாருக்கும், அவருடைய கொள்கை களுக்கும் இப்படிப்பட்ட ஒரு ஏற்றம் கிடைக்குமா என்று ஏங்கிக் கொண்டிருந்த என்னைப்போன்ற, பேராசிரியர் போன்ற, பெரியாருடைய மாணவர்களுக்கெல்லாம் இன்றைக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும் என்பதை என்னால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை. அந்த அளவிற்கு இந்த நாட்டை எதிர்காலத்தில் உருவாக்கக்கூடிய சிற்பிகளாகிய இளைஞர்கள் - மாணவர்கள் கொடி எடுத்து வந்த காட்சியைப் பார்த்தேன்.

அது எந்தக் கட்சியின் கொடியுமல்ல. எல்லா கட்சியிலும் சுயமரியாதை வேண்டும் என்று சொன்ன சுயமரியாதை இயக்கத்தின் சுடரொளி தந்தை பெரியாருடைய கொடி. அந்தக் கொடியைத்தான் எடுத்து வந்தார்கள்.

இன்னொன்று; நம்முடைய கவர்னர் அவர்கள் பார்க்கத் தவறி விட்டார்கள். காரணம், அந்த ஊர்வலம் வந்து கொண்டிருந்த

போது தொலைதூரத்தில் இரண்டொரு கட்சிக் கொடிகளை நான் பார்த்துவிட்டேன். அந்தக் கொடிகள் கவர்னருக்கு அருகே வந்தால், நாளைக்குப் பத்திரிகையிலே - ''இந்த விழாவையே மறைத்து விட்டு கட்சி கொடிகளோடு ஊர்வலம்! கவர்னர் வந்து பார்த்தார்'' என்று செய்தி போட்டு விடுவார்கள் என்பதற்காக - ''இதுவரையிலேதான் அரசாங்க விழா ஆளுநர் அவர்களே! அடுத்து பொதுமக்களும் கட்சிக்காரர்களும் கொடிகளை எடுத்து வருகிறார்கள் நீங்கள் மேடையிலே இருப்பது நல்லதல்ல'' என்று நான் அவர்களிடம் சொன்னவுடன், அவர்களும் ''ஆமாம்'' என்று சென்று விட்டார்கள்.

அவர்கள் சென்ற அரைக் கணத்திற்கெல்லாம், அரைநொடிக் கெல்லாம் நூறு இளம் மாணவர்கள் பெரியாரைப் போல வேட மணிந்து கொண்டு வரிசையாக வந்தார்கள் - மிக உயரக் குறைவானவர்கள், குள்ளமானவர்கள் - அவர்கள் வெண்தாடி வைத்துக் கொண்டு கறுப்புச்சால்வை போர்த்திக்கொண்டு, ஒரு கையில் புத்தகத்தை வைத்துக்கொண்டு, இன்னொரு கையிலே ஒரு தடியை வைத்துக்கொண்டு நூறு பெரியார்கள் வந்தார்கள்.

நாங்கள் எண்ணுவது இந்த நாட்டிலே நூறு பெரியார்கள் அல்ல. தமிழகத்திலே இருக்கிற ஆறுகோடி மக்களும் பெரியார் களாக ஆக வேண்டும் என்ற அந்த ஆசையை நிறைவேற்றுவதற்கு அடையாளமாக அந்த அணிவகுப்பு வந்ததாகத்தான் நான் கருதினேன்.

எனவே, சேலத்தில் நடைபெற்ற அந்தப் பேரணியும், நடைப்பெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த பெரியார் பல்கலைக் கழகத்தின் தொடக்கவிழாவும் - தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சிக்கும் ஏற்றத்திற்கும் வழிகாணக் கூடியவைகள் என்ற நிலைமையை நாம் இன்றைக்குப் பெற்றிருக்கிறோம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சொன்னார்.

"வயதில் அறிவில் முதியார்;
நாட்டின் வாய்மைப் போருக்கு என்றும் இளையார்.
உயர் எண்ணங்கள் மலரும் சோலை
தூயதாடி நெஞ்சில் விழும்
அவர் மண்டைச் சுரப்பை உலகு தொழும்"

என்று சொன்னார்.

மண்டைச் சுரப்பை என்றால், அவருடைய அறிவாற்றலை, மூளைத்திறனை உலகமே தொழும் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அன்றைக்குப் பாடினார்.

இன்றைக்கு தந்தை பெரியாருடைய புகழை அல்ல. அறிவை, ஆற்றலை, அவர் கொண்டிருந்த துணிவை, அவர் சண்ட மாருதமாகச் சீறி சாதிமத வேறுபாட்டை எல்லாம் களையத் துடித்த அந்த தூய செயலை இன்றைக்கு உலகம் போற்றிக் கொண்டிருக் கிறது.

இந்தியாவிலே எந்த மாநிலத்திற்குச் சென்று கேட்டாலும், சமூக நீதியைப் பற்றி பேசினாலும், சாதிச் சண்டை களையப்பட வேண்டும் என்று எடுத்துச் சொன்னாலும், மதச்சார்பற்ற தன்மை வேண்டும் என்று கூறினாலும், அங்கெல்லாம் பேசுகிற தலைவர்கள் முதலிலே, தங்களுககு வழிகாட்டியாகக் கொண்டிருப்பது தந்தை பெரியாரைத்தான் என்பதை, கடந்த இரண்டாண்டு காலத்திற்கு மேலாக வடபுலத்திலும் நான் சென்று பார்க்கின்ற காரணத்தால் என்னால் உணர முடிகிறது.

அந்த அளவிற்கு இன்றைக்கு இந்திய பூபாகம் எங்கும் ஒரு சமுதாய எழுச்சியை, ஒரு புரட்சியை மறுமலர்ச்சியை உருவாக்கக் காரணமாக இருந்த தந்தை பெரியாருடைய பெயரால் இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகம் அமைவது - அதுவும் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் வரவேற்புரையிலே சொன்னதைப் போல சேலத்தில் அமைவது மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

தமிழ்நாட்டில் 1857 ஆம் ஆண்டில்தான் முதல் பல்கலைக் கழகமே - சென்னைப் பல்கலைக்கழகமே அமைந்தது - 1857 இந்திய நாட்டு வரலாற்றில் ஒரு சிறப்பான ஆண்டு. முதல் சுதந்திரப் போராட்டப் பிரகடனம் செய்யப்பட்ட சிப்பாய்ப் புரட்சி நடைபெற்ற ஆண்டு! அந்த ஆண்டில்தான் சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது.

அப்பொழுது சென்னை மாகாணம் என்றால் ''Old Madras Presidency'' (ஓல்டு மெட்ராஸ் பிரிசிடென்சி) என்றால் இன்றைக்கு இருக்கின்ற இந்தப் பரப்பளவு அல்ல. இதைவிட பெரிய பரப்பளவு. இன்றைய ஆந்திரம், ஒரிசா, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் சில பகுதிகளையும் சேர்த்துக் கொண்டு ''Madras Presidency'' (மெட்ராஸ் பிரிசிடென்சி) என்று அழைக்கப்பட்டது. அதற்கு ஆட்சித் தலைவராக வருகிறவருக்கு 'Premier' (பிரிமியர்) என்று பெயர். ராஜாஜி அவர்கள் 1937 ஆம் ஆண்டு இந்த மாநிலத்தின் ஆட்சித் தலைவராக இருந்த பொழுது, அவருக்குப் பெயர் முதலமைச்சர் அல்ல; 'பிரிமியர்' என்றுதான் பெயர்! அப்படிப்பட்ட இந்தப் பெரிய பூபாகமாக இருந்த மாநிலத்தில் 1857 ஆம் ஆண்டு சென்னையிலே தோன்றியதுதான் முதல் பல்கலைக் கழகம்.

இன்றைக்கு இந்தப் பல்கலைக்கழகத்தோடு சேர்ந்து பதினைந்தாவது பல்கலைக் கழகம். இந்த பதினைந்து பல்கலைக் கழகங்களில் - நம்முடைய பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகம், கோவை வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், ஆகியவைகள் எல்லாம் கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டவை என்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்வேன். பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் எல்லாம் இணைந்தவை. கல்லூரிகளின் தொகுப்பாக இருப்பவை பல்கலைக்கழகம்

பெருந்தலைவர் காமராசர் கல்விக் கண் திறந்தவர் என்ற பாராட்டுக்குரியவர். அவர் ஆரம்பப் பள்ளிகளை அன்றைக்கு ஏராளமாகத் திறந்தார். கிராமப்புறத்தில் இருக்கிற பிள்ளைகளுக்கு படிப்பறிவு வேண்டும் என்பதற்காக காமராசர் அந்தச் செயலைச் செய்யத் தொடங்கினார். அது மேலும் இன்றைக்கு பெருகிக் கொண்டிருக்கிறது, என்றாலும்கூட கிராமப்புறங்களிலே இருந்து ஆங்காங்கு மேல்நிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளில், படித்து வருகிற மாணவர்களுக்கு அங்கிருந்து செல்வதற்கான கல்லூரிகள் இல்லாத சூழ்நிலை கூடாது என்று தி.மு.கழக அரசு கருதியது.

இருநூறு ஆண்டு கால ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழ்நாட்டில் - சென்னை மாநிலத்திலே, சென்னை ராஜதானியிலே தொடக்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை வெறும் 24 தான். அதற்குப்பின் 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சியில் தொடங்கப் பட்ட கல்லூரிகள் 68.

அதன்பின் 1967 முதல் 1975 வரை எட்டாண்டு காலம் நடைபெற்ற தி.மு.கழக ஆட்சியில் தொடங்கப்பட்ட கல்லூரிகளின் எண்ணிக்கை 97.

கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தொடங்கப்பட்ட கல்லூரிகள் 4.

இதை எல்லாம் புள்ளி விபரத்திற்காகச் சொல்கிறேன் - விமர்சனத்திற்காக அல்ல. இந்தக் கணக்கு மனதிலே பதிய வேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன்.

சுயநிதி கலை, அறிவியல் கல்லூரிகள் என்று எடுத்துக் கொண்டால் 1984 முதல் 1988 வரை என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சியில் 15 கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

88-89 கவர்னர் ஆட்சியில் 15 கல்லூரிகள் தொடங்கப் பட்டன.

89-91 இரண்டாண்டுக்கால தி.மு.கழக ஆட்சியில் 5 கல்லூரிகள். பிறகு 91 முதல் 96 வரையிலான கடந்த கால ஆட்சியில், ஐந்தாண்டுகளில் தொடங்கப்பட்ட சுயநிதிக் கல்லூரிகள் 65, 96க்குப் பிறகு இந்த 15 மாத காலத்தில் தொடங்கப்பட்ட சுயநிதி கலை அறிவியல் கல்லூரிகள் 59, (கைதட்டல்) இதையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

பொறியியல் கல்லூரிகள் என்று எடுத்துக் கொண்டால், கடந்த ஆண்டு இந்தக் கழக ஆட்சியிலே 10 கல்லூரிகள் தொடங்க அனுமதிக்கப்பட்டன. இந்த ஆண்டு இதுவரை 39 கல்லூரிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழகத்தில் 10,000 மாணவர்கள் கூடுதலாக பொறியியல் கல்லூரிகளில் படிக்கக்கூடிய வசதிவாய்ப்பை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது.

அதுமாத்திரமல்ல; பொறியியல் கல்லூரியிலே சேருவதற்கு கிராமப்புறத்து மாணவர்களுக்கு வாய்ப்பு குன்றிப் போயிருந்தது. குறைந்து போயிருந்தது. அந்த வாய்ப்பை அதிகப்படுத்துவதற்காக முதல் கட்டமாக பொறியியல் கல்லூரிகளில் கிராமப்புறத்து மாணவர்களுக்கு கட்டாயம் 15 சதவிகிதம் இடமளித்தே ஆக வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி - அதை எதிர்த்து நீதிமன்றங்களுக்கு எல்லாம் சென்றாலும்கூட கடைசியாக அரசின் கருத்துத்தான் வெற்றி பெற்றது என்ற அளவிலே - 15 சதவிகித கிராமப்புற மாணவர்கள் பொறியியல் கல்லூரிகளில் சேருவதற்கான நிலைமையும் இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

அதுமாத்திரமல்ல; இந்த அரசினுடைய இன்னொரு அறிவிப்பும் உங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அது நடைமுறைக்கு வந்திருக்கிறது. கடந்த ஆண்டில் அறிவிக்கப்பட்டு இப்பொழுது அமலாக்கப்பட்டுள்ள அந்த முக்கியமான அறிவிப்பு என்னவென்றால், எந்த ஒரு குடும்பத்திலும் பட்டதாரிகளே இல்லாமலே இருந்து - முதல் பட்டதாரி இவர்தான் என்கிற அளவிற்கு இருக்கிற பட்டதாரிகள் வந்தால், அவர்கள்

வாங்குகின்ற மதிப்பெண்களை வைத்து ஒவ்வொரு தொழிற் படிப்பிலும் பத்து பட்டதாரிகளுக்கு அவர்கள் ஒன்று, இரண்டு, மூன்று என்று பத்து என்று வருகின்ற வரை - ஒவ்வொரு பாடப் பிரிவிலும் பரிசுத் தொகை மாத்திரமல்ல; அவர்கள் மேலும் உயர் தொழிற்கல்வி பெறுவதற்கு ஆகிற செலவை இந்த அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்து, அதுவும் நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது.

இவைகள் எல்லாம் கல்வியை மேலும் மேலும் பரப்ப வேண்டும்; கல்வியைப் பெற்றால்தான் கண்திறக்கும்; கண் திறந்தால்தான் கருத்துக்கள் நிலைக்கும், கருத்துக்கள் நிலைத்தால் தான் இந்த நாடு உய்யும் என்ற தந்தை பெரியாரின் கொள்கைகளை அண்ணாவின் இலட்சியங்களை ஈடேற்றத்தான் நாங்கள் கல்விப் பயிரை மேலும் மேலும் வளர்ப்பதிலே தொடர்ந்து பல்வேறு வகையிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

பெரியார் அவர்கள் போதித்த கருத்துக்களை எல்லாம் இன்றைக்கு நாங்கள் செயல்படுத்திக் கொண்டு வருகிறோம். பெரியார் சமுதாயத் தொண்டாற்றினார். அவருக்கு அரசியல் அவ்வளவாகப் பிடிக்காது.

தேர்தல் பிடிக்காது. தேர்தலில் எந்தக் கட்சியையும் ஆதரித்துப் பிரச்சாரம் கூட செய்வார். ஆனால் அவருக்குத் தேர்தல் பிடிக்காது. தேர்தலிலே அவரும் நிற்கமாட்டார். அவருடைய இயக்கத்தையும் நிற்கவிட மாட்டார். ஆனால், அவர் சமுதாயத்தொண்டு புரிந்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் தந்தை பெரியாரிடமிருந்து மாறுபடவில்லை. பெரியாருடைய கருத்துக்களை செழிக்க வைப்பதற்காக, செயல்படுத்துவதற்காக - பெரியாரிடம் இருந்து பிரிந்தாலும் கூட அவருடைய கொள்கைகளில் இருந்து பிரியாமல் ஒரு அரசியல் இயக்கம் கண்டு, அந்த அரசியல் இயக்கம் ஆட்சிப்

பொறுப்பு ஏற்கின்ற நிலைமையை உருவாக்கி - பெரியாருடைய கொள்கைகளான சுயமரியாதைத் திருமணத்தை சட்டப்படி செல்லுபடியாக்குவது; இருமொழித்திட்டம்; இந்த நாட்டிற்கு 'சென்னை ராஜ்யம்' என்ற பெயரை மாற்றி 'தமிழ்நாடு' என்று பெயர் வைப்பது; அதைப்போல 1929 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாநாட்டில் பெரியார் நிறைவேற்றிய தீர்மானம் - பெண்களுக்கும் ஆண்களைப்போல சொத்துகளிலே சமஉரிமை வேண்டும் என்பதாகும் - அந்தத் தீர்மானத்தை 89 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில் நான் நிறைவேற்றியபோது சொன்னேன். ''அறுபது ஆண்டுகளுக்கு முன்பு பெரியார் நிறைவேற்றிய தீர்மானத்தை இன்றைக்கு சட்டமாக்குகிறோம்.'' என்று சொன்னேன்.

அதைப்போல உள்ளாட்சி மன்றத் தேர்தலில் சிலர் பேசிக் கொண்டிருந்தார்கள், பெண்களுக்கு விகிதாச்சாரம் வேண்டும் என்று அதை செயல் மூலம் காட்டி, முப்பது சதவிகிதம் உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் பெண்களுக்கு இடஒதுக்கீடு செய்து பெரியாரின் கொள்கைகளை நாம் நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

மேலும் நிறைவேற்றுகிற நேரத்தில், இளம் பயிர்களெல்லாம் தந்தை பெரியாரின் அந்த அறிவுக் கருத்துக்களைப் பெற்று செழிக்கத்தான் இந்தப் பல்கலைக்கழகம்.

தம்பி வீரபாண்டி ஆறுமுகம், அவர் அமைச்சர் என்றாலும் கூட முதலமைச்சருக்கு ஒரு கோரிக்கை வைக்க வேண்டும், கல்வி அமைச்சருக்கு ஒரு கோரிக்கை வைக்க வேண்டும், ஆளுநருக்கு ஒரு கோரிக்கை வைக்க வேண்டும் என்ற முறையில் எங்கள் மூவர் முன்னிலையிலே ஒரு கோரிக்கை வைத்தார்.

''பெரியார் பல்கலைக் கழகத்திற்கு இருக்கின்ற பாடத் திட்டங்களிலே பெரியாரின் கொள்கைகளைப் பரப்புகின்ற அளவிற்கு பாடத் திட்டங்கள் வேண்டும்'' என்றார்.

தம்பி, நீ சொல்லித்தானா நாங்கள் இவைகளைச் செய்ய வேண்டும். நிச்சயமாக நாங்கள் செய்வோம் என்ற நம்பிக்கையை நீ பெறலாம் (கைதட்டல்) என்று தம்பி வீரபாண்டி ஆறுமுகத்திற்கு சொல்லிக் கொள்கிறேன்.

மேடையிலும் சொன்னார். வந்து பக்கத்தில் அமர்ந்தும் சொன்னார். ''முதல் கட்டப் பணிகளுக்கு 10 கோடி ரூபாய் ஆகும். உடனடியாக நீங்கள் அதை ஒதுக்கித் தந்தால்தான் வேலை விரைவாக நடைபெறும். கட்டிடங்கள் எழுப்பப்படும்'' என்று கேட்டார். ''ஆகட்டும்'' என்று சொல்லியிருக்கிறேன். ஆகட்டும் பார்க்கலாம் அல்ல. ஆகட்டும்! நிச்சயமாக ஆகும்! என்ற உறுதியை அளித்து வளர்க தந்தை பெரியார் பல்கலைக்கழகம் என்று வாழ்த்துகிறேன்.

- முரசொலி 18.9.97

டாக்டர் அம்பேத்கர் பல்கலைக் கழக தொடக்க விழா

இன்று ஓர் இனிய நாள். இதயமெல்லாம் பூரிக்கின்ற நாள். நீண்ட நெடுநாளைய கனவு நிறைவேறுகின்ற நாள். இந்த நாளை மேலும் சிறப்பிக்கின்ற வகையில் நம்முடைய குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். நான் அவரை தமிழக மக்களின் சார்பாக வருக! வருக! வருக! என்று வாயார-மனமார வரவேற்கிறேன்.

இந்தியாவினுடைய குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்று முதல் தடவையாக தமிழகத்திற்கு வந்துள்ள அவர்கள் இந்தியா விலேயே முதன் முதலாகத் தொடங்கப்படுகின்ற அண்ணல் அம்பேத்கர் பெயரால் தொடங்கப்படுகின்ற சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைப்பது மேலும் ஒரு சிறப்பு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலே உள்ள மாபெரும் அரசியல் தலைவர்களில் பெரும் பொறுப்பிலே இருந்தவர்கள் என்றில்லாமல் மக்கள் பாராட்டுகின்ற அரசியல் தலைவர்களில் இரண்டு நாராயணன்கள் என்னைக் கவர்ந்தவர்கள். ஒருவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன்; (கைதட்டல்) மற்றொருவர் கே.ஆர்.நாராயணன். (பலத்த கைதட்டல்) இந்த இரு நாராயணன்களுமே ஏழையெளிய மக்கள்பால் அன்பு கொண்டவர்கள். எளிய - எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டிருப்பவர்கள்.

மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்கள் இந்தியாவிலேயே பெரிய மாளிகையான ராஷ்ட்ரபதி மாளிகையில் இன்றைக்கு வாழ்ந்தாலுங்கூட அவருடைய எண்ணம் எல்லாம் அன்றைக்குச் சொல்வார்களே - கிரெம்ளின் மாளிகையிலே உலவினாலும், லெனினுடைய எண்ணம் எல்லாம் ஏழையெளிய மக்கள்பால்தான் இருக்குமென்று; அதைப் போல் இவருடைய எண்ணம் எல்லாம் இந்தியத் திருநாட்டிலே உள்ள சாதாரண, சாமான்ய, ஏழையெளிய நடுத்தர, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப் பட்ட மக்களையே சுற்றி வருகின்ற எண்ணங்களாகும். அப்படிப் பட்ட பெருமைக்குரிய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்று வருகை தந்திருப்பது நமக்கெல்லாம் பெரும் மகிழ்வைத் தருகின்ற ஒன்றாகும்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் இன்றைக்கு இங்கே தொடங்கப்படுகிறதென்றால் - சென்னையிலே சட்டக் கல்லூரி முதன்முதலாகத் தொடங்கப்பட்டது 1891 ஆம் ஆண்டு. அதற்குப் பிறகு 83 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1974-ல் நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலக் கட்டத்தில் இரண்டாவது சட்டக் கல்லூரி தமிழ்நாட்டில் மதுரையில் தொடங்கப்பட்டது. பிறகு 1979-இல் திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996 இல் கடந்த ஆண்டு - நெல்லையிலே மற்றொரு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்லூரி ஒன்றைத் தவிர, அரசின் சார்பிலே ஐந்து சட்டக் கல்லூரிகள் தமிழகத்திலே இருக்கின்றன. இந்தக் கல்லூரிகள் எல்லாம் ஆங்காங்குள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகத்தோடும் சார்ந்து இயங்க வேண்டிய நிலையிருந்த காரணத்தால், உள்ள இடர்பாடுகளையெல்லாம் எண்ணி, எல்லா சட்டக் கல்லூரிகளும் ஒரே பல்கலைக்கழகத்தின் கீழ் சார்ந்து வாழ வேண்டும்; இயங்க வேண்டுமென்பதற்காகத்தான் இந்தியாவிலேயே முதல் முயற்சி யாக, முதல் தடவையாக, அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தை இன்றைக்கு நாம் தொடங்கியிருக்கிறோம்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். அம்பேத்கருடைய பெயரை இன்றைக்கு சட்டப் பல்கலைக் கழகத்திற்குத் தான் வைத்தோம் என்றில்லை. 1990ஆம் ஆண்டில் அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடைபெற்ற அந்தக் காலக் கட்டத்தில், சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரைச் சூட்டினோம் என்பதையும் நினைவுபடுத்துகின்றேன்.

1972-ஆம் ஆண்டிலேயே அரசினர் கலைக்கல்லூரி ஒன்றினை பெரம்பூர் பகுதியிலே தொடங்கிய போது அதற்கும் அம்பேத்கர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

அது மாத்திரமல்ல; நம்முடைய மாநிலத்திலே மாத்திர மல்ல; அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்ட வேண்டுமென்று சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி பதினைந்து ஆண்டு களுக்குப் பிறகும் அந்தத் தீர்மானம் செயல்படாமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி மக்கள் தங்களுடைய குரலையெழுப்பிய போது அதற்கு ஆதரவுக் குரலாக இந்தியாவிலேயே ஒரேயொரு மாநிலம் தான் குரலெழுப்பியது. அதுதான் தமிழ்நாடு. (கைதட்டல்.)

அன்றைக்கு நான் வேண்டுகோள் விடுத்தேன். லட்சக் கணக்கான தந்திகள் மராட்டிய அரசுக்கு தமிழகத்திலிருந்து அனுப்பப்பட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அவ்வாறே லட்சக்கணக்கான தந்திகள் மராட்டிய மண்டில அரசுக்கு அனுப்பப்பட்டன. மராட்டிய மாநில ஆளுநர் திரு.அலெக்சாண்டர் அவர்களும் அன்றைய முதலமைச்சராக இருந்த திரு.சரத்பவார் அவர்களும் எனக்கு உடனடியாக பதில் அனுப்பினார்கள். தமிழ் நாட்டு மக்களுடைய கோரிக்கையை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று பதில் அனுப்பினார்கள். அவ்வாறே நிறைவேற்றினார்கள்.

இந்த அளவிற்கு அம்பேத்கருடைய கருத்துக்களோடு எங்களுக்கு உள்ள ஈடுபாட்டிற்குக் காரணமே எங்களை ஆளாக்

கிய தந்தை பெரியார் அவர்களும், வழிநடத்தி, வழிகாட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களும் எந்தக் கொள்கைகளை எங்களுக்குக் கற்றுத் தந்தார்களோ அதே கொள்கைகளையுடையவர் அம்பேத்கர் என்ற காரணத்தினால் எங்களுக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களிடத்திலே தணியாத ஆர்வமும், ஈடுபாடும் என்றென்றும் உண்டு. (கைதட்டல்)

சாதி சமயங்கள், மத பேதங்கள், உயர்வு தாழ்வு இவைகள் எல்லாம் அகற்றப்பட வேண்டுமென்பதையும் அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதையும் இலட்சிய மூச்சாகக் கொண்டிருக்கின்ற எங்களுக்கு அம்பேத்கருடைய பல கருத்துக்கள் மேலும் ஆர்வத்தைத் தூண்டி விடக்கூடிய கருத்துக்களாக அமைந்திருக்கின்றன.

அவர் சொல்லுகிறார்:

''There is no doubt, in my opinion, that unless you change your social order you can achieve little by way of progress.

You cannot mobilize anything on the foundations of Caste.

You cannot build up a nation; you cannot build up a morality.

Anything that you will build on the foundations of caste, will crack and will never be a whole''

அதாவது..

''உங்களுடைய சமூக அமைப்பை மாற்றாமல், நீங்கள் சிறிது கூட முன்னேற்றம் காண முடியாது.

சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதையும் உருவாக்க முடியாது.

தேசிய இனத்தை உருவாக்க முடியாது. ஒரு ஒழுக்கப் பண்பை உருவாக்க முடியாது.

சாதியை அடிப்படையாக வைத்து நீங்கள் எதை உருவாக்கினாலும் - அது உடைந்து சிதறி உருப்படாமல் போய் விடும்''

மேலும் அம்பேத்கர் கூறுகிறார்...

''The only question that remains to be considered is, How to bring about the reform of the Hindu social order? How to abolish caste? This is a question of supreme importance.

I am convinced that the real remedy is inter-marriage. Fusion of blood, can alone create the feeling of being kith and kin, and unless this feeling of kinship, of being kindred, becomes paramount the separatist feeling - the feeling of being aliens - created by caste will not vanish.''

''இப்போது நாம் பரிசீலிக்கவேண்டிய பிரச்சினை இதுதான். இந்து சமூக அமைப்பில் சீர்திருத்தம் செய்வது எப்படி? சாதியை ஒழிப்பது எப்படி? இது முக்கியமான பிரச்சினையாகும்.

சாதி ஒழிப்புக்கு உண்மையான வழி, கலப்பு மணம் தான் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இரத்தக் கலப்பின் மூலம்தான் உற்றார், உறவினர் என்ற உணர்வு ஏற்படும். இந்த உணர்வு ஏற்பட்டு வலுவடைந்தாலன்றி சாதியினால் ஏற்பட்டிருக்கும் வேற்றுமை உணர்வும் ஒருவருக்கொருவர் அன்னியராக நினைப்பதும் மறையவே மறையாது.''

''The real remedy for breaking Caste is inter marriage. Nothing else will serve as the solvent of caste.

you are right in holding, the caste will cease to be an operative force, only when inter-dining, and inter-marriage, have become matters of common course.''

'சாதியை உடைப்பதற்கு உண்மையான தீர்வு, கலப்புத் திருமணமே. வேறு எதுவும் சாதியை ஒழிக்க முடியாது.

சமபந்தி போஜனமும், கலப்புத் திருமணமும் சாதாரண நடைமுறைகளாகும் போதுதான் சாதியின் சக்தி அழியும்.''

இது அம்பேத்கருடைய பொன்மொழி. இந்த அணுகுமுறை இன்றைக்கும் சுதந்திரப் பொன்விழாவை கொண்டாடிக் கொண்டிருக்கின்ற இந்தக் காலக் கட்டத்திலும் நம்மால் கடைப்பிடிக்க வேண்டிய நிர்பந்தம் நமக்கேற்பட்டிருப்பதை நான் உணராமல் இல்லை.

எனவேதான் இந்த அரசு 74இல் நான் பொறுப்பிலே இருந்த அந்தக் காலக் கட்டத்திலேயே கலப்புத் திருமணத்தை ஊக்கப் படுத்த - கலப்புத் திருமணம் செய்து கொள்கின்ற தம்பதிகளுக்கு ஒன்றரை பவுன் தங்கப்பதக்கம் பரிசளிக்கப்படுமென்று அண்ணா வழிநின்று அறிவித்து செயல்படுத்தினோம்.

கலப்புத் திருமணம் என்றால் செட்டியாரும், முதலியாரும் செய்து கொள்கின்ற திருமணம் அல்ல. அய்யரும், அய்யங்காரும் செய்து கொள்கின்ற திருமணம் அல்ல. இருவரில் ஒருவர் மணமகனோ அல்லது மணமகளோ தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவராக இருந்தால், அதற்குப் பெயர்தான் கலப்புத் திருமணம் என்ற முறையிலேதான் இந்தப் பதக்கப் பரிசு வழங்கப்பட்டது.

1989-90இல் இந்தக் கலப்புத் திருமணத்திற்கு ஐந்தாயிரம் ரூபாய் என்று நான் பொறுப்பிலே இருந்தபோது கழக ஆட்சியிலே அறிவிக்கப்பட்டது. கடந்த ஆண்டு 1996இல் அந்த 5 ஆயிரத்தை 10 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தி கலப்புத் திருமணம் செய்து கொள்கின்ற தம்பதிகளுக்கு வழங்கப்பட்டது.

இப்பொழுது மதுரையிலே நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாட்டிலே அறிவித்திருக்கிறேன். கலப்புத் திருமணத்தில் ஆணோ அல்லது பெண்ணோ இருவரில் ஒருவர் ஆதிதிராவிடராக

இருந்தால் இருபதாயிரம் ரூபாய் அவர்களுக்கு நிதி வழங்கப்படும் அரசின் சார்பில் என்று அறிவித்திருக்கிறேன்.

அதுமாத்திரமல்ல; சமபந்தி விருந்துகளும் இன்றைக்கு தமிழகத்திலே பல ஆலயங்களில் - பல பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. இவைகள் எல்லாம் பெரியார் வழியைப் பின்பற்றி, அண்ணாவின் வழியைப் பின்பற்றி காந்தியடிகளின் கருத்துக் களைப் பின்பற்றி, அண்ணல் அம்பேத்கர் அவர்களுடைய கருத்துக் களைப் பின்பற்றி நடைபெறுகின்ற செயல்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்னொன்றையும் நம்முடைய குடியரசுத் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

தமிழகத்திலே இந்த ஆண்டு ஐம்பது இடங்களில் ஒவ்வொரு இடங்களிலும் 200 வீடுகள் - எல்லா சமூகங்களையும் சேர்ந்த வர்கள், ஆதி திராவிடர் உள்ளிட்ட உயர்ந்த சாதிக்காரர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற எல்லா சமுதாயத்தினரும் அங்கே குடியிருக்கக் கூடிய அளவிற்கு ''சமத்துவபுரம்'' என்ற ஊர்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இந்த ஆண்டு அந்தப் பணி தொடங்கவிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே எடுத்துச் சொல்லி,

இந்த நல்ல விழாவில் - இனிய விழாவில் - ஒப்பற்ற விழாவில்- நம்முடைய குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர்.நாராயணன் அவர்களையும், ஆளுநர் அவர்களையும், மற்றும் வருகை தந்துள்ள பெருமக்கள் அனைவரையும் உங்களையும் வருக! வருக! என்று வரவேற்று இந்தப் பல்கலைக்கழகத்திற்கு என்னுடைய இதயமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முரசொலி 21.9.97

ஆதித்தனார்
பிறந்த நாள் விழா

ஆதித்தனார் அவர்களுடைய பிறந்தநாள் விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நாளில் 'மூதறிஞர்' என்ற ஒரு விருதினை எனக்கு வழங்கி சிறப்பித்துள்ள நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும், இந்த விருதினை வழங்கிய ஆளுநர் பேரன்பிற்குரிய, பெருமதிப்பிற்குரிய மேதகு பாத்திமா பீவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விருதுடன் நம்முடைய சிவந்தி ஆதித்தன் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியை எனக்கு வழங்கியுள்ளார்கள். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் ராஜராஜ சோழன் பெயரால் நான் எழுதிய ''தென்பாண்டிச் சிங்கம்'' என்ற வரலாற்று நூலுக்குப் பரிசு வழங்கப்பட்டது. அந்தப் பரிசினை வழங்கிய சங்கர் தயாள் சர்மா அவர்கள் எனக்கு அவருடைய அன்பின் காரணமாக பட்டத்தையும் வழங்கினார்.

அந்த நிகழ்ச்சியிலே ஒரு இலட்சம் ரூபாய் பொற்கிழியும் தரப்பட்டது. அதனை நான் தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ச் சான்றோர்கள் சிலருடைய பெயரால் ஒரு அறக்கட்டளையை உருவாக்கி அவர்களுடைய பெயரால் அவ்வப்போது சொற்பொழிவுகளை ஏற்பாடு செய்து, மாணவர்களும் மற்றவர்களும் பயன்பெறுகின்ற வகையிலே செலவழித்திடுங்கள் என்று அந்தத்

தொகையை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கே தந்துவிட்டேன். வழங்கியவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தார். திருப்பித் தந்தது அவர்களிடமே!

இப்பொழுது நிலைமை அப்படி இல்லை. (பலத்த சிரிப்பு) இன்று காலையில் சிவந்தியின் அண்ணன் ராமச்சந்திர ஆதித்தன் தமிழக அரசின் சார்பில் நடத்தப்படுகின்ற ஏழைப் பெண்களுடைய திருமண உதவித் திட்டம் - மூவலூர் ராமாமிர்தம் அவர்களுடைய பெயரால் வழங்கப்படுகின்ற திட்டத்திற்கு நான் விடுத்த வேண்டுகோளின்படி - பலர் கோடிக்கணக்கில், இலட்சக் கணக்கில் நிதி வழங்கியிருக்கிறார்கள் என்றாலும் - காலையிலே ஒரு இலட்சம் ரூபாயை அந்த நிகழ்ச்சியிலே வழங்கினார்கள்.

காலையில் ஒரு நிகழ்ச்சியும், மாலையிலே ஒரு நிகழ்ச்சியும் நடைபெறுவது எவ்வளவு எங்களுக்கு இலாபகரமானது என்பதற்கு (சிரிப்பு) இதைச் சொல்கிறேன். காலையிலே ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டதை நான் முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்த்து - ஏழைப் பெண்களின் திருமண நிதிக்கு இது பயன்படுத்தப்படும் என்று குறிப்பிட்டேன்.

அதைப்போலவே இப்பொழுது சிவந்தி அவர்கள் இந்த விழாவிலே எனக்காக வழங்கியுள்ள ஒரு இலட்சம் ரூபாயை முதலமைச்சர் நிவாரண நிதியிலே சேர்த்து ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்திற்கு வழங்கப்படும் (பலத்த கைதட்டல்) என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிக் கூறிவிட்டதால் சிவந்தியின் கோட்டா முடிந்து விட்டது என்று பொருள் அல்ல (பலத்த சிரிப்பு) கோடிக்கணக்கில் கொடுத்தவர்கள் எல்லாம் எதிரே அமர்ந்திருக்கிறார்கள் என்பது சிவந்திக்கு தெரியும். எனவே ஒரு நல்ல காரியத்திற்குப் பயன் படுகின்ற அளவிற்கு பொற்கிழியும், என்னை மேலும் உற்சாகப் படுத்துகின்ற அளவிற்கு மூதறிஞர் என்ற விருதும் வழங்கியுள்ள -

ஆதித்தனார் பிறந்த நாளில் நடைபெறுகின்ற - இந்த இலக்கிய பரிசளிப்பு விழா நிகழ்ச்சியை நடத்துகின்ற நண்பர்கள் அனை வருக்கும், குறிப்பாக சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய ஆளுநர் அவர்களும் மற்றும் வாழ்த்துரை வழங்கியவர்களும் தமிழகத்திலே அரிச்சுவடி கூட படிக்காத பாமர மக்கள் - ரிக்ஷா ஓட்டுபவர்களாக, தெருவிலே அலைந்து திரிபவர் களாக, எண் என்பது என்ன எழுத்தென்பது என்ன என்பதை அறியாதவர்களாக உள்ளவர்களுக்கெல்லாம் அரிச்சுவடி வாத்தியாராக இருந்தவர் மறைந்த ஆதித்தனார் என்பதை இங்கே சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

தினத்தந்தி பத்திரிகையின் மூலமாக அந்த கொட்டை யெழுத்துச் செய்திகள் மூலம் அறிவில் குட்டையான மனிதர்களை யெல்லாம் நெட்டையான மனிதர்களாக ஆக்கிய பெருமை ஆதித்தனாருக்கு உண்டு. அவர்கள் ''உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'' என்ற முழக்கத்தோடு ''நாம் தமிழர்'' இயக்கத்தை உருவாக்கி நடத்தியவர்கள். காலையிலே கூட குறிப்பிட்டேன். அப்படி நடத்திய இயக்கத்தை 1958 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற ஒரு அமைப்புக் கூட்டத்தில் மாநிலம் முழுதுமிருந்து வந்த நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்ட கூட்டத்தில் ஆதித்தனார் அவர்கள் ''நாம் தமிழர் இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கான ஒரு முன்னணிப் படை'' என்று அறிவித்தார்கள்.

அப்படி அறிவித்த பிறகு அவரும் நானும் ஆகாய விமானத் தில் திருச்சி பயணம் சென்றபோது, அந்த விமானத்திலே வேறு யாருமே பயணிகள் இல்லாத சூழ்நிலை - இரண்டே பேர்தான் - எவ்வளவு லாபகரமாக அந்த விமானம் நடைபெற்றிருக்கும் என்பதைப் புரிந்து கொள்ளலாம். இரண்டே பேர் செல்லும்போது

ஆதித்தனார் அவர்கள் என்னருகே வந்து அமர்ந்து திராவிட முன்னேற்ற கழகம் அரசியல் கட்சியாக மாறியிருந்தாலும், தேர்தலில் ஈடுபடுகின்ற நேரத்தில் அதற்குத் தேவையான நிதியை வசூலிக்க வேண்டாமா? தேர்தல் ஆணையத்திற்கு முரண்பட்டு அல்ல; சட்டத்திற்கு உட்பட்டு செலவழிக்கக் கூட பணம் வேண்டாமா?'' என்று கட்சியின் பொருளாளனாக நான் இருந்த காரணத்தால் என்னிடத்தில் அவர்கள் வலியுறுத்திச் சொன்னார்கள்.

அந்தப் பயணத்திற்குப் பிறகு நான் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே ஆதித்தனார் சொன்னதை எடுத்துச் சொல்லி - சென்னை கடற்கரையிலே நடைபெற்ற லட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட ஒரு பொதுக் கூட்டத்தில் - அண்ணா அவர்கள் முன்னிலையிலே சொன்னேன். ''67-ஆம் ஆண்டு தேர்தலுக்கு பத்து லட்சம் ரூபாய் நிதியை நான் தேர்தல் நிதியாகச் சேர்ப்பேன் அண்ணா அவர்களின் வாழ்த்துக்களோடு'' என்று குறிப்பிட்டேன்.

கூட்டம் முடிந்த பிறகு அண்ணா அவர்களின் காரில் நாங்கள் வந்தபோது அண்ணா சொன்னார். ''என்ன, கொஞ்சமாவது உனக்கு அறிவிருக்கிறதா? பத்து லட்சத்தை நாம் எப்படி திரட்டுவது? முடியுமா?'' என்று கேட்டார். ஆதித்தனார் என்னிடம் வலியுறுத்தியதை அண்ணாவிடம் நான் எடுத்துக் கூறி, அன்று முதல் தேர்தல் நிதி திரட்டுகிற பணியிலே ஈடுபட்டு, இரண்டு அல்லது மூன்றாண்டு காலம் அந்தப் பணியை வெற்றிகரமாக நடத்தி - நாடகங்கள் நடத்தியும், கூட்டங்களில் நிதி உதவி பெற்றும், விருகம்பாக்கத்தில் நடைபெற்ற கழகத்தின் மாநில மாநாட்டில் பதினோறு இலட்சம் ரூபாயை அண்ணா அவர்களிடத்திலே நான் ஒப்படைத்தேன் என்றால் அதற்கு வாழ்த்தளித்து பக்க பலமாக இருந்தவர் அண்ணா என்றாலுங்கூட, அதற்கான ஊக்கத்தை அளித்தவர் மறைந்த பெரியவர் ஆதித்தனார் என்பதை நான் சொல்லித்தான் தீர வேண்டும்.

இப்படி அரசியல் துறையிலே நானும் அவரும் நெருங்கிப் பழகுகின்ற காலக் கட்டம் இருந்தது. ஆட்சிப் பொறுப்பை அண்ணா ஏற்றவுடன் பேரவைத் தலைவராக ஆதித்தனார் பொறுப்பேற்றார். அண்ணாவின் மறைவிற்குப் பிறகு என்னுடைய தலைமையிலே அமைந்த அமைச்சரவையிலே ஆதித்தனார் கூட்டுறவுத் துறை அமைச்சராகப் பணியாற்றினார்.

அவர் தமிழர்களுக்காக நடத்திய கிளர்ச்சிகள் ஒன்றிரண்டு அல்ல. நெல்லைச் சீமையிலே பனைமரத் தொழிலாளர்களுக்காக கிளர்ச்சி நடத்தி கைதானவர். செங்கற்பட்டு விவசாயிகளுக்காக போராட்டம் நடத்தியதோடு கைதாகி, கையிலே விலங்கிடப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டவர்.

இன்னொன்று எனக்கும் அவருக்கும் உள்ள ஒற்றுமை. 65-ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போராட்டத்தில் ஆதித்தனார் அவர்கள் கோவையிலே தனிமைச் சிறையிலே அடைக்கப்பட்டார். நான் பாளையங்கோட்டையிலே தனிமைச் சிறையிலே அடைக்கப்பட்டேன். அன்றைக்கு தமிழகத்திலே பாதுகாப்புச் சட்டத்தின்படி தனிமைச் சிறையிலே அடைக்கப் பட்டவர்கள் இரண்டே இரண்டு பேர்தான். ஒருவர் ஆதித்தனார். மற்றொருவர் நான். (கைதட்டல்) இருவரும் விடுதலை பெற்ற பிறகு, சந்தித்துப் பேசி தி.மு. கழகத்தின் அரசியல் மேம்பாட்டிற் கான ஆக்கப்பூர்வமான யோசனைகளை எல்லாம் அண்ணாவிடம் சொல்லி, அண்ணா அவர்களும் மிகுந்த நம்பிக்கையோடு ஆதித்தனார் அவர்களை நேசித்த அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் இன்றைக்கும் என்னுடைய நெஞ்சிலே நிழலாடிக் கொண்டிருக் கின்றன.

பத்திரிகைத் துறையிலே ஒரு புதுமையை புகுத்தினார். எனக்கு முன்னால் இங்கே உரையாற்றியவர்கள் எல்லாம் எடுத்துக் காட்டினார்களே, அவர் பத்திரிகையிலே செய்தி எப்படிப் போட வேண்டும், எது செய்தி? என்பதைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லி

யிருக்கிறார், எது செய்தி தெரியுமா? ஒரு நாய் மனிதனைக் கடித்துவிட்டது - என்பது செய்தியல்ல. பிறகு எதுதான் செய்தி யென்றால் - ஒரு மனிதன் நாயைக் கடித்துவிட்டான் - இதுதான் செய்தி என்று தலைகீழ்ப் புரட்சியை பத்திரிகைத் துறையிலே செய்தவர்.

தினத்தந்தி என்பது அவர் இறுதியாகக் கண்ட வெற்றி என்றாலுங்கூட - முதலிலே அவர் பெற்ற தோல்வி ''தமிழன்'' என்ற பத்திரிகையிலே தொடங்கியது. தமிழன் அவ்வளவு உணர்ச்சியுள்ளதாக இருந்த காரணத்தால் அந்தப் பத்திரிகை அப்போது தோல்வியைத் தழுவியது. அந்தப் பத்திரிகையைக் கூட கையால் செய்யப்பட்ட காகிதங்களைக் கொண்டு நடத்திய பெருமை ஆதித்தனார் அவர்களுக்கு உண்டு.

பத்திரிகைத்துறை மூலம் பெரும் புரட்சியை நடத்தி, இன்றைக்கு அவருடைய மக்கள் - ராமச்சந்திர ஆதித்தன் ஆகட்டும், சிவந்தி ஆதித்தன் ஆகட்டும், அவர்களுடைய பிள்ளை களாகட்டும் - ஒரு பெரிய குடும்பம் - பத்திரிகை குடும்பம் - ஆதித்தனார் குடும்பம் - தமிழுக்கு, தமிழர்களுக்காக தொண் டாற்றிக் கொண்டிருக்கின்ற பாரம்பரியமிக்க குடும்பமாக இன்றைக்கு இருக்கிறதென்றால் அது தினத்தந்தி ஆனாலும், மாலை முரசானாலும், மாலை மலரானாலும், கதிரவன் ஆனாலும், தினகரன் ஆனாலும் இவைகள் எல்லாம் ஆதித்தனாருடைய குடும்பத்திலிருந்து தமிழர்களை வாழ வைக்க, தமிழ் உணர்வை உருவாக்க வந்த படைக்கலன்களாகும்.

அந்த ஏடுகள் நடத்துகின்ற குடும்பத்தின் சார்பில், தமிழ்க் குடும்பத்தின் சார்பில், தமிழர்கள் மீது பற்று கொண்டுள்ள குடும்பத் தின் சார்பில் மூதறிஞர் விருது எனக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

இதிலே வாழ்த்தியவர்கள் யார் யார் என்று பார்த்தால் - நம்முடைய நீதியரசர் டாக்டர் எம். எம். இஸ்மாயில் அவர்கள்

வாழ்த்தினார்கள். துலாக்கோல் கொண்டு அளந்து - நீதியை எப்படி அளந்து தீர்ப்பு வழங்குவார்களோ - அதைப் போல - அவர் கடைசியாக - ''நீ மூதறிஞர்தான்'' என்று தீர்ப்பு வழங்கியிருக்கிறார். அது நான் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்ப்போ அல்லவோ? அப்பீல் செய்யக் கூடிய தீர்ப்போ என்னவோ எனக்குத் தெரியாது. அவர் அத்தகைய தீர்ப்பை வழங்கியிருக்கிறார்.

நான் தமிழ்ப் புலமை மிக்கவன் அல்ல. தமிழில் இலக்கிய இலக்கணங்களை முற்றாக நான் கற்றவன் அல்ல. அதனால்தான் தம்பி வைரமுத்து இங்கே எடுத்துக் காட்டியதைப் போல - திருச்சி வானொலியிலே ஒரு கவியரங்கத் தலைமையேற்க அழைத்த போது, நான் அந்தத் தலைமை உரையிலே குறிப்பிட்டேன். விடுதலைப் போராட்ட வீரர்களைப் பற்றிய கவியரங்கம் அது. கட்டபொம்மன், ஊமைத்துரை, இப்படிப்பட்ட வீரர்கள் வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்த கதையையெல்லாம் உள்ளடக்கிய கவியரங்கம் அது.

அதில் தலைமைக் கவிதை பாடும்போது நான் சொன்னேன். எனக்கு இலக்கிய, இலக்கண வளம் கிடையாது. இருந்தாலும் கவியரங்கக் தலைமை வகிக்கிறேன் என்று குறிப்பிட்டுவிட்டு - ''தளை அறுத்தோர் கதை பாடுவதால் தளை தட்டும் என் பாட்டும்'' என்று சொன்னேன். அது கூட சில பத்திரிகைகளில் தலை, தலை என்றே வந்து கொண்டிருக்கின்றது. அது ஒரு சங்கடம் எனக்கு!

ஆனால் அன்று நான் பாடினேன். ''தளை அறுத்தோர் கதை பாடுவதால், தளை தட்டும் என் பாட்டும்'' ''யாப்பின்றிப் போனாலும் போகட்டும், இந்நாடு, மொழி காப்பின்றிப் போதல் கூடாது'' என்று நான் திருச்சி வானொலி கவியரங்கில் முதன் முதலாக தலைமையேற்று பாடிய பாடலிலேயே எனக்கு தளை, சீர், யாப்பு, தொடை, இவைகள் எல்லாம் இலக்கண இலக்கிய வரம்புக்கு உட்பட்டு கற்றுத் தெரியாத காரணத்தால், வெறும் உணர்ச்சிகளையே கவிதைகளாக்கிப் பாடுகிறேன் என்ற

உண்மையை நான் அன்றைக்கு ஒத்துக் கொண்டேன். இருந்தாலுங் கூட நான் புலமை மிக்கவன்தான் என்று நம்முடைய டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் அவர்கள் தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக இருந்தவரே தமிழின் அடிப்படை யிலே எனக்கு அந்தச் சான்றினை வழங்கியிருக்கிறார். நான் பொருத்தமுடையவனோ இல்லையோ, அவர் வழங்கிய காரணத் தால் வருத்தமுடன் ஏற்றுக் கொள்கிறேன். (கைதட்டல்)

டாக்டர் வ. செ. குழந்தைசாமி அவர்கள் - அவர் சென்னை யிலும் பல்கலைக் கழகத் துணை வேந்தராக இருந்தார்; பிறகு இவருடைய திறமையைக் கண்டு, அவருடைய ஆற்றல் கண்டு புதுடெல்லியிலே இந்திராகாந்தி திறந்தவெளி பல்கலைக் கழகத்திற் கும் துணை வேந்தராக அன்றைக்கு நியமிக்கப்பட்டார். பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர்களில் பல சிறப்புக்களும், பெரும் ஆற்றலும் வாய்ந்தவர் குழந்தைசாமி அவர்கள், அவர் இங்கே ஆற்றிய உரை கண்டே நீங்கள் அதைப் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

நானோ பல்கலைக் கழகம் என்ன, கல்லூரிக்கே செல்லாத வன். கல்லூரிக்கே செல்லாத என்னை அவர் உரையின் மூலம் ஒரு பல்கலைக் கழகப் பேராசிரியனாகவே படம் பிடித்து இங்கே காட்டியிருக்கிறார். அவருக்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன். அவையடக்கத்திற்காக அவர் என்னை, பல்கலைக் கழகப் பேராசிரி யனாக ஆக்கினாலும் கூட, நான் நன்றியோடு அதையேற்று மகிழ்கிறேன்.

என் தம்பி வைரமுத்து, என்னை தமிழ் ஆசான், தமிழ் ஆசான் என்றழைத்தே எனக்கு பெருமை தேடித் தருபவர். எப்படி யென்றால் அவருடைய கவிதையாற்றலை, அவருடைய புலமையை, அவருடைய திறனை, அவருடைய கற்பனை வளத்தை, அவருடைய புதிய சிந்தனைகளை இன்றைக்கு தமிழகமே போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கும் போது - அவர் என்னை ஆசான் என்று சொல்வதால் எனக்கு

எவ்வளவு பெருமை! எனவே அவர் எனக்கு மாணவனோ இல்லையோ, அவர் என்னை ஆசான் என்றழைப்பதின் மூலம், என்னை மேலும் ஒரு படி தமிழ்ச் சமுதாய மக்களின் மத்தியிலே, தமிழ் கற்றவர்கள் மத்தியிலே உயர்த்தி வைத்திருக்கின்ற காரணத்திற்காக மானசீகமாக தன்னை என்னுடைய மாணவனாக ஆக்கிக் கொண்ட தம்பி வைரமுத்துக்கு நான் காலமெல்லாம் கடமைப்பட்டவன். (கைதட்டல்)

இந்த விருது எனக்குக் கிடைத்திருப்பதற்கான காரணங்களைச் சொன்னார்கள். மொழியிலே நான் கொண்டுள்ள பற்று, அரசியலில் நான் ஏற்றுள்ள நிலை, அண்ணாவின் தம்பியாக இருந்தது, இருப்பது - பெரியாரின் தொண்டனாக நான் வாழ்ந்தது, இன்றைக்கும் வாழ்ந்து கொண்டிருப்பது - பகுத்தறிவுக் கொள்கையில் எந்த நேரத்தில் யாரோடும் சமரசம் செய்து கொள்ளாமல் உறுதியாக நிற்பது - சமூக நீதி, மாநில சுயாட்சி, இந்தியாவின் ஆட்சி மொழிகளில் ஒன்றாக தமிழும் ஆகவேண்டுமென்ற அந்தக் குறிக்கோள் - இவைகளில் நெஞ்சுறுதியோடு, நானும் இருந்து, என் தலைமையிலே இருக்கின்ற இயக்கத்தையும் வழி நடத்திச் செல்வது என்பதை - இங்கே பாராட்டி, வாழ்த்திய அனைவரும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் தமிழகத்திற்குக் கிடைத்துள்ள ஒரு வாய்ப்பு. ''ஒரு வாய்ப்பு'' என்று சொல்கிறேன் (கைதட்டல்) வேறு வார்த்தைகள் தேவையில்லை என்பதால்! பெண்களுடைய முன்னேற்றம், பெண்களுக்கான உரிமை, பெண்கள் பல பொறுப்புக்களை ஏற்க வேண்டுமென்று உச்சக் கட்டக் குரல் இந்தியத் திருநாட்டிலே எழுந்திருக்கும்போது அதை தமிழகத்திலே நாம் செயற்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில், தமிழகத்தினுடைய ஆளுநராக ஒரு பெண்மணியே வாய்த்திருப்பதும், அதுவும் சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்தவராக வாய்த்திருப்பதும், அதுவும் நீதியரசராக பொறுப்

பேற்றிருந்தவர்வாய்த்திருப்பதும் அவர்கள் வாயால் என்னை வாழ்த்தியிருப்பதும் என்றென்றும் மறக்க முடியாத நிகழ்ச்சி களாகும்.

இத்தகைய வாய்ப்புகளையெல்லாம் உருவாக்கித் தந்த நண்பர் சிவந்தி ஆதித்தன் அவர்களை என்ன பாராட்டினாலும் தகும். நான் 1924 ஆம் ஆண்டு பிறந்தேன். பிறந்தபோதே என் வீட்டில் கள்வர்கள் புகுந்து, என் தாயின் தாலிச் சரடு உட்பட அத்தனையையும் திருடிச் சென்றார்கள். அப்பொழுதும் நான் அழாமல் இருந்த காரணத்தால் தப்பித்தேன். அழுதிருந்தால் என் குரல்வளையில் கட்டை விரலை வைத்து நசுக்கியிருப்பார்கள். நல்ல வேளையோ அல்லது என் போதாத காலமோ அழாமல் இருந்துவிட்டேன். இன்றைக்கு சுகம், துக்கம் இவைகளை யெல்லாம் அனுபவிப்பது மாத்திரமல்ல. அவைகளுக்கிடையே மொழிக்கும் நாட்டிற்கும் தொண்டாற்றுகிறேன் என்கின்ற அந்த இன்பத்தைப் பெறுகிறேன் அல்லவா? அதற்காக அந்தக் கள்வர்களின் கட்டை விரலை வாழ்த்துகிறேன். என் கழுத்திலே அதை வைத்து அழுத்தாமல் இருந்ததற்காக!

என்னோடு இணைந்து இன்றைக்கு என்னுடைய சகோதரர் நாவலாசிரியர் - எழுத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பொறித்துக் கொண்டிருப்பவர் - பிரபஞ்சன் அவர்களும் விருது பெற்றிருக்கிறார். அவருடைய அண்ணன் என்ற முறையில் நான் அவரை வாழ்த்துகிறேன். பாராட்டுகிறேன். அவருக்கு விருது வழங்கிச் சிறப்பித்த சிவந்தி அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னைப் பொறுத்தவரையில் நான் இன்னும் நீண்ட நாள் வாழ வேண்டுமென்று வாழ ஆசைப்படுகிறேன். ஆட்சிப் பொறுப்பிலே இருக்க வேண்டுமென்பதற்காக அல்ல. அதிகாரங் களை அனுபவிக்க வேண்டுமென்பதற்காக அல்ல. தமிழுக்குத் தொண்டு செய்வதற்காக, என்னுடைய கண்கள் இறுதியாக மூடும்

வரை, அண்ணாவின் இதயத்தை எடுத்துச் சென்று மீண்டும் அண்ணாவிடத்திலே ஒப்படைக்கின்ற அந்தக் காலம் விரைவிலே வந்துவிடாமல் நான் இன்னும் கொஞ்ச காலம் வாழ்ந்து இன்னும் ஆற்ற வேண்டிய தொண்டினை ஆற்றி - இங்கே தரப்பட்ட முதலமைச்சர் என்ற பட்டத்திற்குரியவனாக என்னை ஆக்கிக் கொள்கிற வரையில் வாழ வேண்டுமென்று இயற்கையை வேண்டி என்னை வாழ்த்திய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

- முரசொலி 28.9.97